கல்கி

தேர்தல் ஸ்பெஷல் - III



KALKI
8.2.98
ரூ. 4.50

ரஜினி செய்வது சரியா?


இந்தியாவின் மிகப் பெரிய தங்க நகைக்கடை
சரவணா ஸ்டோர்ஸ்
தங்கநகைகள் + பட்டுஜவுளிகள் + பாத்திரங்கள்
ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை - 17.
பழைய பொன் நகைகளை கொடுத்து புன்னகையோடு புதிய பொன் நகைபெறவும்
தங்க நகைகளுக்கு செய்கூலி இல்லை, சேதாரம் உண்டு
22 ct தங்கம் 1 கிராம் ரூ. 20 வரை குறைவு
அதிகம் கல் எடையுள்ள நகைகளுக்கு மட்டும் 10% தள்ளுபடி மேலும் செய்கூலி, சேதாரம் இல்லை
நாங்கள் விற்கும் தங்க நகைகள் மற்ற எந்த கடைகளையும் விட உயர்வான தரம் என்று சவால் விட்டு உறுதி கூறுகிறோம்.
மார்க்கெட்டில் செய்கூலி, சேதாரம் இல்லாமல் விற்கும் தர குறைவான தங்க நகைகள் வாங்குவதை தவிர்க்கவும்
இந்தியாவின் மிகப் பெரிய பட்டு ஜவுளி மாளிகை
பட்டு புடவைகளுக்கு 10% தள்ளுபடி
வெள்ளி , ஜவுளிகள், ரெடிமேட் ஆடைகள், பாத்திரங்கள்,
டி.வி. ரேடியோ, ஃபிரிஜ், பேன், வெட்கிரைண்டர்

L.R.SWAMI /

பழைய நண்பர்களைப் பார்க்கப் போறேன்!

— ஸ்ரீகாந்த்

சமீபத்தில் இந்திய கிரிக்கெட்டின் இளைஞர் அணிக்குப் புதிய மானேஜராக அறிவிக்கப்பட்ட ஸ்ரீகாந்த், தென்னாப்பிரிக்காவில் நடக்கவுள்ள உலக இளைஞரணிப் போட்டிகளுக்காகக் கிளம்பிக் கொண்டிருந்தார். புறப்படும்முன் சென்னையில் அவருக்கு நடந்த பாராட்டு விழாவின் முடிவில் ஸ்ரீகாந்தைச் சந்தித்து, புதிய பொறுப்புக்கான வாழ்த்துக்களைத் தெரிவித்தோம்.

"தேங்க்யூ சார். இந்த ரசிகர்களோட தீராத சப்போர்ட், நல்லெண்ணத்தாலதான் நான் ஆடறதுலேருந்து ரிடையரானாலும் இன்னும் நல்ல பேரோட இருக்க முடியுது!" என்றார் உற்சாகமாக.

"புதிய பொறுப்பு எப்படி இருக்கு ஸ்ரீகாந்த்?"

"ஓ, ஐ'ம் வெரி ஹாப்பி! போன வருஷம் இப்படித்தான் என்னைத் தமிழக ரஞ்சி அணிக்கு மானேஜரா போட்டாங்க. ரெண்டு மேட்ச் ஒர்க் பண்ணினேன். அதுக்கு முன்னாலயே இந்திய கிரிக்கெட் போர்டோட 'ஏ' அணிக்கு மானேஜரா இருந்திருக்கேன். நான் மானேஜரா இருந்தப்பதான் மொஹந்தி, ஹர்பிஷன்சிங்கெல்லாம் டாக்கா மாட்சில் பிரமாதமா ஆடி, பின்னால டீமுக்குள்ள வந்தாங்க. இந்த ஸௌத் ஆப்ரிக்கா ட்ரிப்லேயும் சில ரத்தினங்களைக் கண்டு பிடிக்கலாம்னு நம்பறேன். இந்த ட்ரிப்ல எனக்கு இன்னொரு சந்தோஷமும் இருக்கு. காடன் க்ரீனிட்ஜ், அலன் பார்டர் எல்லாரும் அவங்கவங்க டீம் மானேஜரா வராங்க. எல்லாரும் என் பழைய நண்பர்கள் இல்லையா? அவங்களை நீண்ட நாள் கழிச்சி சந்திக்கப்போற சந்தோஷம் கொஞ்ச நஞ்சமில்லை!"

இது மாதிரி இளைஞர் குழுவுடன் டூர் போனால், தாமும் மறுபடி இளைஞனாகி விடுவதாகச் சொல்கிறார் ஸ்ரீகாந்த்!

அதுசரி, இந்திய இளைஞரணி எப்படி இருக்கிறதாம்?

"பிரமாதம்! நல்ல பேட்ஸ்மென் நாலஞ்சு பேர் இருக்காங்க. எதிர்காலத்துல இந்திய அணிக்கே ஆடக் கூடியவங்க!" என்கிறார் படு பரவசத்துடன்.

சந்திப் பாட்டீல், மதன்லால், கெய்க்வாட் எல்லாம் முதலில் இளைஞரணி மானேஜராக இருந்து, பின் இந்திய அணி மானேஜரானவர்கள்தாம். அப்படியானால்...

"ஐயோ, அப்படி ஒரு நடைமுறை வெச்சிருக்காங்களான்னு எல்லாம் எனக்குத் தெரியலை. இப்ப எனக்குக் குடுத்திருக்கற வேலையை ஒழுங்கா பண்ணணும். அவ்வளோதான்."

'தமிழ்நாட்டில் ராபின்சிங் தவிர வேறு யாருமே இந்திய அணியில் இல்லையே? நீங்க ஏதாவது முயற்சி செய்யக் கூடாதா?' என்று இறுதியாகக் கேட்டோம்.

"டோண்ட் ஒர்ரி! 2000ல் பாருங்க. இந்திய டீம்ல அட்லீஸ்ட் மூணு பேர் நம்ம ஆளுங்க இருப்பாங்க!" என்று அடித்துச் சொல்கிறார் ஸ்ரீகாந்த்.

எப்படி?

"நான் எதுவும் செய்ய வேண்டியதே இல்லை. அவங்க சொந்த டேலண்ட் மூலமாவே வந்துருவாங்க. சரத், சடகோபன், ரமேஷ் ஸ்ரீதரன், ஸ்ரீராம், ஹேமங் பதானி இவங்ககிட்ட நல்ல திறமை இருக்குது. எந்த ரெக்கமண்டேஷனும் இல்லாம வந்துருவாங்க பாருங்க!" என்கிறார். ●

— மாஸ்டர்



கல்கி இன்டர்நெட் முகவரி: www.kalkiweekly.com
ஈ மெயில்: kalki@md2.vsnl.net.in

சரித்திரம் திரும்புமா?

சோனியாவின் மஹாராஷ்டிரா சுற்றுப் பயணத்தின்போது மக்கள் கூட்டம் அலை மோதுவதைக் கண்டு, பி.ஜே.பிக்காரர்களைக் காட்டிலும் அதிகமாக விசனப்பட்டது, 'சரத் பவார் அண்ட் கோ' தான்! 'அன்னை வந்தாள், புத்தொளி தந்தாள்' என ஆங்காங்கே ஒட்டப் பட்டிருந்த வரவேற்பு வாசகங்கள் இவர்கள் மனத்தில் இருளடித்தன. அவர் உப்புச் சப்பில் லாமல் பேசினாலும், வெறும் ஒப்புக்காக அல் லாமல், உண்மை ஆவலும் ஆரவாரமுமாக ஆர்ப்பரித்த மனித அலைகளைக் கண்டு அனைவருமே ஆடித்தான் போய்விட்டார்கள்! இந்திராவுக்கும் ராஜீவுக்கும் கூடிய கூட்டமல்லவா இது?

ஹோட்டலில் சாப்பிட 'ஸ்டார்' சார்ஜ்?

என்னதான் 'சோனியா அரசியல் அறியாதவர்; அந்நியர்' என்றெல்லாம் எதிர்க் கட்சிகள் கரடியாகக் கத்தினாலும், தேர்தல் என்பது, (காசு வாங்கிக் கொண்டு)' முத்திரையிட்ட காகிதத்தை வோட்டுப் பெட்டிக்குள் சுருட்டி அடைக்கும் சடங்காக மக்கள் நினைக்கும் வரையில், அவர் இத்தாலிய மங்கையாக இருந்தால் என்ன? இரண்யகசிபுவின் தங்கையாய் இருந்தால்தான் என்ன? மகராசிக்கு முகராசியிருக்குமோ என்ற பயம் எல்லோரையும் கவ்வியிருக்கிறது!

• சோனியா



எம தூத டிபார்ட்மெண்ட்!

கோடி கோடியாக 'ஸ்வாஹா' செய்து விட்டு, என்கொயரி என்றவுடன் வீட்டுக்குள் முடங்கி, போர்வையைப் போர்த்திக் கொண்டு படுத்துவிடும் அரசியல்வாதிகளை எல்லாம் விட்டுவிட்டு, கடந்த இருபத்திரண்டு வருடங் களாக இருதய நோயால் வாடி, இரண்டு முறை பைபாஸ் செய்து கொண்டு, இதயத் துடிப்பைச் சீராக்க, அதிர்ச்சி அலைகளை எழுப்பும் கருவி யைப் பொருத்திக் கொண்டு அல்லாடிக் கொண்டிருக்கும் தொழிலதிபர் ஏ.கே. ஜெயினை (டைம்ஸ் ஆஃப் இந்தியா குரூப்), ஈ.டிக்காரர்கள் (E.D) துரத்துகிறார்கள்! மும்பை மருத்துவமனை யில் உள்ளூர் டாக்டரும் அமெரிக்க மருத்து வரும் தடுத்தும், என்கொயரி என்ற பெயரில் ஆஸ்பத் திரிக்கே வந்து தொல்லை தரு கிறார்களாம். இவரது அலுவலகத் தில் பணிபுரியும் ஃபைனான்சியல் அட்வைசர் களை மணிக்கணக்கில் வாட்டி எடுத்து, ஜெயினுக்கு எதிராக வாக்குமூலம் தர வற்புறுத்து கிறார்களாம்! பல வருடங்களாக ரெய்டு நடத்தியும் ஒன்றுமே அகப்படவில்லை என்று செய்தி. ஒரு இதய நோயாளியிடம் இப்படி முறையற்ற வகையில் நடந்து கொள்வது தவறு என்று சொல்லி, ஜெயினர்கள் சமூகமும், தொழிலுலகமும் கொதித்தெழுந்திருக்கிறது! படுத்துக் கொண்டிருக்கும் எண்பது வயது ஜெயினை வறுத்து எடுத்தால், ராஜன் பிள் ளைக்கு நேர்ந்த கதியாகி விடுமோ என அஞ்சு கின்றது ஜெயினின் சுற்றமும் நட்பும். ED என்றால் என்ஃபோர்ஸ்மெண்ட் டைரக்டரேட்டா, எமதூத டிபார்ட் மெண்ட்டா என்று புரியாமல் குழம்பு கின்றனர் மும்பைக்காரர்கள்!

• வரதராஜன்



அவர்கள் கேட்பது நிதி! இவர்கள் கேட்பது நீதி!

"அண்டர் வர்ல்ட்காரர்களின் தொல்லையே பரவாயில்லை; இந்த அரசியல்வாதிகளின் தொல்லைதான் பெருந் தொல்லையாக இருக் கிறது" என்று பில்டர்கள் சமூகமே ஒட்டு மொத்த மாக அங்கலாய்க்கிற அளவுக்கு, தேர்தல் நிதி வசூல் ஜரூராக நடக்கிறது. இதற்கு மட்டும் பாரபட்ச மில்லாமல் எல்லா கட்சிக் காரர்களும் ஆஜராகி விடு



• ஷாருக்கான்



• மனிஷா

கிறார்கள். மார்கெட்டே 'டல்'லடிக்கிறது; வீடுகளை வாங்குவோருமில்லை, விற்போருமில்லை; எங்கே போவது பணத்திற்கு?" என நியாயம் கேட்கிறார்கள். 'இல்லை' என்று சொல்லத் தயங்கிக் கொண்டு, பல பில்டர்கள் இப்போதெல்லாம் ஆபீஸ் பக்கமே எட்டிப் பார்க்காமல் தலைமறைவாகிவிட்டார்கள். தேர்தல் முடிந்தபின்தான் அரசியல்வாதிகள் தலைமறைவாகி விடுவார்களே! அப்புறம் பயமில்லாமல் ஆபீஸ் போகலாமென்றிருக்கிறார்களோ, என்னவோ?

சிண்டிக்கு மண்டி!

சூப்பர் மாடல் சிண்டி கிராஃபோர்டு மும்பை வந்திருந்தார் – சேச்சே, பி.ஜே.பி. பிரசாரத்துக்காகவெல்லாம் இல்லை; புகழ் பெற்ற ஒமேகா வாட்ச்காரர்களின் நல்லிணக்கத் தூதுவராகத்தான். அப்படியே ஃபெமினா மிஸ் இந்தியா போட்டியிலும் சிறப்பு விருந்தினரானார்! இவரை அறிமுகப்படுத்திய ஃபாரின் டிசைனர் கனீத் வர்மாவை அகத்தியராக்கும் தனது பிரம்மாண்ட 'ஸ்டேஜ் பிரசென்ஸி'னால், அனைவர் இதயத்தையும் ஆக்கிரமித்தார்! ஆனாலும் கொஞ்சம் அவசரப்பட்டு விட்டார். இறுதிச் சுற்றுக்கான ஐந்து பெண்கள் யார் என்பதை வெளியிடுமுன், கேள்வியை பரபரப்பாக அறிவித்து விட்டார். அழகிகள் மேடையேற, அவர்கள் முழிக்க, இவர் விழிக்க, அறிவிப்பாளர் இவரை இரண்டாவது கேள்வியைப் படிக்கச் சொல்ல, சிறு குழப்பம்; ஆனால் இவரது சொதப்பல் அவர்களுக்கு லாபமாயிற்று! அந்த முதல் கேள்வி – அடுத்த மில்லினியத்தில் நீங்கள் ஒரு புதிய கருவியை கண்டு பிடிக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டால், நீங்கள் எதை உருவாக்குவீர்கள்; ஏன்? – இதற்குப் பதிலெழுத சிண்டைப் பிய்த்துக் கொண்டிருக்க வேண்டாமா? அழகிகள் மானசீகமாகவாவது சிண்டிக்கு மண்டியிட்டிருப்பார்கள்!

'நட்சத்திர' ஓட்டல்கள்!

ஹாலிவுட்காரர்களுக்கு ஜலதோஷம் பிடித்தால் பாலிவுட்காரர்கள் தும்ம வேண்டுமென்பது நியதி! அவர்கள் ஓட்டல் கட்டினால் இவர்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியுமா? ப்ரூஸ் வில்லிஸ், ஸில்வஸ்டர் வழியில் இங்கேயும் ஜாக்கிஷெராஃப், ஷாருக்கான், மனிஷா கொய்ராலா போன்றவர்கள் இணைந்து ஓட்டல்களை நிறுவி, அங்கே தரிசனமும் தரப் போகிறார்களாம்! கண்ணுக்கு விருந்தில்லாத போது, சிறிது வயிற்றுக்கும் ஈயப் போகிறார்களாம்! கஸ்டமர்களுடன் கைகுலுக்குவது, சிரித்துப் பேசுவது, ஆட்டோகிராஃப் இடுவது போன்ற வழக்கமான வழிசல்களுடன், இவர்களுக்குப் பிடித்தமான உணவு ஒன்றும் தினமும் 'மெனு'வில் இடம் பெறுமாம்! ஹூம்! பில்லில், சாப்பிட்ட அயிட்டங்களுக்கு சார்ஜ், சேல்ஸ் டாக்ஸ், சர்வீஸ் சார்ஜ் இவற்றுடன் 'ஸ்டார் சார்ஜ்' என்று எதையாவது போடாமலிருந்தால் சரி!

நாடகமே இந்த உலகம்!

ஒரு சொந்த வீடு கட்டும் பிரச்னைகளை மேடையில் அலச, தம் நாடகக் குழுவுடன் மும்பை வந்திருந்த நம் ஊர் நியூஸ் வரதராஜன், நிச்சயம் இதை எதிர்பார்த்திருக்க மாட்டார். அவர் நாடகம் நடத்திய அன்று காலைதான் செம்பூர், பெஸ்டன் ஸாகரிலுள்ள "ககன் தாரா" குடியிருப்பு, கொஞ்சம் கொஞ்சமாக விழ ஆரம்பித்திருந்தது! ஃப்ளாட் வாங்குவதிலிருக்கும் இன்னல்களை விளக்கிக் கொண்டிருந்தவர், நாடகத்தின் ஊடே இந்த உண்மைச் சம்பவத்தையும் 'இலவச இணைப்பாக' வெளியிட்டு, கைதட்டல்களைப் பெற்றார். கண்ணெதிரிலேயே, தாங்கள் கஷ்டப்பட்டு வாங்கிய வீட்டையும் அதற்குள்ளிருக்கும் சாமான்களையும் மெது மெதுவாக இழந்து கொண்டிருக்கும் அவலத்தைப் பார்த்துக் கொண்டு, செய்வதறியாது நடு ரோட்டில் நின்று கொண்டிருந்த அந்தப் பதினெட்டு நடுத்தரக் குடும்பங்களின் கண்ணீர் கதை, நாடகத்தில் சொந்த வீடு கட்டுவதற்கென்று வீட்டிலிருந்த பொருட்களை எல்லாம் இழந்து நின்ற இவர்கள் கதையுடன் கனகச்சிதமாகப் பொருந்தி, ரியல் லைஃப் சம்பவங்கள், ரீல் லைஃபைக் காட்டிலும் வலுவானவை என்பதை வலியுறுத்தின!

— ஜெயஸ்ரீ ராஜ்

"ஆணாதிக்கம் மிகுந்த சினிமா உலகில், உங்களைப் போன்ற கதாநாயகிகள் ரொம்பவும் போராட வேண்டியிருக்கிறது. இல்லையா?"

"உண்மைதான். ஆணாதிக்கம் என்பது, ஒட்டு மொத்த சமூகத்திலும் வியாபித்திருக்கிற ஒரு விஷயம் என்பதால், அத்தனை சுலபத்தில் அதை உடைத்தெறிந்து விட முடியாது. சுஹாசினி, ஒளிப்பதிவாளர் விஜயலட்சுமி போன்றோர், சினிமா உலகிலுள்ள ஆணாதிக்கத்தை உடைக்க முற்பட்டார்கள் என்பதும் உண்மைதான். ஆனாலும் முடியவில்லை. இருந்தாலும்கூட நல்ல கேரக்டர்கள் பெண்களுக்கு அமைகிறபோது, ஆண்களை விடப் பெண்கள் திறமையானவர்கள்தாம் என்பதை எளிதாக நிரூபித்துக் காட்டவும் முடியும். இதற்கு விஜயசாந்தி நிதர்சன உதாரணமாகவும் திகழ்கிறாரே!"

"நீங்கள்தான் நெம்பர் ஒன் என்று நினைக்கிறீர்களா?"

"இந்த மாதிரியான நெம்பர்கள் எல்லாம் வெறும் மாஜிக் என்பதே எனது கருத்து. அதனாலேயே அதில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. ஒருவர் எப்போதுமே தொடர்ந்து ஒரே நிலையில் இருக்கவே முடியாது என்பதுதான் நடைமுறை என்பதால் I don't care about my position. ஆனால் தொடர்ந்து வெற்றிப் படங்களையே தர வேண்டும் என்பதில் நான் முனைப்போடு இருக்கிறேன்."

"உங்களுக்குப் போட்டியாக மற்ற கதாநாயகிகள் இருப்பதாகக் கருதுகிறீர்களா?"

"அப்படியெல்லாம் நான் நினைக்கவேயில்லை. ஒருவருக்குப் போட்டியாக இன்னொருவர் இருக்கவும் முடியாது. அவரவருக்கும் கொடுக்கப்படுகிற கேரக்டர்களைச் சிறப்பாகச் செய்வதன்மூலம்தான் அவரவரும் வெற்றி பெற முடியுமே தவிர, மற்றவர் மீது பொறாமை கொண்டு அவர்களின் முதுகில் குத்தியெல்லாம் வெற்றி பெற முடியாது. திறமை என்றால்தான் முடியும் என்பதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறேன்."

"'உழவன்' ரம்பாவுக்கும் 'காதலா காதலா' ரம்பாவுக்கும் என்ன வித்தியாசம்?"

"உழவனில் நான் நடித்த விஷயமே யாருக்கும் தெரியவில்லை. இத்தனைக்கும் அதன் இயக்குனர் கதிர் அதில் எனக்குத் தந்திருந்த கேரக்டர் அற்புதமான கேரக்டர். ஆனால் நான் கவர்ச்சியாக நடித்த 'உள்ளத்தை அள்ளித் தா' படம்தான் தமிழ் சினிமாவில் என்னை பொரு முன்னணி நடிகை என்கிற அந்தஸ்துக்கு உயர்த்தியது; சூப்பர் ஸ்டார் ரஜினி சார், சூப்பர் ஆக்டர் கமல் சார் ஆகியோருடனெல்லாம் சேர்ந்து நடிக்கிற அளவுக்கும் என்னைக் கொண்டு வந்தது."

"உங்களைப் போன்ற நடிகைகள் எல்லோருமே சொல்லி வைத்த மாதிரி 'கவர்ச்சியாகத்தான் நடிக்கிறோமே தவிர, ஆபாசமாக அல்ல!' என்று சொல்வது ஒரு வாடிக்கையாகி விட்டது. உங்கள் தரப்பிலும் இதைத்தான் சொல்லப் போகிறீர்களா?"

"எல்லோரும் சொல்வதுபோல் கவர்ச்சிக்கும் ஆபாசத்துக்கும் இடையில் ஒரு மெல்லிய கோடுதான் இருக்கிறது என்பதே உண்மை. அது அவரவர் பார்வையைப் பொருத்ததும்கூட. பாரம்பரியமான சேலையைக்கூட கவர்ச்சியாக அணியலாம். சிலர் உடல் அமைப்பே அதைக் கவர்ச்சியாகக் காட்டக்கூடும். ஆபாசம் என்பது அநியாயமான ஆடைக் குறைப்பு. கவர்ச்சி அப்படிப்பட்டதல்ல. இன்னும் சொல்லப் போனால் பக்திப் படமான 'அன்னமாச்சார்யா'விற்குக்கூடக் கவர்ச்சி தேவைப்படுகிறதே! எனவேதான் எனக்குக் கொடுக்கப்படுகிற கேரக்டருக்குத் தகுந்தபடி நடிக்கிறேன். இதுபோல் அல்லாமல் என் நடிப்புத் திறமையை வெளிக் காட்டுகிற விதமான கேரக்டர்களை யாராவது கொடுத்தால் நிச்சயம் நடிக்கத் தயாராக இருக்கிறேன். இத்தனை ஏன், குஷ்புகூட ஆரம்பத்தில் கிளாமர் ரோல்களில் நடித்து விட்டுத்தானே கேரக்டர் ரோல்களில் நடிக்க ஆரம்பித்தார். அதுபோல் நானும் நடிக்க வேண்டும்; விருதுகள் வாங்க வேண்டும் என்றும் ஆசைப்படுகிறேன்."

"காதல் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"காதல் என்பது கடவுள் கொடுத்த கொடை. அழகானது. கொடுத்துப் பெறுவது. ஆனாலும் இது உடனே வந்து விடக் கூடியது அல்ல. மெல்ல மெல்ல ஒரு பூவைப் போல் மலர்வது! நான் எத்தனையோ நடிகர்களுடன் நடிக்கிறேன் என்பதற்காக, எத்தனையோ இளம் டைரக்டர்கள் படங்களில் நடிக்கிறேன் என்பதற்காக அவர்கள் மீது காதல் வந்து விடுவதில்லை. காதலுக்கு நம்பிக்கையும் விசுவாசமும் ரொம்ப முக்கியம். யாருடைய கட்டளைக்காகவும் காதல் அரும்பி விடாது. அது தானாகவே மலர வேண்டும்."

"அப்படியானால் உங்களுக்கும் இயக்குனர் சுந்தர்(சி)க்கும் காதல் என்று செய்திகள் வந்தது பற்றி?"

"அது பத்திரிகையாளர்களின் கட்டுக்கதை. எனக்குள் காதல் மலரும்போது நிச்சயம் மறைக்க மாட்டேன். அது தேவையுமில்லை!" ●

"காதல் என்பது கடவுள் கொடுத்த கொடை!"

சந்திப்பு: நீலா

வண்ணப்படம்: 'தேர்ட் ஐ' பிரகாஷ்


சமீபகாலமாகப் ‘பேட்டி’
என்று போகும் பத்திரிகையாளர்களையெல்லாம்
தவிர்த்து வந்த ரம்பா,
கல்கிக்கு மட்டும் பிரத்யேகமாகப் பேட்டி
தர ஒப்புக் கொண்டு பேசினார்...
— ரம்பாவின் சிறப்புப் பேட்டி



"யாராவது பணம்னு கேட்டாலே எனக்கு பயங்கரமா கோபம் வந்துடுது டாக்டர்..."

"நீங்க வேற டாக்டர் யார்கிட்டேயாவது போறதுதான் ரெண்டு பேருக்குமே நல்லதுன்னு நினைக்கிறேன்!"

– சீர்காழி வி. ரேவதி




"நேத்திக்கு பீச்சுல உனக்கும் உன் காதலிக்கும் சண்டையாமே?"

"ஆமாம்; சுண்டலுக்கு யாரு காசு கொடுக்கறதுங்கறது குறித்துத்தான்!"

"கடைசியிலே என்ன ஆச்சு?"

"வெறுத்துப் போய், 'எதுக்கு இப்படி அடிச்சுக்கறீங்க, இந்தாங்க, பிடிங்க'ன்னு சொல்லி சுண்டல்காரன் சுண்டலைக் கொடுத்துட்டு காசே வாங்காம போயிட்டான்!"



"எப்பத்தான் நீ இந்தத் திருட்டுத் தொழிலை விடப் போறியோ?"

"டக்குன்னு விட்டுட முடியுங்களா! என்னை நம்பி அஞ்சாறு போலீஸ் குடும்பம் இருக்குதில்லே!"

- வி. ரெங்கநாதன்

தமது கட்சிக்குச் சரியான நியாயம் வழங்கப்படவில்லை என்று சொல்லி, தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தனித்து ஆறு இடங்களில் போட்டியிடும் என்று அறிவித்திருக்கிறார், கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் என். சங்கரய்யா. சங்கரய்யாவை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினோம். அதிலிருந்து:

கல்கி : தி.மு.க., உங்களுக்கு ஒரு சீட் ஒதுக்கி இருப்பதற்கு அதிருப்தி தெரிவித்துக் கூட்டணியிலிருந்து விலகி இருக்கிறீர்கள். உண்மையில் நீங்கள் எத்தனை சீட் கேட்டீர்கள்? எத்தனை தரப்படலாம் என்று எதிர்பார்த்தீர்கள்?

சங்கரய்யா: அது பற்றி நான் கூறுவதற்கில்லை. ஒரு சீட் ஒதுக்கீடு என்பது ஏற்பதற்கில்லை என்று மட்டும்தான் சொல்வேன். அனைத்திந்திய ரீதியில் இத் தேர்தலில் மதவாத பா.ஜ.கவோ, ஊழல் காங்கிரஸோ ஆட்சியைப் பிடித்து விடக் கூடாது என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விரும்பியது. பதினெட்டு மாத காலமாக ஆட்சி நடத்தி, ஒரு ஊழல் குற்றச்சாட்டுக்கும் உள்ளாகாத ஐக்கிய முன்னணிதான் மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம். காங்கிரஸ் மட்டும் அவசரப்படாமல் இருந்திருந்தால், இன்னும் மூன்றரை ஆண்டுக் காலம் ஐ.மு. சிறந்த ஆட்சியைத் தந்திருக்கும். இந்தத் தேர்தலே, காங்கிரஸ் தன் பதவி ஆசைக்காக மக்கள்மேல் சுமத்திய ஒன்றுதான். ஆகவே, மத்தியில் ஐக்கிய முன்னணியை வலுப்படுத்தும் விதமாக, இங்கே நாங்கள் தி.மு.க.-த.மா.கா.வுடன் கூட்டணிக்கு ஒப்புக் கொண்டோம். அவர்கள் இதை உணர்ந்திருக்க வேண்டும்.

கல்கி: ஐ.மு.வில் அவர்களும் உறுப்பினர்கள்தானே? இதை யோசித்திருக்க மாட்டார்களா?

சங்கரய்யா: இல்லை. இது அப்படி இல்லை. அ.தி.மு.க.வும் பா.ஜ.கவும் அமைத்துள்ள வகுப்புவாதக் கூட்டணியை-அதன் பலத்தை, தி.மு.க., குறைத்து மதிப்பிடுகிறது. நுணுக்கமான கண்ணோட்டத்துடன் பாருங்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை, அ.தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., பா.ஜ.க., ஆகிய நான்கு கட்சிகளுக்குமே தலா ஒரு சதவீத வோட்டுகள் கட்டாயம் உண்டு. இந்தக் கட்சிகள் ஒன்று சேரும்போது அதைக் குறைத்து மதிப்பிடுவது -அதுவும் தேர்தல் நேரத்தில்-மிகவும் தவறான போக்கு. இடது சாரிக் கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாமலேயே அவர்களை வென்று விடலாம் என்று தப்புக் கணக்குப் போடுகிறார்கள். இதன் மூலம் இடதுசாரி

களை பலவீனப்படுத்த நினைப்பது, தமிழ்நாட்டுக்கும் ஜனநாயகத்துக்கும் நல்லதல்ல. இதனால்தான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டுக்கு ஓரிடம் மட்டும் என்கிற அவர்களது முடிவை மறுபரிசீலனை செய்யக் கேட்டோம்.

கல்கி: பேச்சுவார்த்தை நடக்கும் போதே நீங்கள் இதனை எதிர்பார்த்தீர்களா? இத்தனை கடைசி நாட்களில் இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கிறீர்களே?

சங்கரய்யா: அவர்கள் யதார்த்த நிலைப்பாடு செயல்படுவார்கள் என்றுதான் நாங்கள் உறுதியாக நம்பினோம். ஆனால் செய்யவில்லை. மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை ஓரங்கட்டச் செய்யப்படும் எந்த முடிவையும் நாங்கள் தீர்மானமாக



'91-ல் நடந்ததை நினைவுபடுத்திப் பாருங்கள்...

ஏற்க மாட்டோம் என்பதனால் தனித்து இயங்க வேண்டிய சூழல் உருவாகி விட்டது. இந்திய நாடாளுமன்றத்தில் இடதுசாரிகளின் பலம் கூடுவது, ஏழை-எளிய மக்கள், தொழிலாளிகள், விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கச் செய்யும். சரித்திரத்தில் பார்த்தால் புரியும். சாதாரண மக்களின் பிரதிநிதிகளாகக் குரல்கொடுத்து வருவது நாங்கள்தான்.

பேச்சுவார்த்தையின்போது, எங்களுக்கு ஒரு சீட்தான் என்று அவர்கள் முன்பே சொல்லவில்லை. ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தால் நாங்களும் வேறு முடிவு எடுத்திருப்போம். தி.மு.கவின் இம்முடிவு எங்களுக்கு நியாயம் வழங்குவதாக இல்லை!

கல்கி: சி.பி.ஐக்கும் ஓரிடம்தான் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் என்ன முடிவு எடுக்கப்போகிறார்கள் என்று கலந்து பேசினீர்களா?

சங்கரய்யா: சி.பி.ஐக்கு ஏற்கெனவே இரண்டு இடங்கள் (நாகை, சிவகாசி) உள்ளன. அதிலும் சிவகாசியை தி.மு.க. எடுத்துக் கொண்டிருப்பதை நாங்கள் கண்டித்திருக்கிறோம். சி.பி.ஐ. தரப்பில் கூட்டணி தொடர்வது பற்றி என்ன முடிவு எடுக்கப்படும் என்று எங்களுக்குத் தெரியாது. அதுபற்றிப் பேசவில்லை. ஆனால் அவர்களுக்கும் தி.மு.க., நியாயம் வழங்கவில்லை என்பது உண்மை.

கல்கி: உங்களின் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கும் என்று கருதுகிறீர்கள்?

சங்கரய்யா: போராட்டத்தைப் பொறுத்தே வெற்றி வாய்ப்பு. தெரிந்ததுதானே? 91ல் நடந்த தேர்தலை நினைவுபடுத்திப் பாருங்கள். மார்க்ஸிஸ்டுகளுக்கு ஓரிடம் மட்டும் கிடைத்த அத்தேர்தலில் தி.மு.க.வுக்கும் ஒரே ஒரு இடம் தான்! எதுவும் நாம் யூகிப்பதற்கில்லை. எல்லாம் மக்கள் கையில்தான்!

கல்கி: தி.மு.க. கூட்டணியிலிருந்து நீங்கள் விலகியதும் வேறு ஏதாவது கட்சி உங்களுடன் பேசியதா?

சங்கரய்யா: எப்படி வந்து பேசுவார்கள்? நாங்கள் நெருப்பு அல்லவா? ஊழல் கட்சியான அ.தி.மு.கவோ, பிறரோ எப்படி நெருங்க முடியும்? ஆனால் ஐ.மு.வில் அங்கத்தினராக உள்ள ஜனதா தளத்தினர் மட்டும் நட்பு முறையில் வந்து பேசிப் போனார்கள். தி.மு.க. தன் முடிவை மறுபரிசீலனை செய்யாத பட்சத்தில் நாங்கள் தனித்து நிற்பது என்கிற நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை!

சந்திப்பு: **ஔரங்கசீப்**



ராஜீவ் காந்திக்கு மூப்பனார் துரோகம்!

உற்சாகத் துள்ளலுடன் இருக்கிறார் தமிழ்நாடு (இந்திரா) காங்கிரஸ் தலைவர் தங்கபாலு. அலுவலகம் இருக்கும் லஸ் கிருஷ்ணசாமி அவின்யூவில் வழக்கத்துக்கு மாறாக டிராபிக் ஜாம் ஏற்படும் அளவுக்கு சுமோ மற்றும் மாருதிகளின் அணிவகுப்பு. பொன்னாடையும் கையுமாக, மாடிக்குத் தலைவரைக் காண விரைந்து கொண்டிருக்கும் பிரமுகர்கள், தொண்டர்கள்... எல்லாம் சோனியா தீவிர பிரசாரம் மேற்கொண்டதன் விளைவு! இது தவிர, இதுவரையில் தனி ஆவர்த்தனம் வாசித்துக் கொண்டிருந்த திண்டிவனம் ராமமூர்த்தி, அன்பரசு போன்றவர்கள் தேர்தலை முன்னிட்டு ஒன்றாகச் சேர்ந்து கோஷ்டி கானம் பாட முன்வந்து விட்டார்கள். வாழப்பாடியின் தளபதிகளான தண்டாயுதபாணியும், பலராமனும் மீண்டும் தங்களை தாய் காங்கிரஸிலேயே இணைத்துக் கொண்டிருக்கிற நிலையில் தங்கபாலுவின் சந்தோஷத்திற்கு என்ன தடை!

அ.தி.மு.க. தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவராக இருக்கும் சீனியர் பிரமுகரான செல்வகணபதி, மிகவும் பிஸி. பிரசார விஷயங்களைக் கவனிப்பது, பொதுக்கூட்டம் போடுவது என்று கட்சிப் பிரமுகர்களிடம் தொடர்ந்து ஆலோசனைகள்தான். ஸ்டான்டிலிடிஸ் காரணமாக கழுத்தில் பட்டை போட்டு இருக்கும் செல்வகணபதியிடம் பேசினோம்.

தேர்தல் '98

"விடுதலைப் புலிகளைக் கடுமையாக எதிர்த்த நீங்கள், இப்போது அதனுடன் தொடர்பு கொண்டுள்ள ம.தி.மு.க – பா.ம.க. கட்சிகளுடன் கூட்டு வைத்திருக்கிறீர்களே?"

"புதிதாக ஏற்பட்டிருக்கும் குப்பைகளை அகற்றவே இந்தக் கூட்டணி. ஆகவே 'பழைய குப்பைகளைக் கிளற வேண்டாம்' என்று அம்மாவே சொல்லியிருக்கிறார்!"

"தி.மு.க. – த.மா.கா. கூட்டணி இந்த தேர்தலிலும் தொடர்வதால் இந்தத் தேர்தலிலும் உங்கள் ஆட்சியில் நடந்த ஊழல்கள் பேசப்படும் என்கிற நிலை. இதை எப்படி எதிர்கொள்ளப் போகிறீர்கள்?"

"அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத்தான் எங்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இதைக் கோர்ட்டில் முறைப்படி நிரூபிப்போம். நாங்கள் எங்கும் ஓடி விட மாட்டோம். இந்த ஊழல் விவகாரங்களையெல்லாம் சொல்லி, இவர்களின் மோசமான செயல்திறனை மறைக்க முடியாது. தமிழகமெங்கும் அம்மா அலைதான் அடித்துக் கொண்டிருக்கிறது!"

"சோனியா பிரசாரம், ரஜினியின் தி.மு.க. –

"சேலத்தில் வாழப்பாடியாரை எதிர்த்துப் போட்டியிடுகிறீர்களே?" என்று நாம் துவங்கியவுடன், "என்னை எதிர்த்து அவர் போட்டியிடுகிறார் என்று சொல்லுங்கள். நான் ஒரு தேசியக் கட்சியின் மாநிலத் தலைவர். அவர் ஒரு சிறு கும்பலை வைத்துக் கொண்டிருக்கிற அரசியல் வியாபாரி!" என்ற பாய்ச்சலோடு பேச ஆரம்பித்தார்.

"சரி, ஜெயின் கமிஷன் பற்றிப் பேசுவீர்களா, மாட்டீர்களா?"

"ஸார்... தமிழகத்தில் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி என்பது, மதவாதமும், ஊழல் சக்திகளும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும் உள்ள கூட்டணி. ஜெயின் மிகத் தெளிவாகவே, ராஜீவ் காந்தி கொலைக்குத் தளம் அமைத்துக் கொடுத்தது தி.மு.க. என்று சொல்லியிருக்கிறார். அந்தக் கட்சியுடன் சேர்ந்து கூட்டணி அமைத்துள்ளது த.மா.கா. சோனியா காந்தி அவர்கள் பிரசாரத்திற்கு வந்த பின்பும், ஜெயின் கமிஷன் பழிக்கு ஆளான தி.மு.க.வுடன் த.மா.கா. கூட்டணி கொண்டிருப்பது ராஜீவ் காந்திக்கு மூப்பனார் செய்யும் துரோகம். ஆக இந்த இரண்டு அணிகளுமே ராஜீவ் காந்திக்கு - காங்கிரஸுக்கு எதிரான அணி

கள்தான்.

"அடுத்ததாக, திராவிடக் கட்சிகளின் கூட்டணி இல்லாமல் காங்கிரஸ் வெற்றி பெறுமா என்று சிலர் கேட்கிறார்கள். மத்தியில் ஐ.மு. அடித்த கூத்தும் தமிழகத்தில், தி.மு.க. ஆட்சியின் மக்கள் விரோதப் போக்கும் தமிழக வாக்காளரிடையே ஓர் அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறது. தி.மு.க.வும் – த.மா.காவும் ஐ.மு.வின் அங்கங்கள் என்பதால், குழப்பத்துக்கு இவர்களும் காரணம். இவற்றை விளக்கி சோனியா தமிழகத்தில் மீண்டும் பிரசாரம் செய்யும்போது பேசுவார். ஆகவே, மக்கள் ஏங்குவது ஒரு நிலையான ஆட்சிக்காகத்தான். இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் எந்தவிதமான ஊறும் வராமல் காப்பாற்றும் கட்சி காங்கிரஸ் என்பதை மக்கள் உணர்ந்து விட்டார்கள். அதிலும் சோனியா காந்தியின் பிரசாரத்திற்குப் பிறகு, பா.ஜ.க.வின் சுருதியும் குறைந்து விட்டது. எனவே, தேர்தலுக்குப் பின் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைவது நிச்சயம்!" என்று நம்பிக்கையோடு கூறுகிறார் தங்கபாலு.

— தில்லப்பா

த.மா.கா கூட்டணி ஆதரவு பற்றி?"

"சோனியா பிரசாரத்தில் கவலைப்பட வேண்டியது தி.மு.க.வும் த.மா.காவும் தான். தி.மு.க. ஆட்சியில் சட்டம் – ஒழுங்குச் சீர்குலைவு, விலைவாசி உயர்வு, அன்றாடம் குண்டு வெடிப்புகள் ஆகிய விவகாரங்களுக்கு ரஜினியால் பதில் சொல்ல முடியுமா? இவற்றுக்கெல்லாம் தெளிவான பதில் சொல்ல முடியாத நிலையில்தான் ரஜினி இருக்கிறார். ஆகவே தி.மு.க.–த.மா.கா.வுக்கு அவர் கொடுக்கும் ஆதரவு பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. காரணம் அந்த ஆதரவு இந்த முறை எந்தப் பலனையும் கொடுக்காது என்பது நிச்சயம்."




'அம்மா' அலைதான் அடிக்கிறது!

"கோ.ப.செ.வாக இருந்து விலகி தி.மு.க.வில் சேர்ந்த செல்வேந்திரன் ஜெயலலிதாவைக் கடுமையாகத் தாக்கி அறிக்கை விட்டிருக்கிறாரே?"

"சீ...சீ! இந்தப் பழம் புளிக்கும் என்ற நரியின் கதைதான் அவர் கதையும்!"

ஹெக்டேவின் வியூகங்கள்!



இந்தியா முழுக்கத் தேர்தல் பரபரப்பு ஆரம்பித்து விட்டபிறகுகூட கர்நாடகத்தில் அரசியல் சூடு பிடிக்காமல் மந்தமாகவே தான் இருந்தது! முக்கியக் கட்சிகளான ஜனதா தளம், காங்கிரஸ் ஆகியவற்றின் அலுவலகங்கள்கூட, பணியாளர்கள் ஓரிருவரைத் தவிர, வெறிச்சோடிப் போய்த்தான் கிடந்தன. சமீபத்தில் பிடித்து விட்டது சூடு! எல்லாம் சோனியா காந்தியின் வருகையால் தான்!

கர்நாடக அரசியலில் இன்றைக்கு மொத்தப் பார்வையும் ஹெக்டே மீது தான். இவரை மையமாக வைத்துத்தான் உள்ளூர் அரசியல் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறது. "கர்நாடகத்தில் நவீன சுயம்வரம் நடக்கப் போகிறது. கையில் மாலையை வைத்துக் கொண்டு நிற்கிறார் ஹெக்டே. அவர் பார்த்து யாருக்குப் போடுகிறாரோ அவர் தான் நாயகன்"- என்று ஹெக்டேவின் நிலைமையையும் கர்நாடக அரசியலின் நிலைமையையும் படம் பிடித்திருந்தது டைம்ஸ் ஆஃப் இந்தியா!

ஜனதாதளம், காங்கிரஸ், பா.ஜ.க., மூன்று கட்சிகளுமே ஹெக்டேவைத் தங்கள் வசம் இழுக்க முயன்றன. இறுதி வெற்றி பா.ஜ.க.வுக்குத்தான்!

பாரதீய ஜனதா கர்நாடகத்தைப் பொறுத்தவரை ஓரளவு வளர்ந்துள்ள கட்சி. தெற்கில் தங்களுக்கு அதிக இடங்கள் வருமெனில், அது கர்நாடகத்திலிருந்துதான் என்பது பா.ஜ.கவுக்குத் தெரியும். ஏற்கெனவே ஆறு எம்.பிக்கள் இருக்கின்றனர். சென்ற தேர்தலில் மீதி ஆறு இடங்களில் சொற்ப வோட்டுக்கள் வித்தியாசத்தில் இரண்டாவது இடத்துக்கு வந்திருந்தது பாரதீய ஜனதா. தற்போதைய ஜனதா தளத்தின் பலவீனம், தவிர அடுத்து ஆட்சியைப் பிடிக்கப் போவது பாரதீய ஜனதாதான் என்று ஏற்பட்டுள்ள இமேஜ் - இரண்டும் சேர்ந்து முந்தைய ஆறு இடங்களையும் இரண்டாவதாக வந்த ஆறு இடங்களையும் சேர்த்துப் பன்னிரண்டு இடங்கள் 'ஏற்கெனவே வந்தாச்சு' - என்ற கணிப்பில் இருக்கும் பாரதீய ஜனதா, மேலும் பல இடங்களைக் கைப்பற்ற ஹெக்டேவின் கூட்டணி உதவும் என்ற நம்பிக்கையுடன் அவரை அணுகி, பெற்று விட்டது!

இந்தக் கூட்டணி முடிவாகுமுன், 'ஹெக்டேவுடன் எப்படியாவது கூட்டணி வையுங்கள்' என்று காங்கிரஸ் மேலிடத்திலிருந்து சிக்னல் வர, முன்னாள் ரயில்வே அமைச்சர் ஜாபர் ஷெரீப் ஹெக்டேவைச் சந்தித்து, கூட்டணி பேசினார். 'நான் இன்னமும் முடிவெடுக்க வில்லை' என்றே பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்தார் ஹெக்டே.

ஆனால் ஹெக்டே என்ன எதிர்பார்க்கிறார் என்பதை நம்மிடம் தெரிவித்தார்

ஜாபர் ஷெரீப்.

''நாங்களும் சரி, மற்றவர்களும் சரி, ஹெக்டே கட்சியுடன் உடன்பாடு வைத்துக் கொள்ள முயன்றது உண்மைதான். கர்நாடகத்தில் மட்டுமல்லாமல், இந்தியா முழுமைக்குமாக அறுபது சீட்டுக்கள் கொடுப்பவருடன்தான் கூட்டு என்கிறார் ஹெக்டே. இன்னமும் ஒரே ஒரு தேர்தலில் கூட ஹெக்டேவின் லோக் சக்தி போட்டியிடவில்லை. அவர்களின் வாக்கு பலம் என்னவென்பது யாருக்குமே தெரியாது. இந்த நிலையில் அறுபது சீட்டுக்கள் கேட்டால் எப்படித் தர முடியும்? கர்நாடகத்தில் பத்து சீட் ஒதுக்குங்கள் என்று கேட்டாரென்றால் நியாயமிருக்கிறது. இந்தியா முழுமைக்கும் கேட்கிறாரே?''

ஹெக்டேயின் 'கனவு' என்னவென்பதை விவரித்தார் ஒரு ஜனதா தளப் பிரமுகர்.

''பட்டேல் அரசைக் கவிழ்த்து விட்டு, ஹெக்டே முதல்வராவார் என்று பேசுகிறார்கள்! பத்திரிகைகளும் அப்படிச் செய்தி போடுகின்றன. எல்லாமே தவறு. தேவேகௌடா எப்போது பிரதமர் நாற்காலியில் உட்கார்ந்தாரோ, அப்போதே பிரதமர் நாற்காலியைக் குறிவைத்து விட்டார் ஹெக்டே. தனிப்பட்ட எந்தக் கட்சிக்கும் போதிய மெஜாரிடி வராத நிலையில் சொற்ப எம்.பிக்களைத் தம்பின்னால் வைத்திருக்கும் தலைவர்கள், பிரதமர் ஆகிவிட முடியும் என்பது போல் ஒரு சிஸ்டம் சந்திரசேகர் காலத்திலிருந்து வந்து விட்டது. வரவிருக்கும் தேர்தல் முடிவுகளும் அம்மாதிரி வந்து விட்டால் நாற்பது ஐம்பது எம்.பிக்களை வைத்திருக்கும் தாமும் பிரதமர் பதவிக்கு போட்டியிட்டுக் கைப்பற்றி விட முடியும் என்று நினைக்கிறார். அதனால்தான் எல்லாக் கட்சிகளிடமும் ஐம்பது சீட் அறுபது சீட் என்று பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்'' – என்றார் அவர். ஆனால், 'பாரதீய ஜனதாவுடன் கூட்டு' என்று டெல்லியிலிருந்து ஹெக்டே அறிவித்தபோது ஹெக்டேவின் ஆதரவாளர்களுக்கும் சரி; தொண்டர்களுக்கும் சரி – பெரிய மகிழ்ச்சி ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது! 'காங்கிரஸ'டன் கூட்டு; அல்லது ஜனதா தளத்துடன் உடன்பாடு' – என்பதாக இருந்தால் இவர் பக்கம் 'தாவ' ஜனதாதளத்திலேயே கூட நிறையப் பேர் தயாராக இருந்தனர்.



• ஜாபர் ஷெரீப்

'ஹெக்டே அவசரப்பட்டு தவறு செய்து விட்டார்' என்று கூடப் பத்திரிகைகள் எழுத, ஹெக்டேவை ஆதரித்த பொது மக்கள் கூட டல்லடிக்க ஆரம்பித்து விட்டனர்.

ஹெக்டே எடுத்த முடிவுக்காக மிகவும் சந்தோஷப்பட்டவர் ஜே.எச். பட்டேல்.

''ஹெக்டே கட்சிக்காரர்களுக்கே அவர் முடிவு பிடிக்கவில்லை. இதனால் ஜனதா தளத்திற்கு எந்த பாதிப்பும் இருக்கப் போவதில்லை'' என்றார் பட்டேல். போதாதற்கு கர்நாடக மாநில ஆர்.எஸ்.எஸ். தலைவர், ''பாரதீய ஜனதா ஹெக்டேவுடன் கூட்டு வைத்திருக்கக் கூடாது. ஹெக்டேவை ஆதரிக்க மாட்டோம்'' என்று சொல்லி வைத்தார்!

ஜனதாதளம் தன்னுடைய தேர்தல் பிரசாரத்தை பெங்களூருக்கு அருகிலுள்ள ஹொசக்கோட்டையிலிருந்து பிரம்மாண்டமாய்த் துவக்கியது. 'ஹொசக்கோட்டேயிந்தா கெம்பு கோட்டெக்கே' என்ற முழக்கம் அறிவிக்கப்பட்டது. (ஹொசக்கோட்டே – என்றால் புதுக்கோட்டை என்று அர்த்தம். 'புதுக்கோட்டையிலிருந்து செங்கோட்டை'க்கு) அன்றைய தினம் நிருபர்கள் கூட்டத்தில் தமது பாணி விமர்சனங்களில் புகுந்து விளையாடினார் பட்டேல்.

''சோனியா காந்திக்கு வரும் கூட்டம் வோட்டுப் போடாது. அழகாக இருக்கிற பெரிய இடத்துப் பெண்கள் வந்தால் எல்லாரும் திரும்பிப் பார்ப்பதில்லையா? அப்படித்தான் பார்க்கிறார்கள்! இரண்டு அழகிய பெண்கள் ரோட்டோரத்தில் நாட்டியம் ஆடினால் பார்ப்பதில்லையா? அப்படித்தான்!'' என்றார்.

''பிஜேபி ராமராஜ்ஜியம் என்கிறது; சோனியா ரோமராஜ்ஜியம் என்கிறார்; நாங்கள்தான் கிராம ராஜ்ஜியம் தருவோம் என்கிறோம்'' என்று வெளுத்து வாங்கினார். மறுநாள் ஒரு காங்கிரஸ் தலைவர், பட்டேலுக்குத் தந்த பதில் : ''ராமராஜ்ஜியம்; ரோமராஜ்ஜியம்; கிராம ராஜ்ஜியம் எல்லாம் சரி. பட்டேல் தமது 'ரம்'ராஜ்ஜியத்தைத் தராமலிருந்தாலே போதும்''

இனி கணைகளுக்கும் எதிர்க் கணைகளுக்கும் குறைவு இருக்கப் போவதில்லை தேர்தல் வரை!

— அமுதவன்

(ராமதாஸ் பேட்டி – பக்கம் 25)

குறையொன்றுமில்லை

44

முக்கூர்

மஹாலக்ஷ்மி, தலைகுனிந்த நிலையில் இருந்த பகவானிடம் சொன்னாள் :

"சுவாமி! அவனோ அக்ஞன் - ஒன்றும் தெரியாதவன் - நீங்களோ சர்வக்ஞர் - எல்லாம் தெரிந்தவர். நீங்கள் ரக்ஷிக்காவிட்டால் அவனுக்குப் போக்கிடம் எங்கே...? நீங்கள் காப்பாற்றாவிட்டால் அவன் எங்கே போவான்? ஆகையினாலே நீங்கள் அவனைக் காருண்யத்தோடு கடாக்ஷிக்க வேண்டும்" என்றாள் மஹாலக்ஷ்மி.

பகவானோ, 'நான் பார்க்க மாட்டேன்' என்று மறுபடியும் தலையைக் குனிந்து கொண்டு விட்டான்! குனிந்து கொண்டேயிருக்கிறான்...

மஹாலக்ஷ்மி வாக்கினாலே சொல்லிப் பார்த்தாள், அவன் கேட்கவில்லை... இப்போது செய்கையினாலே காட்டுகிறாள் -

"பார்க்கப் போகிறீர்களா இல்லையா...?"

"முடியாது!"

மஹாலக்ஷ்மி இரண்டு திருக்கரத்தையும் பகவானுடைய முகவாய்க் கட்டையிலே வைத்துத் தூக்கி, அப்படி நிறுத்திவிட்டாள்! பகவானால் கீழே குனிய முடியாமல், வந்தவனைப் பார்க்கும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டது.

உடனே என்ன பண்ணினான்? மறுபக்கம் திரும்பினான்! அந்தப் பக்கம் திரும்பினால் என்ன ஆயிற்று...? பூமாதா உட்கார்ந்திருக்கிறாள்!

நாம் எவ்வளவு தப்பு பண்ணினாலும் அந்தத் தப்பை பகவானிடத்திலே சொல்ல மாட்டாளாம் அவள்! ரொம்பச் சின்னதாக நல்லது பண்ணி விட்டோமானாலும் அதைப் பெரிது படுத்தி பகவானிடத்திலே சொல்லுவாளாம். ஆனால் நம் குற்றத்தையெல்லாம் பார்க்கவே மாட்டாளாம்! - மறு பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற இந்த பூமாதா சொல்கிறாள்.

"சுவாமி! லக்ஷ்மி இடித்தது போதாதா...? நான் வேறு இடிக்க வேண்டுமா?..." என்று பகவான் முகத்தை நேராகத் திருப்பி விட்டு விட்டாள்!

பகவான் பார்த்தார்.... இப்படியும் திரும்ப முடியவில்லை; கீழேயும் குனிய முடியவில்லை. இன்னொரு பக்கம் திருப்பிக் கொண்டார் முகத்தை. அங்கே நீளா தேவி இருக்கிறாள்.

"அவர்கள் இரண்டு பேரும் இடித்தது போதாதா.... நான் வேறு இடிக்க வேண்டுமா?" என்று முகத்தைத் திருப்புகிறாள்.

பகவான் பார்த்தான்... எதிரே வந்தவன் எவ்வளவு பாவியாகவிருந்தாலும் பரவாயில்லை; அனுக்கிரகம் பண்ணுகிறேன் என்று அனுக்கிரகம் பண்ணிவிட்டான்!

பகவானே காருண்யம் மிக்கவன்; அந்த லக்ஷ்மியுடனேயே சண்டை போடக் கூடியவன் - 'என் அடியார்கள் ஒரு போதும் தப்பு பண்ண மாட்டார்கள்; அப்படியே அவர்கள் பண்ணினாலும் அது நன்மைக்கே..' என்று வாதிடக்கூடியவன். அப்படிப்பட்டவனுக்கே ஒரு அடியாரிடம் கோபம் வருகிறது; அந்தக் கோபத்தையும் சாந்தப்படுத்தக்கூடிய அளவுக்கு இருக்கிறாள் மஹாலக்ஷ்மி! அப்படிப்பட்ட மஹாலக்ஷ்மியுடன் கூட ஸ்ரீயஃபதியாய் இருக்கிறான் பகவான்.

அபாயமே இல்லாத தர்ம பத்னியோடு பகவான் யக்ஞம் பண்ணுவதாக சுவாமி தேசிகன் சொல்கிறார். யக்ஞம் பண்ண வேண்டுமானால் தர்மபத்தினி அருகிலே இருக்க வேண்டும்.

பகவானுடைய யக்ஞத்துக்கு ரித்விக்குகள் வேண்டாமா...?

ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ் முதலான கல்யாண குணங்களெல்லாம் ரித்விக்குகளாக இருக்கின்றன. இவற்றுள் தயா என்கிற குணம் இருக்கிறதே... ...காருண்யம்... அதுதான் அதிகமாக இருக்கிறது. அதனால் தான் தயாசதகம் என்று தனியாக அருளினார் சுவாமி

தேசிகன்.

'அம்மா தயே! நீ பகவானிடத்திலே இல்லையென்றால் மற்றைய குணங்களெல்லாம் தோஷமாகுமேயொழிய குணங்கள் ஆகா!' என்று சொல்லப்பட்டதனாலே பகவானுடைய காருண்ய மகிமை நமக்குப் புரிகிறது. அப்படிப்பட்ட காருண்யமிக்கவன் மஹாலக்ஷ்மியோடு சேர்ந்தே யக்ஞம் பண்ணுகிறான்.

பகவான் பண்ணக்கூடிய யக்ஞத்துக்கு என்ன பெயர் என்றால் சரணாகத ரக்ஷணம். சரணாகத ரக்ஷணம் என்கிற யக்ஞத்தை அவனைத் தவிர வேறு யாராலும் பண்ண முடியாது.

யாரை ரக்ஷிக்கிறான் பகவான்...?

சகலரையும் – சரணாகதி என்று வந்த சகலரையும் ரக்ஷிக்கிறான். மகா வித்வான்களும் மேதாவிகளும் கூட அவன் ரக்ஷணை இல்லாவிட்டால் வீணாய்ப் போவார்கள்.

ஆசார்யர் ஒருவர் இருந்தார். மனு ஸ்ம்ருதியையே மாற்றிச் சொன்னார் அவர்!

பகவான் இந்த்ரியக்ராம :

வித்வாம்ஸனபி கர்ஷதி (எப்பேர்ப்பட்ட வித்வானாயிருந்தாலும் இந்த்ரியங்கள் அவனைக் காட்டிலும் பலவானாயிருந்து அவனைத் தடுமாறச் செய்யும் என்று பொருள்)

இதை அந்த ஆசார்யார் பிரித்துச் சொன்னார்.

'வித்வாம்ஸ ந அபிகர்ஷதி!' – அதாவது 'இந்த்ரியங்கள் வித்வான்களை அபகரிக்காது' என்று பொருள் வரப் பிரித்தார்.

அப்படியே திருத்தியதை சிஷ்யர்களிடம் சொல்லி, அவர்களும் அதே போலச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

சிஷ்யர்களெல்லாம் இப்படிச் சொல்லிக் கொண்டே போகிறபோது, 'இது என்ன புதுப் பாடமாக இருக்கிறதே; இந்த மாதிரி மனு ஸ்ம்ருதியிலே இல்லையே...' என்று கேட்டவர்களெல்லாம் வியந்தார்கள்.

சிஷ்யர்களோ, 'எங்கள் குரு அப்படித்தான் சொல்லிக் கொடுத்தார்....' என்றார்கள்.

லக்ஷ்மி நரசிம்மாச்சார்யார்



சாஸ்திரத்தைத் திருத்தினாரே... அந்த மனிதருக்கு அன்றைய தினம் ராத்திரி ஒரு சொப்பனம் வந்தது. சொப்பனத்திலே ஒரு அழகான ஸ்த்ரீ. அவள் கையிலே ஒரு தங்கக் குடம். அதை எடுத்துக் கொண்டு இவருடைய பர்ணசாலையருகே வருகிறாள் அவள்! இவர் உட்கார்ந்துள்ள இடத்தையும் தாண்டி பர்ண சாலைக்குள் நுழைகிறாள்.

படாரென்று விழிப்பு வந்து விட்டது அவருக்கு!

'இது ஏன் இப்படி துர்ச்சொப்பனம்...?' என்று பயம். சொப்பன சாஸ்திரம் என்று உண்டு. அதிலே சுப சூசகம், அசுப சூசகம் என இரண்டு வகை சொல்லியிருக்கிறது. நல்லதோ, கெட்டதோ... பின்னால் வரக் கூடியதை முன்கூட்டியே தெரிவிக்கும் அது.

ராமாயணத்திலே இந்த இரண்டு வகை சொப்பனங்களும் வருகின்றன. அயோத்யா காண்டத்திலே ஒன்று, சுந்தர காண்டத்திலே ஒன்று. அயோத்யா காண்டத்திலே, கேகய நாட்டிலே பரதனுக்கு வந்தது - அது துர்ச் சொப்பனம்! சுந்தர காண்டத்திலே திரிஜடைக்கு வந்த சொப்பனம் சுஸ்வப்னம்.

அதனால்தான் இந்த உலகத்தை 'ஸ்வப்ன மபி சத்யம்' என்றார்கள். 'உலகம் அநித்ய மானதுதான்... ஆனால் அது உண்மைப் பொருள்' என்பது விசிஷ்டாத்வைதம்.

'ஸ்வப்னமபி சத்யம்' - அநித்ய உலகத்தின் சத்யத் தன்மைக்குப் பிரமாணம் சாந்தோக்ய உபநிஷத்திலே இருக்கிறது.

பரம ஏழை ஒருவர் தரித்திரர் (ஒரு கதையை ஆரம்பித்து இன்னொரு கதைக்குப் போய்விட்டேன்... திரும்பவும் முதல் கதைக்கு வருவேன்...) அந்த ஏழை, வாசல் திண்ணை யிலே கிழிந்த துணியைப் போட்டுக் கொண்டு படுத்திருக்கிறார்... படுத்திருப்பவருக்கு சொப் பனம் வருகிறது. என்ன சொப்பனம்...?

"ராஜாதி ராஜ! ஜெய விஜயீபவ!" என்று கோஷம்! சிம்மாசனத்திலே, பெரிய தர் பாரிலே... தர்பார் ராகமே கம்பீரமாகத்தான் இருக்கும்! - அந்த மாதிரி தர்பாரில் கம்பீர மாகத் தான் உட்கார்ந்திருக்க, அரம்பையர்கள் கவரி வீசுகிறார்கள்... மந்திரிகளென்ன, சேனாபதிகளென்ன, ஜனங்களென்ன... இத்தனை பேரையும் பார்த்துக் கொண்டே

அருள்வாக்கு

கொடுக்க வேண்டும். அதுதான் த்யாகம். அதைத்தான் வேதம் எங்கே பார்த்தாலும் வற்புறுத்து கிறது. எந்தக் கர்மாவும் செய்து முடிக்கும்போது, ''நான்தான் கர்த்தா என்பதால் இதன் ப்ர யோஜனம் முழுதும் எனக்கே வந்துவிடப் போகிறதே; அப்படி என் ஒருத்தனுக்கு மட்டும் பலன் கிடைத்துவிடக் கூடாது'' என்கிற பரம த்யாக புத்தியில் ''ந மம'' - ''எனதில்லை; எனக் கில்லை'' என்று அதன் பலனை லோக க்ஷேமார்த்தம் த்யாகம் பண்ணச் சொல்கிறது நம்முடைய மதம்.



மற்ற வஸ்துக்களைக் கொடுத்துவிட்டு, ''நான் கொடுத்தேன்'' என்ற எண்ணத்தை மட்டும் வைத்துக் கொண்டேயிருந்தால் இந்த அஹங்காரமானது த்யாகத்தாலும் தானத் தாலும் கிடைக்கிற ஆத்மாபிவிருத்தியை அப் படியே ஏப்பம் விட்டு விடும். த்யாகம் பண்ண வேண்டும்; அதைவிட முக்யமாக த்யாகம் பண்ணினேன் என்ற எண்ணத்தையும் த்யா கம் பண்ணிவிட வேண்டும்.

மஹாபலி நிறையக் கொடுத்தான்; வாரி வாரிக் கொடுத்தான். ஆனால் நான் கொடுக் கிறோம் என்ற அஹங்காரத்தை அவன் பகவானுக்கு பலி கொடுக்க வில்லை. இதனால் தான் பகவானே அவனிடம் இந்த அஹங்காரத்தை யாசகமாகப் பெற்று, அஹங்கார நாசத்துக்கு அடையாளமாகத் தலையிலே கால் வைத்தான்.

''ஸோஷல் ஸர்வீஸ் பண்ணுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டு வெளி யில் ஏதேதோ பண்ணிக் கொண்டு, அஹங்காரத்தைக் கரைக்காமல் இருந்தால் இவனுக்கும் ப்ரயோ ஜனமில்லை; இவனுடைய ஸர்வீஸால் லோகத்துக்கும் ப்ரயோஜனமிராது. தாற் காலிகமாக ஏதோ நன்மை நடந்தது போல் படாடோபமாகத் தெரியலாம்; ஆனால் அது நின்று நிலைத்து விளங்காது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

யிருந்தவன், திண்ணையிலேயிருந்து தொப்பென்று கீழே விழுந்தான்!

கிழிந்த பாய், தலையணை அவன் மேலே விழுந்தது!

சொப்பனத்திலே சக்ரவர்த்தியாக இருந்தவன்... இப்போது அது கலைந்ததும் என்ன ஆயிற்று! ஓர் அரை க்ஷணம் அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அப்புறம்தான் புரிகிறது... 'ஓஹோ... கனவு?' உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியிருக்கிறது... பார்த்தான் அவன்... மறுபடியும் இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கிப் போனான்!

இந்த அவஸ்தை எதற்கு...? சொப்பனாவஸ்தை என்று ஒன்று ஏன் வைத்தான் பரமாத்மா? விழித்துக் கொண்டிருப்பது; தூங்குவது என்று இரண்டு போதாதா...? இரண்டுக்கும் நடுவிலே சொப்பனம் ஒன்று என்னத்துக்கு...?

சொப்பனத்தின் முடிவுதான் நித்திரை! நல்ல நித்திரை வந்துவிட்டால் அப்புறம் சொப்பனம் வராது. இலேசான நித்திரையில் தான் சொப்பனம். அதனாலே நாம் பகவானை நினைத்துக் கொண்டுதான் தூங்கப் போக வேண்டும். 'துஸ்ஸொப்னதுவம்ஸக்ருதே நம:' என்று கூட பகவானுக்கு ஒரு திருநாமம்!

இப்படி சொப்பனம் வந்தவர் விழுந்தாரே! ஏன் அது என்று கேட்டால், காரணத்தோடு தான் பகவான் வைத்திருக்கிறான். என்ன காரணமென்றால், ஜன்மாந்திரத்திலே பண்ணிய பாவ - புண்ணியத்துக்குப் பலனைக் கொடுக்கிறான்.

என்ன பலன்...?

ஒருத்தர் பரம ஏழை! அவருக்கு சொப்பனம். அதிலே தங்கப் பேழை. அதைத் திறந்தால் ஒரே ஐந்நூறு ரூபாய் நோட்டுக் கட்டுகளாகவே இருக்கிறது! எடுத்தெடுத்து வைக்கிறார் இவர்! சுமார் 25 லட்சம் இருக்கிறது! பேழைக்குள்ளே பார்த்தால், இன்னமும் பணம் மிச்சமிருக்கு.

அதற்குள்ளே அவருக்கு கர்வம் வந்து விட்டது. பத்னியைக் கூப்பிடுகிறார். அவளும் ஓடி வருகிறாள்.

"எதற்காக என்னைக் கூப்பிட்டீர்கள்?"

- மொத்தமும் சொப்பனத்தில் நடக்கிறது!

பதில் சொல்றார் மனைவிக்கு : "என்னவோ என்னை மட்டமாக நினைத்தாயே... வெறுமே குத்தி குத்தி காண்பித்தாயே... இப்போது பார்! நான் எத்தனை லட்சத்துக்கு அதிபதி!"

அவன் பார்க்கப் போகிற நேரத்திலே தூக்கம் கலைந்து எழுந்து உட்கார்ந்து விட்டார்!

எழுந்து உட்கார்ந்தால், பெட்டி ஏது? பணம் ஏது...? பத்தினி இன்னொரு பக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறாள்! பணமா, பெட்டியா ஒன்றையும் காணும்! 'இங்கே தானே வைத்தேன்! இங்கேதானே வைத்தேன்...' என்று பதறுகிறார்.



''டாக்டர்! நீங்க பல் பிடுங்கறதுக்கு பீஸ் கொஞ்சம் குறைச்சலா வாங்கினா நல்லதுன்னு சொன்னேனே, கேட்டீங்களா?''

''ஏன், என்ன ஆச்சு?''

''பல் பிடுங்கப்படும்'கிற போர்டை யாரோ 'பணம் பிடுங்கப்படும்'னு மாத்திட்டுப் போயிருக்கான்!''

– வெ. ராஜாராமன்

ஏதற்காக பகவான் இப்படிப் பண்ணுகிறான் என்றால், ஜன்மாந்திரத்திலே இவர் புண்ணியம் பண்ணியிருக்கிறாராம்!

அந்தப் புண்ணியம் எவ்வளவு...?

எள்முனை அளவு!

அதற்குக் கூடப் பலனைக் கொடுக்க வேண்டும் என்று பகவானுக்கு ஆசையாம்!

நிறைய புண்ணியம் பண்ணியிருந்தால் விழித்திருக்கிற நேரத்திலேயே இதை அனுபவிக்கும்படிப் பண்ணியிருப்பான். ஆனால் விழித்திருக்கிற நேரத்தில் அனுபவிக்க முடியாத அளவுக்கு அல்ப புண்ணியம்தான் இவன் பண்ணியிருக்கிறான். அதனால்தான் சொப்பனத்திலேயாவது அவன் லட்சாதிபதியாக இருக்கட்டுமே என்று செய்தான் பகவான்!

ராத்திரி பதினொன்றரை மணிக்கு சொப்பனம் வந்தது. பதினொன்றரையிலிருந்து பன்னிரண்டே கால் வரையிலே - முக்கால் மணி நேரம் எண்ணினாரா இல்லையா...? அவருடைய வாழ்க்கையிலே முக்கால் மணி நேரம் பணத்தை எண்ணுகிற ஆனந்தத்தைக் கொடுத்தாரா இல்லையா பரமாத்மா?

இதே மாதிரி ரொம்ப சொற்ப பாவம் ஒருத்தர் பண்ணியிருந்தார்... அந்தப் பாவத்துக்கும் பகவான் சொப்பனத்திலே பலனைக் கொடுத்தார்!

(தொடரும்)





1998 பிப்ரவரி 8
ஈசுவர தை 26
மலர் : 56
இதழ் : 28

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ராஜீவ் கொலை: நீதிமன்றத் தீர்ப்பு


ஒரு பக்கம் தேர்தல் சூடுபிடிக்கிறது. மறுபக்கம்... எந்தக் காரணத்துக்காக ஐ.மு. ஆட்சி கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்டதோ, அந்தக் காரணமே அடிபட்டுப் போய் நிற்கிறது!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப் பெற்ற 26 நபர்களுமே குற்றவாளிகள் என சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்து, அனைவருக்கும் தூக்குத் தண்டனை என்று கூறி விட்டது. கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்பது நிரூபணமாகி அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த ஊரறிந்த ரகசியத்துக்கு நீதிமன்ற முத்திரை கிடைத்த பிறகு, ராஜிவ் கொலையை வைத்துக் கொண்டு கலபமாக அரசியல் பண்ண முடியாத பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் நம் தலைவர்கள்!

தமிழீழப் பிரச்னையைத் தீர்க்கிறேன் பேர்வழியென்று இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா வுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார் ராஜீவ் காந்தி. விடுதலைப் புலிகளின் பங்கேற்பில்லாத அந்த ஒப்பந்தம் அவர்களுக்கு அதிருப்தியையே ஏற்படுத்தியது.

போதாக்குறைக்கு, இந்திய அமைதிப் படையையும் இலங்கைக்கு அனுப்பி வைத்து, புலிகளின் அதிருப்தி, ஆத்திரமாக மாறக் காரணமாயிருந்தார்....

இந்திரா காந்தி காலந்தொட்டு, தொடர்ந்து வந்த பிரதமர்கள் மௌனமாய் ஊக்குவித்த



வன்முறை கலாசாரம், ஆத்திரத்தை அடக்க முடியாமல் வெடித்தது. இளமையும் சக்தியும் ததும்ப நின்ற ராஜீவ் காந்தியையே பலிகொண்டு விட்டது.

அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு முன்பே இச் சம்பவத்தை அரசியலாக்கி விளையாட ஆரம்பித்து விட்டனர் நம் அரசியல்வாதிகள். ராஜீவ் கொலையை முதலீடாக்கி வோட்டு அறுவடை காணும் மற்றொரு தேர்தல் வரவிருக்கிற இந்த நேரத்தில், தீர்ப்பு வெளியாகி யிருக்கிறது.

இந்தப் புலன் விசாரணையை முறையாகவும் சிறப்பாகவும் ரகசியக் காப்புடனும் நடத்திக் கொடுத்திருக்கும் சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயன் பாராட்டுக்குரியவர். சாட்டையடி போன்ற தீர்ப்பை வழங்கியுள்ள நீதிபதியும் பாராட்டுக்குரியவர்.

ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகு, விடுதலைப் புலிகள் குறித்த தமது நிலையை மாற்றிக் கொண்டு விட்டதாக அறிவித்தார் கருணாநிதி. ஆனால் ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கை, அவர் புலிகளைத் தீவிரமாக ஒடுக்கவில்லை என்பதால், ராஜீவின் மரணத்துக்கு, சுற்றிவளைத்து முன்னாள் தி.மு.க. அரசைக் காரணமாக்குகிறது.

ம.தி.மு.க., பா.ம.க. போன்ற கட்சிகளின் நிலை, சமீப காலம் வரை, ஏன்... இன்னமும் கூடப் புலிகளுக்கு ஆதரவாகவே இருந்து வருகிறது. இது தெரிந்தும், கருணாநிதியை எதிர்க்கும் ஒரே நோக்கத்துக்காக அவர்களுடன் கூட்டணி வைத்துக் கொண்டிருக்கிறார் ஜெயலலிதா! இந்தத் தீர்ப்பு காரணமாக, தேச விரோதக் கூட்டணி என்கிற 'அந்தஸ்துக்கு' இந்தக் கூட்டணி உயர்ந்திருக்கிறது.

தமிழீழப் பிரச்னை என்பது உணர்வுபூர்வமான பிரச்னைதான். ஆனால், உணர்வுபூர்வமான பிரச்னைகளுக்கும் அறிவுபூர்வமாகவும் சாத்வீகப் போராட்டத்தின் மூலமும்தான் தீர்வு காண முற்பட வேண்டும். மாறாக, வன்முறைக்கு ஆதரவு தந்து பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பதில்



இந்திய அரசு ஈடுபட்டது. பின்னர், எதை ஊக்குவித்ததோ அதையே ஒடுக்கப் பார்த்தது. இந்த ஏறுமாறான கொள்கை தவறு என்று உணர்ந்து விழித்துக் கொள்ள நாம் கொடுத்த விலை மிக அதிகம்!

விடுதலைப் புலிகளோ, ஆயிரமாயிரம் இளைஞர்களின் உயிர்களைக் காவு கொடுத்திருக் கிறார்கள். அப்படியும் அவர்களுடைய நோக்கம் நிறைவேறவில்லை. சமீபத்தில் இலங்கை அரசு, 'இனி சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு இடமின்றிப் போனாலும் பாதகமில்லை' என்று தீர்மானித்து, புலிகளைத் தடைசெய்யப்பட்ட அமைப்பாக அறிவித்து விட்டது. அமெரிக்கா இதே அறிவிப்பைச் சில மாதங்கள் முன்பே செய்து விட்டது.

வன்முறைப் போராட்டம் என்பது காட்டுமிராண்டித்தனமான குறுக்கு வழி. மனித உரிமைக்கு வன்முறை மூலம் முயல்வது என்பது முட்டாள்தனமான முரண்பாடு. சரித்திரம் இதை மீண்டும் மீண்டும் நிரூபித்திருக்கிறது.

காந்தியவழி முயற்சிகளும், நாகரிகமான பேச்சு வார்த்தைகளும் முழுத் திருப்தி தரும் தீர்வுகளை அளிக்காவிட்டாலும் பெரிய முன்னேற்றங்களையாவது நிச்சயம் தர முடியும். இதையும் சமீபத்திய (தென் ஆப்பிரிக்கா, பாலஸ்தீன்) சரித்திர நிகழ்வுகள் உணர்த்தி யிருக்கின்றன.

நமது சிறிய - பெரிய கட்சிகளின் பல்வேறு தலைவர்களும் இந்த நிகழ்வுகளைக் கூர்ந்து கவனித்து இதயத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அயலுறவுக் கொள்கைகளில் நிதானம் காட்டவும் அறிவுபூர்வமாகச் செயல்படவும் அது உதவும். உள்நாட்டு அரசியலை உணர்வுகளாலான போலி அஸ்திவாரத்தின் மீது அமைக்காமல், ப்ரந்த மனப்பான்மை, எதிர்காலத் திட்டங்கள் என்கிற நிலையான நடைமுறைகளின் அடிப்படையில் நடத்த இனியா வது உறுதிகொள்ள வேண்டும்.

திருமதி கலா கார்த்திகேயன். ராஜீவ் காந்தி படுகொலையைப் புலனாய்வு செய்ய அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் டி. ஆர். கார்த்திகேயனின் மனைவி. ரொம்ப எளிமையான தோற்றம். நிறைய பேசினாலும், மெல்லிய குரல். உலக அளவில் மீடியாவின் கவனம் கார்த்திகேயன் பக்கம் திரும்பியிருக்க, வெகு அமைதியாக இருக்கும் கலா கார்த்திகேயனுடன் ஒரு சந்திப்பு. இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாய், 'பேட்டி' என்ற இறுக்கமான சூழலிலிருந்து மாறுபட்டு, கேஷுவலாய்ப் பேசினார்.

"ராஜீவ் கொலை வழக்கு விசாரணை முடிந்து, தீர்ப்பு வந்தவுடன், கடந்த ஆறரை வருடங்களாக தலைமேலிருந்த கண்ணுக்குத் தெரியாத ராட்சசச் சுமையை இறக்கி வைக்கப்பட்டு விட்டது போல உணர்ந்தேன்" என்று அவர் சொல்லும்போதே முகத்தில் நிம்மதியை உணர முடிகிறது.

"எங்களுடைய இருதரப்புக் குடும்பங்களிலுமே, ஆன்மீகத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும், பற்றும் உண்டு. அந்த ஆன்மீக பலம்தான் எங்களுக்கு ரொம்ப உறுதுணையாக இருந்தது! அது தவிர, பொது மக்களின் சப்போர்ட். எத்தனை பேர், எங்கெங்கேயிருந்து, "தைரியமாய் உங்கள் கடமையைச் செய்யுங்கள்; ஆண்டவன் உங்களுக்குத் துணையிருப்பார்" என்று கோவிலில் ஸ்பெஷலாய் இவர் பெயருக்கு அர்ச்சனை செய்து, பிரசாதம் அனுப்பி வைப்பார்கள் தெரியுமா? ஒரு பழைய நண்பரின் தாய், (வயதான முஸ்லிம் பெண்மணி) ஐதராபாத்திலிருந்து டெலிபோன் செய்து, "நீங்க எதற்கும் கவலைப்படாதீங்க. உங்கள் நலனுக்காக நான் தினமும் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன்" என்று நா தழுதழுக்கச் சொல்லுவார். இதுபோன்ற தார்மீக சப்போர்ட்தான் எங்களுக்கு மனோதைரியம் அளித்த மருந்து.

"அதுவும் அந்தத் துக்ககரமான சம்பவம் நிகழ்ந்து, சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டு, புலனாய்வு தொடங்கிய முதல் தொண்ணூறு நாட்கள்தான் ரொம்ப ரொம்பக் கலவரம் படர்ந்த டென்ஷன்! அது எங்கள் குடும்பத்தில் ஏற்படுத்திய பாதிப்பு கொஞ்ச நஞ்சமில்லை. மத்திய ரிசர்வ் போலீசின் சிறப்பு டைரக்டர் ஜெனரலாக ஹைதராபாத்தில் இருந்த சமயத்தில் தான், கூடுதலாக சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைமைப் பொறுப்பும் இவருக்கு அளிக்கப்பட்டது. இவர் சென்னை வந்து, பொறுப்பேற்றுக் கொண்டு, அலுவலகமே கதி என்று இருக்க வேண்டிய சூழ்நிலை. என் மகன் கைலாஷும், மகள் காஞ்சனாவும் படித்துக் கொண்டிருந்ததால், அவர்கள் சென்னைக்கு உடனடியாக வர முடியாத சூழ்நிலை. அவர்கள் இரண்டு பேரையும், ஹைதராபாத்திலேயே தனித்தனியே ஹாஸ்டல்களில் சேர்த்துவிட்டு, நான் அதன்பின் சென்னைக்கு வந்து சேர்ந்தேன்.

"இப்போது, என் மகள் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு, திருமணமாகி, ஆஸ்திரேலியா சென்று விட்டார். மகன் சென்னையில் இன்ஜினீயரிங் படிக்கிறான். அவனும் ஹாஸ்டல்வாசிதான். வாரக் கடைசியில் என்னையும், ஊரில் இருந்தால் அவரையும் பார்த்துவிட்டுப் போவான்.

"ஒரு விஷயத்தை வெளிப்படையாய் நான் குறிப்பிட விரும்புகிறேன். சிறப்புப் புலனாய்வுப் பிரிவில் இருந்த கடைநிலை ஊழியர் முதல், தலைவரான இவர் வரை அத்தனை பேருடைய ஆழமான ஈடுபாட்டுடன் கூடிய கடுமையான உழைப்பு அபாரமானது! சாப்பாடு, தூக்கம், வீடு, குடும்பம், குழந்தைகள் என்று எல்லாவற்றையும் மறந்துவிட்டு அவர்கள் அனைவரும் அனுபவித்த கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமில்லை."

"எந்த ஒரு சமயத்திலாவது இதுபோன்ற ஒரு சென்சிடிவான வழக்குப் புலனாய்வில் மாட்டிக் கொள்ளும்படியாகி விட்டதே என நீங்கள் நினைத்துக் கவலைப்பட்டுள்ளீர்களா?"

"சத்தியமாக இல்லை. காரணம் அவரது பணியின் கஷ்ட நஷ்டங்களை நான் முழுமையாய்ப் புரிந்து கொண்டிருப்பதுதான். இது சமீப கால நிகழ்வு இல்லை. என் திருமணத்துக்கு முன்னமே அவர் தெளிவுபடுத்தி விட்டார். எங்கள் கம்யூனிடியில், போய் வர வசதியாய் அருகிலேயே பெண் கொடுக்கிற வழக்கம் இருந்தபோது, எங்கேயோ வட கர்நாடக மாநிலத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த இவருக்கு, என்னைக் கொடுக்க முடிவெடுத்தார்கள் என் குடும்பத்தினர். இவர் பெண் பார்க்க வந்தார் என்றாலும், நாங்கள் ஒருவரையொருவர் சரியாகக் கூடப் பார்த்துக் கொள்ளவில்லை என்பதே உண்மை!

"ஆனாலும், என் தாயாரிடம் அவர் சில விஷயங்களைப் பற்றி ரொம்பத் தெளிவாகவே சொன்னார். 'எனக்குக் கடமைதான் முக்கியம். போலீஸ் வேலைக்கு நேரம், காலம் கிடையாது. எனவே,

ஒரு ஹீரோவின் மனைவி பேசுகிறார்...

ஒரு பெண், தன் கணவனிடம் எதிர்பார்க்கிற குடும்ப வாழ்க்கையை என்னால் அளிக்க முடி யாது. அதே நேரம், அவன் விரும்பிய சமயம், உற வினர்களைச் சந்திக்கப் போகலாம். எனக்கு ஆட் சேபணை இல்லை. ஆனால் நான் கூட வர வேண் டும் என்று எதிர்பார்க்கக் கூடாது...' இந்த மாதிரி.

"இவர் ரொம்ப கண்டிப்பானவர் என்ப தால், மிரட்டல் டெலிபோன்கள் எல்லாம் வெகு சகஜம். பெங்களூரில் துணை கமிஷனராக இருந்த போது, போதை மருந்து, ஆதார் டம், கடத்

பேசுகிறவர்களுக்கும், மராத்தி பேசுகிறவர்களுக்கு மிடையிலான அரசியல் மோதலில், ஒரு பைய னுக்கு மண்டையில் பலமான அடி. பையனை ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டாலும், ஆஸ்பத்தி ரிக்கு வெளியில், வன்முறைக் கும்பல் ஒன்று, பையனுக்கு ஏதாவது ஆகி விட்டால், விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தக் காத்திருந்தது. பைய னைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, டாக்டர்கள், "அடி பலமாக இருக்கிறது.



• கலா கார்த்திகேயன் · மனைவி, குழந்தைகளுடன்...

தல், விபசாரம் என்று செய்து கொண்டிருந்த அத்தனை சமூக விரோதி கள் மீதும் கடுமையாய் நடவடிக்கைகள் எடுத்தார். அந்த நாட்களில் டெலிபோனை எடுத் தால், "ஏங்க உங்க கணவருக்கு உங்க மீதும், குழந் தைகள் மீதும் அக்கறை கிடையாதா? இத்தனை கறுகறுப்பு ரொம்ப ஆபத்து; ஜாக்கிரதை" என் றெல்லாம் மர்மக் குரல்கள் ஒலிக்கும். நான் அதைப் பற்றியெல்லாம் இவரிடம் முழுவதுமாய்ச் சொன்னதில்லை. இருக்கிற ஆபீஸ் டென்ஷனில் நாம் ஏன் இன்னும் கவலையைக் கொடுப் பானேன்?

"இவருடைய பணிக்கால அனுபவங்களை சொல்லிக் கொண்டே போகலாம். பெல்காமில் இவர் எஸ்.பி.யாக இருந்தபோது ஒவ்வொரு நாளும் டென்ஷன்தான். ஒருமுறை தேர்தல் முடிந்து, முடிவுகள் வெளியான நேரம். கன்னடம்

இங்கே வசதி கள் குறைவு. பெங்களூரில் உள்ள நிமான்ஸ் மருத்துவமனையில் உள்ள டாக்டர் வர்மாவை இங்கே வரவழைத்தால், பையனைக் காப்பாற்றி விடலாம்" என்று கூறி விட்டார்கள்.

"அப்போது மாநிலத்தில் கவர்னர் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. நேரடியாய் நிமான்ஸுக் கும், ராஜ்பவன் மூலமும் பேசி டாக்டர் வர்மா வர ஏற்பாடு செய்தார் இவர். அப்போது பெல் காமுக்கு ஒரே ஒரு ஃப்ளைட்தான். அதிலும் கடைசி நிமிடத்தில் இடமில்லாமல் போய், விமான காக்பிட்டில் பயணம் செய்து பெல்காம் வந்து சேர்ந்தார் டாக்டர் வர்மா. உடனடியாய் அறுவைச் சிகிச்சை மூலம் பையன் காப்பாற்றப் பட்டான். 'நீங்கள் ஒரு உயிரைக் காப்பாற்ற வில்லை; ஒரு ஜில்லாவையே வன்முறை, உயிர்ச் சேதத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறீர்கள்' என்று டாக்டர் வர்மாவிடம் இவர் நன்றி சொன்னது இன்னும் என் நெஞ்சில் நிழலாடுகிறது!" ●

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

பதில்கள்

ராமகிருஷ்ணன் பில் போடும் கவுண்டரில்தான் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தான்....

'சிவ சிவா... இதென்ன... தப்பான புத்தகத்தைத் தூக்கி வந்து விட்டேனா...?' – அட்டையைப் புரட்டினான்... அதேதான்! The Prophet - Khalil Gibran புவனா எழுதிக் கொடுத்த சின்ன வெள்ளைச் சீட்டு சட்டைப் பாக்கெட்டில்தான் இருந்தது. திரும்பவும் அதை எடுத்துச் சரிபார்த்தான்... அதேதான்! The Prophet - Khalil Gibran.

விரல் நடுங்க மீண்டும் பக்கங்களைப் பிரித்தான்.... உடம்பில் பொட்டுத் துணியின்றி ஆணும் பெண்ணும் – முழுப் பக்கப் படம்!

ராமகிருஷ்ணனுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது.

"யெஸ்..." பில் போடும் பெண் அவன் விரல்களுக்கிடையேயிருந்து புத்தகத்தை இழுத்து கம்ப்யூட்டரில் பதிவுசெய்து பில்லைக் கொடுத்து விட்டாள்...

கேரி பேக்கை வாங்கப் பிடிக்கவில்லை. கடையை விட்டு வெளியேறியதும் கண்ணில் பட்ட குப்பைத் தொட்டியில் அதை வீசிவிடத் தோன்றியது.

'ஒருவேளை... புவனா என்னைச் சோதிக்கிறாளோ....?' – எழுந்த சந்தேகத்தை வேகமாய்த் தலையை உலுக்கி வெளியேற்றினான்....

'சே! சே!... அப்படிப்பட்ட பெண் இல்லை புவனா... பிறகு ஏன் இப்படியொரு புத்தகம் கேட்டாள்...?'

ராமகிருஷ்ணனுக்கு நிறைய பதில்கள் தேவைப்பட்டன. யோசிக்கத் தனிமை தேவைப்பட்டது... ஸ்கூட்டரை ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் செலுத்தினான். கத்திபாரா தாண்டி பதினேழாவது நிமிடத்தில், வலப்புறம் தென்பட்ட முட்டுச் சந்து. அங்கே புளிய மர நிழல்.

அம்மாவிடம் பேச முடியாத விஷயங்களை யோசிக்க ராமகிருஷ்ணன் அந்த நிழலுக்குத்தான் வருவான்..... புவனா பற்றி, முடிவெடுக்க மூன்று முறை வரவேண்டியதாகி விட்டது. 'அவ்வளவு யோசனைக்குப் பிறகும் முடிவு தப்பானதுதானா...?'

அவனுக்குப் படபடவென்று வந்தது. எண்ணி முப்பது நாளில் புவனாவை அவன் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும். இந்த நாலு மாதங்களில் அவளைப் பதினேழு தடவை பார்த்திருக்கிறான். தினமும் போனில் பேசியிருக்கிறான்...

"ஹலோ..." அவள் குரல் கேட்கும் போதே சுகமாயிருக்கும்.

"நான் ராமகிருஷ்ணன்...."

"ஓ! நீங்களா...." மரியாதை கலந்த அவள் ப்ரியத்தில் கிரீடம் வைத்தது போல் உணர்வான்.

"ஒரு நிமிஷம் இருக்கீங்களா.... அடுப்பை அணைச்சுட்டு வந்துடறேன்..."

ஓடித் திரும்பி "சொல்லுங்க" என்னும் போது இலேசாக மூச்சிரைக்கும்.

"என்ன அவசரம் ஓடி வர்றதுக்கு...? நான் காத்திருக்க மாட்டேனா...?"

"இல்லே... அவசரமில்லே..."

"அடுத்த புதன் கிழமை உனக்கு பர்த் டேயில்லியா...?"

"ம்..." கொஞ்சம் வெட்கப்படுகிறாளோ...?

"என்ன ப்ரஸெண்ட் வாங்கித் தரட்டும்...?"

"ஹாங்..." அவள் எதிர்பார்க்கவில்லை இந்தக் கேள்வியை.

"என்ன வாங்கட்டும்னு கேட்டேன்...?"

"எதுவானாலும் சரி... உங்க விருப்பம்."

"ம்ஹூம். சரோஜா அக்கா கூட சொல்லியிருக்காங்க, உன்னைக் கேட்காம எதுவும் வாங்கக் கூடாது. அப்புறம் பிடிக்காத போச்சுன்னா என்ன செய்ய.... சொல்லு..."

"எதுவும் தோணலை... நீங்க கேட்டதே சந்தோஷமாயிருக்கு...."

"சரி... நாளைக்கு வருவேன்... யோசிச்சு வைக்கணும்...."

மறுநாள் அம்மா எச்சரித்தாள் :

"டேய்... பஞ்சாபி டிரெஸ்ஸெல்லாம் கேட்டாள்னா வேண்டாம்...!"

"ஏன்...?"

"கல்யாணமானா அதெல்லாம் போடக் கூடாது..."

சரோஜாக்கா மறுத்தாள். "இல்லடா... இப்பல்லாம் எதுனாலும் போடறாங்க... நல்லா டீசண்டாத்தான் இருக்கு... துப்பட்டாவோட செட்டானா பரவாயில்லை..."

"சரி..."

"லிப்ஸ்டிக், நெயில் பாலீஷ்... இதெல்லாம் கூட வாங்கலாம். இல்லாட்டி ஒரு நல்ல ஹேண்ட் பேக்... மவுண்ட் ரோடுக்குப் போயிடு..."

"உம்..."



"எதுனாலும் எங்கிட்டே காட்டிட்டுத்தான் குடுக்கணும், தெரிஞ்சுதா...?"

சிவ சிவா! இந்தப் புத்தகத்தை சரோஜாக்காவிடம் எப்படிக் காட்டுவதாம்...?

பேசாமல் ஹிக்கின்பாதம்ஸ் திரும்பிப் போகலாம். இதை வாபஸ் பண்ணிவிட்டு ஈடாக 'சமைத்துப் பார்' வாங்கிக் கொள்ளலாம்... யாருக்காவது கல்யாணமென்றால் அம்மா அதைத்தான் வாங்கி வரச் சொல்லுவார்... இல்லாவிட்டால் 'நித்ய பூஜைக்கு சுலோகங்கள்....'

ராமகிருஷ்ணன் புளியமர நிழல் விட்டு நீங்கினான். ஸ்கூட்டரை உதைக்கையில் புவனாவின் பூ முகம் ஞாபகம் வந்தது. இக்னிஷனை அணைத்தான். தயங்கித் தயங்கிக் கேட்ட விருப்பம் :

"கொஞ்சம் விலை அதிகமாயிருக்குமே... பரவாயில்லையா?"

"ஐயோ! அதெல்லாம் பரவாயில்லை... சொல்லு"

"ஒரு புத்தகம்...."

ராமகிருஷ்ணன் ஆச்சர்யப்பட்டான். பட்டுச் சேலை, தங்கச் சங்கிலி வரை அவன் தயாராயிருந்தான். புத்தகம்!

"என்ன புத்தகம்...?"

"The Prophet."

"இங்கிலீஷா...?"

"ஆமாம்... காலேஜ்ல உஷா மேடம் அதை ஒரு முறை படிச்சுக் காட்டினாங்க.... அப்பலேருந்தே ஆசை... அப்பாவோட பட்ஜெட்டுக்குள்ள வரல்லை.... வாங்கவே முடியலை...."

ஆவலில் புவனாவின் முகம் முழுவதும் காத்திருந்தது.

"நான் வாங்கித் தரேன்..."

புறப்படும் முன் பெயரை எழுதி வாங்கிக் கொண்டான். உஷா மேடம் இப்படியொரு புத்தகத்தை அறிமுகப்படுத்தியிருக்க வேண்டாம்... அச்சு பிச்சு படங்கள்... சே!

புவனா கூடப் படங்களைப் பார்த்திருக்க மாட்டாளாயிருக்கும்.... பார்த்திருந்தால் கேட்டிருக்க மாட்டாள்....

இப்போது அவனுக்கு வாக்குக் கொடுத்தாகி விட்டது. என்ன செய்ய...?

மீண்டும் நிழலடிக்குப் போனான் ராமகிருஷ்ணன். மெள்ள, புத்தகத்தின் பக்கங்கள் திருப்பி, படமில்லாத பகுதியில் நிறுத்தினான். படிக்க முற்பட்டான்.

ஒரு மண்ணும் புரியவில்லை. ஹிந்து பேப்பரிலோ, டீவி. விளம்பரத்திலோ வராத வினோத ஆங்கிலம். வார்த்தைகளில் ஏதோ கண்ணாமூச்சி ஆடுவது மட்டும் தெரிந்தது.

"கவிதையும் தத்துவமும் பின்னிப் பின்னி ரொம்ப அழகாய் விழும்...."

- புவனா இதைத்தான் லயிப்புடன் விவரித்துக் குளிர்ந்து போனாள்.

ராமகிருஷ்ணன் நிழலடியில் உட்கார்ந்து மண்ணைப் பார்த்தான். காலடியில் இரண்டு கட்டெறும்புகள் விறுவிறுவென்று ஓடின.

சீதா ரவி



''கட்சிக் கணக்குல இன்னிக்கு ஏதோ நாலு காசு இருக்குதுன்னா, அதுக்குக் காரணமே நம்ம தலைவர்தான்!''

''அப்படியா?''

''ஆமாம்; மீதிக் காசையெல்லாம்தான் அவர் முழுங்கி ஏப்பம் விட்டுட்டாரே!''

– வி. ரெங்கநாதன்

இலேசான காற்றில் புளிய மரம் சிலிர்த்தது. அவன் நீண்ட நேரம் யோசித்து விட்டு எழுந்து போனான்.

''**எ**த்தனை அழகு இந்த இடம்...!''

புளியமரத்தடி புவனாவுக்கு ரொம்பவும் பிடித்துப் போயிற்று.

வாழ்க்கையில் முதல் முறையாய்த் திருட்டுத்தனம் செய்த குற்ற உணர்வில், ராமகிருஷ்ணன்தான் அசௌகரியமாய் உணர்ந்தான்.

புவனாவுடன் ரகசியப் பயணமாய் வந்திருந்தாள்.

கண்ணியமான தூரத்தில் ஆட்டோவில் அமர்ந்து அழைத்து வந்திருந்தான். மெயின் ரோடின் மறுபக்கத்தில் அது வெயிட்டிங்கில் இருந்தது.

ராமகிருஷ்ணன் நேரத்தை வீணாக்காமல் விஷயத்துக்கு வந்தான். ஜவுளிக் கடைப் பையிலிருந்து புத்தகத்தை முதலில் எடுத்தான் :

''**ஹே**ப்பி பர்த்டே...''

''நாளைக்குத்தானே...?'' கொஞ்சம் வியப்புடன் கேட்டாலும் புவனா ஆசையாய்ப் புத்தகத்தை வாங்கிப் போய் நிழலில் உட்கார்ந்து புரட்ட ஆரம்பித்தாள்.

''இதைப் போய் நாளைக்கு நாலு பேர் முன்னாலே குடுக்க முடியுமா...? அதனாலே வேற ஒண்ணு வாங்கியிருக்கேன்....'' கையிலிருந்த பையைத் தட்டிக் காண்பித்தான்.

புவனா புத்தகத்தை மூடி, நிமிர்ந்து நின்றபடியிருந்தவனைப் பார்த்தாள்.

''எதுக்கு...?''

''அது உன்னோட ஆசைக்கு... இது என் விருப்பத்துக்கு...'' திரும்பவும் ஜவுளிக் கடைப் பையை ஆட்டிக் காண்பித்தான்.

''உட்காருங்க...''

''புவனா....''

''ம்....'' மிகுந்த ப்ரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

ராமகிருஷ்ணன் கொஞ்சம் கூச்சத்துடன் தள்ளியே உட்கார்ந்து பார்வை தாழ்த்தினான்.

''இந்த புக் நான் வாங்கித் தந்தேன்னு எங்க வீட்டுல சொல்ல வேண்டாம், தெரிஞ்சுதா...?''

''ஏன்...?'' அதிராமல் அவன் கேட்டது நிம்மதி தந்தது.

''எனக்கிதிலே ஒண்ணும் புரியலை. அப்புறம் படங்கள்லாம்.... அதைப் பார்த்தா சரோஜாக்கா தப்பா எடுத்துப்பாங்க... அம்மா திட்டுவாங்க... வேண்டாம்....''

''பின்னே, ஏன் வாங்கினீங்க...?''

''உனக்காகத்தான்... இது அவங்களுக்காக....'' – புடைவைப் பையிலிருந்து பச்சை பாலிகாட் சேலை எடுத்துக் காண்பித்தான்...

''நாளைக்கு சரோஜாக்கா உனக்கு போன் பண்ணிக் கேட்பாங்க... பர்த்டே கிஃப்ட் பிடிச்சதான்னு....''

''ரொம்பப் பிடிச்சுதுன்னு சொல்விடறேன்...''

''தேங்க்ஸ்....''

''நானில்லே தாங்க்ஸ் சொல்லணும்...''

''அது பரவாயில்லை... ஒண்ணுதான் புரியலை... எதுக்கு அந்த மாதிரி படமெல்லாம்... புக்ல போட்டிருக்கு...?''

புவனா யோசித்தாள்....

''எனக்கும் முழுசா புரியல்லை... ஆனா விகாரமா தெரியலை. அழகு, உழைப்பு, அன்பு, காதல், கல்யாணம்.... எல்லாத்தப்பத்தின கேள்விக்கும் இந்தப் புத்தகத்திலே பதில் இருக்கு....''

''எனக்குத்தான் அதிலே ஒண்ணுமே புரியலை புவனா....''

''அதனால பரவாயில்லைங்க... உங்களுக்கு வாழ்க்கை புரிஞ்சுருக்கு... என்னைப் புரிஞ்சுருக்கு.... இல்லாட்டி இதை வாங்கித் தந்திருப்பீங்களா...?''

புத்தகத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு சொன்னாள்....

ராமகிருஷ்ணனுக்கு அந்த பதில் பரம திருப்தியாயிருந்தது. ○

பா.ஜ.க., பஹுத் அச்சா!

— டாக்டர் ராமதாஸ் தரும் ஃபிட்னெஸ் சர்டிபிகேட்!



"உங்கள் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கும் மதச் சார்பற்ற கொள்கைக்கும் எதிரியாக உள்ள பா.ஜ.க.வுடன் நீங்கள் கூட்டணி வைத்துள்ளதாகப் பிரிந்து போன பா.ம.க.வினர் விமர்சிக்கிறார்களே?"

டாக்டர் ராமதாஸ்: ஹிந்துத்வா பற்றிய தங்களது தீவிர கருத்துக்களை சமீப காலங்களாக மென்மைப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறது பா.ஜ.க. குறிப்பாகச் சொல்லப் போனால் ஹைதராபாத்தில், பா.ஜ.க. மசூதியை கட்டிக் கொடுத்திருக்கிறது. மேலும் வாஜ்பாய் தலைமையில் பா.ஜ.க. அரசு அமைந்தால், நமது நாட்டில் மைனாரிட்டி மக்களுக்கு எந்தப் பிரச்னையும் வராது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் மதக் கலவரங்கள் எதுவும் இல்லாமல் எல்லோரும் நல்லிணக்கத்தோடு வாழ்கிறார்கள். ஆகவே மைனாரிட்டி மக்கள் பா.ஜ.க. ஆட்சியில் கண்ணியத்தோடு வாழ முடியும். அதே போல இட ஒதுக்கீடு பிரச்னையிலும் பா.ஜ.க. மற்ற கட்சிகளைவிட எந்த விதத்திலும் குறைந்தது அல்ல. பத்து மாதங்களுக்கு முன்னர், நான் அத்வானி அவர்களைச் சந்தித்தபோது, "அந்தந்த மாநிலங்களில் தற்போது நடைமுறையில் இருக்கும் இட ஒதுக்கீடுகள் தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதே பா.ஜ.க.வின் கொள்கை!" என்று என்னிடம் சொன்னார். வாஜ்பாயும் அத்வானியும் மொரார்ஜி அரசில் இருந்தபோது தான் மண்டல் கமிஷன் அமைக்கப்பட்டது. உ.பி.யில் பிற்பட்டவரான கல்யாண்சிங்கை இருமுறை முதல்வராக்கியதும் பா.ஜ.க.தான். கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் ஜ.மு., காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளைவிட, அதிக எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பா.ஜ.க.வில் உறுப்பினர்களாக இருந்தனர். ஆகவே பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் இட ஒதுக்கீடு கொள்கைக்கு எந்தவிதமான பங்கமும் வராது என்று உறுதியாக நம்புகிறோம்.

"இந்தத் தேர்தலில் ஊழல் ஒரு பிரச்னையாகப் பேசப்படுமா?"

டாக்டர் ராமதாஸ்: ஊழலைச் சொல்லி வோட்டுக் கேட்க தமிழ்நாட்டில் தி.மு.க.வுக்கும் த.மா.கா.வுக்கும் கொஞ்சமும் யோக்கியதை கிடையாது. ஊழலின் ஊற்றுக்கண் கருணாநிதி. அந்தக் காலத்து முந்திரா ஊழல் முதல், இந்தக் காலத்து இந்தியன் வங்கி ஊழல் வரை காங்கிரஸின் கை வண்ணம் உண்டு. காங்கிரஸ் என்றால் தமிழ்நாட்டில் புது அவதாரம் எடுத்திருக்கும் த.மா.காவும் அதில் அடக்கம். ஊழலைப் பற்றி இவர்கள் பேசினால் உலகம் சிரிக்கும்!

"தீரன் விலகியதால் பா.ம.க.வுக்கு ஏதும் பாதிப்பு உண்டா? அவரைத் தாக்க உங்கள் ஆட்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறாரே?"

டாக்டர் ராமதாஸ்: தீரனைப் பொறுத்த வரையில் அவரது நியூஸ்கூட அவருக்கு எதிர்த் திசையில்தான் போகும். அந்த அளவுக்குப் 'பிரபலமான' பிரமுகர் அவர். அவரை நாங்கள் எதற்காகத் தாக்க வேண்டும்? வன்முறையில் எங்களுக்கு நம்பிக்கை கிடையாது. ஏதோ பத்து வருடங்களுக்கு முன் இட ஒதுக்கீடு போராட்டத்தில் வன்முறை நடந்ததால், பா.ம.க.வை வன்முறைக் கட்சி என்ற முத்திரை குத்தி விட்டார்கள்!

"வந்தவாசித் தொகுதியில் உங்கள் உறவினர் கிருஷ்ணசாமி, காங்கிரஸில் நிற்பதால், பா.ம.க வேட்பாளரை ஒப்புக்கு நிறுத்தியிருப்பதாகச் சொல்கிறார்களே?"

டாக்டர் ராமதாஸ்: பைத்தியக்காரத்தனம். உறவு வேறு, தேர்தல் வேறு. வழக்கம்போல இந்த முறையும் அங்கே கடுமையாகப் பிரசாரம் செய்வேன். காங்கிரஸ் எங்களுக்குப் போட்டியே கிடையாது. அந்தக் கட்சிக்கு டெபாஸிட்கூடக் கிடைக்காது. ●

— ஆர்.எஸ்.என்

(ஜனா கிருஷ்ணமூர்த்தி பேட்டி – பக்கம் 34)



சுவையுக்கு சிறப்பு! அன்னம் பருப்பு!!
அன்னம்
அக்மார்க்
உளுத்தம் பருப்பு
சுவை
கனிசம்
மணம்
பந்தணம்
*இலவசம்
உளுத்தம் பருப்பு
1 கிலோவுக்கு 100கிராம்
1/2 கிலோவுக்கு 50கிராம்
அத்தை, இட்லிக்கு எவ்ளோ பருப்பு போட?
30
அன்னம் பருப்புதானே? அதுல பந்தணம் கூடுதலாக இருக்கும்! குறைவாகவே போடு. நிறைந்து இருக்கும்!
வியாபாரத் தொடர்புகளுக்கு : ☎ 595 2738, 595 6118
துவரம் பருப்பு மற்றும் பயித்தம் பருப்பு
* 15-2-1998

லேட்டஸ்ட் அதிர்ஷ்ட எண்-5

காதில் விழுந்தவை :



● மொர்கன்டைல் வங்கி விவகாரத்தில் தன்னை விடத் தன் இனத்தாரிடம் அதிக செல்வாக்கு பெற்று விட்டாரே அண்ணன் என்று கடுப்பில் இருக்கிறாராம் அந்தப் பத்திரிகை அதிபர். விளைவு : இப்போது வங்கி விஷயத்தில் அண்ணனுடன் இணைந்து செயல்பட்ட சரத்குமாரை நெல்லை பாராளுமன்றத் தொகுதியில் தோற்கடிக்க திரை மறைவு வேலைகளைத் துவங்கி விட்டாராம். "இது நியாயமா ஸார்?" என்று கேட்கிறார் அந்த இனத்தைச் சார்ந்த இளைஞர் பிரமுகர்.

● ம.தி.மு.க. பிரமுகர்களை மட்டுமல்லாமல், முன்னாள் அ.தி.மு.க.களையும் வளைத்துப் போடுவதில் தீவிரமாக இருக்கிறதாம் தி.மு.க. சமீபத்தில் (நகர) தந்தையார் ஆயிரம் விளக்கு அ.தி.மு.க. பிரமுகரை மூன்று முறை சந்தித்ததாக அ.தி.மு.க. வட்டாரம் கிசுகிசுக்கிறது.

● சென்னை பத்திரிகையாளர்களுக்கு ஜெ.வைக் கண்டால் பயமா; பாசமா? நெல்லை பத்திரிகையாளர் சந்திப்பின் போது, "நீங்களெல்லாம் தி.மு.க. – த.மா.கா. அனுதாபிகள்" என்று பத்திரிகையாளர்களைச் சாடினார். சமீபத்தில் சென்னையில் பிரபல டெல்லி தினசரியின் நிருபரைப் பார்த்து, "அரைவேக்காட்டுத்தனமான செய்திகள் எழுதுவதில் நீங்கள் பிரசித்தமாயிற்றே" என்று நக்கல் அடித்திருக்கிறார். கொஞ்சமாவது எதிர்ப்புக் குரல்... மூச்....

● விலகி வரும் மாற்றுக் (ம.தி.மு.க.!) கட்சியினரை வரவேற்க அறிவாலயத்தில் நிரந்தரமாக ஷாமியானாவும், நாற்காலிகளும் போடப்பட்டு விட்டன! தி.மு.க.வில் மதுராந்தகத்தாருக்கு உடனடியாக எந்தப் பொறுப்பையும் கொடுக்கக் கூடாது என்று முன் எச்சரிக்கையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறாராம் இப்போது மாவட்டச் செயலாளராக இருப்பவர். மிகவும் பாடுபட்டுப் பெற்ற பொறுப்பாயிற்றே!

● சமீபத்தில் ராஜீவ் காங்கிரஸ் தரப்பில் 'இப்தார்' விருந்து நடந்தது. மேடையில் முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த எந்தப் பிரமுகரும் இல்லை. அம்மா முக்காடு போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்க, கூட இருந்தவர்கள் முஸ்லீம் அல்லாத அவரது கூட்டணித் தலைவர்கள். "வர வர இந்த அரசியல் தலைவர்கள் ஏதோ ஒரு சடங்கு போல இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளத் துவங்கி விட்டார்கள். இப்படி நடந்து கொள்வதன் மூலம் முஸ்லீம்களின் ஆதரவு கிடைத்துவிடும் என்று நினைத்தால் ஏமாந்து போவார்கள்" என்று சொன்னார் முஸ்லீம் அமைப்பின் பிரமுகர் ஒருவர்.

● அம்மாவின் அதிர்ஷ்ட எண் 7லிருந்து ஐந்தாக மாறி விட்டதாம். ஒற்றை உறுப்பினர் கட்சி தவிர மற்ற கூட்டணிக் கட்சிகளுக்கு ஐந்து, ஐந்து இடங்கள், அ.தி.மு.க.வுக்கு 23 – கூட்டுத் தொகை 5. கூட்டணிக் கட்சிகளாக ஐந்து கட்சிகள்! "தேர்தலில் ஐந்து இடம்தான் கிடைக்கப் போகிறது இந்தக் கூட்டணிக்கு!" என்று தி.மு.க.வினர் கிண்டலடிக்கிறார்கள்.

— தில்லப்பா

பாரம்பரியம் தந்த பலம்!

என்னுடைய தந்தையும், என் முன்னோரும் செய்து வந்த வணிகத் தொழில் பற்றிய நினைவும், என் தந்தையின் நினைவும் எனக்கு உற்சாகம் தந்தன. என் மீதே நான் நம்பிக்கை கொள்ள என் பூர்வீகம் காரணமாயிருந்தது.

அமெரிக்கப் பண்பாட்டையும் இந்தியப் பண்பாட்டையும் ஒப்பிட்டு நான் ஒரு கல்வித் திட்டம் எழுதினேன். நான் பேராசிரியராக இருந்த கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியும் கூட. எனவே ஆசிரியர்களுக்கு ஆசியப் பண்பாடு பற்றிய அறிவு தர ஒரு திட்டத்தை எழுதினேன்.

அமெரிக்காவில் குழந்தை வளர்ப்பில் அதிக சுதந்தரம் கொடுக்கப்படுகிறது. இதன் விளைவாக இளைஞர்கள் (பெண்கள்) பெற்றோர் அனுமதியுடன் 16 வயதிலேயே கார் ஓட்டும் உரிமம் பெறலாம். பதினெட்டு வயதாகி விட்டால் அவர்கள் தாங்களே நேரடியாக இந்த லைசென்ஸைப் பெறலாம்.

ஒரு பெண் பதினெட்டு வயது ஆனவுடன் அவள் தன் சுதந்தரத்தைப் பிரகடனப்படுத்துவது போல – அதே ஊரில் பெற்றோர் இருக்கும் போதே – தனி அறை எடுத்துக் கொண்டு சுதந்தர வாழ்க்கையை வாழத் துவங்குவான்.

ஆண் - பெண் உறவு பற்றி அவர்கள் அதிக ஆசாரம் பார்ப்பதில்லை. ஒருவனை ஒருத்தி விரும்பினாள் என்றால், அவன் தனக்கேற்றவன் என்று தீர்மானிப்பாளானால், அவன் தன்னைத் திருமணம் செய்து கொள்வான் என்ற நம்பிக்கை ஏற்படும்போது, பல சமயம் அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ்வார்கள்.

நமது ஊரில் சிலர் எண்ணிக் கொண்டிருப்பது போல எல்லோருக்கும் 'யெஸ்' சொல்லி விடுகிற வகை அல்ல!

இதன் விளைவாகவோ என்னவோ, அவர்கள் மற்றவரது சமுதாய கௌரவம், குடும்பப் பாரம்பரியம், குடும்பம் பழகும் விதம், பெற்றோரின் தன்மை, பொருளாதார ஏற்றத் தாழ்வு விளைவிக்கும் மனோபாவ சிக்கல்கள், இதை எல்லாம் பார்ப்பதில்லை. திருமண முடிவில் எடுத்துக் கொள்வதில்லை.

ஆசையின் பேரில், அழகின் பேரில், ஒருவனது திறமையின் பேரில், படிப்பின் பேரில் நம்பிக்கை வைத்துத் திருமணம் நிச்சயிக்கப் படும். விவாகரத்துகள் ஐம்பது சதத்திற்கு மேல். இதற்குக் காரணம், மேலை நாடுகளிலுள்ள குடும்பக் கட்டுக்கோப்பும் அதன் முக்கியத்துவமும் போற்றப்படாததுதான், என்பது எனது அபிப்பிராயம்.

அம்மா அப்பாவையும் அந்திம காலத்தில் 'நர்சிங்ஹோம்' எனப்படும் முதியோர் இல்லத்தில் சேர்த்து விடுவார்கள். எந்த அந்திம காலத்தில் அனுசரணையும், பாதுகாப்பும் பாசப் பிணைப்பும் ஆறுதல் தருமோ, அது அங்கில்லாமல் போய் விடுகிறது!

ஏதோ குருவிக்குஞ்சு வீட்டை விட்டு வெளியேறி விடுவது போல, புலிக்குட்டியைத் தாய் ஒரு காலகட்டத்திற்குப்பின் விரட்டி விடுவதைப் போல வாழ்க்கை - அதாவது தனித்துவம் சுதந்தரம் – அமைந்திருக்கிறது.

தனித்துவமும் சுதந்தரமும் அதிகமாக அங்கு போற்றப்படுகின்றன. இன்று நான் தெரிந்து கொண்ட உண்மை இந்தப் பிரபஞ்சமும் அதில் உள்ள அனைத்தும் தனித்தும் இயங்குகிறது; இணைந்தும் இயங்குகின்றது என்பது தான். பொருளாலான உலகில்தான் வாழ்கிறோம்; பொருளுக்கு அப்பாற்பட்ட ஒரு உலகம் – நம் சிந்தனை உலகம்தான் இங்கே நம் வாழ்வை நடத்துகிறது.

மனிதனும் பிரபஞ்சமும் தனித்தும் இணைந்தும் இயங்க வேண்டும். ஒரு பெரிய கச்சேரி போல.



• எம்.எஸ்.உ. அமெரிக்கா போனதும் எடுக்கப்பட்ட படம்

கச்சேரியில் வாய்ப்பாட்டுக்கு ஓரிடம், வயிலின் இசைக்கும் ஒரு தேவை, மிருதங்கத்தின் நாதத்திற்கு ஒரு தேவை, மோர்சிங், கடம், தம்புரா, தாளம் என்று எல்லாவற்றிற்கும் ஓர் இடம் – ஒரு தேவை இருக்கிறது. எல்லாம் இணைந்தும் சமயத்தில் தனி ஆவர்த்தனமும் நடத்துகின்றன. இதுதான் பிரபஞ்ச அமைப் பின் நியதி.

இதில் தனித்துவமும் தனி மனித சுதந்தர மும் மேலோங்கி நிற்குமானால், நாம் சூழ்நிலை யிலிருந்து அந்நியப்படுத்தப்படுவோம். அது தான் அங்கு நிகழ்கிறது.

இது என்னை மிகவும் உறுத்தியது. பைபி ளிலே ஓரிடத்தில் 'உலகின் மீது ஆதிக்கம் செலுத்து' (Dominate the Earth) என்கிற பாணி யில் ஒரு வரி வருகிறது. அமெரிக்கர்கள் அதை மட்டும் தனியே எடுத்துக் கொண்டு பின்பற்று கிறார்களோ, இல்லையோ – அணு சக்தியி லிருந்து, சூழ்நிலைப் பாழ்படுத்தும் ரசாயனங் கள் உற்பத்தி செய்வதிலிருந்து எங்குமே இயற்கை மீது ஆதிக்கம் செலுத்தும் மனோ பாவம் ஊறிப் போயிருக்கிறதோ என்கிற ஒரு எண்ணம்; அச்சம், என்னுள்.

இதை முன்வைத்து நான் ஒரு கல்வித் திட்டம் எழுதினேன். அமெரிக்க மாணவர்கள் பிற நாட்டு வாழ்க்கை முறைகளையும், குடும்பப் பாங்கினையும், குறிப்பாக கீழை நாட்டு கலா சாரத்தை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். தங்கள் கலாசாரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்; அதற்கேற்ப அடுத்த தலைமுறை களுக்குப் பாடத் திட்டம் அமைக்கப்பட வேண்டும் என்பது என் திட்டம். அதற்கான ஆசிரியப் பயிற்சிக்காக ஐந்து ஆசிரியர் களை எங்கள் கல்லூரியிலிருந்து இந்தியாவுக்கு அழைத்து வந்தேன். ஒரு பத்து வாரப் பயிற்சி கொடுத்த பின் பாடத் திட்டத்தில் இந்த விழிப் புணர்வை அனுபவ அறிவை (Cross Cultural Studies) பிற மக்களது கலாசாரப் பாடமாகப் படிக்க வேண்டும் என்று திட்டம் தீட்டி வாஷிங்டனில் உள்ள கல்வித் துறைக்கு அனுப் பினேன்.

நான் சமுதாய இயல் (Sociology) பாடம் சொல்லிக் கொடுக்கும் பேராசிரியரல்ல; சமுதாய இயல் பாடம் படித்த மாணவனுமல்ல. என் துறையோ வேதியல்! (Chemistry) பொதுவாக நீங்கள் எந்தத் துறையில் வல்லுன ராகப் பயிற்சி பெற்றுப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களோ, அந்தத் துறையில்தான் நீங்கள் மானியம் பெற முடியும். ஆனால் இந்த என் திட்டத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டு விட் டார்கள். ஆசிரியர்களை இந்தியா அழைத்து வர மானியம் அளித்தார்கள். இது பல்கலைக் கழகத்தின் அரசியல் மற்றும் சமுதாய இயல் துறைகளில் இருந்த பேராசிரியர்கள் என்னைக் கண்டு கொள்ளவும், என்னைப் பற்றிய தனி எண்ணம் அவர்களுக்கு ஏற்படவும் காரண மாயிற்று.

"முயன்றால் முடியாததில்லை. ஆர்வம் இருந்தால் யாரும் தாழ் போட முடியாது. சூரியனை யாரும் கையால் மறைத்ததில்லை!" இப்படி நான் அடிக்கடி சொல்வதுண்டு.



அதுவே நிஜமாயிற்று!

எனக்கு எப்போதுமே அரசியல் பாடத்தி லும், சமுதாய இயல் துறைப் படிப்பிலும் பொதுவான நாட்டம் அதிகம். எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் விஸ்கான்ஸின் பல்கலைக் கழக பிரபல பேராசிரியர் டாக்டர் ஹென்ரி ஹார்ட்டின் அரசியல் பாட வகுப் பில் பார்வையாளனாக அமர அனுமதி கேட் டுப் போய் உட்காருவேன்.

நம் நாட்டைப் பற்றி நாமே பலவற்றைக் கூறிக் கொண்டிருக்கிறோம். "அவர்கள் நம் மைப் பற்றி, நம் அணுகுமுறைகளைப் பற்றி நமது முன்னேற்றத்தைப் பற்றி என்ன சொல் கிறார்கள்?" என்று தெரிந்து கொள்ள வேண் டும் என்பது என் ஆசை.

எனவே அங்கிருந்த இந்திய சம்பந்தமான சரித்திரத் துறை, சமுதாய இயல் துறை, அர சியல் துறைப் பேராசிரியர்கள் அனைவரும் என்னை நன்கு அறிந்திருந்தார்கள். எங்கள் வீட்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

டிற்குப் பலமுறை இந்திய உணவருந்த அழைத்திருக்கிறேன். அதே போல அவர்கள் வீட்டிற்கும் நாங்கள் சென்றிருக்கிறோம். இது, அறிமுகத்தைத் தாண்டிய நெருக்கம்; நட்பு.

பல பேராசிரியர்கள் இந்தியாவுக்குப் பல முறை ஆராய்ச்சிக்காக வந்திருக்கிறார்கள். இந்தியப் பண்பாட்டை நன்கு அறிந்தவர்கள் அவர்கள். நமது சாதி அமைப்புகளை எல்லாம் படித்தவர்கள்.

என் துறைக்கு அப்பாற்பட்ட ஒரு துறையில் திட்டம் எழுதி, அதற்கு ஒரு மான்யம் பெற்ற போது எனக்கு ஒரு விஷயம் புலப்பட்டது.

அதாவது, கல்வித் துறைகளை எல்லாம் மீறலாம் என்கிற தெளிவு, துணிவு, மகிழ்ச்சி. இதுதான் நான் மனவியலில் இறங்கியதற்கு ஒரு காரணம்.



அமெரிக்க அமைப்பும் அப்படி. "இது முடியும் - இது முடியாது" என்று எல்லைகளை எல்லாம் நாம்தான் வகுத்துக் கொள்கிறோம். உண்மையில் அறிவுக்கும் சாதனைக்கும் ஆர்வத்திற்கும் எல்லைகள் கிடையாது. வானம்தான் எல்லை.

பல ஆண்டுக் காலம் ஒரு துறையிலேயே இருந்தால் வாழ்க்கை செக்கு மாட்டு வாழ்க்கையாக ஆகி விடும். நமக்கு சுரத்து குறைந்து விடும். மனவியலில் இதை 'தேய்ந்து போதல்', 'கருகிப் போதல்' என்பார்கள். இது மனித இயல்பு. அந்தந்தத் துறையில் புதிது புதிதாகச் செய்ய, வளர, நாம் ஏதாவது புதுமையைச் செய்து கொண்டே இருக்க வேண்டும்; மாற்று விஷயங்களில் - புதிய விஷயங்களில் ஈடுபட வேண்டும்.

அது தவிர ஆசிரியத் தொழிலில், எனது அறிவின் விளக்கத்திற்கு மட்டுமே இடம் இருந்தது. என்னிடமுள்ள பல்வேறு திறமைகளும் வெளிவர வாய்ப்பில்லாததை உணர்ந்தேன்.

ஆசிரியத் தொழிலில் வருமானமும் குறைவு. என்னுடைய நண்பர்கள் சிலர் பல மருத்துவ கம்பெனிகளில் ஆராய்ச்சித் துறையில் இருந்தார்கள். நானோ, நாட்டு நடப்பில், எப்படி புதிய புதிய பொருட்கள் சந்தைக்கு வருகின்றன, எப்படி மனிதர்கள் பெரும் பணக்காரர்களாகிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்; அவர்களுடைய சாதனைகளைப் பத்திரிகைகளில் படித்துக் கொண்டிருந்தேன். எனது சக ஆசிரியர்கள் பலருக்கு இது பற்றி உபதேசம் செய்து கொண்டிருந்தேன். எனது நண்பர்கள் சிலர் இதனால் கல்வித் துறையை விட்டு சொந்தத் தொழிலில் இறங்கினார்கள்.

எனவே நானும் தொழில் துறையில் இறங்க, அதில் அனுபவம் பெற முயன்றேன். சுலபமாயில்லை. ஆசிரியர் என்பவர் தானே தனக்கென ஏற்படுத்திக் கொண்ட தந்தக் கலசத்தில் (Ivory Tower) அமர்ந்திருப்பவர் என்கிற ஒரு பொது அபிப்ராயம் அங்கே பொதுமக்களிடம் உண்டு.

கண்ணியமான தொழில்தான்; புனிதமான தொழில்தான். எனினும் என்னை நடைமுறை உலகிலிருந்து அது அப்புறப்படுத்தி வருகிறது என்பது என் அனுபவமாக என்னுள் வேரூன்றி வந்தது.

நான் தொழில் துறையில் இறங்க முனைந்து பல வேலைகளுக்கும் விண்ணப்பித்தேன். ஓராண்டு வரை எதுவும் கிடைக்கவில்லை. முடிவில் வேலையை விட்டேன். எனக்குப் பிரிவு உபசார விருந்து வைத்து, ஆசிரியர் சங்கம் விடையளித்த போது கல்லூரித் தலைவர் கேட்டார்.


"நீ சாதாரண ஆளில்லையே! வியூகம் வைத்துத்தானே எதையும் செய்வாய்! என்ன உன் திட்டம்? எங்கே போகிறாய்? இப்போதாவது சொல்!" என்றார்.

"இன்னும் எந்த வேலையும் எனக்கு கிடைக்கவில்லை! இதுதான் உண்மை! ஓராண்டுக் காலமாக முயன்றேன், பலனில்லை. இங்கே இனியும் இருப்பதில் பயனில்லை, இருக்கக் கூடாது என்று வேலையை விட்டேன். ராணுவத்தில் கேள்விப் பட்டிருப்பீர்கள். ராணுவப்படை அனைத்தும் பாலத்தைக் கடந்த பின், ராணுவ தளபதி சென்று, தான் கடந்து வந்த பாலத்தைக் கொளுத்திவிடுவான். அதாவது, எல்லோரும் முன்னே போய் போரிட வேண்டுமே தவிர, துளியும் பின் வாங்கித் திரும்பி ஓடக் கூடாது என்று. அதைத்தான் நானும் செய்தேன்!" என்றேன்.

ஆனால் ஒருவரும் நம்பத் தயாராயில்லை! விரைவில் ஒரு பெரிய ரசாயன நிறுவனத்தில்



ஆஸ்துமாவா? ஈஸ்னோபிலியாவா? சைனஸா? காசநோயா?



இனி கவலையே வேண்டாம்

மூக்கில் நீர் வடிதல், சளி, தும்மல், மூக்கடைப்பு, இருமல், மூச்சுத்திணறல், உடல்மெலிதல், மலச்சிக்கல், பசியின்மை, உடல் நடுக்கம், நரம்பு தளர்ச்சி இவைகளை ஆரம்ப காலத்தில் கவனிக்காவிட்டால் மேலே கூறிய நோய்கள் ஏற்படும். இவைகள் ஏற்பட காரணம், நம் உடலிலுள்ள சிறுநீரகங்கள் இரத்தத்திலுள்ள கழிவு நீரைப் பிரித்து வெளியேற்றுகின்றன. சிறுநீரகங்களில் வடிகட்டும் பகுதியில் உப்புப் படிவங்களால் ஏற்படும் குளிர்ச்சித் தன்மையால் சுருக்கம் ஏற்படுவதினாலோ, கழிவு நீர் முறைப்படி முழுவதும் இரத்தத்திலிருந்து பிரிக்கப்பட முடியாமல் இரத்தத்திலேயே ஓரளவு கலந்து இருந்து விடுகிறது. அடுத்தாற் போல் இரத்தம் மார்புப் பகுதியில் உள்ள நுரையீரலில் சுரக்கும் நீருடன் கலந்து சுத்தப்படுத்தப்படுகிறது. சுத்தப்படுத்தப்படும் போது பிரிக்கப்படும் கழிவுநீர், தும்மல் மூலம் மூக்கில் நீராக வெளியேறுகின்றது. இந்நீர் இறுகி மூக்கடைப்பு ஏற்படுகிறது. மூக்குச்சிந்தும் போது இது மூக்குச்சளியாக வெளியேறுகின்றது. இம்முறைகளில் வெளியேற்றப்படாத எஞ்சிய கழிவு நீரே நுரையீரலில் படிந்து விடும் கபம் எனப்படுவதாகும். மேலும் உடலில் தூய்மையான இரத்த உற்பத்தியும், சீரான இரத்த ஓட்டமும் இருந்தால்தான் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் பழுதடையாமல் நல்ல நிலைமையில் இருக்கும். வேப்பிலை, துளசி, அத்தி, அருகம்புல், வில்வம் போன்ற தெய்வீக மூலிகைகளுடன், அற்புத மருத்துவ குணம் கொண்ட ஆடாதொடை, கற்பூரவல்லி, தூதுவளை, கீழாநெல்லி போன்ற மூலிகைகளை உட்கொள்வதால் உடலில் தூய்மையான இரத்த உற்பத்தியும், சீரானதடையற்ற இரத்த ஓட்டமும், நோய் எதிர்ப்பு சக்தியும், ஒவ்வாமை (Allergy)யால் ஏற்படும் நோய்களையும் பக்க விளைவு, பின் விளைவு இன்றி குணப்படுத்துவது உறுதி ! மேலும் ஆலோசனைக்கு : -



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.C.K.M.குருபரன் & Dr.C.K.M.சபாபதி, S/o.Dr.C.K. மாணிக்கவாசகம்

P.B. No: 30, No: 3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ : 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8

✆ : 6424285, 6427638

Singapore Enquiry : Mrs. Renuka, Blk 101, #04, -176, Jurong East Street-13, Singapore - 600 101. ✆ : 0065 - 5621218

1998 வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மருந்தினைப் பெற முகாம் விபரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2-ந் தேதி	- வேலூர் (N.A.)	: பிற்பகல்	1 to 2 மணி வரை ஹோட்டல் கன்னா டவர்ஸ், 18, ஆஃபீஸர்ஸ் லைன், ✆ : 0416 / 23060.
2-ந் தேதி	- காஞ்சிபுரம்	: மாலை	5 to 6 ராஜம் லாட்ஜ், பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு, ✆ : 04112 / 22519.
1,3,10,17,18,19,20,27,28ந் தேதி	- சென்னை	: காலை	9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி	- கடலூர் (S.A.D.I.)	: காலை	9 to 11 ஆர்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 / 30707, 30717
4-ந் தேதி	- விழுப்புரம்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில், ✆ : 04146 / 22962.
4-ந் தேதி	- திருவண்ணாமலை	: மாலை	5 to 6 ராதா லாட்ஜ் பஸ் நிலையம் எதிரில் ✆ : 04175 / 22536.
9-ந் தேதி	- பெங்களூர்	: காலை	11 to 12.30 ஹோட்டல் பிரைட்டே, (கல்பனா தியேட்டர் அருகில்) செப்பே கவுடா ரோட் ✆ : 2266374.
9-ந் தேதி	- ஓசூர்	: மாலை	3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 / 22899.
9-ந் தேதி	- கிருஷ்ணகிரி	: மாலை	5 to 6 அமராவதி லாட்ஜ், ✆ : 04343 / 22120.
12-ந் தேதி	- சேலம்	: காலை	11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 / 449333.
12-ந் தேதி	- ஈரோடு	: மாலை	4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்ஃபோர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆:0424 / 226611 / 12 / 13 / 14/15/16/17/18
13-ந் தேதி	- கோயம்புத்தூர்	: காலை	9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 / 302211, 302220
14-ந் தேதி	- மதுரை	: காலை	9 to 11 ஹோட்டல் கிராண்ட் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ : 0452 / 743941
14-ந் தேதி	- தஞ்சாவூர்	: மாலை	5 to 6 அசோகா லாட்ஜ், ✆ : 04362 / 30021 / 30022
15-ந் தேதி	- திருச்சி	: காலை	9 to 11 ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்), ✆ : 0431 / 460545.
15-ந் தேதி	- நாமக்கல்	: பிற்பகல்	2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, ✆ : 04286 / 20433
22-ந் தேதி	- தர்மபுரி	: காலை	9 to 10 ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், ✆: 04342 / 60226.
22-ந் தேதி	- திருப்பூர்	: பிற்பகல்	2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ், ✆ : 0421 / 740418.
22-ந் தேதி	- உடுமலைபேட்டை	: மாலை	6 to 7 குறிஞ்சி லாட்ஜ், பஸ் நிலையம் எதிரில் ✆ : 04252 / 24353.
23-ந் தேதி	- திண்டுக்கல்	: காலை	9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம் ✆:27017.
23-ந் தேதி	- தூத்துக்குடி	: மாலை	5 to 6 ஹோட்டல் ஆஷ்வின், தேவர் புரம் ரோடு, ✆ : 0461 / 327780
24-ந் தேதி	- திருநெல்வேலி	: காலை	8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சித்தாபதி, மதுரை ரோடு, ✆ : 0462 / 333312.
24-ந் தேதி	- நாகர்கோவில்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் சரண்யா, மீனாட்சிபுரம், ✆: 04652 / 25689.
25-ந் தேதி	- விருதுநகர்	: காலை	9 to 10 அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ :: 04562 / 45537.
25-ந் தேதி	- கரூர்	: பிற்பகல்	2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார், ✆ : 63763.

Dr.CKM
DIVINE HERBAL CENTRE

தகவல்:-டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 23 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு M.O. அல்லது D.D. அனுப்பவும்.

மார்ச் 7-ந் தேதி - மும்பை காலை 9 முதல் இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga (CR). Ph: 4011580

எனக்கு ஒரு விற்பனையாள (Salesman) வேலை கிடைத்தது - பாதி சம்பளத்தில்! எனக்கு அந்தத் துறையில் டாக்டர் பட்டம் இருந்ததால் என்னை ஆலோசகனாகவும் உபயோகித்தார்கள்.

எனது அரசியல் பேராசிரியர் ஹென்ரி ஹொர்ட்டுக்கு எழுதினேன். நான் ஆசிரியர் வேலையை விட்டது பற்றியும் தொழில் துறையில் வேலை எடுத்துக் கொண்டது பற்றியும்.



அவர், "நம்ப முடியாத அளவிற்கு நீ அறிவில் வளர்ந்த மனிதன். எப்படி நீ இதை விட்டு விட்டு தொழிலில் இறங்கத் துணிந்தாய்?" என்று கேள்வியுடன் பெரிய கடிதம் எழுதி இருந்தார். அவர் ஓய்வு பெற்றவுடன் தானே நாற்காலி மேஜை செய்யும் தச்சுத் தொழிலில் மேடிசன் நகரில் கடை வைத்தார் என்பது வேறு விஷயம்!

நான் பதிலுக்கு அவருக்கு எழுதினேன்:

"பேராசிரியர் அவர்களே! நான் பாரம்பரியமாகச் செய்யும் வணிகக் குடும்பத்தில் பிறந்தவன் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே அதில்தான் என் முழுத் திறமை வெளிவரும், என்று இறங்கினேன்.

எப்படித் துணிந்தாய்? என்று கேட்டிருக்கிறீர்கள். "என் அப்பா மளிகைக் கடை வைத்திருந்தார். தாத்தா முப்பாட்டனார் எல்லோருமே இந்த வியாபாரப் பரம்பரை தான். ஆகவே அந்த ரத்தம் தான் என்னுள்ளும் ஓடும்! என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்." என்றெழுதினேன்.

சமீபத்தில் இந்த விவரத்தை ஒரு கல்லூரி மாணவர்கள் கூட்டத்தில் நான் சொல்லிக் கொண்டிருந்த போது ஒரு மாணவர் எழுந்து கேட்டார்:

"ஐயா! நீங்கள் ஒரு வணிகக் குடும்பத்தில் பிறக்கவில்லை என்றிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?"


"தம்பி! என் தந்தையிடம் ஒரு வெள்ளிப் பொடி டப்பா இருந்தது. அவர் பொடி போடுவார். அந்த, என் தந்தையின் பொடி டப்பி என்னிடம் இருக்கும் வரை, யாரும் என்னை அசைக்க முடியாது என்று எனக்கு நானே சொல்லிக் கொள்வேன்" என்றேன்.

சிரிப்பலை!

நம்பிக்கை! முடியும் என்னால் என்ற நம்பிக்கை! ஏதாவது ஒரு காரணத்தைக் கொண்டு, நம்மீது நாமே வளர்த்துக் கொள்ளும் ஒரு நம்பிக்கை!

இந்த நம்பிக்கையை என்னுள் ஏற்படுத்திய கதைகளை இனி சொல்கிறேன்.

(தொடரும்)



"அவன், கல்யாணத்துக்குப் போயிட்டு நல்ல செருப்பா பார்த்து போட்டுக்கிட்டு வந்திருப்பான்னு நினைக்கிறேன்.."

"எப்படி சொல்றே?"


"கல்யாணம் எப்படி நடந்தது'ன்னு கேட்டதுக்கு 'சீரும் செருப்புமா நடந்தது'ங்கறானே!"

"இந்த டேபிள் சர்வர் பெரிய முருக பக்தர் போலிருக்கு..."

"எப்படிக் கண்டு பிடிச்சீங்க?"

"வடை கேட்டால், 'சுட்ட வடை வேணுமா, சுடாத வடை வேணுமா'ன்னு திருப்பிக் கேட்கிறாரே!"

— வெ. ராஜாராமன்





உளவுத்துறை

சீனக் கப்பல் ஒன்று மெரினா கடற்கரை அருகில் மூழ்கி விடுகிறது. அதற்குள்ளே பாதுகாப்பாக இருக்கின்றன, பயங்கர அணு ஆயுதங்கள். இவற்றைக் கைப்பற்றி இந்தியாவை அழிக்க நினைக்கும் சில அன்னிய சக்திகளின் முயற்சிகளை, கடற்படை அதிகாரியான விஜய்காந்த் முறியடிப்பதுதான் கதை.

விஜய்காந்தின் 125-வது படம். முகத்தில் அவ்வப்போது கொஞ்சம் களைப்பு தெரிகிறது என்றாலும் உடலை ட்ரிம்மாக்கிக் கொண்டிருக்கிறார். நடிப்புக்கு ஓரளவும் ஸ்டண்டுக்குப் பெருமளவும் ஸ்கோப் உள்ள பாத்திரத்தில் சீராகப் பொருந்துகிறார்.

கடலில் பல்வேறு மரணங்கள், அவற்றின் மர்மம் என்று விஜய்காந்த் இல்லாமலேயே முதல் இரண்டு ரீல்கள் விறுவிறுப்பாகத் தொடங்குகின்றன. தொடர்ந்து பலவித 'ரீல்'கள்.

ப்ளாஷ்பேக்கில் விஜய்காந்தின் மனைவியாக வரும் மீனா, பாத்திரத்துக்குப் பொருந்தாத உடைகள் மற்றும் நடிப்போடு வந்து நாலைந்து காட்சிகளில் இறந்து விடுகிறார். (படத்தில் மீனா இறந்தால், வசூல் பிய்த்துக் கொண்டு போகும் என்பது சமீபத்திய கோடம்பாக்க சென்ட்டிமெண்டுகளில் ஒன்று). கவர்ச்சிக்கு சங்கவி. என்றாலும் முக்கிய ஊறுகாயாகப் படம் பயன்படுத்திக் கொண்டிருப்பது தேசபக்தியை!

கடலுக்கடியில் அணு ஆயுதங்களைத் தேடி விஜய்காந்த் செல்லும் காட்சி அருமையாகப் படமாக்கப்பட்டிருக்கிறது (ராஜராஜன்). பாடல்களில் குறிப்பிட்டுச் சொல்ல எதுவுமில்லை என்றாலும், பின்னணியில் புதுமை சேர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன (அறிமுகம் – ஷா).

கிளைமாக்ஸில் இடம்பெறும் ரயில் சண்டைக் காட்சிகளில் அடுத்தடுத்த ஷாட்களில் மாறி மாறி ஒன்று மற்றும் இரண்டு ரயில் தடங்கள் இடம்பெற்று புன்னகையை வரவழைக்கிறது. சாருஹாசன் அண்டு ஃபேமிலியை விஜய்காந்த் கட்டவிழ்த்து விடுவிக்கும் போது, அந்த இடத்தில் விழுந்து கிடக்கும் வில்லன் கூட்டத்தினரை வீழ்த்தியது யார்? படத்தில் ஆங்காங்கே எட்டிப் பார்த்துக் கொண்டே இருக்கும் முரண்பாடுகளுக்கு ஓர் உதாரணம் இது.

நூலிழை அளவுக்குத்தான் கதை. சண்டைக் காட்சிப் பிரியர்களுக்கு இந்தப் படம் அல்வா. மற்றபடி வைதேகி காத்திருந்தாள், சின்னக் கவுண்டர் ரேஞ்சில் விஜய்காந்தை எதிர்பார்த்துச் செல்பவர்களுக்குக் கிடைப்பது வேறு மாதிரி அல்வா. ●


— ஜி.

சுமார் ஐந்து வருட காலம் டெல்லியில் கட்சித் தலைமை நிலையத்தில் கட்சிப் பணி ஆற்றிய பா.ஜ.க. துணைத் தலைவர் ஜனா. கிருஷ்ணமூர்த்தி, கட்சியின் தென் சென்னை வேட்பாளராக தமிழகத்திற்குத் திரும்பியிருக்கிறார். "எனக்கு கட்சிப் பணியைத் தொடர்ந்து செய்யவே ஆசை, அதனால் தேர்தலில் சீட் வேண்டாம் என்று சொன்னேன். ஆனால் வாஜ்பாய், அத்வானி இருவரும் என்னை வற்புறுத்தி நிற்க வைத்திருக்கிறார்கள்!" என்று சொல்கிறார் 'ஜனாஜி'. ஒரு காலத்தில் மதுரையில் ஓஹோவென்று பிராக்டீஸ் செய்து கொண்டிருந்த வழக்கறிஞர் இவர்.

"பா.ஜ.க., அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துள்ளதால் முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் ஆகியோர் மொத்தமாக ஒருங்கிணைந்து உங்கள் அணிக்கு எதிராக வோட்டுப் போடுவார்கள் என்று சொல்கிறார்களே?"

"பா.ஜ.க. குறித்து, காங்கிரஸாரும் இதர கட்சியினரும், மைனாரிட்டி மக்களிடையே ஒருவித அச்சத்தைக் கிளப்பியிருக்கிறார்கள். அது உண்மை அல்ல. காரணம் பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களில், எல்லா மதத்தினரும் எந்தப் பாகுபாடும் இன்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மதக்கலவரங்கள் என்கிற பேச்சே கிடையாது. பல மாநிலங்களில் பா.ஜ.க. இளைஞர் அணி, முஸ்லிம் இளைஞர்களுக்காக மாநாடுகள் நடத்தியிருக்கிறது. இந்த முறை தலைமையகத்தில் நடந்த 'இப்தார்' விருந்தில் வாஜ்பாய் அவர்களே பங்கு கொண்டார்கள். சென்னையில் நான் கூட்டணித் தலைவர்களுடன் பங்கு கொண்டேன். தங்களின் வோட்டு வங்கியைப் பெறுவதற்காகத்தான் 'மைனாரிட்டி ஆதரவு' என்கிற முகமூடியை காங்கிரஸ் போட்டுக் கொண்டிருக்கிறது என்பதை முஸ்லிம், கிறிஸ்துவ மக்கள் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்தத் தேர்தலில் மைனாரிட்டி மக்களின் கணிசமான பகுதியினர் எங்களையே ஆதரிப்பார்கள் என்பது நிச்சயம்."

"ஆபரேஷன் ப்ளூ ஸ்டார்' சம்பவத்துக்காக சோனியா காந்தியும், பாப்ரி மஸ்ஜித் விவகாரத்தில் காங்கிரஸ்



பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் கற்பழிப்புக்கு மரண தண்டனை!



• ராமகோபாலன்:
நண்பர் மட்டும்!

கட்சியும் மன்னிப்புக் கோரியுள்ள நிலையில் மைனாரிட்டி வோட்டுகள் முழுவதும் அவர்களுக்கே போகிற வாய்ப்புகள்தானே அதிகம்!''

''இந்தச் சம்பவங்கள் நடந்து பல வருடங்கள் ஆன பிறகு மன்னிப்பு கோருவதென்பது கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதம். மைனாரிட்டி மக்கள் காங்கிரஸைக் கை கழுவி விடத் தயாராகிவிட்டதைத் தெரிந்து கொண்டுதான் மன்னிப்பு என்று சொல்கிறார்கள். இது உள்ளத்திலிருந்து வருவதல்ல. வோட்டுக்காக உதட்டிலிருந்து வந்த வார்த்தைகள்! பா.ஜ.க. இவர்களின் வேஷத்தைத் தோலுரித்துக் காட்டும். மைனாரிட்டி மக்கள் இதிலும் இவர்களை நம்பத் தயாராக இல்லை என்பதுதான் உண்மை.''

''ஊழல் வழக்குகளில் சிக்கியிருக்கும் ஜெயலலிதாவோடு கூட்டணி அமைத்ததில் வாஜ்பாய்க்கும் அத்வானிக்கும் கருத்து வேறுபாடு இருந்ததா?''

''அதெல்லாம் ஒன்றும் கிடையாது. முதலில் தமிழக அரசியல் நிலைமை குறித்து ஜெயலலிதா என்ன நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளவே 90 நிமிடம் சந்தித்துப் பேசினேன். அப்போது மறைமுகமாக ஒருவருக்கொருவர் ஆதரவு தெரிவித்துக் கொள்ளலாம் என்று கருத்து உருவானது. நாலைந்து நாட்களுக்குப் பிறகு, நான் டெல்லியில் இருந்தபோது நேரிடையான கூட்டுக்கே அம்மா தயார் என்ற செய்தி வந்தது. அதன் பின்னர் அத்வானிஜி, வாஜ்பாய்ஜி மற்றும் ஸீனியர் தலைவர்கள், பல மணி நேரம் ஒன்று கூடிப் பேசி, கூட்டு வைத்துக் கொள்ள முடிவு செய்தோம். மற்றபடி ஊழல் வழக்குகள் கோர்ட்டில் இருக்கின்றன. தம் மீது போடப்பட்டவை பொய் வழக்குகள் என்று அவர் உறுதியாக நம்புகிறார். உச்சநீதி மன்றம் தீர்ப்புச் சொல்லும் வரை அவர் குற்றம் சாட்டப்பட்டவர் என்ற நிலையில்தான் இருப்பார். அதற்காக அவரை தீண்டத்தகாதவராகப் பார்க்க முடியுமா என்ன?''

''பிரசாரத்தின்போது இராம. கோபாலன் போன்றோர் பேச்சினால் மக்களிடையே மோதல் வரும் என்று சிலர் சொல்கிறார்களே?''

''இராம. கோபாலனை எனக்கு ஐம்பது வருட காலமாகத் தெரியும். அவருடையது இந்து முன்னணி; அவர் கருத்துக்கள் எங்கள் கருத்தல்ல. எங்கள் கருத்தும் அவர் கருத்தல்ல. நாங்கள் ஒருவரை ஒருவர் மதித்தாலும், அணுகுமுறை வெவ்வேறு. எனக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அதையும் தாண்டி நாங்கள் நல்ல நண்பர்கள்! பா.ஜ.க. மேடையில் பா.ஜ.க.காரர்கள்தான் பொறுப்புடன் பேசுவார்கள். அதே சமயம் சமுதாயப் பணிக்காக வாழ்நாள் முழுவதும் செலவழித்த இராம. கோபாலன் தமிழகத்தின் நலன்களுக்கு விரோதமாகச் செயல்படமாட்டார் என்பதும் நிச்சயம்.''

''பா.ஜ.க. மத்தியில் ஆட்சிக்கு வந்தால் தமிழகத்திற்கு என்று ஏதேனும் திட்டங்கள் வைத்திருக்கிறீர்களா?''

''அப்படித் தனியாக ஏதும் இல்லை. ஆனால் தேசம் முழுதும் வளம்பெறத் தெரிவிக்கப்பட்டிருக்கும் யோசனைகளால் தமிழகமும் வளம் பெறும். தொழில் வளர்ச்சி, விவசாயம், போன்ற துறைகளில் அடிப்படை கட்டுமான வசதியைப் பெருக்குவோம். மாநிலங்களுக்குத் தாராளமாக நிதிப் பங்களிப்பு இருக்கும். சுகாதாரம், கல்வி, குடி தண்ணீர் வசதி போன்றவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். ஜாதி, மத வித்தியாசம் பார்க்காமல் பட்டப்படிப்பு வரை பெண்களுக்கு இலவசக் கல்வி வழங்கப்படும். கற்பழிப்புக் குற்றத்துக்கு மரண தண்டனை வழங்கப்படும். இவற்றைத்தான் நாங்கள் உடனடியாகச் செய்ய நினைத்துள்ளோம்.'' ●

— ப்ரியன்

ம.தி.மு.க: தாவும் படலம் – பக்கம் 57

இன்று வாழலாம் வா!

5

பத்மா ரவிசங்கர்

ஒரு கிளைச் சாலையிலிருந்து திடுமென்றுதான் வெளிப்பட்டது அந்த போலீஸ் ஜீப்.

"ருட்டீன் ரோந்தில் போலீஸ்! காரில் பிணம். என்ன ஒரு சிக்கல். வேகம் எடுக்கட்டுமா?"

"வேண்டாம். சந்தேகம் வரும். வயர்லஸ்ஸில் சகலரையும் உசுப்பி விட்டு விடுவார்கள்! சட்! எவருக்குமே தெரியக் கூடாத ரகசிய ஆபரேஷன் இது... என்ன செய்வது இப்போது?"

ஜீப் சீராக வந்தது. வேகமெடுத்தது. ஓவர்டேக் செய்ததும் நிறுத்தச் சைகை செய்தது.

"நம் துரதிர்ஷ்டம்!" ஜீவா முணுமுணுத்தான்.

"துரதிர்ஷ்டம் போலீஸிற்கு! தேசத்திற்காகக் களப் பலி!" குப்தா சன்னமாகச் சிரித்தான்.

"நோ! மேலும் சிக்கல்கள் வேண்டாம் குப்தா! எனக்கு அனேக அதிகாரிகளைத் தெரியும். பொறுமையாக இரு. பார்ப்போம்."

ஜீப்பிலிருந்து வெளிப்பட்டது ஒரு சர்தார்ஜி. மஃப்டியில் இருந்தார். இவர்களை நோக்கி வந்தார்.

"யார் இவர்? இதற்கு முன் பார்த்தது கிடையாது!"

"யார் நீங்கள்? அகாலத்தில் எங்கே செல்கிறீர்கள்?" சர்தார்ஜியின் குரல் கரகரவென்றிருந்தது.

குப்தாவின் இடக்கரம் மெல்ல சட்டைக்குள் செல்வதை ஜீவா கவனித்தான். ஆபத்து! எந்த நேரமும் குப்தா துப்பாக்கி உருவி விடுவான்! காஷுவலாக அவன் தோள் மீது கை வைத்து அழுத்தினான். அபத்தமாக ஏதும் செய்யாதே. பொறுமை, உளவு மகனே...

"இருவரும் எதையோ கடத்திச் செல்கிறீர்கள்! எனக்குத் தகவல் வந்து விட்டது!"

"நாங்கள் கௌரவமான பிரஜைகள். ராஜா அண்ணாமலைபுரத்தில் நான் – "

இடைமறித்த சர்தார்ஜி, "மேலே பேசாதே. நீ ஒரு கிரிமினல் ஜீவா!"

ஜீவா விழித்தான். தன் பெயர் எப்படித் தெரியும்?

"என்ன விழிக்கிறாய்? உன் மனைவி ஷீலா. மகன் கௌதம். சரிதானே?" என்ற சர்தார்ஜி தன் மாறுவேடத்தைப் பிய்த்துக் கலைத்தார்.

"சார்! நீங்களா! குப்தா இவர் போலீஸ் கமிஷனர் சாமுவேல்! என் நண்பர்!"

"நன்றாகப் பயந்தீர்களா ஜீவா!" சாமுவேல் சிரித்தார். "என் நெடுநாள் ஆசை நிறைவேறியது. போலீஸின் சாமர்த்தியம் எப்படி? உங்களை மாதிரி ஒரு தேர்ந்த நபரைக் கூட ஏமாற்ற முடிகிறதே!"

"கிரேட்! மாறுவேடத்தில் எங்கே சார்?"

"இங்கே சில கிரிமினல் ரௌடிகளைக் கண்காணிக்க விரும்புகிறேன். பின்னர், அவர்களை... ஆங். அது சஸ்பென்ஸ்! உங்கள் கார் நம்பர் எனக்குத் தெரியும் ஜீவா. சாலையில் பார்த்ததும் வியப்பு. அதுதான் உங்களைக் கொஞ்சம் சத்தாய்த்துப் பார்த்தேன். அப்புறம்... கௌதம் பிறந்த நாள் நன்றாக நடந்ததா? சாரி. அன்று, ஒரு அரசியல்வாதிக்குக் காவடி தூக்கும்படியாகி விட்டது! பாதுகாப்பாம்! இவர்..."

"குப்தா! என் நண்பர். டெல்லிவாசி."

"ஒரு ஏஜென்சி வைத்திருக்கிறேன்."

"நீங்களுமா? ஆக, இரண்டு ஏஜென்சிகளின் சந்திப்பா?"

இரு 'ஏஜண்ட்டுகள்' சந்திப்பு என்று நினைத்த ஜீவா, "பிஸினஸ் விஷயமாகத்தான் ஒருவரை சந்திக்கக் கிளம்பினோம்... காலை

யில் அவர் ஊருக்குக் கிளம்பி விடுகிறார்."

பூவரசுவின் பங்களா சாலையிலிருந்து வெகுவாக விலகி இருந்தது. கேட் பூட்டியிருந்தது. குப்தா குனிந்தான். ஏதோ செய்தான். அவனிடம் தோற்காத பூட்டுக்களே இல்லை போல...!

கார் உள்ளே சென்றது. திரும்பவும் கேட்டை மூடினான் குப்தா.

உள்ளே அமைதி; இருள். எங்கிருந்தோ தேடி ஒரு கடப்பாறை மண் வெட்டி எடுத்து வந்தான். உதவிக்கு டார்ச். கண்காணிக்க குப்தா.

ஜீவா தோண்டத் துவங்கினான். அன்று சீஸர். இன்று குறுந்தாடி. அடுத்து எவரோ. விரைவில், புதைப்பது அவனுக்குப் பகுதி நேர ஊழியமாகி விடும் போலிருந்தது!

இரவு இரண்டு மணி. ஜீவாவிடம் மாற்றுச் சாவி இருந்தது. மனைவி எழுந்து விடக் கூடாது. மெல்ல வாசலை நெருங்கினான்.

டக்கென்று கதவு திறந்தது!

"ஷீலா! இன்னுமா உறங்கவில்லை!"

"என்னில் பாதி எங்கோ அல்லாடும் போது எப்படி உறக்கம் வரும்?"

"பழகிக் கொள் அன்பே. சில நாட்களுக்கு நாம் பிரிந்து இருக்கப் போகிறோம்!"

"ஐயோ! திடுதிப்பென்று என்ன சொல்கிறீர்கள்?" ஷீலா அதிர்ந்திருந்தாள்.

பெட்ரூம். விடிவிளக்கு.

"பொய்தானே?" என்றாள் கண்கலங்க.

"இல்லைடா!"

"சும்மா விளையாட்டுத்தானே?" என்றாள் குரல் உடைந்திருக்க.

"இல்லை ஷீலு! காலை கிளம்புகிறேன். ஒரு கேஸ் விஷயமாக. உளவுத் துறைக்காக! புரிந்து கொள் கண்ணம்மா."

"கடவுளே! மறுபடியுமா?" என்றவள் அவனை இறுகக் கட்டிக் கொண்டாள்.

"தவிர்க்க இயலாத ஒரு நிர்ப்பந்தம்!"

"முற்றிலும் முழுக்குப் போட்ட பிறகுமா?"

"ஒரே ஒருமுறை! என்னைச் சுற்றிலும் ஏதோ ஒரு மாய வலை! கடந்த



சில நாட்களாகச் சில மிரட்டல்கள். நம்மைக் கண்காணித்த குறுந் தாடிக்குப் பின்னே ஒரு கும்பல் இருக்கிறதாம். நான் இதில் இறங்காமல், நம்மைச் சூழ்ந்துள்ள ஆபத்து விலகாது; நிம்மதி பிறக்காது."

"எனக்குப் பயமாக இருக்கிறதுடா ஜீவா."

நடுங்கும் மனைவியை இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

''உன் கணவனின் பராக்கிரமம் பற்றி அறிந்திருந்தும் பயப்படலாமா?''

பாசமுடன் அவள் கூந்தலை வருடினான். மனைவியின் மூடு மாறட்டும். சட்டென்று அவனுக்கு விருப்பமான விஷயத்துக்குத் தாவினான். இனி எப்போதோ....

"என் ஷீலா எவ்வளவு அழகு! உன்னைப் படைப்பதற்கு கடவுள் நெடு நாட்கள் செல வழித்திருக்க வேண்டும்!"

"மேலே ஏதும் பேசாதீர்கள்!" என்றாள் வெட்கமுடன்.

"வீண் பேச்சு எதற்கு என்கிறாயா?"

"கடவுளே! உங்களை...."

''உன் உதடுகளை உருவாக்க மட்டும் தேவன் ஒரு வாரம் செலவழித்திருப்பார்! எனக்கு மட்டும் உன்னைப் பிரிந்து செல்ல ஆசையா? என் உயிரே நீதானே!"

காதலுடன் ஷீலாவின் உதடுகளில் முத்த மிட்டான்.

"இந்த உன் அண்மை எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? இந்தச் சொர்க்கக் கணம் இப்படியே ஃப்ரீஸ் ஆகாதா? பூமி சுழல்வது நிற்கக் கூடாதா?"

"எனக்கு மட்டும் சக்தி இருந்தால், நாளை விடியாமலே செய்து விடுவேன் டார்லிங்!" என்றாள் உண்மையாக.

காலை 11:00. ஜீவா ஜீன்ஸ், காட்டன் சட்டையில். அவனிடம் ஒரு சிறிய சூட்கேஸ். கௌதம் ஸ்கூலுக்குச் சென்றிருக்க, ஷீலா அவன் கரம் பற்றியிருந்தாள். விடிந்ததிலிருந்தே விலகாத மனைவி. எந்நேரமும் அழுகை வெடிக்கத் தயாராக...


"சீர் அப் ஷீலா! நான் சொன்னது எல் லாம் ஞாபகம் இருக்கட்டும். எச்சரிக்கையாக இரு. கௌதமைக் கவனமாகப் பார்த்துக் கொள். அவ்வப்போது போன் செய்கிறேன்."

"என் காது உங்கள் கார் திரும்பும் ஒலிக் காகக் காத்திருக்கும். என் பார்வை கேட்டின் மீதே பதிந்து தவமிருக்கும். என் மனம் காதல் நினைவுகளில் ஆழ்ந்து ஏங்கியிருக்கும். மறக் காதீர்கள், ஜீவா!"

"விரைவில் திரும்புவேன்; வெற்றியுடன்!"

அவன் எதிரி யார்? இலக்கு என்ன? எதற்காக இந்தப் பயணம்? ஒன்றும் புரியாமல் குப்தா சொல்படி கிளம்பியிருக்கிறான்.

முதலில் ராஜா அண்ணாமலைபுரம் அலுவலகம் செல்வது போல் போக்குக்



''ஆறுதல் சொன்னதுக்கு அறைஞ்கட்டுப் போறானா, ஆச்சர்யமாயிருக்கே! அப்படி நீ என்ன சொன்னே?''

'' 'எங்க வீட்டில திருட்டுப் போகுது'ன்னான், 'போகப்போகச் சரியாயிரும்'னேன்!''

– வெ. ராஜாராமன்

காட்டி விட்டு ஓர் அழுக்குச் சந்திற்குள் புகுந்தான். ஒரு விசேஷக் கலவையை எடுத்துக் காரின் நம்பர் பிளேட்டுகளில் பூசி மறைத் தான். பின் காரைக் கிளப்பினான்.

அவன் மனம் கட்டவிழ்ந்தது போலிருந் தது. எவ்வளவு வருடங்களாயிற்று... பயின்ற தும், செய்ததும் எப்படி மறக்கும்? சாகஸ உணர்வில் முறுவலித்தான். இவன் வேறு ஜீவா!

திட்டப்படி, கிண்டி அருகே மாறு வேடத்தில் குப்தா.

காருக்குள் மாறுவேடத்தைக் கலைத்த குப்தா, "ஹஹ்ஹா... மறுபடி உளவுக் களத்தில் ஜீவா! என்ன சாகஸமாக உணர்கிறாயா ஜீவா... எனக்குத் தெரியும்! இந்தப் பரவசத் திற்கு ஈடுஇணை எதுவும் இல்லை! உளவுக் கலை பயின்றவனால் கம்மா இருக்க முடி யாது! நிரந்தரமாக என்னுடன் வந்து விடு நண்பா...'' என்றான் கண்கள் ஆசையில் பளபளக்க.

ஜீவா புன்னகைத்தான். காரை சீராகச் செலுத்தினான். டிரங்க் ரோடில் வழக்கம் போல் வாகனங்கள்.

"சில நாட்கள் நாம் சென்னையை விட்டு விலகியிருக்க வேண்டும். முக்கியமாக, எதிரிகளின் கண்களில் படக்கூடாது."

"யார்? குறுந்தாடிக் குழுவினரா?"

"ஆம்! அவர்கள் கண்ணில் மண் தூவி விட்டுத்தான் நமது காரியம் சாதிக்கப் போகிறோம்!"

தாம்பரம் தாண்டியதும், ''ஆபத்து!'' என்றான் ஜீவா; ரியர் வ்யூ மிர்ரரைப் பார்த் தபடி. "பின்னால் ஒரு வெள்ளை மாருதி கார் நம்மைப் பின்தொடர்கிறது!"

"இப்போது என்ன செய்வது?" என்றான் குப்தா டென்ஷனுடன். "எவருமே அறியாமல் நம் பயணம் என்பது முக்கியம்...."


ஜீவா அமைதியாக, ''கவலையை விடு. நான் பார்த்துக் கொள்கிறேன்..."

பின்னால் திரும்பி பைனாகுலரில் சில வினாடிகள் பார்த்தான். தொடர்பவனுக்கு 30 வயதிருக்கும். முறுக்கு மீசை. கன்னத்தில் ஒரு வெட்டுத் தழும்பு.

''வெளிப்படையாகவே பின்தொடர் கிறான்! கவனித்தாயா குப்தா?"

குப்தா கவலையுடன் தலையசைத்தான்.

வெள்ளை மாருதி வெகுவாக நெருங்கி



விட்டிருந்தது. இடையில் எந்த வாகனமும் இல்லை. இடைவெளி இரண்டு பஸ் அளவு. கணக்கிட்டான் ஜீவா. வா நிழல் மகனே...

ஜீவா சட்டென்று வேகம் குறைத்தான். முறுக்கு மீசையும் வேகம் குறைத்ததைக் கவனித்தான். முறுவலித்தான். சரேலென்று வேகம் கூட்டினான். வெள்ளை மாருதி வாலும் வேகமெடுத்தது. மறுபடி கொஞ்சம் குறைத்தான். கூட்டினான். மாற்றி மாற்றிச் செய்தான். பின்னாலும் செவ்வனே அவன்...

பயல், தன் அலை வரிசைக்கு செட்டாகி விட்டான்; கவனம் முழுவதும் தன் மீதுதான். ஓவர் டேக் செய்யும் வாகனங்களுக்கு இருவருமே வழி விட்டனர். மாருதிக்குப் பின்னால் ஒரு வேன் வருவதைப் பார்த்தான் ஜீவா. இதுதான்... இதுதான் அவன் நினைத்து வைத்த கணம்....

தயங்காமல் திடீர் பிரேக் அடித்தான். அனிச்சை செயலாக, முறுக்கு மீசையும் சடன் பிரேக் பிடிக்க.... டொம்! வேன், வெள்ளை மாருதி மேல் மோதியது! எல்லாம் சில மைக்ரோ நொடிகளில்...

ஜீவா, அங்கு இருந்தால்தானே... சிட்டாகப் பறந்தான்.

''கிரேட் வொர்க் ஜீவா! நீ இல்லை என்றால் திணறி இருப்பேன்!''

பயணம் தொடர்ந்தது. ஆனால், ஈட்டிய நிம்மதி தொடரவில்லை. பத்தாவது நிமிடத்தில் பின்னால் வந்து விட்டது, வெள்ளை மாருதி!

"சரியான விடாக்கண்டன்!"

"எப்படியோ சமாளித்து விட்டானே!"

ஜீவா சட்டென்று ராங் சைடில் வண்டியை விட்டு சட்டென்று நிற்க, இதை எதிர்பாராத வெள்ளை மாருதி இவர்களை சடக்கென்று கடக்க –

தற்போது, முன்னால் வெள்ளை மாருதி! வேன் உரசல் உபயத்தில், அதன் பின்புறம் நசுங்கியிருந்தது; விளக்குகள் நொறுங்கியிருந்தன. சிறிது தூரம் அப்படியே சென்றனர்.

''நாம்தான் அவனை ஃபாலோ செய்கிறோம்!'' என்று சிரித்த குப்தா, "அவனைத் தொலைக்கவே முடியாதா?"

"இதோ! முறுக்கு மீசைக்குக் குட்பை!"

ஜீவா சடாரென்று வலப்புறம் வளைந்தான். இப்போது ராங் சைடில் ஜீவாவின் கார்! துணிச்சலான துல்லியக் கணக்கில், தேர்ந்த டிரைவிங்கில், அபாயகரமான இடைவெளியில் ஒரு பஸ்ஸைத் தவிர்த்தான். அப்படியே 'U' அடித்து முடித்து –

எதிர்ப்புறத்தில் 'வந்த வழியே' சென்னை நோக்கி ஜீவாவின் கார்! குப்தா வாய் பிளந்தான். மாருதி சுதாரித்துத் திரும்ப அவகாசமே அளிக்கவில்லை. ஒரு பக்கவாட்டுச் சாலையில் புகுந்தான்.

"இது எங்கே செல்கிறது?"

''எங்கு வேண்டுமானாலும் செல்லட்டுமே!'' என்று சிரித்தான் ஜீவா. ஆனால், அவனுக்குப் பல வழிகள், தடங்கள் தெரிந்திருந்தன. பல கிளைச் சாலைகள். ஏதேதோ ஊர்கள். தெருக்கள். புழுதி பூசிக் கொண்டு கார் செல்ல, எவருமே பின்தொடராத பயணம்....

''இதற்குத்தான் உன் மாதிரி லோகல் பறவையின் உதவி நாடினேன்!'' என்றான் குப்தா சிலாகிப்புடன்.

"சரி. கேஸ் பற்றிச் சொல்லு."

''தற்சமயம், உனக்கு 'அனுமதிக்கப்பட்ட அளவு' சொல்கிறேன். இப்போது, உலகெங்கிலும் உளவு வேலைகள் மாறி விட்டன ஜீவா. சமுக்கமாக, சிறு சிறு – ஆனால் முக்கிய ஆசாமிகளாகப் பார்த்து வீழ்த்துகிறார்கள்! எஞ்ஜீனியர்கள், பெரும் டாக்டர்கள், விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள், இப்படி... soft targets! சொற்ப பாதுகாப்பு. வீழ்த்துவதும் சுலபம். ஒரு முக்கிய பொறியாளரை சாய்த்தால், அவர் செய்யும் பிராஜக்ட் எவ்வளவு வருடங்கள் பின்னோக்கிப் போகும்! திட்டம் தள்ளிப் போகும்! நாட்டிற்கு எவ்வளவு நஷ்டம்! ஒரு நாட்டின் முதுகெலும்பை ஓசைப்படாமல் ஒடித்து விடும் தந்திரம் இது! சென்னையில் அவர்களின் முதல் குறி, டாக்டர் அப்துல் ஜலால்!"

ஜீவா, தன் முகத்தை உணர்ச்சியற்று வைத்திருந்தான்.

''அந்தக் கம்ப்யூட்டர் மேதை உன் நண்பர்தானே... குறுந்தாடி உன்னைச் சுற்றி வந்தது ஏன் என்று இப்போது புரிகிறதா? ஜலாலுக்குப் பின், மேலும் தொடரும், பல விஐபி கொலைப் பட்டியல்...!''

ட்ரங்க் ரோடில், திரும்ப வந்து சேர்ந்து கொண்டார்கள். வெள்ளை மாருதி எங்கே சுற்றி அல்லாடுகிறதோ...! திண்டிவனம் தாண்டியதும் –

''கழுகுகள் அல்லது வேறு எவரோ நம்மை வேட்டையாடத் தொடங்கி விட்டார்கள்!'' என்றான் ஜீவா திடீரென்று.

''ப்ச். மறுபடி அந்த முறுக்கு மீசையா?''

''இல்லை குப்தா! வேறு வால்! வேறு வாகனம்!''

ஒரு சிவப்பு அம்பாஸிடர் கார் அவர்களைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தது....!

(தொடரும்)

ஆனந்தமான விஷயம்! வந்துவிட்டது, ஐடிபிஐ ஃப்ளெக்ஸிபாண்ட்ஸ் 3ல் முதலீடு செய்யும் வாய்ப்பு.

ஐடிபிஐ இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் பாண்ட் '98

ஒரு வரி சேமிப்புத் திட்டம்

பிரிவு 88-ன் கீழ் வரிச்சலுகை மற்றும் ஆண்டிற்கு 12.5% வட்டி. பிரிவு 54EA & பிரிவு 54EB-ன் கீழ் மூலதன ஆதாய வரிச்சலுகை களும் உண்டு.

முதிர்வு : 7 ஆண்டுகள். 3வது மற்றும் 5வது ஆண்டு இறுதியில் திருப்பிப்பெறும் தேர்வு (திருப்பிப்பெறும் தேர்வை 3வது ஆண்டு இறுதியில் அமல்படுத்தினால் வட்டி ஆண்டிற்கு 12.25% என்றவாறு வழங்கப்படும்). குறைந்தபட்ச முதலீடு ரூ. 5000.

ஐடிபிஐ குரோயிங் இன்ட்ரெஸ்ட் பாண்ட் '98*

முதல் ஆண்டிற்காக வழங்கப்படும் ஆண்டிற் கான 11% வட்டி ஐந்தாவது வருடத்தில் ஆண்டிற்கு 18%ஆக வளருகிறது.

முதிர்வு : 5 ஆண்டுகள். (எந்த ஒரு ஆண்டு இறுதியிலும் திட்டத்திலிருந்து விலகும் தேர்வு). ஆரம்பத்தில் வெறும் ஒரு ஆண்டிற்காக முதலீடு செய்யுங்கள் ஆண்டிற்கு 11% வட்டி விகிதத்தில். நீங்கள் முதலீட்டை மேலும் தொடர்ந்தால் 2வது ஆண்டில் (11.50%), 3வது ஆண்டில் (13%) 4வது ஆண்டில் (15.50%) மற்றும் 5வது ஆண்டில் (18%) அதிகப்படியான வட்டியைப் பெறுகிறீர்கள். குறைந்தபட்ச முதலீடு ரூ. 5000.

ஐடிபிஐ டீப் டிஸ்கவுண்ட் பாண்ட் '98

ரூ. 12,750 முதலீடு 30 ஆண்டுகளில் 5 இலட்சம் ஆகிறது

இன்று ரூ. 12,750 முதலீடு செய்யுங்கள். 30 ஆண்டு களுக்குப் பிறகு ரூ. 5 இலட்சத்தைப் பெறுங்கள் (மகசூலம் 13%). குறைந்த காலவரைக்கு முதலீடு செய்வதையும் நீங்கள் திட்டமிடலாம். (திருப்பித்தரும்/திரும்ப அழைக்கும் தேர்வை ஒவ்வொரு 5 வருட காலவரை இறுதியில் அமல் படுத்தலாம்.)

ஐடிபிஐ ரெகுலர் இன்கம் பாண்ட் '98*

வருடாந்தர வட்டி ஆண்டிற்கு 13.25%

தேர்ந்தெடுங்கள் இவற்றிலிருந்து ஒன்றை (அ) ஆண்டிற்கு 12.50% மாதாந்தர வட்டி அல்லது (ஆ) ஆண்டிற்கு 13.25% வருடாந்தர வட்டி. முதிர்வு : 5 ஆண்டுகள். அனைத்து ஐந்து ஆண்டுகளுக்கு உறுதிப்படுத்தப்பட்ட வட்டி விகிதம். குறைந்தபட்ச முதலீடு ரூ. 5000.

ஐடிபிஐ ஃப்ளெக்ஸிபாண்ட்ஸ் 3

பாதுகாப்பின் முத்திரை

அன்செக்யூர்ட் பாண்டுகளின் பப்ளிக் இஷ்யூ மூலமாக செய்யப்படும் மொத்தத் திரட்டு ரூ. 750 கோடிகள். கூடுதலாகப் பெறும் ரூ. 750 கோடிகளை வைத்துக் கொள்ளும் தேர்வு.

*இங்கு கொடுக்கப்பட்டுள்ள விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்ட விகிதங்களாகும் (விருத்தியடைந்த) மற்றும் டிசம்பர் 24, 1997 தேதியிடப்பட்ட வழங்கு பத்திரத்தின் / விண்ணப்பப் படிவத்தின் (படிவம் 2A) ஒரு பகுதியாகக் கருதப்படும் மற்றும் அங்கு கொடுக்கப்பட்டுள்ள விகிதங்களுக்குப் பதிலாகதாக விளங்கும்.

பொறுப்பு மதிப்பீடு : கேர் மற்றும் க்ரிஸில் நிறுவனங்களின் AAA
விவரங்களுக்கு வழங்கு பத்திரத்தைப் பார்க்கவும்

இஷ்யூ நடப்பிலிருக்கிறது
இஷ்யூ 18 ஃபிப்ரவரி, 1998 அன்று முடிவுறுகிறது.

[illegible]

Lead Managers to the Issue: SBI Capital Markets Ltd. 202, Maker Tower E, Cuffe Parade, Mumbai - 400005. Tel: (022) 218 9166. Fax: (022) 218 8332. **DSP Merrill Lynch Ltd.** Tulsiani Chambers, West Wing, 212 Backbay Reclamation, Mumbai - 400 021. Tel: (022) 204 8654. Fax: (022) 204 8518. **Enam Financial Consultants Pvt. Ltd.** 24, B. D. Rajabahadur Compound, Ambalal Doshi Marg, Fort, Mumbai - 400 023. Tel: (022) 265 0172. Fax: (022) 265 3193. **J. M. Financial & Investment Consultancy Services Ltd.** 141, Maker Chambers III, Nariman Point, Mumbai - 400 021. Tel: (022) 283 1237. Fax: (022) 204 2137. **Kotak Mahindra Capital Company (Company with Unlimited Liability)** Bakhtawar, 1st Floor, 229 Nariman Point, Mumbai - 400 021. Tel: (022) 282 6655. Fax: (022) 282 6632. **Principal Mktg. Co-ordinator: IDBI Capital Market Services Ltd. (A Wholly Owned Subsidiary of IDBI)** IDBI Tower, 13th floor, Cuffe Parade, Mumbai - 400 005. Tel: (022) 216 0180. Fax: (022) 215 4256. **Registrars to the Issue: Investor Services of India Ltd.** Teritex, Business Service Centre, Saki Vihar Road, Andheri (E), Mumbai - 400 072. Tel: (022) 850 1308. Fax: (022) 850 9201. **Karvy Consultants Ltd.** Unit - IDBI Flexi-3, 46, Avenue 4, Street No. 1, Banjara Hills, Hyderabad - 500 034. Tel: (040) 331 2454. Fax: (040) 311 1968. **Trustee to Bondholders: Bank Of Maharashtra** "Lokmangal", 1501, Shivaji Nagar, Pune 411 005. Tel: (0212) 322728. Fax: (0212) 323924.

H.O.: **Industrial Development Bank of India. IDBI Tower, Cuffe Parade, Mumbai - 400 005** Tel: (022) 218 9117, FAX: (022) 218 1294 Grams: INDBANKIND


பொன்னியின் செல்வன்
அமரர் கல்கி நூற்றாண்டு
100
கல்கி கலெக்ஷன்
அமரர் கல்கி

பூர்வ கதை

காஞ்சி நகரத்திலிருந்து சோழ வள நாட்டுக்கு வாலிப வீரன் ஒருவன் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அவன் பெயர் வல்லவரையன் வந்தியத்தேவன். ஒரு காலத்தில் தமிழகத்தில் வலிமை பெற்ற அரசர்களாயிருந்த வாணர்குலத்தை அவன் சேர்ந்தவன். தற்போது காஞ்சியில் சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலரின் அபிமானத்தைப் பெற்ற அந்தரங்க வேலைக்காரன். அச்சமயம் தஞ்சையில் தங்கியிருந்த சுந்தர சோழ மகாராஜாவுக்கு ஆதித்த கரிகாலரிடமிருந்து ஓலை எடுத்துக் கொண்டு அவன் சென்றான்.

வழியில் வீர நாராயணபுரத்துக்கருகில் ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவருடைய பழக்கம் அவனுக்கு ஏற்பட்டது. அந்த வைஷ்ணவரிடம் சில காரணங்களினால் வந்தியத்தேவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று.

கடம்பூர் செங்கண்ணன் சம்புவரையர் என்பவரின் மதில் சூழ்ந்த பெரிய மாளிகையில் வந்தியத்தேவன் அன்றிரவு தங்கினான். சம்புவரையரின் புதல்வன் கந்தன் மாறவேள் வந்தியத்தேவனுடைய அருமை நண்பன்.

கடம்பூர் மாளிகைக்கு அன்றிரவு இன்னும் பல பிரபல விருந்தாளிகள் வந்திருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர் பழுவூர்ச் சிற்றரசரான பழுவேட்டரையர். சோழ சாம்ராஜ்யத்தில் அச்சமயம் மிக உன்னதமான பதவிகளை வகித்து வந்தவர். ஐம்பத்தைந்து வயதுக்கு மேல் அவர் ஓர் இளம்பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டிருந்தார். தாம் போகுமிடமெல்லாம் மூடு பல்லக்கில் தம்முடைய இளம் மனைவியையும் அழைத்துப் போவது அவரது வழக்கம். அன்றிரவு கடம்பூர் மாளிகைக்கு வரும் போதும் அவரைத் தொடர்ந்து மூடுபல்லக்கு வந்தது. பழுவேட்டரையரின் பெண்ணாசையைக் குறித்து நாடெங்கும் ஜனங்கள் பரிகாசமாகப் பேசியது போல் கடம்பூர் மாளிகைக்கு அன்று வந்திருந்த விருந்தாளிகளும் பேசிக் கொண்டார்கள்.

பல்லக்கில் இருந்த பெண்மணியிடம் ஓர் ஓலையைக் கொடுக்க வேண்டும் என்று வீர வைஷ்ணவ ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனிடம் கேட்டுக் கொண்டான். வந்தியத்தேவன் அதைக் கோபத்துடன் மறுத்து விட்டான்.

அன்றிரவு கடம்பூர் மாளிகையில் குரவைக் கூத்து, வேலனாட்டம் முதலிய ஆடல்பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவற்றுக்குப் பின்னர், நள்ளிரவில் ஓர் அந்தரங்கக் கூட்டமும் நடந்தது. சோழ சாம்ராஜ்யத்தின் முக்கிய அதிகாரிகள் பலரும் பிரபல தலைவர்களும் அதில் கலந்து கொண்டனர். வந்தியத்தேவன் மேல் மாடியில் மறைவான இடத்திலிருந்து அக்கூட்டத்தின் நடவடிக்கைகளைக் கவனித்தான். ஒரு பெரிய அரசியல் சதி அங்கு நடைபெறுவதை அறிந்தான். சுந்தர சோழ மகாராஜாவின் உடல்நிலை மோசமாகியிருந்தபடியால் அவருக்கு அடுத்தபடி பட்டத்துக்கு உரியவர் யார் என்பதைப் பற்றி அந்தக் கூட்டத்தில் பேச்சு நடந்தது.

சுந்தர சோழரின் மூத்த குமாரர் ஆதித்த கரிகாலர்தான் நியாயமாகப் பட்டத்துக்கு உரியவர் என்று வந்தியத் தேவன் கருதியிருந்தான்.

ஆனால் அன்றிரவு அங்கே கூடியிருந்தவர்கள் காலஞ்சென்ற கண்டராதித்தரின் புதல்வரான இளவரசர் மதுராந்தக தேவருக்கே சிம்மாசனம் உரியது என்று முடிவு செய்தார்கள்.

சிவபக்த சிகாமணியான கண்டராதித்தர், சுந்தரசோழரின் பெரிய தகப்பனார். கண்டராதித்தரின் புதல்வர் மதுராந்தக தேவரும் இளமையிலேயே இந்த இக உலக வாழ்வை வெறுத்துத் துறவு மார்க்கத்தில் மனதைச் செலுத்தியிருந்தார் என்று நாட்டில் வதந்தி பரவியிருந்தது.

பழுவேட்டரையர் தம்முடனே மூடு பல்லக்கிலே அழைத்து வந்தது அவருடைய இளம் மனைவியல்லவென்றும், இளவரசர் மதுராந்தக தேவர்தான் என்றும், அச் சதிக் கூட்டத்தின் முடிவில் வெளியாயிற்று. கடம்பூர் மாளிகையில் இரவு மூன்றாம் ஜாமத்தில் "வாழ்க மதுராந்தக உத்தம சோழர்!" என்னும் வீர முழக்கம் எழுந்தது.

இதையெல்லாம் கடம்பூர் மாளிகையின் வெளிச் சுற்று மதில்மேல் ஒளிந்திருந்து ஆழ்வார்க்கடியானும் கவனித்துக் கொண்டிருந்தான்.

ஒன்பதாம் அத்தியாயம்

வழிநடைப் பேச்சு

பாலாற்றுக்கு வடக்கேயுள்ள வறண்ட பிரதேசங்களிலேயே வந்தியத்தேவன் அதுகாறும் தன் வாழ்நாளைக் கழித்தவன் ஆகையால் ஆற்று வெள்ளத்தில் நீந்துவதற்கு அவனுக்குத் தெரியாமலிருந்தது. ஒரு சமயம் வடபெண்ணைக் கரையில் எல்லைக் காவல் புரிந்துவந்தபோது, குளிப்பதற்காக ஆற்றில் இறங்கினான். ஒரு பெரிய நீர்ச் சுழலில் அகப்பட்டுக் கொண்டான். அந்தப் பொல்லாத விஷமச் சுழல் அவனைச் சுற்றிச் சுற்றி வரச் செய்து வதைத்தது. அதே சமயத்தில் கீழேயும் இழுத்துக் கொண்டிருந்தது. சீக்கிரத்தில் வந்தியத்தேவனுடைய பலத்தையெல்லாம் அந்தச் சுழல் உறிஞ்சிவிட்டது. "இனிப் பிழைக்க முடியாது, சுழலில் மூழ்கிச் சாக வேண்டியதுதான்!'' என்று வந்தியத்தேவன் நிராசை அடைந்த சமயத்தில் தெய்வாதீனமாக நதிச் சுழலிலிருந்து வெளிப்பட்டான். வெள்ளம் அவனை அடித்துக் கொண்டு போய்க் கரையில் ஒதுக்கிக் காப்பாற்றியது!

அன்றிரவு வந்தியத்தேவன் மீண்டும் சென்று படுத்தபோது அவனுக்கு நதியின் சுழலில் அகப்பட்டுத் திண்டாடியது போன்ற அதே உணர்ச்சி ஏற்பட்டது. ஒரு பெரிய இராஜாங்கச் சதிச் சுழலில் தன்னுடைய விருப்பமில்லாமலே விழுந்து அகப்பட்டுக் கொண்டதாகத் தோன்றியது. அந்த நதிச் சுழலிலிருந்து தப்பியது போல் இந்தச் சதிச் சுழலிலிருந்தும் தப்ப முடியுமா? கடவுள் தன்னை மறுமுறையும் காப்பாற்றுவாரா?

அன்று அவன் கடம்பூர் மாளிகையில் நடந்த நள்ளிரவுக் கூட்டத்திலிருந்து அறிந்து கொண்ட விஷயங்கள் அவனைத் திக்குமுக்காடச் செய்து விட்டன. சோழ மகா சாம்ராஜ்யத்துக்கு வெளிப்பகைவர்களால் ஏற்பட்டிருந்த தொல்லைகள் நீங்கிச் சில வருஷங்கள்தான் ஆகியிருந்தன. இளவரசர் ஆதித்த கரிகாலர் மகாவீரர், போர்க் கலையில் நிபுணர்; ராஜதந்திரத்தில் சாணக்கியர். தம்முடைய அறிவாற்றல்களையும் சோழ நாட்டுப் படைகளின் போர்த் திறனையும் பூரணமாகப் பயன்படுத்தி இரட்டை மண்டலத்துக் கிருஷ்ணமன்னனின் ஆதிக்கத்தைத் தொண்டை மண்டலத்திலிருந்து அடியோடு தொலைத்தார். வெளிப்பகை ஒருவாறு ஒழிந்தது. இந்த நிலைமையில் உட்கலகமும் சதியும் தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றன. வெளிப்பகையைக் காட்டிலும் அபாயகரமான இந்த உட்பகையின் விளைவு என்ன ஆகும்?

சோழ நாட்டின் புகழ்பெற்ற வீரர்களும் அமைச்சர்களும் தலைவர்களும் அதிகாரிகளும் அல்லவா இந்தப் பயங்கரமான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்? பழுவேட்டரையரும் அவருடைய சகோதரரும் எப்பேர்ப்பட்டவர்கள்? அவர்களுடைய சக்தி என்ன? செல்வாக்கு என்ன? இங்கே இன்று கூடியிருந்த மற்றவர்கள்தான் எவ்வளவு பெயரும் புகழும் செல்வாக்கும் பராக்கிரமமும் வாய்ந்தவர்கள்? இத்தகைய கூட்டம் இதுதான் முதற் கூட்டமாயிருக்குமா? பழுவேட்டரையர் மூடுபல்லக்கில் மதுராந்தகரை வைத்து இவ்விதம் இன்னும் எத்தனை இடங்களுக்குக் கொண்டு போயிருக்கிறாரோ? அடாடா! முதிய வயதில் ஓர் இளம்பெண்ணை மணந்து கொண்டது இவருக்கு இந்தச் சதிகார முயற்சிக்கு எவ்வளவு சாதகமாகப் போய்விட்டது?

சோழ சிம்மாசனத்துக்கு உரியவர் இளவரசர் ஆதித்த கரிகாலர்தான் என்பது பற்றி இன்றுவரை வந்தியத் தேவனுடைய மனதில் எவ்விதச் சந்தேகமும் உதிக்கவில்லை. போட்டி ஒன்று ஏற்படக் கூடும் என்று அவன் கனவிலும் கருதவில்லை. கண்டராதித்தனுடைய புதல்வர் மதுராந்தகரைப் பற்றி அவன் கேள்விப் பட்டதுண்டு. தந்தையைப் போலவே புதல்வரும் சிவபக்திச் செல்வர் என்று அறிந்ததுண்டு. ஆனால் அவர் இராஜ்யத்

துக்கு உரிமையுள்ளவர் என்றோ, அதற்காகப் போட்டியிடக் கூடியவர் என்றோ கேள்விப்பட்டதில்லை. அந்த எண்ணமே அவனுடைய மனத்தில் அது வரையில் தோன்றியதில்லை.

ஆனால் நியாயாநியாயங்கள் எப்படி? பட்டத்துக்கு உரியவர் உண்மையிலே யார்? ஆதித்த கரிகாலரா? மதுராந்தகரா? யோசிக்க யோசிக்க, இருதரப்பிலும் நியாயம் இருப்பதாகவே தோன்றியது. போட்டி என்று உண்மையில் ஏற்பட்டால், இவர்களில் யார் வெற்றி பெறுவார்கள்? தன்னுடைய கடமை என்ன? ஆஹா! என்னென்னவோ மனக்கோட்டை கட்டிக் கொண்டு காஞ்சியிலிருந்து இந்த யாத்திரை கிளம்பினோமே? பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலருக்கு உகந்தபடி நடந்து கொண்டு சோழப் பேரரசில் பெரிய பதவிகளை அடையலாம் என்று ஆசைப்பட்டோமே! காலாகாலத்தில் வாணர் குலத்தின் பூர்வீக ராஜ்யத்தைக்கூடத் திரும்பப் பெறலாம் என்று நினைத்தோமே? இதற்கெல்லாம் சாதனமாக எந்தப் புளியங்கொம்பைப் பிடித்தோமோ அதுவே முறிந்துவிடும் போலிருக்கிறதே?... இத்தகைய சிந்தனைகளினால் வந்தியத்தேவன் இரண்டாம் முறை வந்து படுத்த பிறகு வெகுநேரம் தூக்கம் பிடிக்காமல் திண்டாடினான். கடைசியாக, இரவு நாலாம் ஜாமத்தில் கிழக்கு வெளுக்கும் நேரத்தில் அவனுக்கு ஒருவாறு தூக்கம் வந்தது.

மறுநாள் காலையில் உதய சூரியனுடைய செங்கிரணங்கள் சுளீர் என்று அவன்பேரில் பட்ட போதுகூட வந்தியத்தேவன் எழுந்திருக்கவில்லை. கந்தமாறன் வந்து தட்டி எழுப்பியபோதுதான் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்தான்.

"இராத்திரி நன்றாய்த் தூக்கம் வந்ததா?" என்று கந்தமாறன் விருந்தினரை உபசரிக்கும் முறைப்படி கேட்டான். பிறகு அவனாகவே, "மற்ற விருந்தினரெல்லாம் தூங்கச் சென்ற பிறகு நான் இங்கு வந்து பார்த்தேன். நீ நன்றாய்க் கும்பகர்ண சேவை செய்து கொண்டிருந்தாய்!" என்று சொன்னான்.

வந்தியத்தேவன் மனத்தில் பொங்கி எழுந்த நினைவுகளையெல்லாம் அடக்கிக் கொண்டு, "குரவைக் கூத்துப் பார்த்து விட்டு இங்கு வந்து படுத்ததுதான் தெரியும். இப்போதுதான் எழுந்திருக்கிறேன். அடாடா! இவ்வளவு நேரம் ஆகி விட்டதே! உதித்து ஒரு ஜாமம் இருக்கும் போலிருக்கிறதே! உடனே நான் கிளம்ப வேண்டும். கந்தமாறா! குதிரையை ஆயத்தம் பண்ணும்படி உன் வேலைக்காரர்களுக்குக் கட்டளையிடு!" என்றான்.

"அழகாயிருக்கிறது! அதற்குள்ளே நீ புறப்படுவதாவது? என்ன அவசரம்? பத்து நாளாவது இங்கே தங்கிவிட்டுத்தான் போக வேண்டும்" என்றான் கந்தமாறன்.

"இல்லை, அப்பனே! தஞ்சாவூரில் என் மாமனுக்கு உடம்பு செவ்வையாக இல்லை. பிழைப்பதே துர்லபம் என்று செய்தி வந்தது. ஆகையால் சீக்கிரத்தில் அவரைப் போய்ப் பார்க்க வேண்டும், உடனே புறப்பட வேண்டும்" என்று ஒரே போடாகப் போட்டான் வல்லவரையன்.

"அப்படியானால், திரும்பி வரும் போதாவது இங்கே சில நாள் கட்டாயம் தாமதிக்க வேண்டும்."

"அதற்கென்ன, அப்போது பார்த்துக் கொள்ளலாம், இப்போது நான் புறப்படுவதற்கு விடைகொடு!"

"அவ்வளவு அவசரப்படாதே! காலை உணவு அருந்திவிட்டுப் புறப்படலாம். நானும் உன்னுடன் கொள்ளிட நதி வரையில் வருகிறேன்."

"அது எப்படி முடியும்? யார், யாரோ, பெரிய பெரிய விருந்தாளிகள் உன் வீட்டுக்கு வந்திருக்கிறார்களே, அவர்களை விட்டுவிட்டு..."

"உன்னைவிடப் பெரிய விருந்தாளி எனக்கு யாரும் இல்லை!...." என்று கூறிய கந்தமாறவேள் சட்டென்று நிறுத்திக் கொண்டான். "வந்தவர்கள் பெரிய விருந்தாளிகள் தான். ஆனால் அவர்களைக் கவனித்துக் கொள்ள என் தந்தை இருக்கிறார். அரண்மனை அதிகாரிகளும் இருக்கிறார்கள். உன்னோடு நேற்று ராத்திரிகூட நான் அதிக நேரம் பேசவில்லை. வழி நடையிலாவது சிறிது நேரம் உன்னோடு சல்லாபம் செய்தால்தான் என் மனம் நிம்மதி அடையும். அவசியம் கொள்ளி

டக்கரை வரையில் வந்தே தீருவேன்!'' என்றான்.

"எனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை. உன் இஷ்டம், உன் சௌகரியம்" என்றான் வந்தியத் தேவன்.

ஒரு நாழிகை நேரத்துக்குப் பிறகு இரு நண்பர்களும் இரு குதிரைகளில் ஏறிச் சம்புவரையர் மாளிகையிலிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். குதிரைகள் மெதுவாகவே சென்றன. பிரயாணம் மிகவும் இன்பகரமாயிருந்தது. மேலக்காற்று சாலைப் புழுதியை வாரி அடிக்கடி அவர்கள்மேல் இறைத்ததைக் கூட அந்த நண்பர்கள் பொருட்படுத்தவில்லை. பழைய ஞாபகங்களைப் பற்றிய பேச்சில் அவ்வளவாக மனத்தைப் பறிகொடுத்திருந்தார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் வந்தியத்தேவன் கூறினான்:- "கந்தமாறா! உன் வீட்டில் ஒரே ஒரு இரவுதான் தங்கினாலும் அது எனக்கு எவ்வளவோ பயனுள்ளதாயிருந்தது. ஆனால் ஒரே ஒரு ஏமாற்றம். உன் சகோதரியைப் பற்றி வடபெண்ணை நதிக்கரையில் என்னவெல்லாமோ வர்ணனை செய்து கொண்டிருந்தாய்! அவளை நன்றாய்ப் பார்க்கக் கூட முடியவில்லை. உன் அன்னைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு அவள் எட்டிப் பார்த்தபோது அவள் முகத்தில் எட்டில் ஒரு பங்குதான் தெரிந்தது! நாணமும் மடமும் பெண்களுக்கு இருக்க வேண்டியதைவிட உன் தங்கையிடம் சற்று அதிகமாகவேயிருக்கிறது."

கந்தமாறனுடைய வாயும் உதடுகளும் ஏதோ சொல்வதற்குத் துடித்தன. ஆனால் வார்த்தை ஒன்றும் உருவாகி வரவில்லை.

"ஆயினும் பாதகமில்லை. நீதான் நான் திரும்பி வரும்போது சில நாள் உன் வீட்டில் தங்கவேண்டும் என்று சொல்கிறாயே? அப்போது பார்த்துப் பேசிக் கொண்டால் போகிறது. அதற்குள் உன் தங்கையின் கூச்சமும் கொஞ்சம் நீங்கி விடலாம் அல்லவா? கந்தமாறா! உன் சகோதரியின் பெயர் என்னவென்று சொன்னாய்?"

"மணிமேகலை!"

"அடடா! என்ன இனிமையான



பெயர்! பெயரைப் போலவே அழகும் குணமும் இருந்து விட்டால்..."

கந்தமாறன் குறுக்கிட்டு, "நண்பா! உன்னை ஒன்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். என் தங்கையை நீ மறந்து விடு. அவளைப் பற்றி நான் சொன்னதையெல்லாம் மறந்துவிடு. அவள் பேச்சையே எடுக்காதே!" என்றான்.

"இது என்ன, கந்தமாறா! ஒரே தலைகீழ் மாறுதலாயிருக்கிறதே! நேற்று இரவு கூட உன் வீட்டுக்கு நான் மருமகனாக வரப் போவதைப் பற்றி ஜாடையாகச் சொன்னாயே!"

"அவ்விதம் நான் சொன்னது உண்மைதான். ஆனால் பிறகு வேறு நிலைமை ஏற்பட்டுவிட்டது. என் பெற்றோர்கள் வேறு இடத்தில் என் சகோதரியைக் கலியாணம் செய்து கொடுக்க முடிவு செய்து விட்டார்கள். மணிமேகலையும் அதற்குச் சம்மதித்து விட்டாள்!"

வந்தியத்தேவன் மனத்திற்குள் "மணிமேகலை வாழ்க!" என்று சொல்லிக் கொண்டான். மணிமேகலையை யாருக்குக் கொடுக்க நிச்சயித்திருப்பார்கள் என்று ஊகிப்பதிலும் அவனுக்குக் கஷ்டம் ஏற்படவில்லை. மூடு பல்லக்கிலிருந்து வெளிப்பட்ட இளவரசர் மதுராந்தகருக்குத்தான் நிச்சயித்திருப்பார்கள். மதுராந்தகருடைய கட்சிக்குப் பலம் தேட இப்படியெல்லாம் உறவுகளையும் ஏற்படுத்துகிறார்களாக்கும். படுவேட்டரையர் பொல்லாத கெட்டிக்காரர்தான்!

"ஆஹா! நேற்று ராத்திரி வந்திருந்த பணக்கார விருந்தாளிகளில் ஒருவரை மாப்பிள்ளையாக்கத் திட்டம் செய்தீர்களாக்கும்! கந்தமாறா! இதில் எனக்கு

வியப்பும் இல்லை; ஏமாற்றமும் இல்லை. ஒரு மாதிரி நான் எதிர்பார்த்ததுதான்...."

"எதிர்பார்த்தாயா அது எப்படி?"

"என்னைப்போல் ஏழை அநாதைக்கு யார் பெண்ணைக் கொடுப்பார்கள்? ஊரும் வீடும் இல்லாதவனை எந்தப் பெண் மணந்து கொள்ள இணங்குவாள்? எப்போதோ என் குலத்தைச் சேர்ந்த முன்னோர்கள் அரசு செலுத்தினார்கள் என்றால், அது இப்போது என்னத்துக்கு ஆகும்."

"நண்பா! போதும், நிறுத்து. என்னைப் பற்றியும், என் குடும்பத்தைப் பற்றியும் அவ்வளவு கேவலப் படுத்தாதே! நீ சொல்வது ஒன்றும் காரணமில்லை. வேறு மிக முக்கியமான காரணம் இருக்கிறது. அதை அறிந்தால் நீயே ஒப்புக் கொள்வாய். ஆனால் அதை நான் இப்போது வெளிப்படுத்துவதற்கில்லை. சமயம் வரும்போது நீயே தெரிந்து கொள்வாய்!"

"கந்தமாறா! இது என்ன ஒரே மர்மமாகவே இன்றைக்கு நீ பேசிக் கொண்டு வருகிறாயே?"

"அதற்காக என்னை மன்னித்துவிடு. உன்னிடம்கூட நான் மனம் விட்டுப் பேச முடியாதபடி அப்படி ஒரு பெரிய காரியந்தான். எது எப்படியானாலும் நம்முடைய சிநேகத்துக்கு எவ்வித பங்கமும் வராது என்பதை நம்பு. விஷயம் வெளியாக வேண்டிய சமயம் வரும்போது, ஓட்டமாக ஓடி வந்து உன்னிடந்தான் முதலில் சொல்வேன். அதுவரையில் என்னிடம் நம்பிக்கை வைத்திரு. உன்னை நான் ஒருநாளும் கைவிட மாட்டேன். என்னை நம்பு!..."

"இந்த வாக்குறுதிக்காக ரொம்ப வந்தனம். ஆனால் என்னைக் கைவிடும்படியான நிலைமை என்ன என்பதுதான் தெரியவில்லை! அப்படி நான் இன்னொருவரை நம்பிப் பிழைக்கிறவனும் அல்ல, கந்தமாறா! என்னுடைய உடைவாளையும் கைவேலையுமே நான் நம்பியிருப்பவன்!"

"அந்த உடைவாளையும் வேலையும் உபயோகிக்க வேண்டிய சந்தர்ப்பம் சீக்கிரத்தில் வரலாம். அப்போது நாம் இருவரும் ஒரே கட்சியில் நின்று தோளோடு தோள் சேர்ந்து போரிடுவோம். அதனால் உன்னுடைய நோக்கமும் கைகூடும்..."

"இது என்ன? ஏதாவது யுத்தம் சீக்கிரம் வரும் என்று எதிர்பார்க்கிறாயா? அல்லது ஈழ நாட்டில் நடக்கும் யுத்தத்துக்குப் போகும் உத்தேசம் உனக்கு உண்டா?"

"ஈழத்துக்கா? ஈழத்தில் நடக்கும் அழகான யுத்தத்தைப் பற்றிக் கேட்டால் நீ ஆச்சரியப்பட்டுப் போவாய்! ஈழத்தில் உள்ள நம் வீரர்களுக்காகச் சோழ நாட்டிலிருந்து அரிசியும் மற்ற உணவுப் பொருள்களும் போக வேண்டுமாம்! வெட்கக்கேடு! நான் சொல்லுவது வேறு விஷயம். கொஞ்சம் பொறுமையாயிரு. சமயம் வரும்போது சொல்லுகிறேன். தயவு செய்து இப்போது என் வாயைப் பிடுங்காதே!"

"சரி, சரி! உனக்கு விருப்பம் இல்லை என்றால் ஒன்றும் சொல்ல வேண்டாம். வாயைக்கூடத் திறக்க வேண்டாம். அதோ கொள்ளிடமும் தெரிகிறது!" என்றான் வந்தியத்தேவன்.

உண்மையில் சற்றுத் தூரத்தில் கொள்ளிடப் பெரு நதியின் வெள்ளம் தெரிந்தது. சில நிமிஷ நேரத்தில் நண்பர்கள் நதிக்கரையை அடைந்தார்கள்.

ஆடிப் புதுப் பிரவாகம் அந்த மாநதியில் கரை புரண்டு சென்றது. மறு கரை வெகு தூரத்தில் இருப்பதாகத் தோன்றியது. மறுகரையிலேயுள்ள மரங்கள் சிறிய செடிகளைப் போலிருந்தன. செக்கச் சிவந்த பெரு நீர் வெள்ளம் சுழிகளும் சுழல்களுமாக, வட்ட வடிவக் கோலங்கள் போட்டுக் கொண்டு, கொம்மாளம் அடித்துக் கொண்டு, கரையை உடைக்கப் பிரயத்தனம் செய்து கொண்டு, 'ஹோ' என்று இரைந்து கொண்டு, கீழ்க் கடலை நோக்கி அடித்து மோதிக் கொண்டு விரைந்து சென்ற காட்சியை வந்தியத்தேவன் பார்த்துப் பிரமித்து நின்றான்.

தோணித்துறையில் ஓடம் ஒன்று நின்றது. ஓடந்தள்ளுவோர் இருவர்

கையில் நீண்ட கோல்களுடன் ஆயத்த மாயிருந்தார்கள். படகில் ஒரு மனிதர் ஏற்கனவே ஏறியிருந்தார். அவரைப் பார்த்தால் பெரிய சிவபக்த சிகாமணி என்று தோன்றியது.

கரையில் வந்து கொண்டிருந்தவர் களைப் பார்த்து, "சாமி படகில் வரப் போகிறீர்களா?" என்று படகோட்டிகளில் ஒருவன் கேட்டான்.

"ஆம்; இவர் வரப்போகிறார். கொஞ் சம் படகை நிறுத்து!" என்றான் கந்த மாறன்!

இரு நண்பர்களும், குதிரை மீதிருந்து



கீழே குதித்தார்கள்.

"யோசனை இல்லாமல் வந்து விட் டேனே? இந்தக் குதிரையை என்ன செய்வது? படகில் ஏற்ற முடியுமா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"தேவையில்லை. நம்மைத் தொடர்ந்து இதோ இரண்டு ஆட்கள் வந்திருக்கிறார் கள். ஒருவன் உன் குதிரையை இங்கிருந்து கடம்பூருக்கு இட்டு வருவான். இன் னொருவன் உன்னுடன் படகில் ஏறி வந்து அக்கரையில் உனக்கு வேறு குதிரை சம்பாதித்துக் கொடுப்பான்!" என்றான் கந்தமாறன்.

"ஆஹா! எவ்வளவு முன்யோசனை? நீ அல்லவா உண்மை நண்பன்!" என்றான் வந்தியத்தேவன்.

"பாலாற்றையும் பெண்ணையாற் றையும் போலத்தான் கொள்ளிடத்தைப் பற்றி நீ நினைத்திருப்பாய். இதில் குதி ரையைக் கொண்டு போக முடியாது என்று நீ எண்ணியிருக்கமாட்டாய்!"

"ஆமாம்; அவ்விதம் உங்கள் சோழ நாட்டு நதியைப்பற்றி அலட்சியமாய் நினைத்ததற்காக மன்னித்துவிடு! அப் பப்பா இது என்ன ஆறு? இது என்ன வெள்ளம்? சமுத்திரம் போலவல்லவா பொங்கி வருகிறது?"

இரு நண்பர்களும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு விடை பெற்றுக் கொண்டார்கள்.

வந்தியத்தேவன் நதிக்கரையோரமாகச் சென்று படகில் ஏறினான்.

கந்தமாறனுடன் வந்த ஆட்களில் ஒருவனும் ஏறிக் கொண்டான்.

படகு புறப்படுவதற்குச் சித்தமா யிருந்தது. ஓடக்காரர்கள் கோல்போட ஆரம்பித்தார்கள்.

திடீரென்று கொஞ்ச தூரத்திலிருந்து, "நிறுத்து! நிறுத்து! படகை நிறுத்து!" என்று ஒரு குரல் கேட்டது.

ஓடக்காரர்கள் கோல் போடாமல் கொஞ்சம் தயங்கி நின்றார்கள்.

கூவிக் கொண்டு ஓடிவந்தவன் அதி விரைவில் கரைக்கருகில் வந்து சேர்ந்தான். முதற் பார்வையிலேயே அவன் யார் என்பது வந்தியத்தேவனுக்குத் தெரிந்து போயிற்று. அவன் ஆழ்வார்க்கடியான் நம்பிதான்.

வருகிறவர் வைஷ்ணவர் என்பதை அறிந்ததும் படகிலிருந்த சைவர், "விடு! படகை விடு! அந்தப் பாஷாண்டியுடன் நான் படகில் வரமாட்டேன். அவன் அடுத்த படகில் வரட்டும்!" என்றார்.

ஆனால் வந்தியத்தேவன் ஓடக்காரர் களைப் பார்த்து, "கொஞ்சம் பொறுங்கள். அவரும் வரட்டும்! படகில் நிறைய இடம் இருக்கிறதே! ஏற்றிக் கொண்டு போக லாம்!" என்றான்.

ஆழ்வார்க்கடியானிடமிருந்து நேற்றிரவு நிகழ்ச்சிகளைப் பற்றிப் பல விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வந்தியத்தேவன் விரும்பினான்.

குடந்தை சோதிடர்

குடகு நாட்டில் பிறந்து வளர்ந்த பொன்னி நதி கன்னிப் பருவம் கடந்ததும் தன் மணாளனாகிய சமுத்திர ராஜனிடம் சென்றடைய விரும்பினாள். காடும் மேடும் கடந்து பாறைகளையும் பள்ளங்களையும் தாண்டிக் கொண்டு விரைந்து சென்றாள். சமுத்திர ராஜனை நெருங்க நெருங்க, நாயகனைக் காணப் போகிறோம் என்ற குதூகலத்தினால் அவள் உள்ளம் விம்மி உடல் பூரித்தது. இன்னும் சற்றுத் தூரம் சென்றாள், காதலனை அணைத்துக் கொள்ளக் கரங்கள் இரண்டு உண்டாயின. இரு கரங்களை விரித்தவாறு தாவிப்பாய்ந்து சென்றாள். ஆனால் உள்ளத்தில் பொங்கிய ஆர்வ மிகுதிக்கு இருகரங்கள் போதுமென்று தோன்றவில்லை; அவளுடைய ஆசைக்கரங்கள் பத்து, இருபது, நூறு என்று வளர்ந்தன. அவ்வளவு கரங்களையும் ஆவலுடன் நீட்டிக் கொண்டு சமுத்திர ராஜனை அணுகினாள். இவ்விதம் ஆசைக் கணவனை அடைவதற்குச் சென்ற மணப் பெண்ணுக்குச் சோழ நாட்டுச் செவிலித் தாய்மார் செய்த அலங்காரங்கள்தான் என்ன? அடடா! எத்தனை அழகிய பச்சைப் புடைவைகளை உடுத்தினார்கள்? எப்படியெல்லாம் வண்ண



மலர்களைச் சூட்டினார்கள்? எவ்விதமெல்லாம் பரிமள கந்தங்களைத் தூவினார்கள்? ஆஹா! இரு கரையிலும் வளர்ந்திருந்த புன்னை மரங்களும் கடம்ப மரங்களும் முத்து மலர்களையும் ரத்தினப் பூக்களையும் வாரிச் சொரிந்த அருமையை எவ்விதம் வர்ணிப்பது? தேவர்கள் பொழியும் பூமாரியும் இதற்கு இணையாகுமா?

பொன்னி நதியே! உன்னைப் பார்த்துக் களிப்படையாத கன்னிப் பெண் யார்தான் இருக்க முடியும்! உன் மணக் கோல ஆடை அலங்காரங்களைக் கண்டு உள்ளம் பொங்காத மங்கை யார் இருக்க முடியும்?

கலியாணப் பெண்ணைச் சுற்றி ஊரிலுள்ள கன்னிப் பெண்கள் எல்லோரும் சூழ்ந்து கொள்வதுபோல் உன்னை நாடிப் பெண்கள் வந்து கூடுவதும் இயற்கையேயல்லவா!

பொன்னி தன் மணாளனைத் தழுவிக் கொள்ள ஆசையுடன் நீட்டும் பொற்கரங்களில்



ஒன்றுக்குத்தான் அரிசிலாறு என்று பெயர்! காவேரிக்குத் தென் புறத்தில் மிக நெருக்கத்தில் அரிசிலாறு என்னும் அழகிய நதி அமைந்திருக்கிறது. அப்படி ஒரு நதி இருப்பது சற்றுத் தூரத்தில் இருந்து வருகிறவர்களுக்குச் சொல்லித் தான் தெரிய வேண்டும். இருபுறமும் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் இனிய பசு மரங்கள் அப்படி அந் நதியை மறைத்து விடுகின்றன. பிறந்ததுமுதல் அந்தப் புரத்தை விட்டு வெளியேறி அறியாத அரசகுலக் கன்னியென்றே அரிசிலாற்றைச் சொல்லலாம். அந்தக் கன்னி நதியின் அழகுக்கு இந்த உலகில் உவமையே கிடையாது.

நல்லது; அந்தப்புரம் என்னும் எண்ணத்தை மறந்துவிட்டு நேயர்கள் நம்முடன் அரிசிலாற்றை நெருங்கி வருவார்களாக. சோலையாக நெருங்கி வளர்ந்திருந்த மரங்களுக்கிடையே புகுந்து வருவார்களாக! அடடா இது என்ன அருமையான காட்சி? அழகுக்கு அழகு செய்வது போலும் அமுதத்துக்கு இனிப்பு ஊட்டுவது போலும் அல்லவா இருக்கிறது?

சித்திர விசித்திரமாகச் செய்த அன்ன வடிவமான வண்ணப் படகில் வீற்றிருக்கும் இந்த வனிதாமணிகள் யார்? அவர்களில் நடு நாயகமாக, நட்சத்திரங்களுக்கிடையில் பூரண சந்திரனைப் போல் ஏழுலகங்களையும் ஆளப் பிறந்த ராணியைப்போல், காந்தியுடன் விளங்கும் இந்த நாரீமணி யார்? அவளுக்கு அருகில் கையில் வீணையுடன் வீற்றிருக்கும் சாந்த சுந்தரி யார்? இனிய குரல்களில் இசை பாடி நதி வெள்ளத்துடன் கீத வெள்ளமும் கலந்து பெருகச் செய்து கொண்டு வரும் இந்தக் கந்தர்வப் பெண்கள் யார்? அவர்களில் ஒருத்தி மீனலோசனி; இன்னொருத்தி நீலலோசனி; ஒருத்தி தாமரை முகத்தாள்; இன்னொருத்தி கமல இதழ் நயனத்தாள்; ஆஹா வீணையை மீட்டுகிறாளே, அவளுடைய காந்தளை ஒத்த விரல்கள் வீணைத் தந்திகளில் அங்குமிங்கும் சஞ்சரிக்கும் அழகைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்.

அவர்கள் இசைக்கும் கீதத்தின் இனிமையைத்தான் என்ன என்று சொல்லுவது? அதைக் கேட்பதற்காக நதியின் வெள்ளம் கூட அல்லவா தன் ஓசையை நிறுத்தியிருக்கிறது? நதிக்கரை மரங்களில் வாழும் கிளிகளும் குயில்களும் கூட வாய்திறவா மோனத்தில் ஆழ்ந்திருக்கின்றனவே! மனிதர்களாய்ப் பிறந்தவர்கள், கேட்கும் செவி படைத்த பாக்கிய சாலிகள்– அந்த அமுத கானத்தைக் கேட்டுப் பரவசம் அடைவதில் வியப்பு என்ன?

படகில் வரும் அப்பெண்கள் என்ன பாடுகிறார்கள் கேட்கலாம்:–

மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப,
மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்

கருங்கயற்கண் விழித்து ஒல்கி
நடந்தாய் வாழி! காவேரி!

கருங்கயற்கண் விழித்து ஒல்கி
நடந்த எல்லாம் நின்கணவன்

திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி

பூவர் சோலை மயிலாடப்
புரிந்து குயில்கள் இசைபாடக்

காமர் மாலை அருகசைய
நடந்தாய் வாழி காவேரி!

காமர் மாலை அருகசைய
நடந்த வெல்லாம், நின் கணவன்

நாம வேலின் திறங்கண்டே
அறிந்தேன் வாழி! காவேரி!

இந்த அமுதத் தமிழ்ப்பாடல்களை எங்கேயோ கேட்டிருக்கிறோமல்லவா? ஆம், சிலப்பதிகாரத்தில் உள்ள வரிப் பாடல்கள் இவை. எனினும், இந்தப் பெண்கள் பாடும்போது முன் எப்போதுமில்லாத வனப்பும் கவர்ச்சியும் பெற்று விளங்குகின்றன. இவர்கள் பொன்னி நதியின் அருமைத் தோழிகள் போலும்! அதனாலேதான் இவ்வளவு பரவசமாக உணர்ச்சி ததும்பப் பாடுகிறார்கள். அடடா! பாடலும் பண்ணும் பாவமும் எப்படிக் கலந்து இழைந்து குழைந்து

இவர்களுடைய குரலிலிருந்து அமுத வெள்ளமாகப் பொழிகின்றன? பாட்டாவது, பண்ணாவது, கானமாவது, இசையாவது! அதெல்லாம் ஒன்றுமில்லை. இது ஏதோ மாயக் கலை! பாடுகிறவர்கள், கேட்பவர்கள் எல்லாரையும் பித்துப் பிடிக்கச் செய்யும் மந்திர வித்தை!



படகு மிதந்து கொண்டே வந்து, மரங்கள் சிறிது இடைவெளி தந்த ஓடத் துறையில் ஒதுங்கி நிற்கிறது. இரண்டு பெண்கள் இறங்குகிறார்கள். அவர்களில் ஒருத்தி ஏழுலகத்துக்கும் ராணி எனத் தகும் கம்பீரத் தோற்றமுடைய பெண் மணி. இன்னொருத்தி வீணைத் தந்திகளில் விரல்களை ஓட்டி இன்னிசை எழுப்பிய நங்கை. இருவரும் அழகிகள் என்றாலும் ஒருவருடைய அழகுக்கும் இன்னொருவருடைய அழகுக்கும் மிக்க வேற்றுமை இருந்தது. ஒருத்தி செந்தாமரை மலரின் கம்பீர சௌந்தரியம் உடையவள். இன்னொருத்தி குமுத மலரின் இனிய அழகை உடையவள். ஒருத்தி பூரண சந்திரன்; இன்னொருத்தி காலைப்பிறை. ஒருத்தி ஆடும் மயில்; இன்னொருத்தி பாடும் குயில். ஒருத்தி இந்திராணி; இன்னொருத்தி மன்மதனின் காதலி. ஒருத்தி வேகவாஹினியான கங்காநதி; இன்னொருத்தி குழைந்து நெளிந்து செல்லும் காவேரி.

வாசகர்களை மேலும் சந்தேக ஆராய்ச்சி நிலையில் விட்டு வைக்காமல் இவர்கள் இருவரும் யார் என்று சொல்லி விடுகிறோம். கம்பீரத் தோற்றமுடைய மங்கைதான் சுந்தர சோழ மன்னரின் செல்வப் புதல்வி **குந்தவை**. சரித்திரத்தில் ராஜராஜன் என்று புகழ் பெற்ற அருள்மொழி வர்மனின் சகோதரி. அரசிளங்குமரி என்றும் இளைய பிராட்டி என்றும் மக்களால் போற்றப்பட்ட மாதரசி. சோழ ராஜ்யத்தின் மகோன்னதத்திற்கு அடிகோலிய தமிழ்ப் பெரும் செல்வி. ராஜராஜனுடைய புதல்வன் ராஜேந்திரனை எடுத்து வளர்த்து வீராதி வீரனாயும் மன்னாதி மன்னனாயும் ஆக்கிய தீரப் பெண்மணி.

இன்னொருத்தி, குந்தவைப் பிராட்டியுடன் இருக்கும் பாக்கியத்தை நாடி வந்த கொடும்பாளூர்ச் சிற்றரசர்குலப் பெண். பிற்காலத்தில், சரித்திரத்திலேயே இணையில்லாத பாக்கியவதியாகப் போகிறவள். இன்று அடக்கமும் இனிமையும் சாந்தமும் உருவெடுத்து விளங்குகிறவள்.

இந்த இரு மங்கைமார்களும் படகிலிருந்து கரையில் இறங்கினார்கள். குந்தவை மற்ற தோழிப் பெண்களைப் பார்த்து, "நீங்கள் இங்கேயே இருங்கள். ஒரு நாழிகை நேரத்தில் திரும்பி வந்து விடுகிறோம்!" என்றாள். அந்தத் தோழிப் பெண்கள் அனைவரும் தெய்வத் தமிழ்நாட்டில் பற்பல சிற்றரசர்களின் அரண்மனையில் பிறந்த அரச குமாரிகள். குந்தவை தேவிக்குத் தோழியாக இருப்பதைப் பெறற்கரும் பேறாகக் கருதிப் **பழையாறை** அரண்மனைக்கு வந்தவர்கள். இப்போது தங்களில் ஒருத்தியை மட்டும் அழைத்துக் கொண்டு குந்தவைப் பிராட்டி கரையில் இறங்கி 'போய்விட்டு விரைவில் வருகிறேன்' என்றதும் அவர்களுடைய கண்களில் ஏமாற்றமும் அசூயையும் தோன்றின.

கரையில் குதிரை பூட்டிய ரதம் ஒன்று சித்தமாயிருந்தது. "வானதி! ரதத்தில் ஏறிக்கொள்!" என்றாள் குந்தவை தன் தோழியைப் பார்த்து. வானதி ஏறியதும் தானும்

ஏறிக் கொண்டாள். ரதம் வேகமாய்ச் சென்றது.

"அக்கா! நாம் எங்கே போகிறோம்? எனக்குச் சொல்லலாமா?" என்று வானதி கேட்டாள்.

"சொல்லாமல் என்ன? குடந்தை சோதிடர் வீட்டுக்குப் போகிறோம்!" என்றாள் குந்தவை.

"சோதிடர் வீட்டுக்கு எதற்காகப் போகிறோம், அக்கா? என்னத்தைப் பற்றிக் கேட்பதற்காக?"

"வேறு எதற்கு? உன்னைப் பற்றிக் கேட்பதற்காகத்தான். சில மாத காலமாக நீ இப்படிப் பிரமை பிடித்தவள் போலும், உடல் மெலிந்தும் வருகிறாயா? உனக்கு எப்போது பிரமை நீங்கி உடம்பு தேறும் என்று கேட்பதற்காகத்தான்!"

"அக்கா! தங்களுக்கு ரொம்பப் புண்ணியமுண்டு. எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. என்னைப் பற்றிக் கேட்பதற்காகப் போக வேண்டாம். திரும்பி விடுவோம்!"

"இல்லையடி, அம்மா, இல்லை! உன்னைப் பற்றிக் கேட்பதற்காக இல்லை. என்னைப் பற்றிக் கேட்பதற்காகத்தான் போகிறேன்."

"தங்களைப் பற்றி என்ன கேட்டுத் தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்? ஜோசியரிடம் கேட்டு என்ன தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்?"

"எனக்குக் கலியாணம் ஆகுமா? அல்லது கடைசி வரையில் கன்னிப் பெண்ணாகவே இருந்து காலங் கழிப்பேனா என்று கேட்கப் போகிறேன்."

"அக்கா! இதற்கு ஜோசியரிடம் போய்க் கேட்பானேன்! தங்களுடைய மனதையே யல்லவா கேட்க வேண்டும்? தாங்கள் தலையை அசைக்க வேண்டியதுதான்! இமயமலை முதல் குமரி முனை வரையில் உள்ள ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் போட்டி போட்டுக் கொண்டு ஓடி வர மாட்டார்களா? ஏன், கடல் கடந்த தேசங்களிலேயிருந்தெல்லாம்கூட வருவார்களே! தங்களைக் கை பிடிக்கும் பேறு எந்த வீர ராஜகுமாரனுக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ? அதைத் தாங்கள் அல்லவா தீர்மானிக்க வேண்டும்!"

"வானதி! நீ சொல்வதெல்லாம் உண்மை என்று வைத்துக் கொண்டாலும் அதற்கு ஒரு தடை இருக்கிறது. எந்தத் தேசத்து அரச குமாரனையாவது மணம் புரிந்து கொண்டால் நான் அவனுடைய நாட்டுக்குப் போக வேண்டி வருமல்லவா? எனக்கு இந்தப் பொன்னி நதி பாயும் சோழ நாட்டிலிருந்து வேறொரு நாட்டுக்குப் போகப் பிடிக்கவேயில்லையடி! வேறு நாட்டுக்குப் போவதில்லை என்று நான் சபதம் எடுத்துக் கொண்டிருக்கிறேன்..."

"அது ஒரு தடையாகாது. தங்களை மணம் புரிந்து கொள்ளும் எந்த ராஜகுமாரனும் தங்கள் காலில் விழுந்து கிடக்கும் அடிமையாகவே இருப்பான். இங்கேயே இருக்க வேண்டும் என்றால் இருந்து விட்டுப் போகிறான்."

"ஆகா! எலியைப் பிடித்து மடியில் வைத்துக் கட்டிக் கொள்வதுபோல் வேறு தேசத்து ராஜகுமாரனை நம் ஊரிலேயே கொண்டு வைத்துக் கொள்ளவா சொல்கிறாய்? அதனால் என்னென்ன தொல்லைகள் எல்லாம் விளையும் தெரியுமா?"

"எப்படியும் பெண்ணாய்ப் பிறந்தவர்கள் ஒரு நாள் கலியாணம் செய்து கொண்டுதானே தீர வேண்டும்?"

"அப்படி ஒரு சாஸ்திரத்திலும் சொல்லியிருக்கவில்லையடி, வானதி! ஔவையாரைப் பார்! அவள் என்றும் கன்னி அழியாத கவிகவரியாகப் பல காலம் ஜீவித்திருக்கவில்லையா?"

"ஔவையார் இளம் பிராயத்திலேயே கடவுளின் வரத்தினால் கிழவியாகப் போனவள். தாங்கள் அதைப்போல் ஆகவில்லையே?"

"சரி, அப்படிக் கலியாணம் செய்து கொள்வது என்று புறப்பட்டால் அநாதையான சோழநாட்டு வீரன் ஒருவனையே நான் மணந்து கொள்வேன். அத்தகையவனுக்கு ராஜ்யம் இராது. என்னை அழைத்துக் கொண்டு வேறு ஒரு தேசத்துக்குப் போக வேண்டும் என்று சொல்ல மாட்டான். இங்கேயே சோழ நாட்டிலேயே இருந்து விடுவான்..."

"அக்கா! அப்படியானால் இந்தச் சோழ நாட்டை விட்டுப் போகமாட்டீர்களே?"

"ஒரு நாளும் போக மாட்டேன். சொர்க்க லோகத்துக்கு என்னை அரசியாக்குவதாகச் சொன்னாலும் போக மாட்டேன்."

"இன்றைக்குத்தான் என் மனம் நிம்மதி

அடைந்தது."

"அது என்னடி?"

"தங்கள் வேறு நாட்டுக்குப் போனால், நானும் உங்களோடு வந்தே தீர வேண்டும். தங்களை விட்டுப் பிரிந்திருக்க என்னால் முடியாது. அதே சமயத்தில் இந்தச் சோழ வளநாட்டைப் பிரிந்து போகவும் எனக்கு மனமில்லை."

"கலியாணம் ஆனால் நீ பிரிந்து போய்த்தானே தீர வேண்டும்?"

"நான் கலியாணமே செய்து கொள்ளப் போவதில்லை, அக்கா!"

"அடியே! எனக்கு செய்த உபதேசமெல்லாம் எங்கே போயிற்று?"

"தங்களைப் போலவா நான்?"

"அடி கள்ளி! எனக்கு எல்லாம் தெரியும். என் கண்ணில் மண்ணைத் தூவலாம் என்றா பார்க்கிறாய்? உனக்குச் சோழ நாட்டின் மீது அபிமானம் ஒன்றும் கிடையாது. நீ ஆசை வைத்திருக்கும் சோழநாடு, வாளும் வேலும் தாங்கி ஈழநாட்டுக்கு யுத்தம் செய்ய அல்லவா போயிருக்கிறது? உன் அந்தரங்கம் எனக்குத் தெரியாது என்றா நினைத்தாய்?"

"அக்கா! அக்கா! நான் அவ்வளவு மூடமதி உடையவளா? சூரியன் எங்கே? காலைப் பனித்துளி எங்கே? சூரியனுடைய நட்புக்குப் பனித்துளி ஆசைப்பட்டால் என்ன பயன்?"

"பனித்துளி சிறியதுதான்! சூரியன் பெரியது, பிரகாசமானது தான்! ஆனாலும் பனித்துளி அப்படிப்பட்ட சூரியனைச் சிறைப் படுத்தித் தனக்குள் வைத்திருக்கிறதோ, இல்லையோ?"

வானதி உற்சாகமும் ஆர்வமும் நிறைந்த குரலில், "அப்படியா சொல்கிறீர்கள்! பனித்துளிகூடச் சூரியனை அடையலாம் என்று சொல்கிறீர்களா?" என்றாள். பிறகு திடீரென்று மனச் சோர்வு வந்து விட்டது. "பனித்துளி ஆசைப்படுகிறது; சூரியனையும் சிறைப்பிடிக்கிறது. ஆனால் பலன் என்ன? சிறிது நேரத்துக்கெல்லாம் சரியான தண்டனை அடைகிறது. வெயிலில் உலர்ந்து, இருந்த இடம் தெரியாமல் மறைகிறது!"

"அது தவறு, வானதி! பனித்துளியின் ஆசையைக் கண்டு சூரியன் தன்னுடன் பனித்துளியை ஐக்கியப்படுத்திக் கொள்கிறான். தன் ஆசைக்குகந்த பனித்துளிப் பெண் பிற புருஷர் கண்ணில் படக்கூடாது என்று அவன் எண்ணம். இரவு வந்ததும் மறுபடியும் வெளியே விட்டு விடுகிறான். மறைந்த பனித்துளி மறுபடியும் வந்து உதிக்கிறது அல்லவா?"

"அக்கா! இதெல்லாம் என்னைத் தேற்றுவதற்காகச் சொல்கிறீர்கள்."

"அப்படியானால் உன் மனதில் ஒரு குறை இருக்கிறது என்று சொல்லு. இத்தனை நாள் 'இல்லவே இல்லை' என்று சாதித்தாயே? அதனால்தான் குடந்தை ஜோசியரிடம் போகிறேன்."

"என் மனதில் குறையிருந்தால், அதைப் பற்றிக் கேட்கச் சோதிடரிடம் போய் என்ன பயன்?" என்று கூறி, வானதி பெருமூச்செறிந்தாள்.

குடந்தை சோதிடரின் வீடு அந்த நகரின் ஒரு மூலையில் காளி கோயிலுக்கு அருகில் ஒரு தனித்த இடத்தில் இருந்தது. குடந்தை நகருக்குள் புகாமலேயே நகரைச் சுற்றிக் கொண்டு ரதம் அந்த வீடு சென்று அடைந்தது. ரத சாரதி ரதத்தைத் தங்கு தடையின்றி அங்கே ஓட்டிக் கொண்டு போய்ச் சேர்த்ததைப் பார்த்தால், அவன் அதற்கு முன் பலமுறை அங்கே ரதம் ஓட்டிக் கொண்டு சென்றிருக்க வேணும் என்று தோன்றியது.

வீட்டு வாசலில் சோதிடரும் அவருடைய சீடர் ஒருவரும் ஆயத்தமாகக் காத்திருந்தார்கள். சோதிடர் மிக்க பக்தி மரியாதையுடன் வந்தவர்களை வரவேற்று உபசரித்தார்.

"பெருமாட்டி! கலைமகளும் திருமகளும் ஒருருவாய் வந்த தாயே! வரவேணும்! வரவேணும்! இந்த ஏழையின் குடிசை செய்த பாக்கியம், மறுமுறையும் தாங்கள் இக்குடிசையைத் தேடி வந்தீர்கள்!" என்றார்.

"சோதிடரே! இந்த வேளையில் தங்களைத் தேடிக் கொண்டு வேறு யாரும் இங்கு வரமாட்டார்கள் அல்லவா?" என்றாள் குந்தவை.

"வரமாட்டார்கள், தாயே! இப்போதெல்லாம் என்னைத் தேடி அதிகம் பேர் வருவதே இல்லை. உலகத்தில் கஷ்டங்கள் அதிகமாகும்போதுதான் சோதிடர்களைத் தேடி மக்கள் அதிகமாக வருவார்கள். இப்போது தங்களுடைய திருத் தந்தை சுந்தரச் சோழரின் ஆட்சியில், குடிகளுக்குக்

கஷ்டம் என்பதே கிடையாது. எல்லோரும் சுக சௌக்கியங்களுடன் சகல சம்பத்துக்களையும் பெற்றுச் சந்தோஷமாக வாழ்கிறார்கள். என்னைத் தேடி ஏன் வருகிறார்கள்?" என்றார் சோதிடர்.

"அப்படியானால் எனக்கு ஏதோ கஷ்டம் வந்திருப்பதனால்தான் உம்மைத் தேடி வந்திருக்கிறேன் என்று சொல்கிறீராக்கும்!"

"இல்லை, பெருமாட்டி! இல்லவே இல்லை! நவநிதியும் கொழிக்கும் பழையாறை மன்னரின் திருக் குமாரிக்குக் கஷ்டம் வந்தது என்று எந்தக் குருடன்தான் சொல்லுவான்! உலகத்தில் மக்களுக்குக் கஷ்டமே இல்லாமற் போய்விட்டபடியால், இந்த ஏழைச் சோதிடனுக்கு மட்டும் கஷ்டம் வந்திருக்கிறது; இவனை யாரும் கவனிப்பார் இல்லை. ஆகையால், இந்த ஏழையின் கஷ்டத்தைத் தீர்ப்பதற்காக அம்பிகையைப் போல் வந்திருக்கிறீர்கள். தாயே! குடிசைக்குள்ளே வந்தருள வேண்டும். இங்கேயே தங்களை நிறுத்தி வைத்திருப்பது நான் செய்யும் அபசாரம்!" என்று ஜோசிடர் சமத்காரமாகப் பேசினார்.

ரத சாரதியைப் பார்த்துக் குந்தவை, "ரதத்தைக் கோயிலுக்குச் சமீபம் கொண்டு போய் ஆலமரத்தின் நிழலில் நிறுத்தி வை!" என்றாள்.

பிறகு சோதிடர் வழிகாட்டி முன் செல்ல, குந்தவையும் வானதியும் அவ் வீட்டுக்குள்ளே சென்றார்கள்.

சோதிடர் தம் சீடனைப் பார்த்து, "அப்பனே! வாசலில் ஜாக்கிரதையாக நின்று கொண்டிரு; தப்பித் தவறி யாராவது வந்தாலும் உள்ளே விடாதே!" என்று எச்சரித்தார்.

அரச குமாரியை வரவேற்பதற்கு உகந்ததாகச் சோதிடரின் கூடம் அழகு செய்யப்பட்டிருந்தது. சுவரில் ஒரு மாடத்தில் அம்பிகையின் படம் அலங்கரிக்கப்பட்டு விளங்கியது. அமருவதற்கு இரண்டு பீடங்கள் சித்தமாயிருந்தன. குத்து விளக்கு எரிந்தது. அங்குமிங்கும் கோலங்கள் பொலிந்தன. ராசிச் சக்கரங்கள் போட்ட பலகைகளும் ஓலைச் சுவடிகளும் சுற்றிலும் இரைந்து கிடந்தன.

பெண்மணிகள் இருவரும் பீடங்களில் அமர்ந்த பிறகு, சோதிடரும் உட்கார்ந்தார்.

"அம்மணி! வந்த காரியம் இன்னதென்பதைத் தயவு செய்து சொல்லி அருள வேணும்!" என்றார்.

"ஜோசியரே! அதையும் தங்கள் சோதிடத்திலேயே பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடாதா?" என்றாள் குந்தவை.

"ஆகட்டும் தாயே!" என்று கூறிச் சோதிடர் கண்ணை மூடிக் கொண்டு சிறிது நேரம் ஏதோ மந்திரம் ஜபித்துக் கொண்டிருந்தார்.

பிறகு கண்ணைத் திறந்து பார்த்து, "கோமாட்டி, இந்தக் கன்னிப் பெண்ணின் ஜாதகம் பற்றிக் கேட்பதற்காகவே இன்று முக்கியமாக வந்திருக்கிறீர்கள். அவ்விதம் தேவி பராசக்தியின் அருள் சொல்கிறது. உண்மைதானா?" என்றார்.

"ஆஹா! பிரமாதம்! உங்களுடைய சக்தியை என்னவென்று சொல்வது? ஆம், ஜோசியரே! இந்தப் பெண்ணைப் பற்றிக் கேட்கத் தான் வந்தேன். ஒரு வருஷத்துக்கு முன்பு இவள் பழையாறை அரண்மனைக்கு வந்தாள். வந்து எட்டு மாத காலம் மிகக் குதூகலமாய் இருந்து வந்தாள். என் தோழியருக்குள்ளே இவள்தான் சிரிப்பும் விளையாட்டும் கலகலப்புமாக இருந்து வந்தாள். நாலுமாதமாக இவளுக்கு என்னவோ நேர்ந்திருக்கிறது. அடிக்கடி சோர்ந்து போகிறாள். பிரமை பிடித்தாற் போல் இருக்கிறாள். சிரிப்பையே மறந்து விட்டாள். உடம்புக்கு ஒன்றுமில்லை என்கிறாள். இவள் பெற்றோர்கள் நாளைக்கு வந்து கேட்டால், என்ன மறுமொழி சொல்வதென்றே தெரியவில்லை..."

"தாயே! கொடும்பாளூர் கோமகனின் செல்வப் புதல்வி தானே இவர்? இவருடைய பெயர் **வானதி**தானே?" என்றார் ஜோதிடர்.

"ஆமாம்; உமக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே!"

"இந்த அரசிளங்குமரியின் ஜாதகம் கூட என்னிடம் இருக்கிறது. சேர்த்து வைத்திருக்கிறேன்! சற்றுப் பொறுக்க வேணும்!" என்று சொல்லிவிட்டு, சோதிடர் பக்கத்திலிருந்த ஒரு பழைய பெட்டியைத் திறந்து சிறிது நேரம் புரட்டினார். பிறகு, அதிலிருந்து ஒரு ஜாதகக் குறிப்பை எடுத்துக் கவனமாய்ப் பார்த்தார்.

(தொடரும்)

நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டாலும், 'வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்' கோஷம் கேட்கிற இந்நாளிலும் அர்த்தமுடன் விளங்குகிறது இக்கட்டுரை.



இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா தேசத்தில் இளம்பிள்ளை ஒருவன் தன் தந்தையைப் பார்த்து, "அப்பா! பாலைவனம் என்று சொல்லுகிறார்களே? பூகோளப் புத்தகங்களில் வருகிறதே! அது என்ன? பாலைவனத்தை நான் பார்க்க முடியுமா?" என்று கேட்டான்.

அதற்குத் தகப்பனார், "குழந்தாய்! ஐம்பது, அறுபது வருஷங்களுக்கு முன்னால்

"பாலைவனம் சோலைவனம் ஆகவேண்டும்!"

இந்தியா தேசத்தில் ராஜபுதனம் முதலிய பிரதேசங்களில் சில பாலைவனங்கள் இருந்தன. அந்தப் பாலைவனங்கள் விஸ்தரித்து வளர்ந்து கொண்டே இருந்தன. கூடிய சீக்கிரத்தில் இந்தியா தேசம் முழுவதுமே ஒரு பெரிய பாலைவனமாக மாறிவிடுமோ என்று எண்ணும்படியாக இருந்தது. ஆனால் ஒரு அதிசயத்தைக் கேள்! ஸ்ரீ கன்னையாலால் மாணிக்கலால் முன்ஷி என்பதாக ஒருவர் கிளம்பினார். அவர் ஒரு பெரிய இயக்கத்தைத் தொடங்கினார். நாடெங்கும் விதவிதமான மரங்களை நடும்படியாக மக்களைத் தூண்டினார். நட்ட மரங்களுக்குத் தண்ணீர் விட்டு வளர்க்க வேண்டும் என்றார். மரங்களை வெட்டக் கூடாது, காடுகளை அழிக்கக் கூடாது என்றார். மலைப் பிரதேசங்களில் வனங்களை உண்டாக்கி வளர்க்க வேண்டும் என்றார். பாலைவனங்களையெல்லாம் சோலை வனங்களாக மாற்ற வேண்டும் என்றார். 'வனமகோத்ஸவம் கொண்டாட வேண்டும்' என்றார். எப்படியோ அவருடைய முயற்சி பலித்து விட்டது. யார் சொல்லியும் கேளாத ஜனங்கள் ஸ்ரீ முன்ஷி சொன்னதைக் கேட்டார்கள். அதன் காரணமாக, இன்றைக்கு இந்தியா தேசத்தில் பாலைவனமே இல்லாமற் போய்விட்டது! ஆப்பிரிக்காவுக்கோ மத்திய ஆசியாவுக்கோ போனால்தான் பாலைவனங்களைப் பார்க்கலாம். இந்தியா தேசத்தில் பாலைவனங்களைப் பார்க்க முடியாது!" என்று பதில் சொன்னார். இதைக் கேட்ட அந்த இளம்பிள்ளை, ஸ்ரீ முன்ஷி என்பவரிடம் மிக்க பக்தியும் மரியாதையும் கொண்டான்.

மேற்கண்டவாறு இந்தியா தேசத்திலேயே பாலைவனம் என்பது இல்லாமல் அடித்து, நாடெங்கும் ஓங்கி வளர்ந்த சோலைகளும் வனங்களுமாகச் செய்து, சரித்திரப் பிரசித்தி பெற்று, பள்ளிக்கூட பாடப் புத்தகங்களிலும் இடம்பெறக்

அமரர் கல்கி

கூடிய பெருமையை ஸ்ரீ கே. எம். முன்ஷி அடைந்தே தீருவார் என்று தோன்றுகிறது. அவ்வளவு தீவிரமாக நமது புதிய உணவு மந்திரி கனம் கே. எம். முன்ஷி மரம் நட்டு வனம் வளர்க்கும் முயற்சியை மேற் கொண்டிருக்கிறார்.

"அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா – தொடுத்த
உருவத்தால் நீண்ட
உயர்மரங்களெல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா!"

என்று ஒரு தமிழ்ப் பாடல் உண்டு. மரங்கள் பழுப்பதற்கு மட்டும் அல்ல, – அவை நடப்பட்டு வளர்ந்தோங்குவதற்கும் உரிய பருவ காலம் வரவேண்டும் என் பதை இப்போது காண்கிறோம்.

ஏனெனில் இதற்கு முன்னாலும் நாட் டின் நன்மையில் அக்கறையுள்ளவர்களும் தீர்க்க திருஷ்டியுள்ளவர்களுமான தலை வர்கள் பலர் மரம் வளர்ப்பதன் அவ சியத்தை அடிக்கடி கட்டிக்காட்டியிருக் கிறார்கள். சென்ற வருஷமும் அதற்கு முந்தைய வருஷமும் நமது நாட்டில் மந்திரிமார்கள் மரம் நடும் நிகழ்ச்சிகள் நடந்தன. அந்த நிகழ்ச்சிகளின் போட் டோப் படங்களும் பத்திரிகைகளில் வெளிவந்தன. ஆனால் அப்படி நட்ட மரங்களில் 100க்கு 99 வீதம் நாலு நாளில் பட்டுப் போய்த் தொலைந்தன. துஷ்ட மரங்கள்! கொஞ்சமாவது தராதரம் அறி யாத மரங்கள்! மந்திரிகளும் கலெக்டர் களும் மற்றும் பெரிய பிரபலஸ்தர்களும் தங்களைத் தொட்டு நட்டிருக்கிறார்களே என்பதற்காகவாவது அவை உயிரை வைத் துக் கொண்டிருக்க வேண்டாமா? கேவ லம், 'தண்ணீர் விடவில்லை' 'வேலி எடுக்கவில்லை' என்பது போன்ற அசம் பாவிதமான காரணங்களுக்காகத் தற் கொலை செய்து கொண்டன!

ஆனால் இனி அந்தத் துஷ்ட மரங் களின் கொட்டம் அடங்கி விடும் என்று எதிர்பார்க்கலாம். ஸ்ரீ முன்ஷியிடம் அந் தத் துஷ்டத்தனம் எல்லாம் பலிக்காது. நட்ட மரங்கள் உயிரை வைத்துக் கொண்டே தீர வேண்டும்; வளர்ந்தேயாக வேண்டும். வளர்ந்து வனமாகும் வரையில் ஸ்ரீ முன்ஷி அவற்றைக் கவனித்து வரு வார். மற்றவர்களையும் கவனிக்கப் பண்ணுவார்! – இதற்கு என்ன உத்தர வாதம் என்று கேட்டால், ஏன்? ஸ்ரீ முன்ஷி இந்த மரம் நடும் விழாவுக்குக் கொடுத் திருக்கும் பெயரையே பாருங்கள்! 'வன மகோத்ஸவம்' என்றல்லவா சொல்லு கிறார்! மரம் நட்டால் போதாது; செடி வைத்தால் போதாது. மரமும் செடியும் வளர்ந்து வனமாகும் வரையில் ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதான்! – வன மகோத்ஸவம் என்ற பெயரில் இந்தக் கருத்து அடங்கியிருக்கிறதல்லவா?

இதற்கு முன்னால் செய்யப்பட்ட எல்லா முயற்சிகளைக் காட்டிலும் ஸ்ரீ முன்ஷி இப்போது தொடங்கியிருக்கும் முயற்சி மகத்தான பெரு முயற்சி என்பதில் சந்தேகமில்லை. அந்த முயற்சி பூரண வெற்றி பெற வேண்டும் என்று அனை வரும் விரும்புவார்கள்.

இந்தியா தேசமெங்கும் வனமகோத்ஸ வம் கொண்டாடப் போகிறார்கள்.

வன மகோத்ஸவ வாரத்தில் சில தினங் கள் ஸ்ரீ கே. எம். முன்ஷி சென்னைக்கும் விஜயம் செய்கிறார். ஸ்ரீ முன்ஷி அவர் களுக்கு மனமார்ந்த நல்வரவு கூறுகிறோம்.

வன மகோத்ஸவ வாரம் முழுதும் ஜனங்கள் கனிகள், காய்கறிகள், கிழங்கு கள் இவற்றையே உண்பதாக விரதம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஸ்ரீ முன்ஷி வேண்டிக் கொண்டிருக்கிறார். இந்த விரதத்தை எல்லாரும் அனுசரிப்பது சாத்தியமில்லை. ஏனெனில் அரிசியைக் காட்டிலும் காய்கனி கிழங்குகளின் விலை அதிகம்; கிடைப்பதும் துர்லபம். ஆகை யால் சமூகத் தலைவர்களாகிய சிலர்தான் மேற்படி விரதத்தைப் பூரணமாகக் கைக்கொள்ள முடியும்.

மற்றப் பெரும்பாலான ஜனங்கள் காய் கனி கிழங்குகளைக் கண்ணாலே பார்த்து மனதினால் சிந்தித்து விரதம் அனுஷ்டிக் கலாம். அதற்கு அநுகூலமாக இருக்கட்டும் என்று நமது இந்த இதழ் அட்டையில் ஸ்ரீ முன்ஷியின் படத்தோடு காய்கனி கிழங்கு களின் படத்தையும் சேர்த்து வெளியிட் டிருக்கிறோம். ○

(என்ன சேதி)

– கல்கி, ஜூலை 2, 1950

தேர்தல் '98

ம.தி.மு.க: தாவும் படலம்!

ம.தி.மு.க. தலைமை நிலையத்தில் உற்சாகம் குறைந்திருக்கிறது. அம்மாவோடு கூட்டணி அமைத்து ஐந்து சீட்டுகள் (மட்டுமே!) பெற்றவுடன்தான் தலைவலி துவங்கியது. பொன். முத்துராமலிங்கம், மதுராந்தகம் ஆறுமுகம் போன்ற வை.கோ.வின் தளபதிகளுக்குத் தொகுதிகள் இல்லையென்ற நிலை தெளிவானவுடன் தாவிக் குதித்து ஓடும் படலம் ஆரம்பமாகி விட்டது. இதை எழுதும்வரை நான்கு மாவட்டச் செயலாளர்கள், ஒரே தாண்டாகத் தாண்டி, தாய்க் கழகத்திற்கு வந்து விட்டார்கள். இந்த ஓட்டம் தொடரும் என்றும் ம.தி.மு.க. வட்டாரமே எதிர்பார்க்கிறது.

"அந்த அம்மாவுடன் பேச்சுவார்த்தை துவங்கப்பட்ட முதல் நாள் முதல், ஒவ்வொரு நிலையிலும் கட்சியிலுள்ள எல்லோருடனும் ஆலோசனை செய்துதான் முடிவெடுத்தார் வைகோ. எல்லா முடிவுகளிலும் உடனிருந்து விட்டு, இப்போது 'எல்லாக் குளறுபடிகளுக்கும் காரணம் வை.கோ.' என்று குற்றம் சாட்டி விட்டு ஓடுவது எந்த விதத்தில் நியாயம்? இவர்களுக்குத் தொகுதி இல்லை என்றவுடன் ஓடுகிறார்கள். இது பச்சைத் துரோகம்!" என்று புலம்புகிறார் ம.தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

ஆனால் பொன்.முத்து போன்றவர்கள். "வை.கோ. கட்சியை அ.தி.மு.க.விடம் அடகு வைத்து விட்டார்! என்று உறுதியாக நம்புகிறார்கள். "தேர்தலுக்குப் பின் முறைப்படி அம்மாவுடன் கட்சியை இணைத்து விடுவார் வை.கோ!" என்று கூறுகிறார் தி.மு.க.விற்குச் செல்லத் தயாராக இருக்கும் ம.தி.மு.க பிரமுகர் ஒருவர்!

வை.கோ.வுடன் நெருங்கியிருப்பவர்களுக்கும் இந்தத் தொகுதிப் பங்கீடும், வேட்பாளர் தேர்வும் அதிருப்தியைக் கொடுத்திருக்கின்றன. கூட்டணிக்கு அடித்தளம் போட்டு போயஸ்கார்டனுக்குப் பலமுறை வை.கோ.வுடன் சென்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவர் செய்தித் தொடர்பாளர் ராதா கிருஷ்ணன். ஜெயலலிதாவே ராதா கிருஷ்ணனுக்கு மத்திய அல்லது வட சென்னையில் போட்டியிடுமாறும், அவர் வெற்றி பெற முழு மூச்சாகப் பாடுபடுவதாகவும் உறுதி கூறியிருந்தாராம். ஆனால் ஐந்து தொகுதிகள் ஒதுக்கப்பட்ட நிலையில் சீனியர் பிரமுகர்களையே திருப்தி செய்ய இயலாத நிலையில் ராதாகிருஷ்ணனுக்கும் வடசென்னை 'இல்லை' யென்றாகி விட்டது. அப்படியும் சில கட்சிப் பிரமுகர்கள் ராதாகிருஷ்ணனுக்காகப் பேசியிருக்கிறார்கள்.

"நோ... ஐந்து இடங்கள்தான் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அதில் இரண்டில் ஒரே ஜாதியைச் சேர்ந்த நாங்கள் நின்றால் சரியாக இருக்காது!" என்று கூறி விட்டாராம் வை.கோ.

இப்போது ஸீட் கொடுக்கப்பட்டிருக்கும் பிரமுகர்களைத் தவிர, உள்ளதில் கணிசமான பிரமுகர்கள் விலகக் கூடும் என்றாலும் கண்ணப்பன் பற்றி இரண்டு விதமாகச் சொல்கிறார்கள். கட்சியின் நிதியைக் கையாளும் பொருளாளராக இருப்பதால் அவர் யோசித்துக் கொண்டிருக்கிறாராம். கட்சிக் கணக்கில் ஏகப்பட்ட பணம் இருப்பதால் முக்கியமானவர்கள் வெளியேறி விட்டால் பணத்தின் நிலை கேள்விக்குறியாகிவிடும் என்பதாலும் அவர் பொறுமை காக்கக் கூடும் என்றும் சொல்கிறார்கள்.


அதேசமயம், தி.மு.க.வுக்குத் திரும்பியிருக்கும் பழைய பிரமுகர்களுக்கு அங்கே உரிய மரியாதை கிடைக்குமா?

"அவர்கள் உடனடியாக எதையாவது எதிர்பார்த்தால் ஏமாற்றம் அடைவார்கள்" என்று சொல்கிறார் தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

ம.தி.மு.க. பெறும் வெற்றியைப் பொறுத்தே அதன் எதிர்காலம் இருக்கிறது. "இரண்டு மூன்று இடங்களில் வெற்றி பெற்றால்கூடப் போதும்; போனவர்கள் திரும்பி வரக் கூட வாய்ப்பிருக்கிறது!" என்று சொன்னார் அந்த ம.தி.மு.க. பிரமுகர். ●

— **கௌசல்யா**

(தி.மு.க.வில் மதுராந்தகத்தார் – பக்கம் 73)



பிப்ரவரி மாத இதழ் படித்து விட்டீர்களா!

காமகோடி

தெய்வீக பண்பாடு மாத இதழ்

1. சிவராத்திரி மஹிமை 2. சண்டேசுவர நாயனார். 3. ஸதி மதயந்தி 4. ஆனந்த ராமாயணம் 5. ராசிபலன் 6. வளம்பெருக்கும் வாஸ்து சாஸ்திரம். 7. ரிக்வேத மந்திரங்கள் (உயிர் பிச்சை அளிக்கும் உத்தம மந்திரம்). 8. பரமாச்சார்யாள் பாதையிலே. 9. உன்னையே நீ அறிந்துகொள். 10. ஆசாரக்கோவை 11. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி மற்றும் முத்து முத்தான ஆன்மீக விஷயங்களை அள்ளி அள்ளித் தரும் அரிய தமிழ் மாத இதழ் படித்து பயனடைந்து வருவோர் ஏராளம் ஏராளம். இன்றே ஆண்டு அல்லது ஆயுள் சந்தா தாரர்களாகச் சேர்ந்து பயனடையுங்கள்.

ஆண்டு சந்தா 60.00 ஆயுள் சந்தா 750.00 தனிப்பிரதி ரூ. 5.00 ஆயுள் சந்தா தாரர்களுக்கு ஒரு லக்ஷ்மி குபேர தனாகர்ஷண யந்திரமும், குபேர பூஜை புத்தகமும் தபால் செலவுடன் இலவசமாக அளிக்கப்படும்.

பதிவு செய்ய வேண்டிய முகவரி **காமகோடி**
58/2/ T.S.V. கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை – 600 004.
போன் : 494 3551

சிவராத்திரியிலும் மற்ற நாட்களிலும் கேட்டு பாராயணம் செய்து சிவன் அருள் பெற வேண்டிய கேஸட்டுகள்

GITAA CASSETTES

	G.C.T.	Rs.
சிவ ஸ்துதி Vol. I	124	33.00
சிவ ஸ்துதி Vol. II	129	36.00
சிவ ஸ்துதி Vol. III	149	36.00
சிவ ஸ்துதி Vol. IV	155	33.00
ஸ்ரீ ருத்ரம்	111	36.00
நாமாவளி பஜன்ஸ் – சிவன்	156	33.00
ஓம் நமச்சிவாய சாண்டிங்	158	36.00
ஓம் சாண்டிங்	152	33.00
மகன்யாஸ Vol. I	107	33.00
மகன்யாஸ Vol. II	108	33.00
ஸ்ரீ ருத்ரம் (தமிழ்)	352	36.00
சிவ புராணம் திருப்பள்ளியெழுச்சி	303	33.00
திருமுறை மலர்கள்	6019	36.00
தேவார மலர்கள்	6020	36.00
தைத்திரிய மந்திர கோஷம் பாகம் 1	104	36.00
தைத்திரிய மந்திர கோஷம் பாகம் 2	105	36.00
தைத்திரிய மந்திர கோஷம் பாகம் 3	106	36.00

தைபூச நன்னாளிலும், மற்ற நாட்களிலும் முருகனை வழிபட

சண்முக கவசம்	344	33.00
ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்க ஸ்தோத்ரம்	133	36.00
வேலுண்டு வினையில்லை	337	33.00
கந்தர் அனுபூதி	338	33.00
கந்த புராணம் Vol. I	1013	36.00
கந்த புராணம் Vol. II	1014	36.00
கந்த புராணம் Vol. III	1015	36.00
கந்த புராணம் Vol. IV	1016	36.00

தபால் செலவு தனி

சிவராத்திரியிலும் மற்ற நாட்களிலும் படித்து பாராயணம் செய்து சிவன் அருள் பெற வேண்டிய புத்தகங்கள்

காசி ராமேச்'வர ஸுப்ரபாதம்	2.50
தேவாரம் திருமுறை பாராயணத் திரட்டு	10.00
சிவ பூஜை	3.50
மஹா ப்ரதோஷ மஹிமை–பூஜை கதை கொண்டது	8.00
சகல சிவாலய அஷ்டோத்ர சத நாமாவளிகள் விநாயகர், ஸுப்ரஹ்மண்யர், சிவன், உமா தேவி, துர்கா, நவக்ரஹம், நந்திகேச்வரர்	2.50
நடராஜப்பத்து, கருடப் பத்து	2.00
சிவ புராணம் (மாணிக்கவாசகர்)	2.00
சிவ நித்ய பாராயணம் (26 ஸ்தோத்திரங்கள்) (ஸம்ஸ்–தமிழ்)	8.00
சிவஸ்தோத்திரங்கள்– சிவஸ்துதி தமிழ் மூலம் ஸ்தோத்திரங்கள் கொண்டது.	5.00
மஹா ம்ருத்யுஞ்சய ஸ்தோத்ரம்	2.50
கேதாரேச்வரர் (கேதார கௌரி) வ்ரத பூஜையும் கதையும்	1.00
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி	2.00

தைபூச நன்னாளிலும், மற்ற நாட்களிலும் முருகனை வழிபட உகந்த புத்தகங்கள்

கந்தர் ஷஷ்டி கவசம்	2.00
ஷண்முக கவசம், பகை கடிதல் குமாரஸ்தவம் முதலியன கொண்டது	2.00
கந்தர் ஷஷ்டி கவசம் உரையுடன்	5.00
கந்தர் ஷஷ்டி கவசம் மினி	2.00
கந்தர் ஷஷ்டி கவசம் சூப்பர் மினி	2.00
கந்தர் ஷஷ்டி கவசம் (ஆங்கிலம்)	3.00
சத்ரு ஸம்ஹாரவேல் பதிகம் ஸுப்ரஹ்மண்யர் கராவலம் பாஷ்டகம் வ்ருத்தம் பகை கடிதல், அடங்கியது	2.00
கந்தர் அநுபூதி–அறுபடை திருப்புகழ்	2.50
ஸுப்ரஹ்மண்ய நித்ய பாராயணம் (55 ஸ்தோத்ரங்கள் அடங்கியது)	அச்சில்
சங்கடங்கள் நீக்கும் ஸ்தோத்ரங்கள்	17.00
இடும்பன் கவசம், கடம்பன் கவசம்	2.00
கந்தர் அநுபூதி மினி	2.00
ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்ரம் (ஸம்ஸ்–தமிழ்) தமிழ் உரையுடன்	3.00
ஸ்ரீ ஸ்கந்தகுரு கவசம்	2.50
திருமுருகாற்றுப்படை	2.50

கிடைக்குமிடம்

கிரி டிரேடிங் ஏஜென்ஸி

தபாலில்
58/2, டி.எஸ்.வி. கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 4.
போன் – 494 3551
ஃபேக்ஸ் : 91-44-495 3821

நேரில்
10, சுபாலீசுவரர் சன்னதி தெரு
மயிலாப்பூர், சென்னை – 4.
போன் – 494 0376, 494 2530

visit us at http://www.webindia.com/giri email:akshayaa@md2.vsnl.net.in

மும்பையில் : கிரி ஸ்டோர்ஸ், மோடி நிவாஸ், மாட்டுங்கா தபால் நிலையம் எதிரில், மும்பை – 400 019



எழுதுவதும் வேள்வி; வாங்குவதும் வேள்வி!

மெட்டல் டிடெக்டர் பிரவேசம், ஹேண்ட் பேக் பரிசோதனை ஆகிய சந்தன குங்கும வரவேற்புகள் முடிந்து மியூசிக் அகாதமி அரங்கின் நுழைவுக் கதவை நெருங் கினோம்.

பாபநாசம் அசோக் ரமணி வந்தே மாதரம் பாடிக் கொண்டிருந்தார். (அழைப்பிதழ் நிகழ்ச்சி நிரலில் இது இல்லை!)

'Knit India through Literature' (இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு) என்ற சிவசங் கரியின் பிரும்மாண்ட நூலின் முதல் பகுதி வெளியீட்டு விழா.

எம்.டி. வாசுதேவன் நாயர், யூ. ஆர். அனந்தமூர்த்தி என்று நட்சத்திர விருந்தினர் வர ஆரம்பித்தனர். அப்புறமாய் வந்த ஜெய காந்தன், அனந்தமூர்த்தியைக் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டதை எத்தனை எழுத்தாளர்கள் கவனித்தார்களோ...

அசோக் ரமணியுடைய காம்போதி ஆலா பனையின்போது அக்னி அறங்காவலர் மாலன் ஃபுல் சூட்டில் பரபரப்பாய்ப் பார் வையாளர்களிடையே வலம் வந்து வரவேற் றார். வைரமுத்து, பொன்மணியுடன் வர, காமெராக்கள் சில கணங்களுக்கு ஓயாமல் அவர்களை நோக்கி ஃப்ளாஷ் அடித்தன.

"முதல்வரும் மூப்பனாரும் வந்து கொண் டேயிருக்கிறார்கள்" - அறிவிப்பு! அரைமணிக் கும் மேலாகக் காத்திருந்து அலுத்துப் போய் அவரவருடைய ஆதர்ச 'பிராண்டை' சுவாசிக்க எழுத்துலக பிரும்மாக்கள் எழுந்து போய், திரும்பி வந்து... ஒருவழியாய் முதல் வரின்றியே விழா தொடங்கியது.

நூலின் தமிழ் - ஆங்கில வடிவங்களை முறையே கலைஞரும் மூப்பனாரும் வெளி யிடுவதாக ஏற்பாடு. அத்தனை கெடுபிடி களுக்குப் பிறகு முதல்வர் வராதது ஆன்டி கிளைமாக்ஸ். கூட்டணியாளரின் பொறுப் பையும் மூப்பனாரே நிறைவேற்றி வைத்தார்.

மேடை நிறைய முக்கியஸ்தர்கள் - சிவசங் கரியின் முயற்சியைப் பாராட்டி நம் சிந்தனை யைத் தூண்டினார்கள்:

"லத்தீன் அமெரிக்க இலக்கியம் தெரிந்த அளவுக்கு நமக்கு அண்டை மாநில இலக்கியம் பரிச்சயமில்லை" - இது எம்.டி. வாசுதேவன் நாயர்.

"பள்ளி- கல்லூரிகளில் துணைப்பாட நிலையில், தாய்மொழியல்லாதவொரு இந்திய மொழி இலக்கியத்தைக் கட்டாயப்பாடமாக்க வேண்டும்" - இது அனந்தமூர்த்தி.

"ஒரு படைப்பிலக்கியவாதியே இப்படிப் பட்ட நூலை உருவாக்குவது பாராட்டுக் குரியது" - இது ஜெயகாந்தன்.

படைப்பிலக்கியப் பணிகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு நான்காண்டுகளுக்கு இந்த இலக்கிய இணைப்பு வேள்வியில் ஈடுபட்டதாகச் சொன்னார் சிவசங்கரி.

ஒவ்வொரு மாநில வரலாறையும் பயண இலக்கியமாக எழுதி, படைப்பாளிகளை பேட்டி கண்டு சேர்த்து, அந்தந்த மொழி பேசும் மக்களிடம் பழகிய அனுபவங்களையும் இணைத்து... புத்தகம் மிகவும் கனத்து விட்டது - விஷயத்திலும் எடையிலும்.

விலை : ரூ. 475!

யம்மாடியோவ்!

- நமது நிருபர்

படம் : யோகா

நான் உன்னை



காதல் டைரிக் குறிப்பு

புகைப்படம் கேட்டு வாங்கிக் கொண்டேன். பார்த்து ரசிக்க மட்டுமல்ல; பேசிப் பயிற்சி செய்யவும்!

“டீ சாப்புடு” என்றாள் யாமினி. கோப்பையை அரவிந்த் பக்கமாக நகர்த்தி வைத்தாள்.

அரவிந்த் டீ பருகியபடி பிருந்தாவுக்கு சாதகமாகச் செயல்படச் சொல்லி எப்படிக் கேட்பதென்று மனதிற்குள் வாக்கியங்கள் அமைத்துப் பார்த்தான்.

“ஒரே ஒரு நிமிஷம், ஒரு அர்ஜெண்ட் லெட்டரை டிக்டேட் பண்ணிட்டு வந்துடறேன்” என்று இண்டெர்காம் எடுத்தான், “ஜென்சி, ஒரு லெட்டர் இருக்கு. வர வேணாம், போன்லயே சொல்லிடறேன். கருடா இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அட்ரஸ் பண்ணிக்க. ரிகார்டிங் த பர்சனல் டிஸ்கஷன் வி ஹேட் யெஸ்டர்டே, வி ரிக்ரெட் டு இன்ஃபார்ம் யு...”

அந்த பிருந்தாவுக்காக நீ எதற்கு பொரிகை செய்கிறாய் என்று கேட்டால் சொல்வதற்கு சரியான பதில்தான் சிக்கவில்லை.

எனக்கு மிகவும் வேண்டியவள் என்றால், ‘எந்த வகையில்?’ என்று துணைக் கேள்வி வரும். கல்லூரியில் கூடப் படித்தவள் என்று சொல்லலாமா? மிகவும் வேண்டியவரின் மகள் என்று சொல்லலாமா? நண்பனின் தங்கை என்று சொல்லலாமா?

கடைசியாகத் தோன்றியது பொருத்தமாக இருக்கும் என்று தோன்றியது. உடனே இந்த விஷயத்தை ஆரம்பிக்கக் கூடாது. மூடு எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

“அரவிந்த்!”

“சொல்லுக்கா!”

“ரெண்டு தடவை கூப்புட்டுட்டேன், என்ன யோசனை?”

“உன் தோடு வைரமா இல்லை அமெரிக்கன் டைமண்டான்னு யோசிச்சிட்டிருந்தேன்!”

“என்ன, கிண்டலா? நான் எதுக்குடா அமெரிக்கன் டைமண்ட் வாங்கணும்? பாம்பேல ஆர்டர் கொடுத்து போன மாசம் செஞ்சது. நல்லாருக்கா?”

“கண்ணு கூசுதுக்கா. எவ்வளவு ஆகுதுக்கா?”

“அம்பதஞ்சி முடியுது. இவ்வளவு காஸ்ட்லியா வாங்கணுமான்னு கேப்பியே...”

“சேச்சே! இதில என்ன தப்பு இருக்குது. செலவு பண்றே! செலவு பண்றதுக்காகத்தானே சம்பாதிக்கிறது...”

“டேய்! நீதான் பேசறியா? அன்னைக்கு லெதர் எக்ஸிபிஷன்ல ரெண்டாயிரம் ரூபாய்க்கு ஹேண்ட் பேக் வாங்கினப்போ அரை மணி நேரத்துக்கு சிக்கனத்தைப் பத்தி லெக்சர் கொடுத்தியே...”

“அது... அதுக்கு மதிப்பு ஏறாது. வைரம் விலை ஏறுமே. ஒரு இன்வெஸ்ட்மெண்ட் தானே...”

“ரொம்ப நாளைக்கப்புறம் என்னை நீ பாராட்டிருக்கே. ஓகே. உன்னை நான் எதுக்காக வரச் சொன்னேன்னு யூகம் செஞ்சிருப்பியே, சொல்லு!”

“வர்றப்போ அத்தான்கிட்ட போன்ல பேசினேன். அதை வைச்சிப் பார்த்தா நீ கட்டிக்கிட்டிருக்கிற வீட்டுக்கு

5 பட்டுக்கோட்டை பிரபாகர்

ஃப்னோரிங் போட ராஜஸ்தானுக்குப் போயி மார்பிள் வாங்கிட்டு வரணும். கரெக்ட்டா?"

"போடா! அதெல்லாம் ஆர்க்கிடெக்ட் பொறுப்புலயே ஒப்படைச்சுட்டேன். அதுக்காக வரச் சொல்லலை."

"எக்ஸ்க்யூஸ் மி மேடம்" என்று ஜென்சி உள்ளே வந்து டைப் செய்த கடிதத்தில் யாமினியின் கையெழுத்துப் பெற்றுப் போகும் வரை வேறு எதற்காக இருக்குமென்று யூகித்துக் கொண்டிருந்தாள் அவள்.

"இளங்கோ தபால் போட்ருக்கானாம்..."

"அம்மா போன் செஞ்சாளா?"

"நான் எடுத்துச் சொன்னா நீ கேப்பேன்னு அம்மா நம்புறா."

"நான் பெங்களூர் போறதா இல்லை. அப்புறம்?"

"சரி, இங்கயே எதாச்சும் வேலைக்குப் போயேன்."

"ஆஃப்செட் பிரஸ் ஆரம்பிக்கப் போறேன்கா."

"அதுக்குதான் இன்னும் ரெண்டு வருஷம் ஆகுமே."

"யார் சொன்னது?"

"நிர்மலாவுக்கு கல்யாணம் செஞ்சதுக்கப்புறம்தான் அப்பா சொத்து பிரிச்சி செட்டில் செய்யறதா இருக்கார். உனக்கு ஃபைனான்ஸ் வேணாமா?"

"அப்பாக்கிட்டேர்ந்து எதிர்பார்த்தாத் தானே?"

"கடன் வாங்கப் போறியா?"

"என்ன தப்பு? வீடு கட்றதுக்கு நீ லோன் வாங்கலையா?"

"என்ன உளர்றே? மாசம் எனக்கு முப்பத்திரெண்டாயிரம் சம்பளம். நீ திருப்பி கட்றதுக்கு என்ன தைரியம் வைச்சிருக்கே?"

"சம்பாதிக்க முடியுங்கற நம்பிக்கைதான்."

"ஏன் இப்படி அவசரப்படறே? அப்பா நினைச்சா நாளைக்கே உன் பங்கைப் பிரிச்சிக் கொடுத்துடுவாரு."

"பின் ஏன் பிடிவாதமா அதைச் செய்ய மாட்டேங்கறாரு?"

"உன் நன்மைக்காகத்தான் அரவிந்த். ஜாதகப்படி உனக்கு நேரம் சரியில்லைன்னு சொல்றாரு. இப்ப நீ எதில இறங்கினாலும் வொர்க்-அவுட் ஆகாதுன்னு சொல்றாரு. ஒன்றரை வருஷம் கழிச்சி சனி விலகுதாம். அது வரைக்கும் பொறுமையா இருந்தா ஒரு பைசா கடன் வாங்காம சொந்த முதலீட்டிலேயே ஆரம்பிக்கலாம்."

"எனக்கு இதில நம்பிக்கை இல்லைக்கா."

"அவர் நம்பறாரே."

"அவருக்கு சனி பகவான் மேல உள்ள நம்பிக்கை தன் பையன்



சுவாசிக்கிறேன்

திறமை மேல இல்லை. அதான் உண்மை."

"சரி, அப்படியே வெச்சுக்கோ. நீ உன் ஃபிரண்டோட சேர்ந்து தொழில் ஆரம்பிக்கி றேன்னு சொன்னப்போ எந்தக் கேள்வியும் கேக்காமத்தானே பணம் கொடுத்தாரு. என்ன ஆச்சு?"

"எனக்குத் திறமை இல்லைன்னு நீயும் சொல்றியா? அவன் என்னை ஏமாத்துவான்னு நான் எதிர்பார்க்கலைக்கா."

"எதிர்பார்க்கணும் அரவிந்த். திருடன் வரு வான்னு எதிர்பார்த்துத்தானே வீட்டைப் பூட்டி வைச்சிக்கிறோம். கரண்ட் போயிடும்னு எதிர்பார்த்துத்தானே மெழுகுவர்த்தி வாங்கி வைக்கிறோம்? இதோ பாரு, எப்பவோ ஒரு நாள் நெருப்பு பிடிச்சா அணைக்கிறதுக்காக இந்தக் கருவியை மாட்டி வெச்சிருக்கோம் பாரு.. எல்லா விதமா எதிர்பார்க்கறதும் ஒரு நிர்வாகியோட கடமைடா!"

கன்னத்தில் பளார் என்று அறைந்தது போலிருந்தது. இதமான வார்த்தைகளில் தன்னை நிர்வாகத் திறமை இல்லாதவன் என்று அவள் குத்திக் காட்டுவது சீற்றத்தை ஏற்படுத் தினாலும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான் அரவிந்த்.

"அப்பா உன்னைப் புரிஞ்சுக்கலைன்னு குதிக்கிறே. ஆனா நீதான் அப்பாவைப் புரிஞ்சுக்கலை. நீ அவசரப்பட்டு எதிலியாவது இறங்கி நஷ்டப்பட்டுடக் கூடாதுன்னுதான் அவர் கவலைப் படறார்."

"இப்ப நான் என்ன செய்யணும்னு சொல்றே?"

"எனக்கு வீடு கட்டிக் கொடுக்கறாரே ஆர்க்கிடெக்ட் விஜயன். அவரோட கன்ஸ்ட் ரக்ஷன் கம்பெனில ஒரே நேரத்தில பதினஞ்சி ப்ராஜெக்ட்ஸ் நடக்குது. உன்னைப் பத்திச் சொன்னேன். ப்ராஜெக்ட் சூபர்வைசரா சேத் துக்கறேன்னு சொன்னார். அஞ்சாயிரம் தர் றேன்னு சொல்றார். நீ சரின்னு சொன்னா அவருக்கு போன் செஞ்சி சொல்றேன். நீ நேர்ல போய்ப் பாரு. உனக்கும் நேரம் பிஸியாப் போகும். புதுசா ஒரு தொழில் கத்துக்கிட்ட மாதிரி இருக்கும். என்ன சொல்றே?"

"பிரிண்ட்டிங் டெக்னாலஜி படிச்சுட்டு வீடு கட்டச் சொல்றியா? சிமெண்ட் மூட்டை எண்ணி கொத்தனாருக்கு சம்பளம் கொடுக்கச் சொல்றியா? பிரிண்ட் மீடியால பெரிய ஆளா வரணுங்கறதுதான் என் ஆசை. என்னைப் போயி..."

"ரெண்டு வருஷம் கழிச்சி அப்பா பாகம் பிரிச்சிக் கொடுத்தப்புறம் உன் இஷ்டப்படி எது வேணாலும் ஆரம்பியேன். அது வரைக்கும் வீட்ல உரசல் இல்லாம இருக்கறதுக்காகத்தான் இந்த யோசனை சொல்றேன். எடுத்துக்கறதும் எடுத்துக்காததும் உன் இஷ்டம்."

யாமினி சற்றே கோபமாகச் சொல்லிவிட்டு 'உன்னோடு பேச நினைத்ததைப் பேசி விட்டேன். நீ இருக்கலாம், இல்லை, போகலாம்' என்பது போல கம்ப்யூட்டரை ஆன் செய்து கொண்டாள்.

சூழ்நிலையில் சுமுகம் மாறிப் போனதில் இப்போது பிருந்தா விஷயம் பேச முடியா தென்று நினைத்த அரவிந்த், எழுந்து கொண் டான்.

"யோசிச்சிச் சொல்றேன்க்கா."

"அதான் உன் இஷ்டம்னு சொல்லிட் டேனே."

மானிட்டரில் பார்த்துக் கொண்டு கீ போர்டில் பட்டன்களைத் தட்டி ஏதோ ஒரு ஸ்டேட்மெண்ட்டைத் தேடத் துவங்க...

"நான் வர்றேன்க்கா" என்று விருட்டென்று எழுந்து வெளியே வந்து விட்டான்.

லிஃப்டில் கீழே இறங்கும்போது மனம் படபடப்பாக இருந்தது. தன் பைக்கை எடுக்கச் செல்லாமல் கட்டடத்திற்கு வெளியே இருந்த ஒரு பெட்டிக் கடைக்குச் சென்று சிகரெட் வாங்கி அங்கேயே பற்ற வைத்துக் கொண்டு தன் பைக் அருகில் நின்று புகைத்தான்.

"எக்ஸ்க்யூஸ் மி சார்."

திரும்பிப் பார்த்தால் பிருந்தா நின்று கொண்டிருந்தாள்.

பாதி புகைத்த சிகரெட்டை கீழே போடு வதா, வேண்டாமா என்று அவன் திணற, "பர வால்லை சார், யு ஸ்மோக். நீங்க உங்க சிஸ்டர் கிட்ட பேசிட்டு அப்புறமா போன் செய்றதாச்

"இப்படியொரு கூட்டணி உருவாகும்னு நான் கனவிலும் நினைக்கலேங்க. கலி முத்திப் போச்சு.. வேறென்ன சொல்ல?"

"எந்தக் கூட்டணியைச் சொல்றீங்க?"

"எங்க அம்மாவும் என் மனைவியும் எனக்கு எதிரா ஒன்னு சேர்ந்துட்டாங்களே!"


— பொள்ளாச்சி கே. சித்ரா



"நம்ப பையனுக்கு இந்த மாத ஸ்கூல் ஃபீஸோட 300 ரூபாய் ஸ்பெஷல் ஃபீஸ் கட்டச் சொல்லியிருக்காங் களே, ஏன்?"

"ஸ்கூல் பிரின்ஸிபாலுக்குக் கார் வாங்கணுமாம்!"

— ஸஹானா



சொன்னீங்க. ஆனா எனக்கு ஒரு க்யூரியாசிடி. அதனால ரிசப்ஷன்லயே வெய்ட் செஞ்சிட் டிருந்தேன்," என்றாள் பிருந்தா.

ஒரே ஒரு பஃப் இழுத்துவிட்டு சிகரெட் டைக் கீழேப் போட்டு நசுக்கிய அரவிந்த் என்ன சொல்வதென்று தவித்தான்.

"இங்க நின்னு பேசறதுக்கு அங்கே கூல் ட்ரிங்ஸ் சாப்பிட்டுக்கிட்டுப் பேசலாமா சார்? இஃப் யூ டோண்ட் மைண்ட்..."

தோள்களைக் குலுக்கி, "சரி" என்றான்.

அவளோடு இணையாக நடந்தபோது சென்ட் வாசனை நுகர்ந்தான். வாகனங் களுக்கு நடுவில் சாலையைக் கடந்தபோது அவள் புடைவையின் தலைப்பு அவன் தோளை உரசி விலகியபோது மனத்திற்குள் ளிருந்த பாரம் காணாமல் போனது.

அந்தக் கடைக்குள் வந்து ஒரு கிரானைட் மேஜையில் எதிரெதிராக அமர்ந்தார்கள்.

"என்ன சாப்பிடறீங்க சார்?" என்றாள்.

"நீங்க?"

"எனி ஆரஞ்ச் ட்ரிங்."

"எனக்கு எனி கோலா."

வந்தவனிடம் மிராண்டாவும் பெப்சியும் சொன்னாள்.

அவள் மீது தான் இரக்கம் காட்டியதை வைத்து; தன் மூலம் காரியம் சாதித்துக் கொள் வதற்காக ஒரு நிர்வாக சாதுர்யமாக ஐஸ் வைக் கிறாள் என்பதைப் புரிந்து, உள்ளுக்குள் அவளின் அதிகமான புன் சிரிப்பையும், உப சரிப்பையும் ரசித்தான் அரவிந்த்.

"உங்க சிஸ்டர்கிட்ட பேசினீங்களா?"

"ம்... பேசினேன். உங்ககிட்ட அவ்வளவு கடுமையா நடந்திட்டிருக்க வேண்டாம்னு கண்டிச்சேன். 'ஆமாம், கோபமாதான் பேசிட் டேன்'னு அவ சொல்ற வரைக்கும் நான் விட லையே!"

"உங்க வார்த்தைக்கு அவ்வளவு மரியா தையா?"

"கம்பெனில அவ ஆபீசரா இருந்தா எனக் கென்ன, எனக்கு அவ அக்காதானே. கல்யாண மானதுக்கப்புறம் கூட என்னை கன்சல்ட் பண்ணாம எதுவும் செய்ய மாட்டா."

"கடைசியா என்ன சொன்னாங்க?"

"யோசிக்கிறேன்னு சொன்னா."

"உறுதியா சொல்லலையா?"

"என் சிஸ்டர் ஒரு டைப்புங்க. கொஞ்சம் கொஞ்சமாத்தான் மனசை மாத்தணும். கவலைப் படாதீங்க. நான் மறுபடி வீட்ல பார்த்துப் பேசறேன். இங்க அவளுக்கு நிறைய வேலை வந்து... சரியா பேச முடியலை."

அவரவர் பானங்களை ஸ்ட்ரா வழியாக உறிஞ்சும்போது ஏற்பட்ட அமைதியில் அவன் பார்வை அவள் முகத்திலேயே தங்கியிருப்பதை அவள் கவனித்து தன் பார்வையைத் திருப்பிக் கொள்ள, அவன் அவசரமாகப் பருகி முடித் தான்.

"நீங்க எத்திராஜ்லயா படிச்சீங்க?"

"இல்லைங்க, ஸ்டெல்லா."

"என் இன்னொரு சிஸ்டர் நிர்மலா எத்தி ராஜ்ல படிச்சா. அவளை ட்ராப் செய்ய, பிக்கப் செஞ்சிக்க நான் பல தடவை காலேஜ் வந்திருக் கேன். அப்ப உங்களை அங்க பார்த்திருப்பே னோன்னு கேட்டேன். ஏன்னா... உங்களை சூப்பர் மார்க்கெட்ல பாத்ததிலேர்ந்தே ஒரு கேள்வி என்னைக் குடையுதுங்க."

"என்ன?"

"உங்களை அதுக்கு முன்னாடியே எங்கயோ பார்த்த ஞாபகம். ஆனா எங்கேன்னு ஞாபகம் வரலை."

"மூணு வருஷம் முன்னாடி எத்திராஜ்ல இன்டர் காலேஜ் கல்ச்சுரல் ஃபெஸ்டிவல் நடந்தப்போ எங்க காலேஜ் சார்பா நான் கலந் துக்கிட்டேன். ஒருவேளை..."

அரவிந்திற்கு இப்போது பளிச்சென்று ஞாபகம் வந்தது.

கரெக்ட்! அவளை அந்த விழாவில்தான் பார்த்திருக்கிறான்.

"இருங்க, நான் சொல்றேன். சரியான்னு பாருங்க. லைட் மியூசிக் போட்டில நீங்க பாடி னீங்க. ஃபர்ஸ்ட் பிரைஸ் வாங்கினீங்க. அந்தப் பாட்டு கூட... வந்து...' காற்றுக்கென்ன வேலி? கடலுக்கென்ன மூடி.' அந்தப் பாட்டுதானே?"

ஆச்சரியம் தாங்காமல் அவனை பிரமிப் போடு பார்த்தாள் பிருந்தா.

(தொடரும்)

ஸ்ரீ காஞ்சிப் பெரியவர் அருளாசியுடன்

இப்பொழுது விற்பனையாகிறது

இதயம் பேசுகிறது வழங்கும்

ஒளிரும்

ஞானதீபம்

முழுமையான ஆன்மிக மாத இதழ்

இந்த
இதழுடன்
இலவச இணைப்பு...

★

தினசரி காலண்டர்
(ரூ. 20 மதிப்பு)

★

திருப்பதி
ஸ்ரீ வெங்கடாசலபதி
ஃப்ளோ-அப்

★

மயிலை
கற்பகாம்பாள்
குங்குமப்
பிரசாதம்



இந்த இதழில்...

- சர்வம் சங்கர மயம்! - ஸ்ரீ காஞ்சி மடம் பற்றிய சிறப்புக் கட்டுரை.
- ஆஸ்திரேலியாவில் சிவா-விஷ்ணு கோயில்
- 'ஜோதிடச் செம்மல்' விஜயபூஷன் வழங்கும் விரிவான ராசி பலன்
- சிறுகதை, படக்கதை இன்னும் ஏராளமான கட்டுரைகள், துணுக்குகள்...
- பத்ரிநாத், கேதாரிநாத் உட்பட பல புனித ஸ்தலங்கள் 12 நாட்கள் இலவச யாத்திரை கூப்பன்.
- வாக்மேன் மற்றும் 10 பக்தி பாடல் கேசட் பரிசுப் போட்டி!

விவரங்களுக்கு : யுனைட்டட் பப்ளிகேஷன்ஸ்

24, ரங்கன் தெரு, தபால் பை எண் 1019, தி. நகர். சென்னை - 17. போன் : 434 50 92

இரண்டாண்டு சந்தா : ரூ. 250 செலுத்துபவர்களுக்கு கால்குலேட்டர் இலவசம்

விலை ரூ 12/-



• பிளஸ் ஒன்!

● வி. ரெங்கநாதன், சென்னை - 91.
? புதிதாகத் தோன்றியுள்ள குப்பை களை அகற்றத்தான் இந்தத் தேர்தலே தவிர, பழைய குப்பைகளைக் கிளற வேண்டாம் என்ற 'ஜெ'யின் கருத்தைக் கொஞ்சம் கிளறுங்களேன்...
! கிளறினால் ஆபத்து என்பதை உணர்ந்து சொல்லியிருக்கிறார். அதை நாமும் உணர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டாமா..!

● எஸ்.கே. மூர்த்தி, கும்பகோணம்.
? அம்மா அப்பாவுக்குப் பணிவிடை செய்வது, திருப்பணி செய்வது.. இரண்டில் மேலானது எது?
! சந்தேகமே வேண்டாம். அன்னையும் பிதாவுமே முன்னறி தெய்வம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று.. முன்னதைச் செய்த பிறகு மிஞ்சும் நேரமும் பணமும் பின்னதற்குப் பயன்படலாம்.



• மதுரை சாதும்!

● வி. பிரசன்ன கிருஷ்ணன், சென்னை - 17.
? தன் மீதான பாலியல் குற்றச்சாட்டுக்கு அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் ஆறு மணி நேரம் சாட்சியம் அளித்தாராமே?
! முன்பு பிரெஞ்சு அதிபர் மிட்டரான் விவாகத்துக்கு அப்பாற்பட்டுப் பிறந்த ஒரு பெண் குழந்தையின் தகப்பன் என்பது தெரியவந்தபோது, அவரைச் சில நிருபர்கள் அது பற்றிக் கேட்க... மிட்டரான், "ஆமாம்! அது பற்றி என்ன...?" என்று திருப்பிக் கேட்டு, நாலே வார்த்தையில் விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்! இப்போது கிளின்டனால் அப்படி நடந்து கொள்ள முடியவில்லையே! காரணம், அமெரிக்கப் பண்பாட்டில் உள்ள முரண்பாடு. அது மக்களுக்கு ஒரு வாழ்க்கை நெறியையும் நாட்டுத் தலைவருக்கு வேறு ஒரு தூய வாழ்க்கை நெறியையும் வகுக்கிறது. பிரெஞ்சு கலாசாரம் அப்படிப் பாகுபாடு செய்வதில்லை!

● கே. ராகவேந்திரன், சென்னை - 53.
? சோனியா காந்தி அடுத்த இந்தியப் பிரதமராக வருவாரா?
! பதவி வேண்டாம், வேண்டாம் என்று பல்லவி பாடும்போதே, காங்கிரஸுக்கு நல்ல தலைமை வேண்டும் வேண்டும் என்று அனுபல்லவி பாடுவதைப் பார்த்தால் வந்துவிடக் கூடும் என்றுதான் தோன்றுகிறது.

● க. எத்திராஜ், திருவாரூர்.
? விடிஜஎஸ் திட்டத்துக்குப் பிறகும் இந்தியா ஏழை நாடு என்று சொல்லலாமா?
! நேர்மையில் இன்னமும் நாம் ஏழைதானே!

● பா. ரவிச்சந்திரன், அசூர்.
? நான் ஜெயித்தால் மதுரையை சர்வதேச நகரமாக்குவேன் என்கிறாரே சு. சுவாமி?
! மயிலாடுதுறையை துபாயாக்கப் போவதாகச் சொல்லிப் போன ஆசாமி, எங்கோமே. வங்கத்தில் ஓர் 'அம்மனின்' ஆதரவில் சீட் வாங்கப் பார்த்து, இடையில் என்னமோ மாறுதல் வந்து, மறுபடி, மயிலாடுதுறையிலேயே தனியாவர்த்தனம் செய்து பார்க்க இருக்கிறார். இவர், இங்கே ஓர் அம்மாவின் அரவணைப்பில் இருந்து கொண்டு இப்படி...! எந்த ஊரும் எதுவும் ஆக வேண்டாம். அதது காணாமல் போகா



• ஆசாய் திலகம்!



• மாற்றுதல்! ...?



• கருத்து கிளறல்!

மல் மேப்பில் பத்திரமாக இருந்தாலே போதும்.

● **பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணபுதூர்.**

? உண்மை உழைப்பு எளிதில் தோல்வி அடைந்து விடுகிறதே... அது ஏன்...?

! யார் சொன்னது? அந்த உழைப்பே வெற்றி தான். உண்மையிலிருந்து விலகவில்லை என்ற உணர்வே வெற்றிக்களிப்புதான்.

● **டி.. அழகர்சாமி, மதுரை.**

? ரஜினி, சோ மீது பயங்கரத் தாக்குதல் தொடுத்திருக்கும் ஜெயலலிதாவின் துணிச்சல் பற்றி...?

! Offence is the best form of defence என்று நம்புகிறவர் ஜெ!

● **வ. குலோத்துங்கன், கும்பகோணம்.** ❑

? இருபது தொகுதிகளில் ஒன்றுகூட விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று பேசிய த.மா.கா வின் செயல்பாடு குறித்து...?

! ராஜ்ய சபா சீட் தருவதாகக் கூறிய சமரச

ரூ. 50 பரிசு பெறுபவர்:
❑ வ. குலோத்துங்கன்,
57-எ, சிங்காரத் தெரு, வடக்கு,
கும்பகோணம் - 612 001.

● **அவ்வை கே. சஞ்சீவி பாரதி, கலிங்கியம்.**

? ம.தி.மு.கவிலிருந்து பொன் முத்துராம லிங்கம் விலகியுள்ளது பற்றி?

! யார் விலகினால் என்ன? வை. கோவும் ராதா கிருஷ்ணனும் கடைசிவரை இருப்பார்கள்!

● **அ. ஷண்முகசுந்தரம், சென்னை - 64.**

? 'மக்கள் முட்டாள்கள் அல்ல' என்கிறாரே ஜெயலலிதா?

! அதனால்தான் சென்ற தேர்தலில் அவரைத் தோற்கடித்தார்கள்... இனியும்...

● **சூர்ய நிலா, சேலம் - 2.**

? அசாருதீன் தலைமையை சோனியா வரு கையோடு ஒப்பிட்டுக் குறை கூறினீர்களே... இப்போது என்ன சொல்கிறீர்?

! 'சோனியா தலைமை இல்லாவிட்டால் காங் கிரஸ் கோவிந்தா; அசார் தலைமை இல்லா விட்டால் இந்திய கிரிக்கெட் அம்பேல்' என்கிற நிலைகள் உதவாது. அரசியல் கட்சியானாலும் சரி, விளையாட்டு அணியானாலும் சரி – டீம் ஸ்பிரிட், டீம் வொர்க்... இவைதான் முக்கியம்.

● **ஆர். சீதாராமன், சீர்காழி - 11.**

? பத்திரிகைச் சுதந்தரம் என்பது என்ன? அதற்கு எல்லை உண்டா?

! மக்களின் தகவல் பெறும் உரிமையைக் காப் பாற்றுவதற்காக பத்திரிகைகள் பெற்றிருக்கிற உரிமம்தான் பத்திரிகைச் சுதந்தரம். தனி நபர் களின் right to privacy என்பது அதன் எல்லை...

● **ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன் கோட்டை.**



• அனுபல்லவி ஆசை!



• ஆறுமணிநேர அவதி!

அடுத்த பிரதமர் சோனியாதானே..?

திட்டத்தை ஏற்று கம்யூனிஸ்ட் (மார்க்) ஒத் துழைப்பதுதான் எல்லோருக்கும் நல்லது.

● **சி.கொ.சி. முருகேசன், கோபி.**

? பாரதிய ஜனதாவில் நடிகை கௌதமி சேர்ந்துவிட்டாரே?

! கூடுதலாக ஒரு வோட்டு நிச்சயம்!

● **ரேவதிப்ரியன், ஈரோடு.**

? வர வர சென்னை டீவியில் கர்நாடக இசைக் குப் பங்கு ஒதுக்குவதில்லையே... கவனித்தீரா?

! காலை 5.30 - 6.30 இசை நிகழ்ச்சிகள் மீண்டும் விரைவில் ஆரம்பமாகும் என ஒரு கட்டத்தில் சில மாதங்கள் முன் தெரிவித்த தூர்தர்ஷன் இயக்குனர் நடராஜனுக்கு நினைவூட்டுகிறோம்.


? தாம் உயிருடன் இருக்கும் வரை 'பாபர் மசூதியை யாரும் தொட முடியாது' என ராஜீவ் தம்மிடம் கூறியதாகச் சொல்கிறாரே சோனியா?

! அவர் அது மட்டுமா சொல்கிறார்... அடே யப்பா! அவர் மன்னிப்புக் கேட்கும் வேகத்தைப் பார்த்தால், கிழக்கிந்திய கம்பெனி வந்த போதே காங்கிரஸை ஆரம்பிக்காமல் போனோம்.. அதற் காக மன்னியுங்கள் என்று கூடச் சொல்லுவார் போலிருக்கிறது.

● **செ. மலர்விழி, மதுரை - 10.**

? மக்களின் உண்மையான எதிரி யார்?

! மதவெறி உணர்வுகளுக்குத் தூபம் போட்டுத் தூண்டிவிடும் அரசியல்வாதிகள்.




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

எடுத்த காரியத்தில ஜெயம். எதிரிங்க பணாலாவாங்க, அந்தஸ்து ஒசந்து நிப்பீங்க, வரும்படி அதிகமாவும்னா... உங்க உற்சாகத்துக்குக் கேட்கணுமா! நாட்டியம், சங்கீதம், கலைத் துறையில இருக்கறவங்களுக்கும் சடார்னு ஒரு திருப்பம் வரும். நல்ல திருப்பம்தான். அரசியல்வாதிகளுக்கும் ஜெயிக்கிறதுக்கான பாதை தெரியுது. சிலபேருக்கு வெளிநாடு போற சான்ஸ்... இல்லேன்னா அதுக்கான ஏற்பாடாவது நடக்கும். கல்யாணமாகாதவங்களுக்கு அதுக்கான ஏற்பாடுகளும் நடக்கும்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்க ஆற்றல் வெளிப்பட்டு, மத்தவங்க பாராட்டுமழைல நனையப் போறீங்க, இந்த வாரம். பண விஷயமும் தாராளம், கணவன்-மனைவி உறவும் சந்தோஷம்னா குடும்பமே உற்சாகத்துல பொங்காதா! இருக்கற கட்சியிலயே இருந்தாலும் சரி, தாய்க்கட்சிக்கே திரும்பினாலும் சரி, அரசியல்வாதிகளுக்கு பெருமையும் மதிப்பும் வர்ற வாரம் இது. இருமதிகள் இந்த வாரம் ஏதாவதொரு புதுப் பொருள் வாங்கற சான்ஸ் இருக்கு. சமூக நலப் பணியாளர்களுக்கும் நல்ல வாரம். வெளிநாட்டிலேர்ந்து நல்ல செய்தி கிடைக்கலாம்.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

வாரத்தின் முதல் ரெண்டு நாட்கள் உஷாராயிருங்கள். அப்புறம் நல்ல பலன்கள் தான். அரசாங்கப் பணியாளர்கள், ஆசிரியர்கள், வக்கீல்கள், மதபோதகர்கள் எல்லோருக்கும் வெற்றிப் பாதைக்கான கதவு திறக்கிற வாரம். தொழிலதிபர்கள், டெக்னிஷியன்களுக்கும் முன்னேற்றம்தான். பணவிஷயம் தாராளமாவே இருக்கும். போலீஸ், மிலிட்டரிக்காரங்களுக்கு சுமாரான பலன்தான். மத்தவங்களுக்கு, வராத கடன் கூட இந்த வாரம் வந்து சேரும். ஆனாக் கூட லாட்டரி, வீடு, மனை வாங்கல், ஏற்றுமதி இறக்குமதியெல்லாம் இந்த வாரம் வேணாம். டாக்டருக்கு பீஸ் தர வேண்டியிருக்கும்கிறதால பெற்றோர், குழந்தைங்க நலத்தில கவனமா இருங்க.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

கிரக சஞ்சாரங்கள் இந்த வாரம் உங்களுக்கு அனுகூலமா இல்லை. தடைகள், குடும்பத்தில் அமைதிக் குறைவு, மனக் குழப்பம்னு வரலாம். ஆனாக்கூட நம்பிக்கை இழந்துடாதீங்க. யார்கிட்டயும் வாக்குவாதம் வெச்சுக்காதீங்க. உங்க அபிப்பிராயத்தை பளிச்சுனு வெளிப்படையாச் சொல்லாதீங்க. பிரயாணம், அதுவும் ராப்பிரயாணம் வேண்டாம். மெஷின்களோடும் மின்சாரத்தோடும் வேலை பார்க்கிறவங்க ஜாக்கிரதையா இருங்க. சொந்தக்காரங்க, பிரண்ட்ஸுங்கன்னு யாருக்கும் ஜாமீன் கையெழுத்தெல்லாம் போட்டுடாதீங்க. உடல் நலத்திலும் கவனமா இருங்க. திருடு போவதற்கான சான்ஸ் கூட இருக்கறதால ரொம்ப ரொம்ப உஷாரா இருங்க.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

ஜோரான பலன்கள்னு சொன்னா அது உங்களுக்குத்தாங்க. நீண்ட காலத் திட்டங்கள், எதிர்பார்ப்புகள் எல்லாம் இந்த வாரம் ஜரூரா நிறைவேறும். எதிரிங்க பணால் ஆயிடுவாங்க. கல்யாணமாகாத இளசுகளுக்கு இந்த வாரம் அதுக்கான புள்ளையார் சுழி போடப்படும். கொடுக்கல், வாங்க, ஸ்பெகுலேஷன், ஷேர் எல்லாமே உங்களுக்கு அனுகூலம் தான். சிலருக்கு அலைச்சல் அதிகமா இருந்தாலும் அதுக்கான பலனும் கண்டிப்பா உண்டு.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

உற்றார் உறவுகளெல்லாம் வருவாங்க. சும்மா செலவு வைக்க இல்லீங்க. உங்க குடும்பத்துல சுப காரியங்கள் நடந்தா வரத்தானே செய்வாங்க! அப்புறம் குதூகலத்துக்கு என்ன பஞ்சம்! வியாபாரிகள், பத்திரிகையாளர்கள், தரகர்கள் உள்பட எல்லோருக்குமே


கும்ப ராசிக்காரரான சீதாராம் கேசரிக்கு திட்டமிட்ட காரியங்கள் நடக்காதாம்!



நடக்குமென்பார், நடக்கும்!


அக்னிசர்மா பக்கம்

செழிப்பான வாரம் இது. வெளிநாட்டுலேர்ந்து நல்ல சேதிகள் வரலாம். உங்களோட திறமை வெளிப்படும். பிரண்ட்ஸுங்க உதவியா இருப்பாங்க. வீடு, நிலம் வாங்கற சான்ஸ், இல்லேன்னா அதனால ஆதாயம் கிடைக்கும். வக்கீல்கள், போலீஸ், மிலிட்டரி, கலைத்துறைக்காரங்களுக்கும் நல்ல பலன்கள்தான். தொழிலதிபர்கள் புதிய திட்டங்களில் செயல்படுவாங்க. பெண்களுக்கு புடைவை, நகைன்னு வாங்கற சான்ஸ். முதியோருக்கு புண்ணிய யாத்திரைக்கு வாய்ப்புகள் இருக்கு.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

பணக் கஷ்டம், தடை, தாமதம் எல்லாம் இதுவரைக்கும் இருந்துதில்லையா... இனி எல்லாமே ஜூட் விட்டுட்டு ஓடிடும். தன்னம்பிக்கை கூடும். எதிரிங்க இருந்த இடம் தெரியாம ஓடிடுவாங்க. வரவேண்டிய பணம் இருந்தா வெற்றிகரமா வந்து சேரும். நண்பர், சொந்தக்காரங்களால நல்ல சேதி வரலாம். சிலருக்கு சம்பள உயர்வோ, உத்தியோக மாற்றமோ கிடைக்கலாம். பேராசிரியர்கள், பிரவசனகர்த்தாக்களுக்கு வளமான வாரம். பிரயாணத்தால நல்ல பலன் கிடைக்கும். செல்விகளுக்கு மாப்பிள்ளை அமைவாங்கன்னா, திருமதிகளுக்கு குழந்தைப் பேறு கிடைக்கும்.




விருச்சிகம் : *(விசாகம் 4- ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

அரசுப் பணியாளர்கள், நிர்வாகத் துறையினருக்கு ஒரு நல்ல திருப்பம் வரும். ஆபீஸில் உங்க அந்தஸ்து ஓகோன்னு உசரும். குடும்பத்தில் மங்கள காரியங்களுக்கு சான்ஸ் இருக்கு. சிலர் வெளிநாட்டுக்குப் போகலாம். சிலருக்கு வெளிநாட்டிலேர்ந்து நல்ல சேதிகள் வரலாம். கம்ப்யூட்டர், மின்னணு, ரசாயனத் துறையினருக்கு செழிப்பான பாதை தெரியும். எழுத்து, கணிதத் துறையினருக்கும் முன்னேற்றம் தெரியும். குடும்ப வசதிக்காக வாஷிங்மெஷின் மாதிரி ஏதாவது புதுப் பொருள்கள் வாங்குவீங்க.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

செல்வாக்கு ஓசரப் போற வாரங்க இது. கிரக சஞ்சாரம் அப்படி! எதிர்ப்புகளை 'ப்பூ'னு ஊதித் தள்ளிடுவீங்க. வீடு, வாகனம், வழக்கு கிழக்கு எதுவானாலும் ஜெயம்தான். பெண்களுக்கு புரமோஷன் மாதிரி சந்தோஷ சமாசாரங்கள் நடக்கும். கூட்டுத் தொழில் பண்றவங்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். இருந்தாக்கூட குரு-சனியின் அனுகூலம் இல்லாததால சிறு சிறு தடைங்க வரலாம். மேலதிகாரிங்க டோஸ் கிடைக்கலாம். பேச்சுலயும் கொடுக்கல் வாங்கல்லயும் எச்சரிக்கையா இருங்க. டூ வீலர் பயணம், இரவுப் பயணத்தையெல்லாம் இந்த வாரம் ஒத்திப் போட்டுடுங்க. அதான் நல்லது. எதுக்கும் ஒருமுறை ஆஞ்சநேயரைக் கண்டுக்கிட்டு வாங்களேன்.



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்க பொருளாதார நிலை ஓசரப் போற வாரங்க. குடும்பத்துல செலவு வரும்னாலும் அது சுபகாரியங்களுக்கான செலவாத்தான் இருக்கும். ஆசிரியர்கள், பேச்சாளர்கள், ஏஜெண்டுகளுக்கு உற்சாகமான வாரம். போலீஸ்காரங்களுக்குப் பாராட்டு கிடைக்கும். கொடுக்கல் - வாங்கல் எல்லாம் அதிர்ஷ்டத்தைத் தரும். தொழிலாளிகள், விவசாயிகள், போக்குவரத்து ஊழியர்களுக்கும் வளர்ச்சி தரும் வாரம். ஆனாலும் சிலருக்குக் கீழே விழுந்து காலில் அடிபடுதல் மாதிரி ஏதாவது நடக்கலாம். உங்க மறதியால பொருள் நஷ்டம் வர்லாம். உஷாரா இருங்க. ஷேர், லாட்டரியெல்லாம் வேண்டாம்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

குரு, சனி, செவ்வாய் கிரக சஞ்சாரமெல்லாம் இந்த வாரம் சரியில்லீங்க. அதனால அலைச்சல், மனக் குழப்பம், சலனம் எல்லாமே வரும். திட்டம் போட்ட மாதிரி காரியங்கள் நடக்காது. பொருளாதாரம் சீரா இருக்காது. கஷ்டப்பட்டு உழைக்கணும். பயணத்தில எச்சரிக்கை அவசியம். ஆனாலும் கலைத்துறை, எழுத்து, பத்திரிகைத்துறை, சிந்தனையாளர்கள், ஏஜெண்டுகளுக்கு நல்ல பலன்களுக்கே சான்ஸ். சயின்ஸ், ஆராய்ச்சின்னு இருக்கறவங்க அதிகப் பொறுப்போட செயல்படணும். சக ஊழியர்கள்கிட்ட ஜாக்கிரதையா பழகுங்க.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்க சமயோசிதப் புத்தியால எடுத்த காரியம் ஜெயித்தே தீரும். அரசியல்வாதிங்க, நிர்வாகத் துறை மற்றும் தொழிலதிபர்களுக்கு கௌரவம் உயரும். பொருளாதார முன்னேற்றத்துக்கான அறிகுறியும் தெரியுது. மேலதிகாரிகளின் பாராட்டு உறுதி. சிலருக்கு புரமோஷனும் கிடைக்கும். கலைத்துறையிலுள்ளவங்க புகழடைவாங்க. சட்டம், காவல், ராணுவத்தினர் கவனமா இல்லேன்னா விபத்துக்கு ஆளாகலாம். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு சான்ஸ் இருக்கு. அதே சமயம் கைப்பொருள் இழப்புக்கும் சான்ஸ் இருக்கு.

ரஜினி செய்வது சரியா?

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போதும் சரி; இப்போதைய தேர்தலுக்கும் சரி — 'தமது ஆதரவு யாருக்கு?' என்பதைத் தெரிவித்து விட்டு, இமய மலைக்கோ இஸ்தான்புல்லுக்கோ பறந்து விடுகிறார் ரஜினி. ரஜினி இப்படி கிளைமாக்ஸ் சமயத்தில் காணாமல் போவது சரியா? ரஜினி ரசிகர்கள் நாகராஜும் பாலாஜியும் இதுகுறித்து மோதுகிறார்கள்!

நாகராஜ் : நான் ரஜினி ரசிகன்னு சொல்லிக்கறதுல ரொம்பப் பெருமைப்படறவன். ஆனாலும் தேர்தல் சமயத்துல தலைவரோட அணுகுமுறை எனக்குப் பிடிக்கறதில்லை.

பாலாஜி : அவரோட அணுகுமுறைல என்ன குறை சொல்ல முடியும்? போன முறையும் சரி; இந்த முறையும் சரி – தன்னோட ஆதரவு யாருக்குன்னு தெளிவா சொல்லிட்டாரே?

நாகராஜ் : ஆதரவைத் தெரிவிக்கறது பத்தியே பேச்சு இல்லை. இப்படி தேர்தல் நேரத்துல அவர் காணாமல் போயிடறதைப் பத்தித்தான் சொல்றேன்.

பாலாஜி : அவர் ஒண்ணும் அரசியல்வாதி இல்லையே – எலெக்ஷன் வரைக்கும் மைக் பிடிச்சிட்டுப் பிரசாரம் செஞ்சிட்டு, அப்புறம் காணாமல் போக?

நாகராஜ் : இருக்கலாம். ஆனா தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் எந்த அரசியல் தலைவரை விடவும் நம்ம தலைவர் சொல்றதுக்குத்தானே ஜனங்க மத்தில மதிப்பு இருக்குது. அப்ப ஆட்டமேட்டிக்கா அவருக்கு அரசியல்வாதியை விடவும் கூடுதலான ஒரு பொறுப்பு வந்துடுதே!

பாலாஜி : தலைவர் தன் பொறுப்பிலேருந்து நழுவலை. 'இதைச் செய்யுங்க – இந்தக் கட்சியை நான் சப்போர்ட் பண்றேன். அப்புறம் உங்க இஷ்டம்'னு சூசகமா கோடி காட்டிட்டுத் தானே போறார்?



நாகராஜ் : வோட்டுப் போடச் சொல்றது இருக்கட்டும். ஏன் இவர் வெளியூர் போகணும்? இங்கேயே இருந்தா – எதுவுமே செய்யாம இருந்தாக் கூட – ஜனங்களுக்கு ஒரு தைரியமும் மகிழ்ச்சியும் எதிர்பார்ப்பும் இருக்கும் இல்லே? போன தடவையாவது டீவி மூலமா, பகிரங்கமா தி.மு.க. – த.மா.கா. கூட்டணிக்கு வோட்டுப் போடச் சொன்னாரு. நம்மை மாதிரி தொண்டர்கள் உற்சாகமா பிரசாரப் பணியில இறங்கினோம். இந்தத் தடவை



— ரசிகர்கள் மோதல்!

அதுவும் இல்லையே?

பாலாஜி : நீங்க ஒண்ணைப் புரிஞ்சிக்கணும். நம்ம தலைவருக்கு அரசியல் ரெண்டாம்பட்சம்தான். என்ன சொன்னாரு கவனிங்க. 'அவனவன் மொதல்ல வீட்டை, அம்மா அப்பாவை கவனிங்க' வோட்டுப் போடறது மட்டும்தாம் நம்ம ட்யூட்டின்னு சொல் லிட்டாரு. 'அரசியல் சாயம் வேணாம்; குடிமகன்ற முறையில நம்ம ஜனநாயகக் கடமையை மட்டும் ஒழுங்கா செஞ்சாப் போதும்'ங்கறதுதான் அவரோட எண்ணம்.

நாகராஜ் : அது எப்படி? இன்னிக்கு நம்ம தலைவர் மட்டும் நேரடி அரசியலுக்கு வந்தா மாநிலமே அவர் பின்னால இல்ல நிக்கும்? போன தேர்தலின் போதே அப்படியொரு எதிர்பார்ப்பு இருந்தது இல்லையா?

பாலாஜி : அரசியலுக்கு வர்றதும் வராம போறதும் அவரோட விருப்பம். நாம நிர்ப்பந்தம் பண்றது எப்படி சரி? அவர் ஒரு தலைசிறந்த நடி கர். அரசியல்வாதி இல்லை. நல்ல மனுஷர். அபரி மிதமான சமூக அக்கறையால 'இப்படி பண்ணுங்க; இன்னாருக்கு வோட்டுப் போடுங்க'ன்னு வழிகாட்ட றார். அந்த அக்கறையை நாம 'எக்ஸ்ப்ளாய்ட்' பண் ணிட்டு 'அவரை அரசியலுக்கு இழுக்கறது தப்பு. அவர் பேசறது ஒரு அழகுன்னா பேசாம இருக்கறது அதைவிட அழகும் அர்த்தமும் பொருந்தியது. இந் தம்மா ஜெயலலிதா எப்படியெல்லாம் அசிங்கமா பேசறாங்க? நம்ம தலைவர் எவ்வோ நாகரிகமா, பெருந்தன்மையா நடந்துக்கறார் பாருங்க! அதான் பெரிய மனுஷத்தனம். சீப் பாலிடீஷியன்ஸ் நடுவுல அவர் வராம இருக்கறதே எனக்கு சந்தோஷம்.

நாகராஜ் : நீங்க சொல்றாப்பல அப்படி நேரடியா வராட்டா கூடப் பரவாயில்லை. ஆனா, இங்கேயே இருந்து, அப்பப்ப தன் கருத்தை வலியுறுத்தலாம் இல் லியா? அவசியமானா டீவி மூலமா பிரசாரம் செய்ய லாமே? பொதுக் கூட்டம் பேசணும்னு நான் சொல் லலை.

பாலாஜி : டீவி மட்டும் எதுக்கு? அவர் கருத் தைச் சொல்லிட்டாரில்லையா? அதுவே போதும்.

நாகராஜ் : சரி, பிரசாரம் வேணாம் இங்கேயே இருக்கட்டுமே! எதுக்கு தேர்தல் நேரத்துல இமய மலைக்கும் வெளிநாட்டுக்கும் தேர்தல் சமயத்துல போகணும்?

பாலாஜி : தப்பு. அவர் போற சமயத்துலதான் தேர்தல் வருது. (சிரிப்பு) நம்ம தலைவருக்கு ஓய்வு வேணும். அவர் தனிமை விரும்பி. ஆன்மீகவாதி. இயற்கையை ரசிக்கிறவர். அதனால இமயமலைக் குப் போறார். அதை நாம ஏன் கட்டுப்படுத்தணும்? அவர் என்ன ஊழல் வழக்குல கைதாகி, ஊரை விட்டு வெளிய போக கோர்ட் தடை போட்டிருக்கா என்ன? அவர் உரிமையை நாம பிடுங்கக் கூடாது.

நாகராஜ் : முன்னாடியே போயிட்டு வந்திருக்க லாமே! இந்த நேரத்துல போயி..

பாலாஜி : நண்பரே! இவரு இங்கேயே இருந்தா, ஜெயலலிதா பயத்துல ஏதாவது அறிக்கை விடுவாங்க. அவங்க லெவலுக்கு நம்ப தலைவர் சத்தியமா இறங்க மாட்டார். ஆனா நம்ம நண்பர்கள் கொதிச்சிப் போயி ஏதாவது கலாட்டா பண்ணலாம். பிரச்னையாகும். தேர்தல் நேரத்துல ஏதாவது கலவரம் வந்தா அது நம்ம மாநிலத்துக்குத் தானே பாதிப்பு? இப்படி சமயோசிதமா யோசிச் சித்தான் தலைவர் வெளியே போயிடறார்.

நாகராஜ் : அடடா, இந்த பாயிண்ட் பிரமா தம்! நான் யோசிக்கவேயில்லை! ரஜினிக்கு எப்பேர்ப்பட்ட மனசுங்க! நான்தான் தப்பா புரிஞ் சுக்கிட்டேன்!

தொகுப்பு : **மௌலி**

அட்டை வண்ணப்படம், படம் : **யோகா**



நாலு வரியில் நச்!

✉ 'காத்திருக்கும் கொக்கு'- சோனியா பற்றிய கட்டுரை படித்தேன். ராஜீவ் மரண மடைந்த உடனே கட்சிக்குள் வந்து இருந்தாலாவது வோட்டு வங்கியைக் கவர்ந் திருக்கலாமோ என்னவோ? அம்மாவைவிட மகள் பிரி யங்கா மீது இந்திய மக்கள் ப்ரியமா இருப்பாங்கன்னு நினைக்கிறேன். வோட்டா வெத்து வேட்டா என்பது அடுத்தமாதம் தெரிந்து விடுமே!

தூத்துக்குடி, எஸ். ராமசுப்பிரமணியன்.

✉ வாரிசு ஆட்சியை மக்கள் இனிமேலும் கண்மூடித்தனமாக ஏற்கமாட்டார்கள். நல்லது கெட்டது உணர்ந்து போட்ட வோட்டுகள்தான் தமிழகத்தில்-ஏன் இந்தியாவிலேயே ஒரு மாற்றத்தைத் தோற்றுவித்தன. ஆதலால் சோனியா பிரசாரம் ஓரளவு பலனைத் தருமேயல்லாது, பெரிய மாற்றத்தை உண்டாக்கி விடாது!

கும்பகோணம், கே.என். பாலகிருஷ்ணன்

✉ 'வோட்டா? வெத்து வேட்டா?' என்பது தேர்தல் முடிவில் நிரூபணமாகப் போகிற உண்மை. ஆனால் தேர்தல்வரை 'சோனியா' என்ற வார்த்தை பாட்டாகி, பல்லவியாகி காங்கிரஸ்காரர்களின் உள்ளங்களில்- உதடுகளில் மந்திரமாக ஒலிக்கும் என்பது நிஜம்!

சென்னை-1, கே.ஆர். ரவீந்திரன்

✉ வெங்கடாஜலபதியையே துயில் எழுப்பிய சுப்ரபாதம் இருக்கும் வரை இசைக் குயிலின் பெருமையும் புகழும் இருக்கும் என்பதில் ஐயம் இல்லை! 'பாரத ரத்னா' பட்டத்திற்கே இது பெருமைதான்!

அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக்ராஜா

✉ 25.1.98 கல்கி இதழில் "மட்டைத் தேங்காய் வேண்டுதல்" பற்றிப் (வளசரவாக்கம் ஸ்ரீ லஷ்மி விநாயகர் கோயில்) படித்தேன். இதேபோல் 'மட்டைத் தேங்காய்' வேண்டுதல் தாம்பரம் சானடோரியம் ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலிலும் நடைபெற்று வருகிறது.

சென்னை - 44, கே. சுந்தரா.

✉ 'பாட்டுப் பாடவா'வில் உமது கற்பனை வளம்தான் என்றாலும் பெருந்தலைகளின் சுய(நிஜ) புராணங்களை சுதி தப்பாது பாடிய-ஸாரி-படித்தபோது ரொம்ப உற்சாகமா இருந்ததுங்கோ!

குடந்தை, ஆர். ஷம்மு

✉ "ரஜினியின் அறிக்கை மட்டும் போதாது" என்ற சாமான்ய பாமர ரசிகனின் உள்ளக்கிடக்கையை அருமையாகத் தெளிவாக்கியது கட்டுரை! இனியாவது ரஜினி களத்தில் இறங்குவார் என நம்புவோம்!

மதுரை-16, வி.பி.எம். வள்ளி

✉ இருபத்து நாலே வயசான சச்சின் டெண்டுல்கரின் தந்தையார் எழுபத்தைந்து வயதையும் கடந்த முதியவரா! அட!

வேலூர்-6, எல். கோபாலகிருஷ்ணன்

✉ பொங்கலுக்கு வந்த திரைப்படங்களைப் பற்றிய ட்ரெய்லர் நாலுவரியில் 'நச்'சென இருந்தது.

செந்தாரப்பட்டி, 'செந்தாழை' நாதன்

✉ மணியனின், மாதவன் சிறுகதையைப் படித்ததும் 'பள்ளிப் படிப்போடு தொழிற் கல்வியும் போதிக்கப்படல் வேண்டும்' என்ற மூதறிஞரின் கூற்று நினைவிற்கு வந்தது!

நெய்வேலி-3, எஸ். ஸ்ரீகாந்த்

✉ இரண்டு டாக்டர்களின் பேட்டி படித்தேன். எந்த வைத்திய முறையையும் முறையாகச் செய்தால் மனித சமுதாயத்திற்கு நல்லது. நமது திறமைகளை எல்லாம் மற்றவர்களைக் குறை கூறுவதிலேயே நாம் வீணாக்கிக் கொண்டு இருக்கிறோம்.

செட்டிபாளையம், ஆர். அவினாசிலிங்கம்

வட்டமேஜை



உணர்ச்சிமயமாய் ஒரு காட்சி!

மதுராந்தகம் ஆறுமுகம் மீண்டும் தாய்க் கழகத்தோடு இணைகிறார் என்ற செய்தி வந்ததும் அறிவாலயம் மிதப்பில்தான் இருந்தது. இணைப்பை ஒரு விழாவாக எடுத்துக் கொண்டிருந்தனர்!

ஒரே கலகலப்பு. ம.தி.மு.க.விலிருந்து பிரிந்து வந்த தங்கவேலின் தோள் மீது கைபோட்டு தி.மு.க.காரர்கள், பேராசிரியர் அறைக்கு அழைத்துப் போனதில் நல்ல சகஜபாவம் தெரிந்தது.

துண்டு, மொலைசக் தரையைத் தொட ஆதரவாளர்கள் புடைசூழ நடந்து சென்றார் ம.தி.மு.க. நாகரத்தினம். பதிவு அறையில் முகவரியை முறைப்படி எழுதித் தரச் சொன்னதும் நாகரத்தினம் தன் வலது கரத்தை நோக்கி, "இங்கிலீசுல எழுது" என்றார்.

வலது கரம் ஆங்கிலத்தில் எழுத, "ஏப்பா, கேப்பிடல் லெட்டர்ல எழுதணும்ங்கிறதுகூடத் தெரியாதா?" என்று பரபரப்பில் கோபமாகச் சொன்னார்.

"ஐயா இப்படி எழுதுனா கேப்பிடல் லெட்டர்தான்யா!" என்றார்.

"சரி சரி, சின்னதா எழுதறியேன்னு பார்த்தேன்."

ம.தி.மு.க.விலிருந்து பிரிந்து த.மா.காவில் சேர்ந்த இருபத்தைந்து பேரால், அங்கு 'இருக்க' முடியவில்லை. எல்லாம் கொள்கைப்பற்று மனசைத் தட்டிக் கேட்டதால் த.மா.கா.வில் தொடர்ந்து இருக்க முடியாமல், தி.மு.க.விற்கு வந்திருந்தனர். 'பாப்புலர்மேன்' பின்னால் போனால் நன்றாக இருக்கும் என்று தேடிக் கொண்டிருந்தனர்.

மதுராந்தகம் வரத் தாமதமானதால், வளாகமெங்கும் உள்ளூர் அரசியல் முதல் மாநில அரசியல்வரை, குழுகுழுவாகத் திரண்டிருந்தவர்களிடையே உதைபட்டுக் கொண்டிருந்தது.

"நம்ம தலைவர் பெரிய கில்லாடிப்பா. ஆர்.எம். வீரப்பனைக் கூப்பிட்டு, எம்.ஜி.ஆர். சிலையைத் திறந்தாரு. வாயை மூடிக்கிட்டு சும்மா இரு; எம்.எல்.சி. ஒண்ணு உனக்கு உண்டு'ன்னு சமூக்கமா சொன்னதுனால ஆளை மூச்சுவிட முடியாம சுருட்டி வச்சிட்டாரு பாத்தியா?" என்றார் ஒருவர்.

"இது என்ன பிரமாதம்! பி.எச். பாண்டியனுக்கு ஜெயலலிதா சீட் கொடுத்திடக் கூடாதுங்கிறதை மனசுல வச்சு, ஒரு ஆட்டம் ஆடினாரு தெரியுமா? 'திருநெல்வேலியில எம்.ஜி.ஆர். சிலை வைக்க உடனே இடம் ஒதுக்கிய முதல்வருக்கு நன்றின்னு' பி.எச்.பாண்டியன் போன்ல சொன்னதை அறிக்கையா விட்டாரு! அது பத்தாதா? நம்மாளுக்கு க்ளவரான மூளைதான்!" என்று பின்னணியை விளக்கினார் இன்னொருவர்.

விஜய் டி.வி.யில் 'மெல்லப் பேசுங்கள்' பகுதியில் ராமராஜன் பற்றி வந்த கமெண்டை ஒரு தொண்டர் அவிழ்த்து விட்டார்.

"திருச்செந்தூர் தொகுதியில ராமராஜன் எதுக்குப் போட்டியிடுறாரு தெரியுமா?... அது வறட்சியான பகுதி. அதனால பசு மந்தைய வச்சுத்தான் ஜீவனம் பண்றாங்க. ராமராஜன் டவுசர போட்டுக்கிட்டு பாடிக்கிட்டே பால் கரந்தா, மாடு வச்சிருப்பவங்கெல்லாம் வோட்டுப் போடுவாங்க. அதனாலதான் அங்க நிக்கிறாரு!"

மதுராந்தகம் கோஷ்டிகள் அரைமணி நேர வாண வேடிக்கையை நிகழ்த்திக்காட்டிவிட்டு, அறிவாலய வளாகத்தில் நுழைந்தனர்.

"தப்பு பண்ணிவிட்டேன். கலைஞர் என்னை மன்னிக்க வேண்டும். இனி என் கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும் போகமாட்டேன். பண்ணிய தப்புக்கு மன்னிப்புக் கேட்கவில்லை என்றால் என் எழுபது வயதுக்கு மதிப்பில்லாமல் போய்விடும்!

"ம.தி.மு.க.வில் தாழ்த்தப்பட்டவருக்கு இடம் ஒதுக்காததால் வெளியேறினேனே தவிர, சீட் தரவில்லை என்பதற்காக வெளியேறவில்லை. அந்திம காலத்தில் இந்தக் கட்டையைத் தூக்கிப் போட நாலுபேராவது வேண்டுமே என்பதற்காகத்தான் தி.மு.க.வில் இணைகிறேன்" என்று குரல் நடுங்க, தழுதழுத்த குரலில் சொன்னார். உணர்ச்சிமயமான காட்சி!

மதுராந்தகத்தில் தி.மு.க. அலுவலகக் கட்டடம் உருவாக ஆறுமுகம் உழைத்த உழைப்பைச் சுட்டிக்காட்டிப் பேசினார் கலைஞர். ●

— சிக்கல் சிவராமன்

(பீட்டர் அல்போன்ஸ் பேட்டி - பக்கம் 76)

"ஜெயலலிதா அணி நாட்டைக் கெடுக்கும் பிணி!"

— பீட்டர் அல்போன்ஸ்

"அன்றாடம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் காரணமாக, அரசுக்கு எதிரான மனோபாவம் பரவலாக மக்களிடையே இருப்பதாகவும் அதன் காரணமாக தி.மு.க. — த.மா.கா. அணி தோல்வியடையும் என்றும் எதிரணியினர் சொல்கிறார்களே?" என்று த.மா.காவின் பீட்டர் அல்போன்ஸிடம் கேட்டோம்.

"சென்ற தேர்தலில் ஜெயலலிதாவை விரட்டி அடிக்க வேண்டும் என்ற வேகம் மக்களிடம் இருந்தது என்று ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இந்த முறை ஊழலும், மதவாதமும் கைகோத்துக் கொண்டு வந்திருக்கின்றன. மக்களிடையே வேகம் இல்லாவிட்டாலும், இந்த ஊழல் – மதவாதக் கூட்டணியை மண்ணைக் கவ்வச் செய்ய வேண்டும் என்பதில் ஒரு அழுத்தம் இருக்கிறது. இதை எப்படிச் சொல்கிறேன் என்றால், சமீபத்தில் தலைவர் மூப்பனாருடன் தமிழகம் முழுவதும் சென்று வந்தேன். ஜெயலலிதா மீண்டும் வந்து விடுவார்களோ என்ற பயம்தான் மக்களிடம் அதிகமாக இருக்கிறது! தி.மு.க. ஆட்சியில் குறைகள் இல்லவே இல்லை என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் அதன் காரண மாக ஊழல் – மதவாதக் கூட்டணியை மக்கள் அங்கீகரிப்பார்கள் என்று நினைத்தால் அது முட்டாள்தனம். எங்களுடையது நாட்டைக் காக்கும் அணி! ஜெ. அணி, நாட்டைக் கெடுக்கும் பிணி! அந்தப் பிணியை – பொய் மூட்டையை, இந்தத் தேர்தலிலும் மக்கள் அடியோடு துரத்தியடிப்பார்கள்."

"த.மா.கா.வின் பிடிவாதம் காரணமாகத்தான் மார்க்ஸிஸ்ட் – ஜனதா தள கட்சிகளுக்கு உங்களுடைய அணியில் இடமில்லாமல் போய் விட்டது என்று சொல்லப்படுகிறதே?"

"பதினெட்டு மாதங்களுக்குள் வந்து விட்டதால் இதை இடைத் தேர்தல் என்று தான் சொல்ல வேண்டும். சென்ற முறை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மிகக் குறுகிய காலமே பதவி வகித்திருக்கிறார்கள். கூட்டணியில் இருந்தாலும் எங்கள் தனித் தன்மையைக் காப்பாற்றும் பொறுப்பு எங்களுக்கு உண்டு. இருந்தாலும் ஊழலுக்கும் மதவாதத்துக்கும் எதிரான சக்திகளை ஒன்றிணைக்க வேண்டும் என்பதற்காக எங்களால் ஆன முயற்சிகளை நாங்களும் செய்தோம். குறிப்பாக, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டுக்கும் வலது கம்யூனிஸ்டுக்கும் தலா ஒரு இடத்தைக் கொடுத்துவிட்டு, பின்னர் தலா ஒரு ராஜ்ய சபா இடங்களையும் தருவதாக தி.மு.க., த.மா.கா. இரண்டுமே உறுதியளித்தன. ஆனால் மார்க்ஸிஸ்ட்டுகள் இதற்கு ஒப்புக் கொள்ளாதது •மிக்க வருத்தத்தைக் கொடுத்தது என்பது உண்மை.

குறிப்பாக ஐ.மு. அரசுக்குத் தலைமையேற்க தேவகவுடாவுக்குப் பின் ஏற்பட்ட பிரச்னையில் எங்கள் தலைவருக்கு இழைக்கப்பட்ட அவமானத்தையும் பொருட்படுத்தாது மந்திரி சபையில் இணைந்தோம். அதற்குக் காரணம் ஐ.மு. அரசைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம்தானே! சென்ற தேர்தலில் ஜனதா தளம் தமிழ்நாட்டில் தி.மு.க. – த.மா.கா. அணியை எதிர்த்துத்தானே போட்டியிட்டது? ஆனால் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்தாலும் ஜனதா தளத்தைச் சேர்ந்தவர்களைப் பிரதமர்களாக ஏற்றோமே? எனவே த.மா.காவின் தியாகத்தையும், பெருந்தன்மையையும் மார்க்ஸிஸ்டுகளும் ஜனதா தளமும் உணர வேண்டும்."

"த.மா.காவின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாக்கப்பட்டிருக்கிறதே! தேர்தலுக்குப்

• இந்த இதழ் அச்சேறும் நேரத்தில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட், தனித்து ஆறு இடங்களில் போட்டி இடுவது என்ற தன் நிலையை மாற்றிக் கொண்டு, இரண்டு இடங்களில் மட்டும் போட்டியிடுவதாகச் சொல்லியிருக்கிறது.



பிறகு காங்கிரஸுடன் நீங்கள் இணைந்து விடுவீர்கள் என்கிறார்களே?"

"ஐ.மு. அரசுக்குக் கடைசி நிமிடம் வரை ஆதரவளித்தது த.மா.கா. தமிழ்நாட்டில் நாங்கள் இருபது இடங்களில்தான் போட்டியிடுகிறோம். எங்கள் அணி நாற்பது இடங்களில் போட்டியிடுகிறது. ஆனால் நாங்கள் நாற்பது பேரும் ஜெயித்தாலும் டெல்லியில் ஆட்சி அமைக்க முடியுமா? இன்று இந்தியாவை பயமுறுத்தும் மதவாத அணிக்கு எதிராக ஒரு அரசு அமைவதைத்தான் நாங்கள் விரும்புவோம். அது காங்கிரஸாகவும் இருக்கலாம்; ஐ.மு.வாகவும் இருக்கலாம். ஆனால் தேர்தலுக்குப் பின் எப்படிப்பட்ட நிலை உருவாகும் என்று தெரியாத நிலையில் த.மா.காவை சந்தேகக் கண் கொண்டு பார்க்கக் கூடாது. இந்தத் தேர்தலுக்குப் பின் நாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் மதநல்லிணக்கத்தையும் காப்பாற்றும் அரசு அமைக்க த.மா.கா. ஒத்துழைக்கும் என்று மட்டும் கூறிக் கொள்கிறேன்."

"ஜெயின் கமிஷன் குற்றம்சாட்டிய பிறகும், சோனியா பிரசாரம் செய்யத் துவங்கிய பிறகும், த.மா.கா., தி.மு.க. கூட்டணியில் இருப்பது ராஜீவுக்கு செய்யும் துரோகம் என்று தங்கபாலு சொல்லியிருக்கிறாரே!"

"தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட 'தளம்' காரணமாக ராஜீவ் கொலை செய்யப்பட்டார் என்று நீதிபதி ஜெயின் ஒரு தகவலாகத்தான் சொல்லியிருக்கிறாரே தவிர அதைத் தீர்ப்பாகச் சொல்லவில்லை. ராஜீவ் காந்தி கொலை விசாரணையில் இன்று தீர்ப்பு வெளியாகி இருக்கிறது. அதில் சொல்லப்பட்டிருக்கும் முக்கியமான ஒரு விஷயம் வை.கோவின் வாக்குமூலம். அது இன்று சர்ச் சைக்குரியதாகி இருக்கிறது. அந்த வை.கோவும் இணைந்துள்ள ம.தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டணியில்தானே காங்கிரஸையும் சேர்க்க விஜயபாஸ்கர ரெட்டி சென்னைக்கு வந்து ஜெ.வுடன் பேசிவிட்டுப் போனார்? தங்கபாலுவுக்கும் பிரபுவுக்கும் ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைப்பதில் முந்திக் கொள்வதில்தானே போட்டியிருந்தது?. அப்போதெல்லாம் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட ம.தி.மு.க., அ.தி.மு.க.வுடன் கூட்டணியில் இருப்பது காங்கிரஸுக்குத் தெரியாதா? ராஜீவ் சிந்திய ரத்தத்தால் அ.தி.மு.க. ஆட்சிக்கு வரவில்லை என்று மமதையுடன் பேசி, அவரை அவமானப்படுத்தியவர் ஜெயலலிதா. அவருடன் தானே காங்கிரஸ் கூட்டு சேர முயன்றது?

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காங்கிரஸ் என்றால் அது த.மா.காதான். தங்கபாலு போன்ற தனிநபர்கள், தலைவர் மூப்பனாரைப் பற்றி விமர்சனம் செய்யத் தகுதியில்லாதவர்கள்."

"மூப்பனாரும், சிதம்பரமும் உத்தமர்களா? பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் இவர்கள் சட்டத்தின் முன் நிற்க வைக்கப்படுவார்கள் என்று ஜெ. கூறியுள்ளாரே!"

"சுத்தப் பிதற்றல். எங்கள் தலைவர் மீதும் சிதம்பரம் மீதுமுள்ள ஆத்திரத்தால் பேசுகிறார். இன்றைக்கு ஜெ. மற்றும் அவர் உ.பி. சகோதரியின் மீதுள்ள பல ஊழல் - அந்நியச் செலவாணி மோசடி வழக்குகளில் குற்றப் பத்திரிகை பலமாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் நிதி அமைச்சர் சிதம்பரம். அந்தக் குற்றங்களிலிருந்து அவர்கள் சுலபத்தில் தப்ப முடியாது. ஆகவே அவற்றிலிருந்து தப்பிக்க, பா.ஜ.க. ஆட்சிக்கு வர ஆசைப்படுகிறார். ஊழலையும் மதவாதத்தையும் எதிர்த்து நாங்கள் அணி அமைத்திருக்கிறோம். ஆனால் ஜெயலலிதாவின் அணி தனிநபர் வழிபாட்டுக் கூடமாகத்தானே இருக்கிறது? தானும், தோழியும் எல்லா வழக்குகளிலிருந்தும் விடுபட வேண்டும் என்ற சுயநலத்தின் காரணமாக அமைக்கப்பட்டதுதானே ஜெயலலிதா கூட்டணி? சென்ற தேர்தலில் மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட ஜெயலலிதா, இப்போது பா.ஜ.க. என்ற முகமூடியோடு வந்திருக்கிறார். அந்த முகமூடியையும், அதற்குள்ளே பொதிந்திருக்கும் ஊழல் முகத்தையும் மக்கள் புரிந்தே வைத்திருக்கிறார்கள்; சரியான பாடம் புகட்டுவார்கள்!" ●

பேட்டி : **ஸ்ரீனிவாசன்**

(பக்கம் - 80 - நல்லகண்ணு பேட்டி)

தமிழ்ப்புத்தக வரலாற்றில் வர்த்தமானன் பதிப்பகத்தின் மாபெரும் புரட்சி !
எவரும் துணியாத முயற்சி !! ஒரே தலைப்பில் இவ்வளவு பெரிய நூலினை இதுவரை யாருமே வெளியிட்டதில்லை, அதுவும் இவ்வளவு குறைவான விலையில் !!!

முன் வெளியீட்டுத் திட்டத்தின் மூலம் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வியாச பாரதம், வால்மீகி இராமாயணம், ஸ்ரீமத் பாகவதம் ஆகிய நூல்கள் பெற்ற மாபெரும் வெற்றியினைத் தொடர்ந்து இப்போது இரண்டாம் பதிப்பாக - முன்வெளியீட்டு திட்டமாக வெளிவருகின்றன, பன்னிரு திருமுறைகள் !

அருட்செல்வர். டாக்டர். நா. மகாலிங்கம் அவர்களின்
பொருளாதரவுடன் மிகக் குறைந்த சலுகை விலையில் ! இலவச நூலுடன் !!

வழக்கம் போல்
சலுகை, சலுகை மேல் சலுகை, இலவச நூல் , தவணை முறை
ஆகிய அனைத்தும் உண்டு.

தேவாரம், திருவாசகம், திருமந்திரம், பெரியபுராணம்

முதலான நூல்கள் அடங்கிய

பன்னிரு திருமுறைகள்

மூலமும் உரையும் - 12000 பக்கங்களுக்கு மேல் - 24 தொகுதிகள்

விலை ரூ. 2500 . சலுகை விலை ரூ. 1000 மட்டுமே.

இச்சலுகை பிப்ரவரி 28 க்குள் பதிவு செய்வோர்க்கு மட்டுமே ! மேலும் முந்திக்கொண்டு பிப்ரவரி20க்குள் பதிவு செய்வோர்க்கு சலுகையுடன் 5 தொகுதிகளில் 1500 பக்கங்கள் கொண்ட **திருவிளையாடற் புராணம்** இலவசமாகக் கிடைக்கும்.

பன்னிரு திருமுறைகள் 24 தொகுதிகள்	ரூ. 2500.00
முன் வெளியீட்டுச் சலுகை	700.00
	ரூ.1800.00
இராமானந்தா அடிகளார் அறக்கட்டளையின் தலைவர் அருட்செல்வர். டாக்டர்.நா. மகாலிங்கம் அவர்கள் வழங்கும் உதவித் தொகை	800.00
சலுகை விலை	ரூ. 1000.00

பன்னிரு திருமுறை நூல்கள், ஆசிரியர்கள், பாடல்கள், தொகுதிகள், பக்கங்கள் - அட்டவணை					
திருமுறை எண்	நூல்கள்	ஆசிரியர்கள்	பாடல்கள்	தொகுதி	பக்கங்கள்
முதலாம் திருமுறை	தேவாரம்	திருஞானசம்பந்தர்	1469	2	992
இரண்டாம் திருமுறை	தேவாரம்	திருஞானசம்பந்தர்	1331	2	958
மூன்றாம் திருமுறை	தேவாரம்	திருஞானசம்பந்தர்	1348	2	1009
நான்காம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்	1069	1	827
ஐந்தாம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்	1015	1	648
ஆறாம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்	980	1	734
ஏழாம் திருமுறை	தேவாரம்	சுந்தரர்	1026	1	750
எட்டாம் திருமுறை	திருவாசகம் திருக்கோவையார்	மாணிக்கவாசகர்	656 +400 = 1056	2	1375
ஒன்பதாம் திருமுறை	திருப்பல்லாண்டு	திருமாளிகைத் தேவர் உட்பட ஒன்பது பேர் பாடியவை	301	1	294
பத்தாம் திருமுறை	திருமந்திரம்	திருமூலர்	3047	3	1295
பதினொன்றாம் திருமுறை	தொகுப்பு	காரைக்கால் அம்மையார் உட்பட பன்னிருவர் பாடிய பாடல்கள்	1069	2	1068
பன்னிரண்டாம் திருமுறை	திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்)	சேக்கிழார்	4286	6	2317

இந்தச் சலுகை விலையான ரூ. 1000த்தினை நான்கு தவணையில் செலுத்தலாம். அதாவது பிப்ரவரி 28க்குள் முதல் தவணை ரூ. 250 ; மார்ச் 28 க்குள் இரண்டாம் தவணை ரூ. 250 ; ஏப்ரல்28க்குள் மூன்றாம் தவணை ரூ. 250 ; மே 28க்குள் நான்காம் தவணை ரூ. 250 அனுப்புக.

ஒரே தவணையில் செலுத்துவோருக்கு சிறப்பு சலுகையாக ரூ.900 மட்டுமே!

ஜூன் பத்தாம் தேதியிலிருந்து, பணம் வந்த வரிசைப்படி நூல்கள் அனைத்தும், அதாவது பன்னிரு திருமுறைகள் 24 தொகுதிகள், திருவிளையாடற் புராணம் 5 தொகுதிகள் ஆக 29 தொகுதிகளையும் லாரி பார்சல் (A.B.T / TVS / POPULAR தங்கள் விருப்பப்படி) மூலம் அனுப்பப்படும். அனுப்பும் செலவினை மட்டும் லாரி அலுவலகத்தில் செலுத்தி புத்தகப் பார்சலை பெற்றுக் கொள்ளலாம். ஒரே தவணையில் (ரூ. 900) செலுத்துபவர்களுக்கும் இதன்படியே அனுப்பப்படும்.

நேரில் பதிவு செய்து நேரிலேயே பெற விரும்புவோர்க்கு : மேற் குறித்த மாதங்களில் எமது அலுவலகத்தில் பணம் செலுத்தி ரசீது பெற்றுச் செல்லலாம். ஜூன் மாதம் (சரியான தேதி ரசீதினில் குறித்து தரப்படும்) அனைத்து ரசீதுகளையும் கொண்டு வந்து கொடுத்து நூல்கள் அனைத்தையும் நேரிலேயே பெற்றுச் செல்லலாம். எமது அலுவலக நேரம் : 9 A.M. - 7 P.M. உணவு இடைவேளையின்றி. ஞாயிறு விடுமுறை.

மேலும் சில தகவல்கள் : 1. MO/DD அனுப்புவோருக்கு லாரி பார்சல் மூலம் தான் அனுப்பப்படும். நேரில் நூல்கள் தரப்பட மாட்டாது. 2. Cheque ஏற்கப்படமாட்டாது. 3. பிப்ரவரி 20 க்குள் பதிவு செய்வோர்க்கு மட்டுமே திருவிளையாடற் புராணம் (5 தொகுதிகள் இலவசம்)


இந்த அறிவிப்பில் அனைத்து விவரங்களும் தெளிவாக உள்ளதால், தொலைபேசியில் தொடர்பு கொள்வதையும் கடிதம் மூலம் விளக்கம் கேட்பதையும் தவிர்க்க வேண்டுகிறோம். இது எங்களைப் புத்தக வெளியீட்டிலே கவனம் செலுத்த பெரிதும் உதவும்.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

வர்த்தமானன் பதிப்பகம்
ஏ. ஆர். ஆர். வளாகம், 141, உஸ்மான் ரோடு,
தியாகராயநகர், சென்னை - 17 ✆ 8257995.
பனகல் பார்க் அருகில்

நன்முயற்சிக்கு நல்வாழ்த்துக்கள்

அருட்செல்வர். டாக்டர். நா. மகாலிங்கம்,
தலைவர், இராமலிங்கர் அடிகளார் அறக்கட்டளை.



"ஹேட்ரிக் அடிப்பார் வை.கோ!"

தமிழ்நாடு வலது கம்யூனிஸ்ட் செயலாளர் நல்லகண்ணு, சந்தோஷம் – வருத்தம் என்ற இரண்டின் கலவையாகவும் இருக்கிறார். மார்க்ஸிஸ்ட் கட்சியை தி.மு.க. – த.மா.கா. கூட்டணியில் இணைக்க முடியவில்லையே என்ற வருத்தம். தாங்கள் வைத்திருந்த இரண்டு தொகுதிகள் மீண்டும் கிடைத்து விட்டதில் சந்தோஷம்.

"இந்தத் தேர்தலில் மக்களின் முன்பு உள்ள பிரச்னைகள் என்ன?" என்று அவரிடம் கேட்டோம்.

"நிலையான ஆட்சி என்று பா.ஜ.க. பாவ்லா காட்டி வருகிறது. நிலையான ஆட்சியெல்லாம் நல்ல ஆட்சி அல்ல; 18 மாத கால ஐ.மு. அரசில், மாநிலங்களுக்கான நிதி பங்களிப்பு அதிகரிக்கப்பட்டது. எந்த மத்திய மந்திரி மீதும் ஊழல் புகார் கிடையாது. ஆனால் பி.ஜெ.பியின் யோக்யதை என்ன? குஜராத்தில் மக்கள் பெரும்பான்மை பலம் கொடுத்தார்கள் பா.ஜ.வுக்கு. அங்கு நிலையான ஆட்சியை அமைக்க முடிந்ததா அவர்களால்! உத்தரபிர தேசத்தில் கிரிமினல்களின் துணையோடு அரசைக் காப்பாற்றியிருக்கிறார்கள். உ.பி.யில் உள்ள பா.ஜ.க. அமைச்சரவையில் 32 பேர் மீது கிரிமினல் வழக்குகள் உள்ளன. 'நேர்மை' என்று பித்தலாட்டம் செய்யும் பா.ஜ.க.வின் லட்சணம் இதுதான். 'ஹிந்துத்வா' என்ற தங்கள் கொள்கையை அவர்கள் பூரணமாகக் கைவிட்டதாகத் தெரியவில்லை. ஆனால் தேர்தலுக்காக கொஞ்சம் பின்வாங்குகிறார்கள். பா.ஜ.க.வைப் பின்னாலிருந்து இயக்குவது ஆர்.எஸ்.எஸ்."

"தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சராசரி மக்கள், பஸ் கட்டண உயர்வு, ரேஷன் கடைப் பிரச்னைகள் போன்றவற்றால் அரசின் மீது அதிருப்தியாக இருப்பதாகப் பரவலாகப் பேசப்படுகிறதே..."

"நீங்கள் சொல்லும் குறைபாடுகள் இருந்தாலும், தி.மு.க. ஆட்சி மோசமான ஆட்சி அல்ல என்று அவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். கலைஞர் ஆட்சியில் காவிரி நீர்ப்பாசனப் பகுதிகளில் பொது மராமத்து வேலை பாராட்டும்படி நடந்திருக்கிறது. வெள்ள நிவாரணத்தில் எந்த பிரச்னையுமில்லை. பஞ்சாயத்து தேர்தல் நடந்தது. ஆகவே மக்களிடம் ஒரு விழிப்புணர்வு இருக்கிறது. சில குறைகள் இருந்தாலும், தமிழகத்தின் ஒட்டுமொத்த நலன் கருதி மீண்டும் தி.மு.க. – த.மா.கா. வ.கம்யூனிஸ்ட் கூட்டணிக்குத்தான் தங்கள் ஆதரவைத் தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நிகழும் குண்டு வெடிப்புகள், முன்பு எப்போதோ நடந்த நிகழ்ச்சிகளின் தொடர் விளைவுகள்தானே தவிர, கலைஞர் அதற்குக் காரணமல்ல!"

"உங்கள் வேட்பாளர் வை.கோவுடன் மறுபடி மோதுகிறாரே... வெற்றி வாய்ப்பு எப்படி?"

"இளைஞர். கம்யூனிஸ்ட் குடும்பத்தைச் சேர்ந்தவர். சிவகாசித் தொகுதியில் கடந்த முறை வெற்றி பெற்றவுடன் கிராமம், கிராமமாகச் சென்று நன்றி கூறியவர். பட்டாசு, தீப்பெட்டி தொழிலில் நெருக்கடி வந்தபோது, மத்திய, மாநில அரசுகளை அணுகிப் பரிகாரம் தேடியவர். அந்தப் பகுதியில் ஜாதிச் சண்டைகள் ஏற்பட்டபோது நடுநிலை வகித்து அமைதி காண உதவியவர். ஆனால் வை.கோவின் நிலை என்ன? ஜெயலலிதாவின் ஊழல் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்று ஆயிரம் கி.மீ. நடைப் பயணம் வந்தவர், அரசியல் லாபத்துக்காக அம்மாவுடன் இணைந்திருக்கிறார். அ.தி.மு.க.வின் பொருந்தாக் கூட்டணியை மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே அவருக்குத் தோல்வி நிச்சயம். சிவகாசியில் இந்த முறையும் தோற்று 'ஹாட்ரிக்' அடிக்கப் போகிறார் வை.கோ." ⚪

பிரியன்



“‘ரஜினி செல்வாக்கு’ என்கிற மாயை கலையப் போகிறது!”

அரசியல் சதுரங்கத்தில், எதிரணியை வீழ்த்த வியூகம் வகுக்கும்போது, மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர்கள் ஓரணியில் இடம் பெறுவது தவிர்க்க முடியாதது.

“இந்தத் தேர்தலில் மக்கள் முன் உள்ள பிரச்னைகள் என்ன?” – வாழப்பாடி ராம மூர்த்தியிடம் கேட்டோம்.

“ஒன்றா இரண்டா? மக்களுக்குப் பிரச்னைகளே வாழ்க்கையாகி விட்டது. நகரங்களில் உள்ள மாதச் சம்பளம் வாங்கும் வர்க்கத்தினருக்கு சுமைகளைத் தாங்கக் கூடிய சக்தி இருக்கலாம். ஆனால் இன்று கிராமப்புறங்களில் மக்கள் படும் அல்லலை நேரில் பார்த்தால்தான் புரியும். மூன்று மடங்காக உயர்த்தப்பட்ட பஸ் கட்டணத்தால் ஏழை மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அடுத்து பொது விநியோகம். இன்று எந்த ரேஷன் கடைக்கு வேண்டுமானாலும் சென்று மக்களிடம் விசாரித்துப் பாருங்கள். அவர்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டுவார்கள். அந்த அளவுக்கு இருக்கிறது ஆட்சியின் லட்சணம். அடுத்து சட்டம்–ஒழுங்கு. தினசரி ஒரு குண்டு வெடிப்பாகச் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. தி.மு.க.–த.மா.கா அணியின் மீது மக்கள் எவ்வளவு கோபமாக இருக்கிறார்கள் என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் எடுத்துச் சொல்லும். மத்தியில் எடுத்துக்கொண்டோமானால், வீழ்ந்து வரும் பொருளாதாரம். ரூபாயின் மதிப்பு சரிந்து கொண்டே வருகிறது. மக்களிடம் 'வாங்கும் சக்தி' அறவே போய் விட்டது. ஐக்கிய முன்னணி அடித்த கூத்தில் சர்வதேச அளவில் இந்தியாவின் இமேஜ் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மத்தியில் நிலையான ஆட்சி முக்கியம். இவற்றையெல்லாம் மக்கள் மனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எங்கள் அணியை முழுமையாக ஆதரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை!”

“நீங்கள் ஜெயலலிதாவை 'ஊழல்வாதி' என்று தாக்கியிருக்கிறீர்கள். பா.ஜ.க.வின் 'ஹிந்துத்வா' கோஷத்துக்கு எதிரானவர். விடுதலைப் புலிகளையும் கடுமையாகச் சாடியுள்ளீர்கள். இந்த நிலையில் அ.தி.மு.க., பா.ஜ.க., பா.ம.க., ம.தி.மு.க., ஆகியவற்றுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவது விசித்திரமாக இருக்கிறதே!”

“இதில் ஆச்சர்யப்பட என்ன இருக்கிறது? இப்போது இந்தியாவில் தேர்தலுக்கு முன்னால் அமைக்கப்படும் கூட்டணிகளும், பின்னால் அமைக்கப்படும் கூட்டணிகளும் சந்தர்ப்பவாதக் கூட்டணிகள்தாம். ஒரு உறுதியான கொள்கைகளின் அடிப்படையில் இவை உருவாவதில்லை. தேர்தலின்போது வோட்டுக்கள் சிதறாவண்ணம், அவற்றை ஒருமுகப்படுத்தும் விதமாகத் தொகுதிகளைப் பங்கிட்டுக் கொள்வதுதான் கூட்டணிக் கட்சிகளின் நோக்கமாக இருக்கிறதே தவிர, வேறெந்தக் கொள்கைப் பிடிப்பும் கிடையாது. அரசியல் சதுரங்கத்தில், எதிரணியை வீழ்த்த வியூகம் வகுக்கும்போது, மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர்கள் ஓரணியில் இடம் பெறுவது தவிர்க்க முடியாதது. மற்றபடி ஊழல் விவகாரத்தையெல்லாம் மக்கள் அவ்வளவு சீரியஸாகப் பார்க்கிறார்களா என்பது சந்தேகமே! ஊழல் செய்தவர்கள், குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை அடைந்தே தீர வேண்டும்.”

“தி.மு.க.–த.மா.கா. கூட்டணிக்கு ரஜினியின் ஆதரவும் காங்கிரஸுக்கு சோனியாவின் பிரசாரமும் எந்த அளவுக்கு உதவும்?”

“தவிர்க்க முடியாத இக்கட்டான சூழலில் வேறு வழியின்றி தி.மு.க.–த.மா.கா. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார் ரஜினி. இந்தத் தேர்தலில் தி.மு.க.–த.மா.கா. அணி மண்ணைக் கவ்வும் போது 'ரஜினியின் செல்வாக்கு' என்ற மாயையும் கலையப் போகிறது. மற்றபடி சோனியாவின் பிரசாரம், தமிழ்நாட்டில் காங்கிரஸ் என்ற கட்சி இன்னமும் இருக்கிறது என்று வெளிப்படுத்த உதவும்; அவ்வளவுதான்! வேறெந்தப் பயனும் இருக்காது.” ●

சந்திப்பு: **ப்ரியன்**

அட, இதுல இவ்ளோ விஷயம் இருக்கா?

"தோள் பக்கத்திலே சுரீல்னு அடிக்கடி வலியா? ஒரு ஈ.ஸி.ஜி. எடுத்துக்கிட்டு வந்துடுங்க", "அனீமியாவாக இருக்கலாம். எதுக்கும் ஒரு ப்ளட்–டெஸ்ட் செய்துக்கிட்டு வாங்க" "அடிக்கடி டயர்டா இருக்கா? வயசும் நாற்பதாகுது இல்லையா? ஒரு ஜி.டி.டி. டெஸ்ட் செய்துக்கிட்டாப் போச்சு." – தனது லெட்டர்–பேடில் டாக்டர் சகட்டுமேனிக்கு இப்படி ஏதாவது 'டெஸ்ட்'டுக்கு எழுதிக் கொடுக்க, "சோதனை மேல் சோதனை போதுமடா சாமி" என்று சம்பந்தப்பட்டவர்களுக்குக் கதறத் தோன்றலாம். எதற்காக டாக்டர்கள் இது போன்று சோதனைகளுக்கு நம்மை உட்படுத்துகிறார்கள்? "டாக்டரின் மச்சான் பக்கத்திலே புதுசாக லாப் திறந்திருப்பான். அவனுக்கும் நாலு காசு வர வேண்டாமா? அதுக்குதான்" "இதெல்லாம் டாக்டருக்கும் பரிசோதனை நிலைய உரிமையாளர்களுக்கும் நடுவே உள்ள ரகசிய ஒப்பந்தம். கமிஷன் தொகைதான் டாக்டரை இப்படிச் செய்யத் தூண்டுகிறது" என்றெல்லாம் குதர்க்கமாகப் பேசக் கூடாது. பலவித மருத்துவப் பரிசோதனைகளைப் பற்றி நமக்கு மேலோட்டமாகத் தெரிந்திருக்கும். கொஞ்சம் 'உள்ளே போனால்' தெரிந்து கொள்ள வேண்டிய, சுவையான பல விஷயங்கள் இவற்றில் உண்டு. அவற்றை எளிய முறையில் விளக்குவதே இந்தத் தொடரின் நோக்கம்.

ரத்த அழுத்தம்

ஒருமுறையாவது உங்கள் ரத்த அழுத்தம் என்ன என்பதை டாக்டர் சோதித்துப் பார்த்திருப்பார். ஒரு பட்டையை நம் கையில் இறுக்கக் கட்டிவிட்டு, அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ரப்பர் 'பம்ப்'பை ஏதோ சைக்கிள்- ட்யூபுக்குக் காற்றடிப்பதுபோல் விஷ்க் விஷ்க் என்று அடிப்பதையும், பிறகு "உங்கள் ரத்த அழுத்தம் 130/80" என்கிற வகையில் ஏதாவது சொல்வதைக் கண்டும்-கேட்டும் இருப்பீர்கள்.

எதற்கு 'விஷ்க்'குகிறார்? கருவியில் ஏறி இறங்கும் பாதரசத்தில் அவர் எப்படி அந்த '130'ஐயும், '80'ஐயும் கண்டுபிடித்தார்? நாம் பார்க்கும்போது பாதரசம் 130ஐத் தாண்டியும், 80க்குக் கீழும் கூடப் பயணம் செய்ததே!

மேலும், ரத்த அழுத்தத்தை அறிய அந்தக் கருவியில் உள்ள பட்டையைச் சுற்றுவதற்கு நம் முழங்கைக்குச் சற்று மேலே உள்ள பகுதியை மட்டுமே டாக்டர் ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்? மணிக்கட்டிலோ, அல்லது காலிலோ கூட அந்தப் பட்டையைச் சுற்றி இந்த ரத்த அழுத்தத்தைக் கண்டுபிடிக்கக் கூடாதா?

இதயத்தின் ரத்த அழுத்தத்தை சரியாக அறிந்து கொள்ள வேண்டுமானால் அதே 'லெவலி'ல் உள்ள ஒரு உடல் பகுதியில் சோதனையை நடத்துவதுதான் நல்லது. என்னதான் ரத்த ஓட்டம் சீராக நடைபெறுகிறது என்று கூறினாலும், 'ஃப்ளூயிட் ப்ரஷர்' எனப்படும் திரவ அழுத்தம் என்பது உடலின் தலைப் பாகத்திலும், கால் பாகத்திலும் வேறுபட்டுத்தான் இருக்கும். எனவேதான் இதயத்துக்கு நேர் குறுக்குக்கோட்டில் உள்ள (முழங்கைக்குச் சற்றே மேற்பட்ட) பகுதியில் அந்தப் பட்டையைச் சுற்றுகிறார் டாக்டர்.

"ரத்த அழுத்தம் பற்றி சகலமும் அறிந்தவன் நான்" என்பவர்களைக் கூடக் கொஞ்சம் திணற அடிக்க வேண்டுமானால், "ரத்த அழுத்தத்தை அளக்க உதவும் கருவியின் பெயர் என்ன?" என்ற கேள்வியை அவரிடம் கேளுங்கள். "ஸ்பிக்னோமானோமீட்டர்" (Sphigno monometer) என்ற கரடு முரடான பெயர் அதற்கு. ரொம்பவும் புராதனமான கருவி இது. இதற்குப் பிறகு, காற்

ரழுத்தத்தில் மட்டுமே ரத்த அழுத்தத்தைக் கண்டு பிடிக்கும் கருவியும் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. தவிர எலெக்ட்ரானிக் கருவிகள்கூட மார்க்கெட்டுக்கு வந்துவிட்டன. டாக்டரின் துணை இல்லாமல் நாமேகூட இதைப் பயன்படுத்தி எளிதாக நமது ரத்த அழுத்தத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

என்றாலும், டாக்டர்கள் பலரும் "old is gold" என்றபடி கரடுமுரடான பெயர் கொண்ட இந்தப் புராதன பாதரசக் கருவியைத்தான் பயன்படுத்துகிறார்கள் என்றால் அதற்குக் காரணம், சென்டிமெண்ட் அல்ல.



காற்றழுத்தக் கருவியில் எந்தவித சிறிய லீக்கேஜும் இல்லாதிருக்க வேண்டும். எலெக்ட்ரானிக் கருவிகளைப் பொறுத்த வரையில் அதன் பாட்டரி 'டவுனா'கும் நிலையில் ரத்த அழுத்தத்தை ஏறுமாறாக ஏற்றிக் காண்பித்துத் தொலைத்து, அதனாலேயே நமது ரத்த அழுத்தம் நிஜமாகவே எகிறச் செய்ய வாய்ப்பு உண்டு. இதனால்தான் பழைய கருவிக்கே ஆதரவு வோட்டு.

கருவியைப் பயன்படுத்தும்போது இன்னொன்றையும் கவனித்திருப்பீர்கள். ஏதோ கையே தெறித்துவிழும் அளவுக்கு அந்தப் பட்டை நமது கையை இறுக்கும் - இதுவரை டாக்டர் தனது 'விஷ்க்'கைத் தொடர்ந்து கொண்டிருப்பார். ஏன் தெரியுமா? அதாவது நம் உடலின் ரத்த அழுத்தத்தைவிட அதிக அழுத்தத்தை அந்தப் பகுதியில் கொடுப்பதன் மூலம் சில நொடிகளுக்கு பகுதியில் ரத்த ஓட்டத்தைத் தடை செய்கிறார் டாக்டர். தடை என்றால் ஒரேயடியாக ரத்த ஓட்டம் நின்று விடாது! மிகக் குறைவான வேகத்தில் ரத்தம் அங்கே பாய்ந்து கொண்டிருக்கும். இந்த சமயத்தில் பட்டையின் இறுக்கத்தை டாக்டர் குறைக்க, (அதாவது காற்றைக் கொஞ்சம் இறக்கி விடுவதன் மூலம்), ரத்தம் வேகமாக அங்கு பாய்கிறது. ரத்தம் அப்படித் திமிறிக் கொண்டு பாயும் போது, ஒருவித 'டக் டக்' சப்தம் டாக்டரின் காதுகளில் ஸ்டெதாஸ்கோப் மூலம் கேட்கும். (கருவியை இயக்கும் போதே அழுத்தப்படும் இடத்தில் டாக்டர் தனது ஸ்டெத்தின் முனையை வைத்திருப்பார்.) அந்தச் சப்தம் கேட்கும் சமயத்தில் பாதரசம் எந்த அளவைக் காட்டுகிறதோ, அதுவே 'சிஸ்டாலிக் ரத்த அழுத்தம்' - அதாவது ரத்த அழுத்தத்தைக் குறிக்கும் இரண்டு எண்களில் பெரியது.

பிறகு ரத்த ஓட்டத்தின் வேகம் குறையத் தொடங்குகிறது. ஒரு கட்டத்தில் பட்டை நம் கைப் பகுதியின் மீது கொடுக்கும் அழுத்தம், ரத்த ஓட்டத்தின் வேகத்தை எந்தவிதத்திலும் இடைஞ்சல் செய்யாத அளவுக்கு ஆகிவிடும். அந்த நொடியில் காதில் கேட்கும் ஒலி நின்று விடும். இதைத்தான் 'டயஸ்டாலிக் ரத்த அழுத்தம்' என்கிறார்கள்.

120/80 என்ற அளவில் ரத்த அழுத்தம் இருந்தால் அதுவே 'நார்மல்' உடல்நிலையைக் குறிக்கிறது என்ற கருத்து பரவலாக இருக்கிறது. ஆனால் "மூக்குக் கண்ணாடியும், குழந்தைச் சிரிப்பும், வழுக்கை மண்டையும் யாருக்கு இருக்கிறதோ அவரே மகாத்மா காந்தி" என்று சொல்வதற்குச் சமம் அது. விவரங்கள் அடுத்த வாரம்!

— ஜி.எஸ்.எஸ்.

டிராக்டர்

வனத்துறை செக்போஸ்ட் வந்ததும் கபாலி லாரியை நிறுத்தினான். கட்டைத் தடுப்பு இறக்கி 'கேட்' போட்டிருந்தது.

லாரியிலிருந்து உயரக் கீழே குதித்து அரை வட்டம் சுற்றி செக்போஸ்ட் கார்டிடம் சலாம் அடித்துப் பல்லிளிக்க அவனுக்கு அலுப்பாக இருந்தது.

இரண்டு தடவை ஹார்ன் அடித்தான்.

மார்கழிக் குளிர். நல்ல நிலா வெளிச்சம். காடே தூங்கும் மௌனம்.

செக்போஸ்டிலிருந்து ஒரு தலையும் எட்டிப் பார்க்கவில்லை. அழுது வடிந்து ஒரு விளக்கு எரிவது மட்டும் ஜன்னல் கண்ணாடியில் தெரிந்தது.

"மவனுங்களுக்கு ஒரு பில்டிங், மேஜை நாற்காலி கெடைச்சிட்டாப் போதும். பெரிய ரேஞ்சாபீசர் ஆயிடுவானுங்க" என்று கபாலி வாய்விட்டு முனகினான்.

"நான் வேணும்னா எறங்கி பாத்துட்டு வரவா?" என்று ஒரு உபசாரத்துக்குக் கேட்டு வைத்தான் பக்கத்தில் உட்கார்ந்திருந்த கோவிந்தன்.

"நீ போனியானா என்ன புண்ணியம்? நீ யாருய்யான்னுவானுங்க. லாரியிலே டிராக்டர் ஏத்தி வந்திருக்கேன்னு சொல்லணும். இல்லாத லா பாயிண்ட் பேசி கழுத்தறுப்பானுங்க. நீ வாணாம். இரு" என்று மீண்டும் இருமுறை ஹார்னை நீட்டி முழக்கி அழுத்தினான் கபாலி.

கேபினுக்கு மேலே டிராக்டர் காவலுக்காகப் படுத்திருந்த க்ளீனரின் தலை கீழே தொங்கி, எட்டிப் பார்த்தது.

"இன்னா அண்ணாத்தே?" முகம் கீழே தொங்கக் கேட்டான் க்ளீனர் மாரி.

கபாலிக்குக் காட்டமாக வந்தது. அடக்கினான்.

"ஆங்... கொத்து பரோட்டாவும் சேமியா பாயாவும் மாமியார் வூட்டிலே ரெடியாம்! கொஞ்சம் எறங்கி வாங்கிக்கறீங்களா?" என்று இடக்காகக் கேட்டான்.

அந்த இடக்கின் பின்னால் ஒரு சவுக்கடி உண்டு. எனவே மாரி தலையை இழுத்துக் கொண்டான்.

அடுத்த நிமிஷம் ஏணிப்படியில் இறங்கி சர்வாங்கமும் ஒடுங்கத் தலைகுனிந்து கீழே குதித்து கேபின் கதவருகே நின்றான் அவன்.

"இந்தாடா சோமாறி! பர்மிட்டைக் காட்டிட்டு என்ட்ரி புக்கிலே ஸைன் பண்ணிட்டு ஜல்தி ஓடியா!" என்று காகிதம் ஒன்றை நீட்டினான் கபாலி.

அடுத்து உட்கார்ந்திருந்த டிராக்டர் கோவிந்தன் அதை வாங்கி, கீழே நிற்கும் க்ளீனருக்குக் கை மாற்றினான்.

தலைகுனிந்து செக்போஸ்டு கட்டடம் நோக்கிப் போகும் கோவிந்தனைப் பார்த்து, "செம்மறியாடு மாதிரி பம்மறானேன்னு நெனச்சிடாதே கோவிந்தா! நீ என்னா படிச்சிருக்கேன்னு சொன்னே? பிஎஸ்ஸியா? ஒன்னை மாதிரி எம்பத்தியேழு பிஎஸ்ஸிக்கு, மவன் தண்ணி காட்டிடுவான். அவிச்ச முழுங்கிடுவான். போன தபா தும்பாவுக்கு ராக்கெட் சாமான் ஏத்தினு போனேன். வழியிலே ஆபனவர் 'பிரேக்'கிலே சைலேண்டா ஒரு கோட்டர் ஏத்திக்கினு வந்து நிக்கிறான்" என்று இடைவெளி விட்ட கபாலி சட்டென்று ஏதோ ஞாபகம் வரவே, "ஆமா சரக்கு இருக்கா?" என்று கேட்டான்.

"இருக்கே" என்று பதில் சொன்னான் கோவிந்தன்.

"கோட்டரா?" ஏமாற்றம் வந்தால் கதாரிக்கக் குறைத்துக் கேட்டான் கபாலி.

"நீங்க நம்ப மாட்டீங்களே. கேபின் லைட்டைப் போடு" என்றான் கோவிந்தன்.

கபாலி போட்டான். நீலவெளிச்சம் பரவியது. பிளாஸ்டிக் பை ஜிப் உரித்து கோவிந்தன் ஒரு பாட்டிலைத் தூக்கிக் காட்டினான். ஃபுல் பாட்டில்.

"நீ படிச்சவன் இல்லே? அதான் படா உஷார்."

"ஒண்ணுதான் இருக்குன்னு நெனச்சிக்காதீங்க. இன்னும் ரெண்டு இருக்கு. ஒண்ணு மலை மேல இருக்கற புல்டோஸர்காரனுக்கு. இன்னொண்ணு நாம மலைல யூஸ் பண்ண."

"புல்டோஸர்காரன் போயிட்டிருந்தான்னா?" கபாலி சந்தேகத்தை வெளியிட்டான்.

"எப்பிடிப் பூடுவான்? அவனுக்கு ரிட்டர்ன் பேட்டாவை மொதலாளி எங்கையிலே தான் குடுத்து அனுப்பிச்சிருக்காரு."

"மவன் புலியூர் மலைக்குளிருலே



வையவன்

வதபட்டுக்கினு இருப்பான்'' - கபாலி புல்டோசர் டிரைவரை நினைத்து அனுதாபப்பட்டான்.

"நாளைக்கு நான் மாட்டப் போறேனே! இருபத்தி மூணு ஏக்கரா.. அந்தக் காட்டுப் பசங்க மத்தியிலே என்ன ரோதனையோ... சோறு ,தண்ணி கெடைக்குமோ கெடை க்காதோ..."

கோவிந்தனின் கற்பனைத் திகில் கபாலியைப் பாதித்தது.

"கோவிந்தா, நீ ஏம்பா இவ்ளோ படிச்சுட்டு காடுமலைன்னு டிராக்டர் ஓட்டறே?"

"புளிச்ச கதைய ஏன் வாய்லேர்ந்து புடுங்கறே? வேல கெடக்கிலே. டிராக்டர் டிரைவிங் கத்துக்கடா, பினாமி டிராக்டர் வாங்கித் தர்றேன்னு சொன்னாரு முதலாளி. தெருத் தெருவா அலையறதுக்கு இப்படி டிராக்டர் எடுத்துக்கினு ஊர் ஊரா அலையறது மேலு இல்லியா?" என்று அனுதாபத்தை அலட்சியமாகக் கடந்தான் கோவிந்தன்.

கபாலி, மாரி வருகிறானா என்று திரும்பிப் பார்த்தான்.

செக்-போஸ்ட் கட்டடத்திலிருந்து மாரி மெதுவாக லாரியை நோக்கி வந்து கொண்டிருந்தான். நடையிலேயே ஏதோ பிரச்னை தென்பட்டது.

"இன்னாடா?"

"ஒங்களையே எறங்கி வரச் சொல்றாருங்க அண்ணாத்தே."

"ஏன்?"

"இன்னமோ பிராப்ளமாம்."

அரைப் பெருமூச்சு விட்டு கேபின் கதவைத் திறந்து கீழே குதித்தான் கபாலி. அரை வட்டம் சுற்றி செக்போஸ்ட் கட்டடம் நோக்கி நடந்தவன், ஐந்து நிமிஷமாகியும் திரும்பவில்லை.

வெளியே குளிரில் மாரி நின்றான்.

உள்ளே லாரியில் கோவிந்தன்.

"புலியூருக்கு போயிருக்கியாப்பா நீ?"

உடனே மாரி பதிலளித்தான்.

"ரெண்டு வாட்டி போயிருக்கேன். செம குளிரு சாமி. பல்லு கடகடத்துடும்."

"இன்னும் எவ்வளவு தூரம்?"

"அறுபது கிலோ மீட்டரு இருக்கு"

கோவிந்தனுக்குக் கேட்பதே கடுப்பாக இருந்தது.

அதற்குள் செக்போஸ்ட் கதவுக்குள்ளிருந்து கபாலி தலை நீண்டது.

இரண்டாவது பட்டுப்புடவை இவருக்கு!

கல்கி–சரவணா ஸ்டோர்ஸ் பட்டுப் புடவைப் பரிசுப் போட்டி–2க்காக வேண்டுமென்றே தவறாகப் பிரசுரிக்கப் பட்ட தலைப்பு– 'ஊசி எங்கே? போயே போச்சு! இட்ஸகான்!'

இட்ஸ்–ல், 'ஸ' மேல் புள்ளி இல்லாத தைக் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கண்டுபிடித்துவிட்ட ஆயிரக் கணக்கான வாசகர்களுக்குப் பாராட்டுக்கள். ஆனால் பரிசு? குலுக்கலில் தேர்வான அதிர்ஷ்டசாலி:

செல்வி,
34, ஏகாங்கிபுரம்,
4வது தெரு, அயனாவரம்,
சென்னை – 600 023

கங்கிராட்ஸ்!

"டேய் மாரி"

அது ஓர் அழைப்பு சமிக்ஞை.

"அண்ணாத்தே" என்று அதற்குப் பதில் அளிப்பது போல் ஓடினான் மாரி.

ஒரு நிமிடத்தில் திரும்பி வந்தவன், "அண்ணாத்த ஒங்கள சரக்கை எடுத்துக்கினு எறங்கி வரச் சொல்றாங்க சார்" என்று கூறினான்.

லாரிப் பயணத்தில் டிரைவர்தான் காப்டன். அவன் கட்டளைதான் சட்டம்.

கோவிந்தன் பிளாஸ்டிக் பையின் ஜிப்பை உரித்து, புல் பாட்டிலை எடுத்துக் கீழே நின்ற மாரியிடம் நீட்டி விட்டுக் கதவு திறந்து பத்திரமாக டயரில் ஒரு கால் வைத்து இறங்கி ஒரு சின்ன குதிகுதித்து தரை சேர்ந்தான்.

எதிரே மலைப்பாதை. நீண்டு படிப்படியாக உயர்வது தெரியும் நிலா வெளிச்சம். பகந்தாவர மூலிகை வாசனை. எங்கோ கத்தும் சில் வண்டு. கடல் மட்டம் 1897 அடி என்று தலைகீழாகத் தொங்கும் அம்புக்குறி பொறித்த கல்.

கோவிந்தன் இறங்கி, லாரியின் மேல் நிற்கும் டிராக்டரைப் பார்த்தான். அதன் மீது அவனுக்கு எப்போதுமே ஒரு கவர்ச்சி உண்டு. கிட்டத்தட்ட ஒரு சின்னக் காதல்.

வலுவாகக் கயிறுகளும் கொக்கிகளும் மாட்டி, கல்யாணப் பெண் போல் அது நிற்பதாக அவனுக்குத் தோன்றியது. எந்த அசம்பாவிதமும் நேராது இதுவரை வந்து விட்டதில் ஒரு திருப்தியை அனுபவித்துக் கொண்டு கோவிந்தன் செக்போஸ்ட் கட்டடத்தில் நுழைந்தான்.

ஒரு பெரிய மேஜை. கை உடைந்த நாற்காலி. ஒரு ஸ்டூல். எதிரில் சுவர் ஓரம் ஒரு கயிற்றுக் கட்டில். மின்விளக்கு இல்லை. மேஜை மீது ஒரு கரிச்சிம்னி லாந்தர்.

"வா கோவிந்தா! கார்டு நம்ப பழைய தோஸ்த்து. மொசல் அடிச்சு ப்ரை பண்ணி வச்சிருக்காராம். சப்போட்டுக்கு சரக்கு இருக்கான்னு கேட்டாரு. மொசல் கறி சாட்டு ரொம்ப நாளாச்சன்னேன். ஒன்னையும் இட்டாரச் சொல்லிட்டாரு."

கபாலி ஸ்டூலில் உட்கார்ந்திருந்தான்.

கரிச்சிம்னி வெளிச்சத்தில் கண்ணாடியணிந்த கார்டின் முகம் சிரிப்புடன் கோவிந்தனை வரவேற்றது.

அறை மூலையில் அரையிருள். ஒரு முனகல். கன்றுக்குட்டியோ, நாயோ புரள்வது போல நிழல் அசைந்தது. அது என்ன ஜந்து?

"ஆக புலியூருக்கு டிராக்டரும் போகப் போவுது?"

கார்டு குரலில் உற்சாகமா எகத்தாளமா வெறுப்பா என்று விளங்காத ஒரு சுரபேதம்.

கோவிந்தன் ஃபுல் பாட்டிலை மேஜை மீது நிறுத்தினான்.

கார்டின் முகத்தில் ஒளி கூடியது. கோவிந்தன் கவனித்தான்.

"ஐயா... ஐயா... கவுறு கைய அறுக்குதுய்யா. அத மட்டும் அவுத்து உடுங்கய்யா."

பூதாகாரமாகப் பின் சுவரில் விழுந்திருந்த கார்டின் நிழல் மறைவில் ஓர் ஈனக்குரல் ஒலித்தது.

ஓ... அசைந்தது ஜந்துவல்ல. மனிதன். கோவிந்தன் திரும்பி அவனைக் கூர்ந்து கவனித்தான்.

அவன் கைகள் பின்னால் மடித்துக் கட்டப்பட்டிருந்தன. கால்களில் ஒற்றைப் பிரிக் கயிறு நாலைந்து சுற்று சுற்றிய கட்டு.

"என்ன விவகாரம்?" என்ற கேள்வி கோவிந்தனிடம் தன்னை மீறி வெளிவந்தது.

கார்டு பதில் சொல்லவில்லை. ஆதிக்கப் பிரதேசம் யாருடையது என்பதையும் அத்துமீறலுக்கு அனுமதியில்லை என்பதையும் உணர்த்துவதற்காக.

ஆனால் கார்டு திரும்பினான்.

"ஏண்டா சொறி நாயி! லைசென்ஸ் இல்லாம துப்பாக்கி வச்சிருக்கத் தெரியுது இல்லே... பாரஸ்ட்காரன் கண்ணுலே மசாலா தடவிட்டு, மானு மொசலு சுடத் தெரியுதுல்லே..." என்று கத்தினான்.

கபாலியும் கோவிந்தனும் அமைதி காத்தனர்.

கைகள் கட்டப்பட்டவன் பேசவில்லை.

"கை எரியுதாமில்லே கையி" புல்டோசர் டிரைவரைச் சுடப் போனியாமே... தப்பித்

நவறி குண்டு பாஞ்சிருந்தா அவரு பொண் டாட்டி புள்ளைங்க வயிறே வெந் திருக்குமேடா"

கார்டின் குரலில் உக்ரம் கூடியது.

நிறைய மடிப்பும் நெளிப்புமாக அந்த முகம் விகாரமாயிற்று. சில நொடிகளுக்கு முன் சிரித்து வரவேற்ற முகமா இது? கோவிந்தன் வியப்போடு கவனித்தான்.

கைகள் கட்டப்பட்டவன் பேசவில்லை.

கார்டு இன்னும் சற்று உச்சத்திற்குப் போனார். பார்வையாளர்கள் இருந்தால் உயரும் அதிகார மமதை, அவனிடம் தலை காட்டியது.

சில அச்சேற முடியாத வசவுகளை உதிர்த்தபின், "ஒங்களையெல்லாம் நிக்கவச்சுத் தோலுரிக்கணும்டா" என்று முடித்தார்.

"ஐயா அந்த டைவரு எந் தங்கச்சிய...." என்று கை கட்டப்பட்டவன் ஏதோ சொல்ல முயன்றான்.

"ஆமாடா, ஒந்தங்கச்சி பெரிய பத்தினி... ஒண்ணுந் தெரியாத பாப்பா. இவரு கீழே யிருந்து மேலே போயி அவள புத்தம் புதுசாக் கற்பழிக்கப் போயிட்டாரு..." என்று இறங்கிய உச்சலிருந்து மீண்டும் ஓர் ஏற்றம் தொடங் கினான் கார்டு.

சூழ்நிலை சூடேறி விட்டது என்பதை கோவிந்தன் உணர்ந்தான்.

அது தணியுமா?

மேஜை மேல் ஒரு ஃபுல் பாட்டில். விஸ்கியல்ல; ரம். கொஞ்சம் ஊற்றினாலேயே தீப்பற்றிக் கொள்ளும்.

கோவிந்தன் தீவிரமாக யோசித்தான்.

"புல்டோசர் வுட்டு உங்க ஊரு நெலத் தைச் சலவ் போட்ட மாதிரி சதுரம் பண்ணிட் டானுங்களேன்னு ஒங்க ஊர்க்காரனுங்க குதிச்சானுங்களேடா... இதோ இதோ... இதோ இவுரு டிராக்டரு இட்டாந்துட்டாரு."

கார்டு கையைக் கோவிந்தனுக்கும் நிழலில் கவிழ்ந்து விழுந்திருக்கிறவனுக்குமாக மாற்றி மாற்றி நீட்டிக் காட்டினார். பின்பு தொடர்ந் தார்.

"எருமத்தோலு சோமாறிங்க... நீங்க எந்திரிக்கவே ஏழு மணியாவும். இன்னும் சொகுசாத் தூங்குங்கடா இனிமேல். ராவுக்கு சிட் இல்லை. ஒங்களுக்கு டிராக்டர் வந் திடுச்சு."

கார்டின் கோபம் திசை மாறி ஜ்வலிப்பதை கோவிந்தன் கவனித்தான்.

இது அவனுக்கு அறிமுகமான கோபம் தான். மனிதர்களையும் மாடு கலப்பை களையும் நிலத்திலிருந்து நீக்கும் நாகரீகத்தின் மீது ஏற்பட்ட பிற்போக்குக் கோபம்.

கூலி ஏர் ஓட்டி ஜீவனம் நடத்தும் சில கிராமங்களில் அவன் சந்தித்த கோபம் அது. இடம் மாறி இங்கே எப்படி வந்திருக்கிறது?

என்ன இந்த கார்டு? நண்பனா... எதிரியா? ஊழலா, மாழலா?

எடைபோட வேண்டியது அவசியம்!

சற்றும் எதிர்பாராத விதத்தில் கார்டின் கோபம் தணிந்தது. மேஜை மேல் நின்றிருந்த ஃபுல் பாட்டிலைத் திருப்பி விளக்கு வெளிச் சத்தில் லேபிளைக் கவனித்தான்.

சட்டென்று கார்டின் முகம் மலர்ந்தது. சரக்கு அவனுக்குப் பிரியமானது போலும்!

என்ன மாற்றம் அந்த முகத்தில்? அவனை வரவேற்ற மலர்ச்சி மீண்ட மாற்றம்.

"ஆரம்பிக்கலாமா?" கார்டு கேட்டான்.

"இங்கியேவா?" என்று கபாலி கேட்டான்.

"ஏன் வேணாங்கறியா... வெளியே குளி ருதே தொரை" என்று கார்டு சிரித்தான்.

சிரிக்கும்போது கண்ணும் பற்களும் அவன் எவ்வளவு வெள்ளை என்பது போல் பளிச் சிட்டன.

சுற்றிலும் பார்த்துவிட்டு, "கீழே வேணா ஒக்காந்துப்போம். க்ளீனரைக் கூப்பிட்டு அந்தப் பாய ஓரமா விரிக்கச் சொல்றியா. எங்க வாட்சரு சோறு எடுத்தார வூட்டுக்குப் போயிருக்கான்" என்றான்.

வெளியே எழுந்து குரல் கொடுக்கப் போன டிரைவர் கபாலியை அமர்த்திவிட்டு, "இரு. நானும் ஒங்க டிராக்டரைப் பார்க்கத் தாவல.. நானே கிளீனரை இட்டாறேன்" என்று எழுந்தான் கார்டு.

மேலும் விளக்குவதற்கு ஆள்காட்டி விர லைக் காட்டினான். உபாதை நீக்க வேண்டு மாம்.

செக்போஸ்ட் அறையில் கரிச்சிம்னி வெளிச்சத்தில் கைகால்கள் கட்டப்பட்ட ஒரு

"ஏன் நம் தலைவர் அந்த பிச்சைக்காரனை கிச்சு-கிச்சு மூட்டிகிட்டிருக்கார்?"

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண லாம்னு யாரோ சொன்னாங்களாம்!"

— என். தமிழ்ச்செல்வன்



புலியூர்க்காரனும் புலியூருக்குப் போகிற இருவருமான ஒரு வித்தியாச மௌனம் நிலவியது.

"ஒனக்குப் புலியூரா...?" முதலில் மௌனம் கலைத்தான் டிராக்டர் கோவிந்தன்.

பதில் வரவில்லை.

"பேசேண்டா" கபாலி எரிச்சலாகக் கத்தினான்.

"விட்டுருங்க... அவன் வெறுப்பிலே இருக்கறான்" என்று புலியூர்க்காரனைப் பேச வைக்கிற முயற்சியிலிருந்து பின்வாங்கினான் கோவிந்தன்.

மாரி உள்ளே நுழைந்ததும் மடமடவென்று வேலை நடந்தது. சுருட்டி வைத்த பாயை விரித்து மூலையில் இருந்த தம்ளர்களைத் தனியே பிரித்து ஆளுக்கொன்றாய் வைத்து, பித்தளை போகணியிலிருந்த முயல் இறைச்சி வறுவலை இலைகளில் தனித்தனியே பகிர்ந்து, ஒரே சுறுசுறுப்பு.

கரிச்சிம்னி விளக்கு புலியூர்க்காரன் முன் தள்ளி வைக்கப்பட்டிருந்தது.

கோவிந்தன் அந்த அரை வெளிச்சத்தில் தாடி மீசையும் சிக்குத்தலையுமாக ஊமைக் கோபம் மின்னும் புலியூர்க்காரன் மோவாய் எலும்பு புடைத்த முகத்தைக் கவனித்தான்.

கடல் மட்டம் 1897 அடி என்று தலைகீழ் அம்புக்குறி பதித்த நட்டுவைத்த கற்பலகை ஏனோ நினைவு வந்தது.

கார்டு ரம் பாட்டிலை விளக்குக்கு நேரே தாழ்த்தித் தாழ்த்திப் பார்த்துப் பார்த்து கிளாஸ்களில் ஊற்றி விநியோகித்தார்.

தானும் பருகினார்.

கோவிந்தன் எதிர்பார்த்தது போல கார்டு சூடேறிச் சுடர் விடவில்லை. சரக்கு உள்ளே போகப் போக நெகிழ்ச்சியுற்றான், படிப்படியாக.

கோவிந்தன் கூர்ந்து அவனையே கவனித்தான். சிப்சிப்பாகப் பருகியவாறே கார்டு குஷி கிளம்பிப் பேசத் தொடங்கினான்.

மலைக்கு வருகிற வாகனங்கள். கீழ்நாட்டிலிருந்து மலையேறுகிறவர்கள். மலையில் குடியிருக்கிற ஆதிவாசிகள் என்று ஒவ்வொரு கோணம் கோணமாக அவன் எடை போட்டு வைத்திருப்பதை எல்லோரும் விழுந்து விழுந்து சிரிக்கிற மாதிரி கார்டு பேசிக் கொண்டே போனான்.

எல்லாரையும் விட அதிகம் சிரித்தவன் டிரைவர் கபாலி. சாப்பாடு கொண்டு வந்த வாட்சர் கூடச் சிரித்து விட்டான்.

அவனுக்கும் சமத்துவம் அளிக்கும் பெருந்தன்மை கார்டிடம் உடனே வெளிப்பட்டது.

அவனுக்கும் ஒரு தம்ளர் ஊற்றிக் கொடுத்தான். இன்னொரு ஆளும் சேர்ந்து விட்டதால் கார்டு அடிக்கிற ஜோக்குகளுக்குச் சிரிப்பொலிகள் அந்தக் கட்டடத்தில் அதிகரித்தன.

கோவிந்தன் புலியூர்க்காரனை அடிக்கடி பார்த்துக் கொண்டான்.

அதில் ஒரு மாற்றமுமில்லை.

ஒரு மிருகத்தை கை கால் கட்டிப் போட்டு விட்டு ஈவிரக்கமின்றி சுற்றி உட்கார்ந்து ஐந்து பேர் சிரிக்கிற மாதிரி கோவிந்தனுக்குத் தோன்றியது.

கரிச்சிம்னி வெளிச்சத்தில் அந்த ஃபுல் பாட்டில் கிட்டத்தட்ட முக்கால் பகுதி குறைந்தது.

கோவிந்தன் குறைவாகவே குடித்தான். புலியூர்க்காரனையே கவனித்தான்.

அதைக் கார்டும் பார்த்திருக்க வேண்டும்.

"என்னா டிராக்டர்காரு இந்த மலையானையே மொறைச்சுட்டிருக்காரு? அவனுக்கும் கொஞ்சம் ஊத்தி வுடலாமேன்னு ஐடியாவா?" என்று கார்டு கேட்டான்.

கோவிந்தன் செய்த தொடர்பற்ற புன்னகையில் கார்டு ஒரு புதிய பரிமாணம் எய்தினான்.

"யோவ் வாட்சரு... அந்த மலையான் கைக்கட்டை அவுறுய்யா" என்று உத்தரவிட்டான்.

"ஐயா... வந்து... இவன் பொல்லாதவன்" என்று விட்டு விட்டு வாட்சர் செய்த ஆட்சேபணையைக் கண்டு கார்டு வெறித்தனமாய்ச் சிரித்தான்.

"இவனுங்க ஊருக்கு மொத தடவையா டிராக்டரு போவப் போவுது! இவனும் அதைக் கொண்டாடத் தாவல" என்று கூறி விட்டு மேலும் சிரித்தான்.

மற்ற மூவரும் சிரித்தனர்.

"என் மாமியார் தூக்கத்துல நடந்தே கதவைத் திறந்து வெளியே போயிட்டாங்க..."

"அதை ஏன் இவ்வளவு சந்தோஷமா சொல்ற?"

"அவங்க தூங்கிட்டிருந்தது ஏரோப்ப்ளேன்லயாச்சே!"

— நெல்லை எம். தங்கவேலு





மணிமாலா

மாதாந்திர டெபாசிட் திட்டம்

KVB மணிமாலா – இதில் ஒவ்வொரு மாதமும் நீங்கள் டெபாசிட் செய்யும் சிறு தொகையானது, ஒரு சுமையாகவே தெரியாது. ஆனால் அது வளர்ந்து வளர்ந்து நாங்கள் வழங்கும் வட்டியுடன் சேர்ந்து மிகப் பெரும் தொகையாகப் பின்னர் உங்களுக்குக் கிடைக்கும்.

KVB மணிமாலா. மிகச் சிறிய விஷயம் என்றாலும், உங்கள் வாழ்வில் மிகப் பெரிய மாற்றத்திற்கு வழி வகுக்கும்.

Anugrah 2477/97

KVB

Since 1916

கரூர் வைஸ்யா பாங்க் லிட்.

கரூர் - 639 002

A.D. நவநீதன்
சேர்மன்

நாளும் நம்பிக்கை வளர்க்கும் வங்கி

கோவிந்தன் சிரிக்கவில்லை.

இது குடிவெறிப் பேச்சல்ல. கார்டுக்கு குடிக்கிற நாலு பேர் மத்தியில் குடிக்காதவன் ஒருவன் உட்கார்ந்திருப்பதால் ஏற்படும் நெருடலும் இல்லை.

கார்டுக்கு, நவீன நாகரிகம் மலை ஏறுவதில் சம்மதமில்லை என்று கோவிந்தனுக்குத் தோன்றியது.

மலைவாசி தன் கையில் கட்டிய கயிறு அவிழ்ந்ததும் ஒன்று மாற்றி ஒன்றால் கைகளைப் பிசைந்து பிசைந்து வலி போகத் தடவி விட்டுக் கொண்டான். கார்டையே முறைத்துப் பார்த்தான்.

''குடிக்கிறியாடா?'' கார்டு அவனிடம் கேட்டான்.

மலைவாசி பதிலளிக்கவில்லை.

''குடிடா'' திடீரென்று வெறிபிடித்தவன் போல் கத்தி உத்தரவிட்டான் கார்டு. "அவனுக்கு ஊத்திக் குடுடா."

மலைவாசியிடம் தம்ளர் நீண்டது. அவன் மறுப்பான் என்று கோவிந்தன் நினைத்தான். அது பொய்த்தது.

மலைவாசி வாங்கி ஒரே மூச்சில் குடித்துவிட்டு தம்ளரை லொட்டென்று கீழே வைத்தான்.

"கபாலி... நமக்குப் போதுமில்லே?" என்று கார்டு டிரைவரைப் பார்த்துக் கேட்டான்.

"ஏந்தலைவா இப்படிக் கேக்கறே?" என்று கபாலி விழித்தான்.

''இல்ல... இந்த மலையானுக்கு தாகம் அதிகமாயிருக்கு. ஃபினிஷ் பண்ண வுட்டுருவமே."

கோவிந்தன் பார்வை பாட்டிலுக்குத் தாவிற்று. இன்னும் அரைக் கால்வாசி மிச்சம்.

"செஞ்சுட்டாப் போச்சு" என்றான் கபாலி.

அது குடிகாரர்களிடையே வழக்கமாக ஏற்படும் விசித்திர வக்கிரம். தம்மிடையே குடிக்கிறவன் ஒருவனை 'ப்ளாட்' ஆக்கி ரசிக்கிற குரூர திருப்தி.

இப்போது என்ன நடக்கப் போகிறது?

கோவிந்தன் கவலையோடு யோசிக்கத் தொடங்கினான்.

"வாட்சர்! அந்த பாட்டிலையே மலையான்கிட்டே குடுத்துடுய்யா."

எல்லார் பார்வையும் மலைவாசி மீதே திரும்பியது. அவன் தன் முன் நீண்ட பாட்டிலை வாங்கிக் கொண்டான்.

தண்ணீர் இல்லாமல் 'ரா'வாக நிறுத்தி வாய்க்குள் சாய்த்து மலைவாசி இரண்டே நிமிஷங்களில் அதைக் காலி செய்து விட்டான்.

இப்போது அறை நிசப்தமாயிற்று.

ஏதோ அசாதாரணமாக ஒன்று நடக்க இருப்பதை எதிர்பார்க்கும் ஒரு கிளர்ச்சி

உருவாவது கோவிந்தனுக்கு நன்றாய் உணர முடிந்தது.

முதலில் அந்த மலைவாசியிடமிருந்து ஒரு கேவல். நீளமாக ஒரு ரயில் எஞ்சின் கூவுவது போன்ற ஓலத்தோடு.

அடுத்து அவன் அலறி அழப் போகிறான்!

கோவிந்தன் நினைத்தான். அது நடக்கவில்லை.

அவன் ஏதோ புகார் கூறுவது போல் ஓவென்று கத்தினான்.

"மலைக்கு ரோடு போட்டீங்க! காட்டையே கொள்ளையடிச்சீங்க."

டிரைவர் கபாலி கார்டைப் பார்த்தான்.

கார்டு கோவிந்தனைப் பார்த்தான்.

கோவிந்தன் இருவரையும் பார்த்துவிட்டு மலைவாசி மீது பார்வை திருப்பினான்.

"பள்ளியோடம் வச்சீங்க! படிச்சு முடிச்சவன் ஒவ்வொருத்தனா கெளம்பி மலைக்கே தலை முழுவிட்டுக் கெளம்பிப்பூட்டான். வெவரம் சொல்றவன் வளி காட்றவன் ஒருத்தன் இல்லய்யா."

கோவிந்தன் துணுக்குற்றான்.

எல்லாருமே ஒரு கூண்டில் நிற்க, மலைவாசி கேள்வி கேட்கிற மாதிரி ஒரு பிரமை எழுந்தது.

"புல்டோசர் ஓட்டி மேடுபள்ளம் எல்லாம் சவரம் பண்ணி சமமாக்கிட்டீங்க. இப்ப டேக்டரு இட்டுனு போறீங்க."

மலைவாசியின் குரல் சுருதி மாறி கிறீச்சிட்டது.

"ஐயாமாருங்களே."

யாரும் சற்றும் எதிர்பாராமல் தன் கையிலிருந்த காலி பாட்டிலை அவன் ஓங்கித் தரையில் அடித்து உடைத்தான்.

பாட்டில் நொறுங்கிய ஓசை அறையில் நிலவிய கேள்விமுறையற்ற மௌனத்தை மிதித்தது.

"ஐயா... அவன் பாட்டில ஒடச்சுட்டான். இதுக்குத்தான் இவனுங்களுக்கு எடமே குடுக்கக் கூடாதுங்கறது" என்றான் வாட்சர்.

"யோவ் நீ சும்மாருய்யா". என்று கார்டு அவனை அதட்டினான்.

உடைந்த பாட்டிலை மலைவாசி மீண்டும் ஒருமுறை ஓங்கித் தரையில் அடித்தான். நொறுங்கிய ஒலி தொடர்ந்தது.

"இதெல்லாம் இல்லாம நாங்க சந்தோசமா இருந்தோம். சௌக்கியமா இருந்தோம்."

மலைவாசியின் குரல் தாழ்ந்தது.

அதற்கு அர்த்தமுண்டா, அல்லவா என்று உணர்வதை விட ஒரு மனிதனின் குரல் இப்படி இறங்கி வெளிப்படுவதின் துயரக் கவர்ச்சியில் கோவிந்தன் முற்றிலும் ஸ்தம்பித்தான்.

"இப்ப டேக்டரு இட்டுனு போறீங்க! எங்க ஒரு கலப்பை மாடு கன்னுங்களையெல்லாம் மொடக்கிப் போட்டுடுவீங்க. நாங்க இன்னாய்யா கதி? கூலி ஏரு ஓட்டறவன் எப்படிய்யா வெளங்குவான்?"

மலைவாசி மீண்டும் பாட்டிலை நொறுக்கினான். கண்ணாடிச் சில்லுகள் சிதறி பாய் மீது வந்து விழுந்தன.

"டேய் மலைப்பண்ணி... நிறுத்துடா" என்று கத்தினான் கார்டு. அவன் குரலில் ஒரு மிருக வெறி.

மலைவாசி மௌனமானான்.

"வாட்சர், அவன் கால் கட்டையும் அவுரு"

கார்டின் கட்டளை மேலும் ஏதாவது விபரீதம் நடத்துமே என்பது போல் "சார்... வந்து" என்று வாட்சர் இழுத்தான்.

"சொல்றதைச் செய்டா" கார்டு மறுபடியும் தன் அதிகாரத்தை நினைவூட்டான்.

மலைவாசியின் கால் கட்டுகளை அவிழ்த்தான் வாட்சர்.

"ஒடஞ்ச பாட்டில் துண்டு ஒண்ணு விடாமல் பொறுக்குடா நாயே. ஒரு துண்டு இருந்தாலும் ஒன்ன கட்டுத் தள்ளிடுவேன்" என்று கார்டு உறுமினான்.

இரவு முற்றும் நீங்குமுன் அந்த செக்போஸ்டை விட்டு மலை ஏறியது டிராக்டர் சுமந்த லாரி.

ஒரு டிராக்டரை அதுவரை கண்டறியாத புலியூர் மலைக் கிராமச் சாலையில் காலை பத்து மணிக்கு ஆள் துணையோடு அதை கோவிந்தன் இறக்கினான்.

புல்டோசரில் சமன்செய்யப்பட்ட பூங்குளத்து முதலாளி, ஒரு மலைவாசியின் பினாமிப் பெயரில் வாங்கிய நிலத்தை நோக்கி கோவிந்தன் அதை ஓட்டிச் சென்றான்.

மலை நிலம் சதுரமடிக்கப்பட்டு மிகவும் பக்குவமாக இருந்தது. டிராக்டர் பதமாக இறங்கி ஓடத் தொடங்கியது. ஓட்டுவது சுகமாக இருந்தது.

ஆனால் புலியூரில் இறங்கியதில் இருந்து செக்போஸ்டில் பாட்டில் துண்டுகளைப் பெருக்கி எடுத்து வெளியே கொண்டு போய்க் கொட்டி விட்டு மீண்டும் கை கால் கட்டுண்டு கார்டும் வாட்சரும் கொடுத்த அடியுதைகள் வாங்கிய அந்த மலைவாசியின் முகம், அந்த கரிச்சிம்னி வெளிச்ச நினைவில் அடிக்கடி வந்தது.

'சீ' என்று அதை விரட்டியடித்தான்.

அது ஓடிப் பதுங்கிவிட்டு மீண்டும் எட்டிப் பார்த்தது. மறுபடி மறுபடி முயன்றான். முடியவில்லை. அது நீங்கவில்லை.

மறப்பதற்கும் மனசு மரத்துக் கல்லாவதற்கும் சற்று காலம் பிடிக்கும் என்று கோவிந்தன் நினைத்துக் கொண்டான். ●

பீகாருக்குப் போனா பிஸ்தா

“தேர்தல் சுற்றுப் பயணம். தில்லி, உ.பி., பீகார், மேற்கு வங்கம். இந்தா பிடி, தில்லி டிக்கெட். அங்கிருந்து ரூட் பிடித்துக் கொண்டு போவது உன் சாமர்த்தியம்” என்று வீரத் திலகம் இடாத குறையாக வழியனுப்பி வைத்தார் ஆசிரியர்.

ஆகவே, கிளம்பி புதுதில்லி போய்ச் சேர்ந்து, போன ஜோலியை முடித்துக் கொண்டு ஒரு டிராவல் ஏஜெண்டைப் பிடித்து, பீகாரில் பாட்னாவுக்கு ரயிலில் டிக்கெட் புக் செய்தாயிற்று.

“ராத்திரி கிளம்பினா, மறுநாள் காலை பதினோரு மணிக்கு பீகார் போயிறலாம்” என்றான் அந்த ஆசாமி.

விடைபெறும் விதமாக, தில்லியில் நமக்குப் பேருதவி புரிந்த பெருந்தலைகளிடம் சென்று, டாட்டா சொல்லப் போனேன்.

“சென்னைக்குத்தானே?”

“இல்லை சார். பீகார் போறேன். அங்கேருந்து வெஸ்ட் பெங்கால்.”

“ஏன்? ஹௌராவுக்கு இங்கேருந்தே நேரா போயிடலாமே?”

“பாட்னாவுல வேலை இருக்கே? லாலுவைப் பார்க்கலாம்னு... அப்புறம் யஷ்வந்த் சின்ஹா, ராப்ரி தேவி...”

ஒரு பூச்சியைப் பார்ப்பது போல் பார்த்தார், அந்தச் செய்தி நிறுவன உயர் அதிகாரி.

“பீகாருக்கெல்லாம் தனியாவா போறீங்க? பீ கேர்!”

பீகாரில் என்ன இருக்கிறது? சென்னை வாலா என்றால், ரன்பீர் சேனைக்காரர்கள் கட்டு விடுவார்களா? புரியவில்லை.

“இதுக்கு முன்னால் போயிருக்கீங்களா?” என்றார் திரு. கிருஷ்ணமூர்த்தி. மத்திய அமைச்சர் ஜெயந்தி நடராஜனின் பர்ஸனல் செகரட்டரி.

“போனதில்லை சார்!”

உடனடியாக அவரிடமிருந்து வந்த கேள்வி: “ஆபீஸ்ல ஏதாவது தப்புத்தண்டா செஞ்சீங்களா? பீகாருக்குப் போறதுன்னா - அதுவும் தனியா-மகா பெரிய பனிஷ்மெண்ட்!” என்றார்.

வயிற்று வலி என்று கப்ஸா விட்டு இரண்டு நாள் மட்டம் போட்டது கூட இல்லையே என்று யோசித்தவனாக, “என்ன சார் இப்படி சொல்றீங்க. நம்ம நாட்டுல ஒரு ஸ்டேட்தானே?” என்றேன் சுருதி குறைந்த குரலில்.

“அதெல்லாம் சரிதான். பார்த்துப் போங்க” என்றார், ரொட்டி சாப்பிட்டுக் கலவரமாகியிருந்த வயிற்றை மேலும் கலவரப்படுத்தும் விதமாக.

ஒருவர் இல்லை, இருவர் இல்லை. புது தில்லியில் நமக்கு உதவிய அத்தனை நண்பர்களும் ‘பீகாருக்குப் போகிறேன்’ என்றதும் புறநானூற்று வீரனைப் போர்க் களத்துக்கு அனுப்புகிற தாய் அல்லது தாரம் போலத் தான் கவலைப்பட்டார்கள்.


எதற்கும் இருக்கட்டும் என்று அஜ்மல்கான் ரோடு பிளாட்பாரத்தில் ஒரு பேனா கத்தி வாங்கிக் கொண்டு (“எதுக்கு? கொய்யாக் காய் நறுக்கவா?”- ஒரு பத்திரிகையாள நண்பர்) தூபான் எக்ஸ்பிரஸில் ஏறி உட்கார்ந்தேன்.

‘ரயிலில் உடைமைகள் ஜாக்கிரதை!’ என்று எல்லாருமே படித்துப் படித்துச் சொல்லியிருந்தார்கள். ஆனாலும், ரிஸர்வ் செய்த பெர்த் டிக்கெட். சீட்டோடு ‘இணைத்துப் பூட்டி



விட்டால் போயிற்று. ரிஸர்வேஷன் கம்பார்ட்மெண்ட்டில் என்ன பெரிய பிரச்னை வந்துவிடப் போகிறது என்கிற தெனாவட்டு.

ஆனால் ஒரு அரைமணி கூட ஆகியிருக்கவில்லை. துக்ளக்காபாத் ஸ்டேஷனில் ஒரு கூட்டம் ஏறிற்று. பெரிய பெரிய சாக்கு



மூட்டைகளும் பழக் கூடைகளுமாக கம்பார்ட்மெண்ட்டையே ஆக்கிரமித்துவிட்ட அன் ரிஸர்வ்டு ஆசாமிகள். வெகு சுவாதீனமாக எனது பெர்த்தில் ஏறி உட்கார்ந்து விட்ட ஒரு பீகாரி, உபரியாக அங்கேயே சுருட்டு இருசினை வேறு ஆன் செய்து விட, என் ஒட்டை இந்தியில் அவருடன் முதல் யுத்தத்தைத் தொடங்க வேண்டியதாயிற்று.

"பாய் ஸாப்! ஏ ஹமாரா ரிஸர்வ்ட் ஸீட் ஹை! ஆப் நீச்சே சலியே!"

"ரிஸர்வ்ட் ஸீட்? தோ க்யா?" என்றார் சர்வ அலட்சியமாக.

அடுத்தடுத்த ஸ்டேஷன்களில் மகானுபாவர்கள் சாதா டிக்கெட்டுடன் சுவாதீனமாக ஏறி, கிடைத்த இண்டு இடுக்குகளிலெல்லாம் குளிருக்குக் கம்பளியைப் போர்த்திக் கொண்டு மூட்டை மூட்டையாக உருளத் தொடங்க, டி.டி.யிடம் புகார் செய்தால், "மே குச் நை கர் ஸக்தா ஸாப்! ஏ தோ மாமூல் ஹை!" என்றார் அப்பாவியாக.

ஆளைக்கிளப்ப மாமூல் கேட்கிறாரோ என்று பார்த்தால் அந்த ரூட்டில் இப்படி யார் வேண்டுமானாலும் எந்த கம்பார்ட்மென்டிலும் ஏறி உட்காருவது சாதாரண விஷயம் என்று சொன்னார்.

இரண்டு மணி நேரத்தில் புளி அடைத்தாற் போல் ஜனம் கூடி விட, படுக்க அல்ல; உட்காரக் கூட முடியாதபடிக்குத் திண்டாட வேண்டியதாகிவிட்டது. நமது சூட்கேஸின் மேல் குத்துக்காலிட்டு அமர்ந்திருந்த ஒரு ஆயா, படு உக்கிரமாக பீடியை வலித்து வலித்து என் முகத்தில் விட, ஒரு பாப்பா அங்கேயே மூச்சா போக, இன்னொரு கோஷ்டி அசைவ சமாசாரங்களை இழுத்து இழுத்துத் தின்றுவிட்டுப் பேர் பாதியை ஸீட்டுக்குக் கீழேயே கொட்டி மூட (ஜன்னலைத் திறந்தால் குளிரால் பனி மனிதராகி விடக் கூடும்!) இன்னொரு ஜென்மம் வாந்தி எடுக்க, விநாடிகளில் ஒரு குப்பை வாரி கணக்காக மாறி விட்டது பெட்டி.

இரவு பதினோரு மணி. ஹோம்கார்டு எனப்படுகிற ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு வீரர்கள் வந்து, அவரவர் பெட்டி படுக்கைகளைப் பிரித்துக் காட்டச் சொன்னார்கள்.

நான் குண்டு ஏதும் வைத்திருக்கவில்லை என்று நிரூபிக்கப் பெட்டியைத் திறந்ததும், உள்ளிருந்த ஒரு பிஸ்கெட் பொட்டலத்தை வெகு உரிமையோடு எடுத்துக் கொண்டார் அந்த கனோஷ் பீடி ஆயா. 'தோ! தோ!' என்று பத்துப் பன்னிரண்டு பேருக்கு அது விநியோகமாகி, இறுதியில் காகிதமும் தூளும் என் கைக்கு வந்து சேர்ந்தபோது விசுவாமித்திரர் மாதிரி மனசுக்குள் அந்தக் கெய்விக்கு சாபம் கொடுக்கத் தொடங்கினேன். சோறு இல்லை. ரொட்டி சகிக்காத காரணத்தால் வாங்கி வைத்த என் ஒரு நாள் உணவு அது! ஹே ராம! ஹோ சுயா!


ஹோம் கார்டு காவலர்கள் சிகரெட் புகையை எல்லாப் பெட்டிகளிலும் பைகளிலும் ஊதி ஊதி இல்லாதவற்றைத் தேடி ரகளை செய்து போனதும் நம் அருகில் கருப்புப் போர்வையைக் காலோடு தலையாக இழுத்துப் போர்த்திக் கொண்டு, சுருட்டும் திருட்டுச் சிரிப்புமாக இருந்த அந்த இருட்டு பீகாரி, இடுப்பிலிருந்து ஒரு ரிவால்வரை எடுத்



துக் காட்டி, ஹோம் கார்டை ஏமாற்றிய பெருமையை விழிகளிலேயே காட்டிக் கலவரமூட்டினார்.

அநேகமாக எல்லாருமே கத்தி அல்லது கையளவு நாட்டுத் துப்பாக்கி வைத்திருந்தார்கள். பாதுகாப்புக்கு என்று சொல்லப்பட்டாலும் அந்தக் குளிர் இரவில் மொழி புரியாத கும்பலிடையே சிக்கிய எனக்கு, எது பாதுகாப்பு என்று புரியவில்லை.

இரவு முழுவதும் படுக்க முடியாமல் கண் எரிய உட்கார்ந்திருந்துவிட்டு, அதிகாலை கொஞ்சம் நிலை மறந்த போது ரயில் எங்கோ நின்று கொண்டிருந்தது. அது ஸ்டேஷன் இல்லை. இரண்டு புறமும் தண்ணீர் ஓட, ஓர் உயரமான பாலத்தின் நடுப்பகுதி அது. காச்மூச் என்று சப்தம் காதுகளைத் தாக்க, பதறி எழுந்த போது, பெரும்பாலான மக்கள் ரயிலின் கூரை மேலேறி நின்று கொண்டிருப்பது தெரிந்தது. பாதி ஜனம் கதவுகளை அடைத்துக் கொண்டு. இன்னும் கொஞ்சம் பேர் ஜன்னல் கம்பிகளுக்குள் தலையைக் கொடுத்துக் கொண்டு!



"க்யா ஹுவா?" என்றேன் பச்சை பாலகனாக.

தலைக்குத் தலை என்னென்னவோ சொன்னார்கள். எப்படியும் எனக்குப் புரிய வைத்துவிடும்விதமாக. ஆனால் ஓர் அட்சரம் புரியவில்லை! காரணம்-பீகாரி மொழி! (இந்தி தெரிந்தவன்கூட அதில் பேசாமல் பீகாரியில் பேசிப் பிராணனை வாங்குகிறார்கள்!)

சுமார் அரை மணி நேரம் இன்னது நடக்கிறது என்று புரியாமலேயே ஏதோ அசம்பாவித பூதத்தைக் கற்பனையில் சிருஷ்டித்துக் கொண்டு நடுங்கிக் கொண்டிருந்தேன். இறங்க வழி இல்லை. கீழே தண்ணீர். வேண்டுமானால் ஜன்னலைப் பிடித்துக் கொண்டு கூரை மேல் ஏறலாம். தவறி விழுந்தால் கங்கையின் கிளை நதி ஒன்றில் கதி மோட்சம் பெறும் பாக்கியம். நீச்சல் கற்காத அவலம் உறைத்து, அந்த எண்ணத்தை அடியோடு விட்டொழித்தேன்.

பத்து மணி ஆயிற்று. ஒரு டீ கூட சாப்பிட்டிருக்காததால் வயிற்றில் ஒரு யுகப் புரட்சி தொடங்கி இருந்தது. பீகாரிகள் வெறும் புகையிலையிலேயே பசியை வெல்கிற வித்பன்னர்கள். சுண்ணாம்புடன் ராவான புகையிலையைச் சேர்த்துக் கசக்கி, வாயில் அடக்கிக் கொண்டு சீட்டுக்குக் கீழேயே க்ளச் க்ளச் என்று துப்பிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வழியாகப் பதினோரு மணிக்கு விஷயம் புரிந்தது.

"ஜாவ், ஜாவ்!" என்று ஹோம் கார்டுகள் அனைவரையும் லெட்ரின் பக்கம் இழுத்துப் போய் சிறு வழி மூலம் வெளியேற்றி, பாலத்துக்கு வெளியே கரை இறக்கிவிட, ஆயுதமும் நாயும் தாங்கிய அதிகாரிகள் தண்டவாளத்தைச் சோதனை போட்டு, குழாய்ப்புட்டு குழாய் சைஸில் ஆங்காங்கே சில இரும்புக் குழாய்களைத் தோண்டி எடுக்க - வெடிகுண்டு!

குழாயின் உள்ளே வெடிமருந்து வைத்து, களிமண் அடைத்து, திரி வயர்கள் மினுங்கப் புதைக்கப்பட்டிருந்தன. ஒரு சிறு தீப்பொறி பட்டால் போதும், அவுட்! பாலமும் ரயிலும் பத்திரிகையாளப் பரிதாப ஜென்மமும் பரலோகம் போக வேண்டியதுதான்!

"இங்கேயெல்லாம் குண்டு வைக்கப்படுவது நியூஸ் அல்ல; வெடித்தால்தான் நியூஸ்" என்றார் ஓர் அதிகாரி, சர்வசாதாரணமாக.

ஊரில் காத்திருக்கும் உறவு மக்களையும் அலுவலக ஆத்மாக்களையும் தமிழ் கூறும் நல்லுலகையும் எண்ணிப் பார்த்து ஒருகணம் நடுங்கி, உடனே சுதாரித்து, மறுபடி ரயிலில் ஏறி மூட்டை முடிச்சுக்களை சரிபார்த்துக் கொண்டேன். பலர் மிதித்த மிதியில் என் பெட்டி தன் உருவத்தில் நாலில் ஒரு பங்காகச் சுருங்கியும் நிறம் மாறியும் மேல் உறை கிழிந்தும் ஒரு பன்னாடைத் தோற்றம் பெற்றிருந்தது.

ஒருவழியாகப் பாட்னா வந்து சேர்ந்த போது மணி இரவு ஒன்பது! "ஏ காடி தூபான்(புயல்) நை! ஹவா (வெறும் காற்று) பீ நை!" என்று யாரோ சொல்லிக் குமுற, ஓர் ஆட்டோ பிடித்து, "ஏதாவது நல்ல லாட்ஜுக்குப் போப்பா" என்றேன்.

நல்ல லாட்ஜாகப்பட்டது முனிசிபாலிடி பொதுக்கழிப்பிடம் மாதிரி இருந்தது. புறாக் கூண்டு அறைக்கு நாள் வாடகை நூற்றைம்பது ரூபாய். ஆனால் ரசீது கிடையாது என்று கண்டிப்பாக மறுத்தான் ரிஸப்ஷன் இளைஞன். "இங்கே பெரும்பாலும் இப்படித்தான்" என்

றார் யு.என்.ஐ. செய்தி நிறுவன நண்பர் ஒருவர்.

இடம் சரி; சாப்பாடு? எண்ணெய் காணாமல் நேர் தீயில் வாட்டிய ரொட்டியும் ஜாண் நீளப் பச்சை மிளகாயும்! ஒரு சப்ஜி? தால்? நை, நை, என்று சொல்லிவிட்டார்கள். செய்த பாவம் என்னவென்று யோசித்தபடி கண்ணீர் மல்க அந்தக் கார மிளகாயைக் கடித்துக் கொண்டு (மக்கள் வேர்க்கடலையைக் கூட இதே மிளகாயைக் கடித்துக் கொண்டுதான் சாப்பிடுகிறார்கள்!) தின்று தீர்த்து விட்டுப் படுத்தேன்.

மறுநாள் வேலை தொடங்கி அலைய ஆரம்பித்தபோது, "ஏபிசி ஏரியாவுக்குப் போகிறீர்களா?'' என்று கேட்டார் ஒரு பத்திரிகையாள நண்பர்.

அதென்ன ஏபிசி ஏரியா?

"ஆரா, பக்ஸர், சட்னா – பீகாரின் முக்கிய க்ரைம் தலங்கள்!"

துப்பாக்கி மற்றும் நாட்டு வெடி மருந்தைக் குடிசைத் தொழிலாகச் செய்கிற இடங்களாம் அவை!

''கொலை, கொள்ளைகள், கற்பழிப்பு, கடத்தல், தீ வைத்தல், குண்டு வைத்து அழித்தல் என ஒவ்வொரு ஜோலிக்கும் ஒவ்வொரு குழு உண்டு. தனித்தனி ரேட்! எல்லாம் அரசியல்வாதிகள் வளர்த்துவிட்டது. அப்புறம் சாதித் தலைவர்கள்!'' என்றார் தீபக் மல் ஹோத்ரா என்ற பத்திரிகையாளர்.

ஆரா தொகுதியில் சுற்றும்போது கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. ஏனெனில் அங்கே சில ஆஜானுபாகுக்கள் கருப்புப் போர்வையுடன் 'க்யா?' என்று கேட்பதே, 'கொல்லவா?' என்கிற தொனியில் இருந்தது!

தொட்டதற்கெல்லாம் வெட்டுக்குத்து, அடிதடி, தீ வைப்பு நடக்கிறது என்கிறார்கள். போலீஸ் நிலையங்களில் பெரும்பாலும் வழக்குகள் பதிவுசெய்யப்படுவதே இல்லை என்றும் கட்டைப் பஞ்சாயத்துகளின் மூலமாகவே தீர்க்கப்படுகிறதென்றும் சொல்கிறார்கள்.

போதாக்குறைக்கு தலித் சேனா ரன்பீர் சேனா என்கிற பெயர்களில் தனியார் ராணுவம்! மாநிலத்தில் நடக்கிற பெரும்பாலான குற்றங்களில் நாலில் ஒரு சதவீதம்தான் வெளி மாநிலத்துக்குப் போகிறது. அதிகாரத்தில் இருப்பவர்களின் நெட் வொர்க் சாமர்த்தியம் அத்தகையது என்கிறார்கள். "இதெல்லாம் என் அரசியல் எதிரிகள் எனக்கெதிராகச் செய்கிற சதி!" என்று பிரதி தினம் முகச்சவரம் செய்து கொள்வது போல லாலு அறிக்கை விட்டுக் கொண்டிருந்தாலும் தலைமுறை தலைமுறையாக பீகாரில் இந்தத் தீவிரக் கொலையர்களின் அராஜகம் இருந்து வருகிறதுதான்!'' என்றார் ராஞ்சிக்காரரான (தமிழர்) பாலசுப்ரமணியம்.

பீகாரில் படித்தவர்கள் மிகக் குறைவு. மக்களின் அறியாமைதான் அரசியல்வாதிகளின் பெரும்பலமாக இருக்கிறது. அதனால்தான் கல்வித்தரம் உயர்ந்து விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்கிறார்கள்'' என்றார் பாலசுப்ரமணியன்.



கல்வி இல்லாததால் வேலை இல்லை. வேலை இல்லாததால் தீவிரவாதக் கும்பல்களில் பல இளைஞர்கள் சேர்ந்து விடுகிறார்கள். அரசியல்வாதிகளும் சாதித் தலைவர்களும் அவர்களைச் சுலபமாக உபயோகித்துக் கொள்கிறார்கள். இதுதான் இங்கே காலம் காலமாக நடந்து வருவது என்கிறார்கள் பாட்னாவில் சந்தித்த பத்திரிகையாளர்கள்.

ஆட்டோக்களில் மீட்டர் கிடையாது. ஹோட்டல்களில் பில் கிடையாது. சில பஸ்களில் கூட காசு வாங்கிக் கொள்கிறார்களே தவிர டிக்கெட் தருவதில்லை. ரயிலுக்கு ரிசர்வ் செய்ய வேண்டுமென்றால், ரிசர்வேஷன் கவுண்டரை விட, வெளியில் நிற்கிற 'பிளாக்' மனிதர்களை அணுகினால்தான் பிரயோஜனம். எதுவும் அநியாய விலை. நாகரிகமின்மை...

பீகார், பின்தங்கிய மாநிலம் மட்டுமல்ல; புதைந்து கொண்டிருக்கிற மாநிலம். ●

— ஔரங்கசீப்

அரசியல் ~~ஹைக்கூ~~ பொய்க்கூ!



காய்ச்சல்

நாத்துமூணு டிகிரியில்
மூப்பனார் இருந்தப்போ
அறிவிக்கப்படாத
ஆறு தொகுதியில்
அதுக்கு மேலே
ஜுரம்.

லேட்

சில போதி மரங்கள்
லேட்டாய்
முளைக்கின்றன.
தேர்தலில் டிக்கெட்
இல்லை என்றபின்.

தேவை ஒரு காட்ஃபாதர்

எருப் போட
எவரும் இல்லாததால்
திருநாவுக்கரசு
இப்போ
தெருநாவுக்கரசு.



அநியாயம்

இவர் இலக்கியம்
அவர் இலக்கியம்
எல்லா இலக்கியமும்
அவார்டு பெறுகையில்
சுவர் இலக்கியத்தைத்
தடைசெய்வது
சுத்த அநியாயம்.



ஆறுதல்

வீரப்பனும்
வடிவேலுவும்
வெறும் கையுடன்
நிற்பது,
சமதுக்கும்
லத்தீப்புக்கும்
சிறிதளவு
ஆறுதல்.



முன்றி

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) M4392/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/(S) 161 * Registered as a Newspaper in Srilanka